

# கூண்டுக்குள் குருவி

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

# கூண்டுக்குள் குருவி

(முதல் பாகம்)




எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா



நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்

16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்

தியாகராய நகர், சென்னை – 600 017

# கூண்டுக்குள் குருவி

## 1

குளிர்காலம். காலை ஒன்பது மணி. அடர்ந்து பரவி யிருந்த பனித்திரை அப்பொழுதுதான் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருந்தது.

சென்ட்ரல் ஸ்டேஷன். தொலைவிலிருந்து வந்து கொண்டிருந்த ஏதோ ரயில் பிளாட்பாரத்திற்கு வந்து சேரப்போவதற்கு அறிகுறியாய் சிக்னல் கட்டை தாழ்ந் திருந்தது.

நகரத்தில் இந்தோ ரஷ்யன் கலாச்சார விழா நடை பெற்றுக் கொண்டிருந்தது. அந்த விழாவில் கலந்து கொள்வதற்காக வரவேற்கப்பட்ட சோவியத் குழு அந்த ரயிலில் வந்துகொண்டிருந்தது. அவர்களை வரவேற்ப

தற்காகப் பிரமுகர்கள் சிலரும், பெரியவர்கள் பலரும் வெடவெடக்கும் அக் குளிரையும் பொருட்படுத்தாமல் கைகளில் நறுமணம் கமழும் மலர் மாலைகளைப் பிடித்துக்கொண்டு வரிசையாய் நின்று கொண்டிருந்தார்கள். ஓரிரு பத்திரிக்கை நிருபர்களும், ஃபோட்டோகிராபர்களும் கழுத்தில் கேமிராக்களை மாட்டிக் கொண்டு வரப்போகும் ரயிலையும், அதிலிருந்து இறங்கப் போகும் நபர்களையும் ஊகித்துக்கொண்டு கேமிரா கோணங்களை சரிபார்த்துக் கொண்டிருந்தார்கள்.

● பிளாட்பாரம் முழுவதும் ஒரே சந்தடியாய், எள் விழ இடமில்லாதவாறு இருந்தது. பத்து நிமிஷங்கள் கழிந்திருக்கும். தொலைவில் பெரிய புள்ளியாய் தென்பட்ட ரயில் எஞ்சின் அரக்கனைப் போன்ற முகத்துடன், பூமியை நடுநடுங்க வைக்கும்படியான சப்தத்துடன் கிடுகிடுவென்று வந்து, ஆயாசத்துடன் மூச்சிரைக்க நின்றாற்போல புகைவிட்டுக் கொண்டே பிளாட்பாரத்தில் நின்றது. ரயில் வந்து நிற்பதற்குள்ளாகவே மாலைகளை வைத்துக் கொண்டிருந்த பெரியவர்கள் எல்லோரும் தனித்தனியாய் 'ரஷ்யக் குழு' என்று அழகாய் பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்த போகியை நோக்கி ஓடினார்கள்.

அதற்குள் ரயில்வே கூலிகள் சிலர் அந்த ஜனக் கூட்டத்திற்கிடையே புகுந்து எப்படியோ வழியேற்படுத்திக்கொண்டு, நடுத்தர வகுப்புப் பெட்டிகளுக்குள் நுழைந்து "கூலி கூலி" என்று கத்திக்கொண்டே பயணிகள் இறங்குவதற்குள்ளாகவே அவரவர்கள் சாமான்களை அகப்பட்டதைக் கையிலெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை நிற்கச்சொல்லி கத்திக் கொண்டிருந்தார்கள் சிலர். கூலி வேண்டாம் சாமானை வை என்று கத்திக்கொண்டிருந்தார்கள் வேறு சிலர்.

பத்து நிமிஷங்கள் வரை இந்தி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் உச்சஸ்ஸ்தாயியில் எழும்பிய குரல்கள் ஒரே கதம்பமாய் காதைப் பிளக்கும் படியாய் கேட்டுக்கொண்டிருந்தன.

ரஷ்யக் குழுவிற்குப் பக்கத்திலேயே முதல் வகுப்பு கம்பார்ட்மெண்ட் இருந்தது. அதிலிருந்து இறங்கிய வர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். கையில் தோல் பையை வைத்துக்கொண்டு, வெள்ளை வெளேரென்ற க்ளாஸ்கோ மல் வேட்டியைக் கட்டிக்கொண்டிருந்த ஒரு வயதான இரட்டைநாடி மனிதர் மட்டும் எல்லோரோடும் கும்பலில் கலக்காமல், சீக்கிரம் சீக்கிரமாய் போக வேண்டும் என்று முயலாமல் கொஞ்சம் ஒரு பக்கமாய் நின்றுகொண்டிருந்தார். தூக்க மாத்திரைகளுக்குப் பழக்கப்பட்டவரைப் போல அவர் கண் இமைகள் பார மாய் வீங்கினாற்போலிருந்தன. கண்களுக்குக்கீழே கரும் வளையங்கள் தென்பட்டன. உடல்நலக் கோளாறி னால் அவர் மிக வயது முதிர்ந்தவராய் காணப்பட்டார். ஆனாலும் அக்கண்களில் நல்ல குணங்கள் பதுங்கி யிருந்தது பார்ப்பவர்களை நன்றாகவே கவர்ந்தது. அவர் கையில் அணிந்திருந்த விலையுயர்ந்த கடியாரத் தையும் மோதிரங்களையும் கொண்டு அவர் செல்வந்தர் என்று அறிந்துகொள்ளலாம்.

கையிலிருந்த தோல்பைக்குள் மிக விலையுயர்ந்த பொருள் ஏதோ இருந்ததால் அவர் அடிக்கடி தன்னை யறியாமல் அதைத் தடவிக்கொண்டே, அபூர்வமான பொருளை வைத்துக் கொண்டிருந்தாற்போல, பிடித்துக் கொண்டு, ஜனக்கூட்டத்தில் யாரையோ பரபரப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்குப் பக்கத்திலேயே கொஞ்சம் தூரத்தில் ரஷ்யன் குழுவுக்கு வரவேற்பு நடத்திக் கொண்டிருந் தார்கள். ஜனங்களில் நிறைய பேர் அங்கே போய் அவர்

களைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பில் ஒருத்தரை யொருத்தர் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர் இந்த ரகளைகளையெல்லாம் பொருட்படுத்தவராய் யாருக்காகவோ பரபரப்புடன் காத்துக் கொண்டிருந்தார்.

சுமார் அரைமணி நேரத்திற்கு பிறகு சுற்றுப்புறத்தில் கொஞ்சம் சந்தடி தணிந்தது. ஜனங்கள் பிசுபிசுத்துப் போனார்கள். ரஷ்யக்குழு கழுத்தில் கேமிராக்கள் தொங்க, பூமாலைகள் அசைந்தாட நடந்தபடி பிளாட்பாரத்தைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. ரஷ்யக் குழுவை வரவேற்று அவர்களோடு சேர்ந்து முன் நோக்கிப் போய்க் கொண்டிருந்தவர்களுள், வெள்ளை பாண்ட்டும், கச்சிதமான கிராப்பும் கொண்ட இளைஞன் ஒருவனை பக்கத்திலிருந்த இன்னொருத்தன் தோளில் கை வைத்துத் தடுத்து நிறுத்தி, ''விமல்! அதோ அங்கே நின்றுகொண்டிருப்பது விஸ்வநாதன் தானே?'' என்று கேட்டான். விமலன் என்ற அவன் நின்று இந்த பக்கமாய் திரும்பிப் பார்த்தான். ஒரு வினாடி அவன் கண்கள் சொல்ல முடியாத ஆச்சரியத்தால் அகன்றன. அவன் உடனே தலையாட்டிவிட்டு—''ஆமாம், அவர்தான். ஆனால் இந்த ரயிலில் வரப்போவதாய் எனக்குத் தெரியவே தெரியாதே. நீ நடந்து கொண்டிரு. நான் இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்.'' என்று திரும்பி மளமளவென்று நடந்து அவரிடம் போனான்.

விமலனைப் பார்த்ததும் மிக மகிழ்ச்சியடைந்த விஸ்வநாதன்—''விமல், நீ எனக்காக வந்திருக்கிறாயா?'' என்றார் கைகளை நீட்டிக்கொண்டே. விமலன் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''இதென்ன! இந்த ரயிலில் நீங்கள் வரப்போவதாய் எனக்குத் தெரியாதே.'' என்றான் வியப்போடு. விஸ்வ

நாதனின் முகம் களையிழந்தது. ''தெரியாதா? லலிதா உன்னிடம் சொல்லவேயில்லையா?''. ''ஊஹூம். எனக்குத் தெரியவே தெரியாது. நான் ரஷ்யக் குழுவின் ரிஸப்ஷன் கமிட்டி மெம்பராதலால் இங்கே வந்தேன். உங்களை இங்கே பார்த்து விட்டு ஆச்சரியமடைந்து போனேன்.''

''நீ இந்த ரகளையில் ஆழ்ந்துபோய் லலிதாவைச் சந்திக்கவே இல்லையோ?''

''நேற்று மாலையில்கூட ரஞ்சிதாவைப் பார்க்கப் போயிருந்தேன். நான் போனபொழுது லலிதா கிளப்பிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். நாங்களிருவரும் அதிக நேரம் பேசிக்கொள்ளவில்லைதான். ஆனாலும் நீங்கள் வரப்போவதாய் ஒரு வார்த்தைச் சொல்லுவதற்கு எவ்வளவு நேரம் ஆகிவிடப்போகிறது?'' விஸ்வநாதன் பெருமூச்சு விட்டார். சோர்ந்துபோனவராய் ''அப்படீன்னால் அவளுக்கு நான் வருவது பிடிக்கவேயில்லைன்னுச் சொல்லு! நான் இன்றைக்கு வரப்போகிறேன் என்றும், உன்னிடம் சொல்லும்படியும், ரஞ்சிதாவை ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லியும் டெலிகிராமில் மிகத் தெளிவாய் தெரியப்படுத்தியிருந்தேன். என் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. அப்படீன்னால் என் ஆறு மாதப் பிரிவு அவளைக் கொஞ்சமும் மாற்றிவிடவில்லைன்னு சொல்லு'' விமலனைப் பார்த்ததும் ஏற்பட்டச் சந்தோஷம் பெரிய பெண்ணைப் பற்றிப் பேச்சு வந்ததுமே வடிந்து விட்டது.

''உங்கள் உடம்பு இப்பொழுது எப்படி இருக்கிறது?'' பேச்சை மாற்ற எண்ணிக் கேட்டான் விமலன்.

''பரவாயில்லை. ஆனால் ரஞ்சிதா ஒருத்திக்காகத் தான் இங்கே திரும்பி வர வேண்டியிருந்தது. இல்லா

விட்டால் அங்கேயே இன்னும் கொஞ்ச நாள் அமைதி தியாய் கழித்திருப்பேன்.''

''உங்களுக்காக ஸ்டேஷனுக்கு யாருமே வரவில் லையா?'' சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கேட்டான் அவன். ''என்னவோ! இது வரைக்கும் யாருமே தென் படவில்லை. வந்தாங்களோ இல்லையோ தெரியவில்லை. அதனால்தான் இந்த சந்தடி குறைகிற வரைக்கும், இங்கே ஒரு பக்கமாய் நின்றுகொண்டிருந்தேன்.''

அவர் சொல்லிக் கொண்டிருந்த பொழுதே சுற்று முற்றும் பார்த்த விமலன் ''அதோ! ராமு வந்து விட்டான்'' என்று கையைத் தூக்கி, ''ராமு! இப்படி வா இங்கே'' என்று கூப்பிட்டான்.

ராமு கிட்டே வந்து இருவரையும் வணங்கினான். ''ரஞ்சிதா எங்கேடா? அழைத்துக்கொண்டு வரவில் லையா?'' பரபரப்புடன் கேட்டார் அவர். ''இல்லைங்க. ரயிலு ரொம்ப லேட்டுன்னு சொன்னாங்களாம். எப்ப வருமோ என்னவோ, குளிராய் இருக்கு. ரஞ்சிதா வேண்டாம் நீ போன்னுச் சொல்லிட்டாங்க சின்னம்மா'' மென்று விழுங்கியபடி சொன்னான் அவன்.

விஸ்வநாதனின் புருவங்கள் மூடிச்சேறின. நெற்றி யில் இரண்டு மூன்று மடிப்புகள் தென்பட்டன. ஒரு வினாடி அவர் முகம் ஏமாற்றத்திற்கிடமாகி அதிருப்தியை வெளிக்காட்டிற்று. விமலனை ஏறிட்டுப்பார்த்து, ''பார்த் தாயா?'' என்பது போல சைகை காட்டினார்.

உடனே கையிலிருந்த தோல் பையின் ஜிப்பை சர்ரென்று உருவி, உள்ளேயிருந்து பளபளவென்று மினுமினுத்துக் கொண்டிருந்த ஒரு நெக்லெஸ்ஸை வெளியே எடுத்து விமலனுக்குக் காட்டிவிட்டு, ''பார் விமல்! நான் ஊருக்குப் புறப்பட்ட போது ரஞ்சிதா நெக்லெஸ் வேண்டும் என்று ரொம்பவும் கேட்டுக் கொண்டாள். நான் இதற்காக கேரளா முழுவதும் ஒரு

நாள் பூராவும் அலைந்தேன். ரயிலை விட்டு இறங்கியதுமே எதிர்கொண்டு வருவாள் என்றும் அச் சின்னஞ்சிறு கழுத்தில் இதைப் போட்டு அவளைச் சந்தோஷப்படுத்தி நானும் மெய்மறந்து போகணும் என்றும் நினைத்துக் கொண்டிருந்தேன். லலிதா கொஞ்சமும் மாறவில்லை என்றும் நடந்ததற்கும் கொஞ்சமும் பச்சாதாபப்படவில்லை என்றும் சொல்வதற்கு இதைக்காட்டிலும் வேறு உவமை வேண்டியதில்லை. நாங்கள் தந்தையும் மகளுமாய் ஆனது எந்த ஜென்மத்துப் பாவமோ? அவளைச் சொல்லி என்ன லாபம்? இதெல்லாம் என் தலையெழுத்து.'' பெருமூச்செறிந்துவிட்டு அவர் நெக்லெஸ்ஸைத் தோல் பைக்குள் போட்டு ஜிப்பை மூடினார்.

அவர் அவ்வாறு சொன்னதைக் கேட்டு விமலனின் மனம் நெருக்குருகிவிட்டது. அவனுக்கு உடனே என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அந்த நிமிஷத்தில் அவருக்கு அவ்வளவு மனக்கஷ்டத்தை உண்டாக்கி விட்ட லலிதா எதிரேயிருந்தால் அவள் கன்னத்தில் ஓங்கி அறையவேண்டும் என்ற ஆவேசம் ஏற்பட்டது. லலிதா ஒருத்தி மட்டுமேயில்லை, அவருக்கு எந்த விதத்திலாவது யார் கஷ்டம் கொடுத்தாலும் தயையின்றி அவர்களை தண்டிக்க வேண்டும் என்று தோன்றிற்று.

அவர்பால் அவனுக்கு இருந்து வந்த மதிப்பும் அன்பும் அப்படிப்பட்டவை.

விமலன் பரிவோடு ஏதோ சொல்ல வருவதற்குள் பின்னாலிருந்து நண்பன் ஓடி வந்து— ''டேய் விமல்! இன்னும் எவ்வளவு நேரம்டா? வா, அங்கே அவங்கள்ளாம் உனக்காகக் காத்துட்டிருக்காங்க. க்ரூப் போட்டோவாம். மேயர் நீ எங்கே என்று கேட்கிறார்.''

விமல் பணிவோடு விஸ்வநாதனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு— ''நான் சாயந்திரமாய் வரேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

விமல் போவதைப் பின்னாலிருந்தே பார்த்துக் கொண்டிருந்த அவர் கண்களில் பாச உணர்ச்சி தோன்றிற்று. விமல்! அவர் கண்களுக்கு முன்பாகவே வளர்ந்து ஆளானவன். தந்தை போன பிறகு பிறந்த வீட்டிலிருந்து நிறையச் சொத்துக்களைக் கொண்டு வந்துவிட்டோம் என்ற பெருமையோடும் அகம்பாவத்தோடும் சித்தி ஏளனமாய் பேசி, அலட்சியமாய் நடத்தவே, அந்த அவமானத்தைத் தாங்க முடியாதவனாய் வீட்டை விட்டு ஓடி வந்து அரும்பாடுபட்டு படித்து முடித்தான். கடைசியில் அவன் பி. ஏ. படித்துக்கொண்டிருந்த பொழுது அவன் அருமையை உணர்ந்துகொண்ட சித்தி தான் நடத்திய விதத்திற்குத் தானே நேரிடையாய் வந்து அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். ‘உன் தேவை எனக்கு நிறைய இருக்கிறது. ஆண் திக்கு இல்லாத என்னை இந்தச் சொந்தக்காரங்க கழுகாய் பிடுங்கித் தின்கிறாங்க அப்பா! நீ வந்தால்தான் என்னால் பிழைக்க முடியும். சொல்லு, வருகிறாயா, அல்லது இங்கேயே என் புடவைத் தலைப்பைக்கொண்டு கழுத்தில் சுருக்குப் போட்டுக்கொண்டு விடட்டுமா?’ என்று அடம் பிடிக்கவே, அவள் துன்பத்தைப் பார்த்து அவன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவன் எம். ஏ. முதல் வகுப்பில் பாசாகி, சட்டப்படிப்புப் படித்துக் கொண்டிருக்கையில், லலிதாவை அவனுக்குத் தந்து மணம் முடித்து வைப்பதாய் அவர் சொன்னபோது அவன் மறுத்துவிட்டான். “வேண்டாம். நான் உங்களைத் தந்தையைவிட, தெய்வத்தைவிட மேலாய் பாவிக்கிறேன். நமக்கிடையே பந்தங்களை உருவாக்கி பாசத்தைக் கெடுத்துக்கொள்கிற நிலைமையை உருவாக்கி விடாதீங்க. லலிதாவின் சுபாவம் எனக்குத் தெரியும். எங்களிருவருக்கும் பொருந்தவே பொருந்தாது. அதோடுகூட நான் இதற்குள் திருமணம் பண்ணிக் கொள்ளப்போவதும் இல்லை. ஒருக்கால் பண்ணிக்

கொண்டாலும் எனக்குப் பிடித்த ஏதாவது ஏழைப் பெண்ணாய் பார்த்துப் பண்ணிக் கொள்கிறேன். சொத்து சுதந்திரத்தோடு வருகிற பெண்ணின் அகங்காரத்தை என் சித்தியைப் பார்த்து நான் நன்றாகவே தெரிந்து கொண்டுவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் உங்கள் பேச்சை என்னால் கேட்க முடியவில்லை'' என்று வினயமாய் தன் அபிப்பிராயத்தைத் தயங்காமல் சொல்லிவிட்டான்.

விஸ்வநாதனின் மனது திடீரென்று விமலனின் ஞாபகத்தால் உருகிப் போய்விட்டது. வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகும் கூட அவன் மறுபடியும் சித்தியின் பணத்தைத் தொடவில்லை. அவசரத்திற்கு வேண்டிய பணத்தை அவ்வப்பொழுது விஸ்வநாதனிடமிருந்து கேட்டு வாங்கிக்கொண்டு, லீவு நாட்களில் கஷ்டப்பட்டு சம்பாதித்து கடனைத் தீர்த்துவிடுவான்.

கடைசி காலத்தில் அவனை நன்றாய் புரிந்து கொண்ட சித்தி, சாகும்பொழுது தன் சொத்தையெல்லாம் தன் மகன் கமலனுக்கு எழுதி வைத்துவிட்டாலும், அதன் மேற்பார்வை முழுவதையும் விமலனிடமே ஒப்படைத்திருந்தாள். பங்கைப் பிரித்துத் தந்தால் அதைத் திருப்பி கமலனுக்கே ஒப்படைத்துவிடுவானோ என்னவோ என்ற பயத்தால் அவள் சொத்தின் மேற்பார்வை முழுவதையும் விமலனுக்கே ஒப்படைத்திருந்தாள்.

ஆனால் விமலன் சித்தி உயிரோடிருந்த பொழுது எவ்வளவு சிரத்தையாய் அந்த விஷயங்களையெல்லாம் பார்த்து வந்தானோ இப்பொழுதும் அதே சிரத்தையுடன் தான் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது எவ்வாறு அப்பணத்தைச் துச்சமாய் மதித்து வந்தானோ இப்பொழுதும் அதே போலவேதான் மதித்தான்.

விமலன் இப்பொழுதுதான் லாயராய் முன்னுக்கு வந்துகொண்டிருந்தான். அவன் சட்டம் படிப்பதற்குத் தகுந்த ஊக்கமளித்தது தான்தான் என்ற ஞாபகம் வரும் பொழுதெல்லாம் விஸ்வநாதன் பெருமையால் பூரித்து போவார்.

விமலனிடம் மன உறுதியும் எதையும் சாதிக்கக் கூடிய திறமையும் இருந்தன. சிறு வயதில் அவன் வறுமையால் பட்ட கஷ்டங்களும், வாழ்க்கையில் எதிர்ப் பட்ட மேடு பள்ளங்களும் அவன் பண்பை சாணை தீட்டியிருந்தன. விமலைத் தன் மருமகனாககிக் கொண்டிருந்தால் அவர் வாழ்க்கை மிக அமைதியாய் கவலையில்லாமல் கழிந்து போயிருக்கும். முரட்டுப் பிடிவாதமும், ஊதாரியுமான லலிதாவைக் கொஞ்சி மாவது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். பிறகு மிக முக்கியமாய் தன் உயிருக்கு உயிரான ஊமைப் பெண் ரஞ்ஜிதாவிற்குத் தனக்குப் பிறகு அவன் நிழலில் தந்தையைப் போன்ற அரவணைப்பு கிடைக்கும். ஆனால் தன் பிரச்சினைகளுக்கு அவன் வாழ்க்கையைப் பணயம் வைக்கச் சொல்வது நியாயமில்லை. தன் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுத் தன் மகளை மணந்துகொண்டு இருவர் வாழ்க்கையையும் துர்லப மாக்கிக் கொள்ளாமல் முன்யோசனையுடன் யோசித்துப் பார்த்து பயமில்லாமல் மறுத்துவிட்ட அவன் துணிச்சலுக்கு அவரால் மெச்சிக்கொள்ளாமலிருக்க முடியவில்லை.

டிரைவர் ராமு அவர் பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக்கொண்டு மளமளவென்று முன்னுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

அதற்குள் இன்னொரு ரயில் வந்ததால் பிளாட்பாரம் முழுவதும் மறுபடியும் ஒரே சந்தடியாக மாறிவிட்டது. எள் விழ இடமில்லாதவாறு இருந்த அக்கூட்டத்திற்

கிடையே இரட்டை நாடி மேனியுடனிருந்த அவர் வேக வேகமாய் நடந்து போக வேண்டுமென்றால் மிகவும் சிரமமாய்தான் இருந்தது.

விமலனைப் பற்றிய யோசனைகளுடன், ஜனங் களைப் பிளந்துகொண்டு, பிரயாசையுடன் நடந்து கொண்டிருந்த அவரை எதிர்ப்பக்கத்திலிருந்து மிக வேகமாய் வந்துகொண்டிருந்த ஒரு ஆள் மோதிக் கொண்டான். வேகமாய் வந்து மோதியதால் அவர் மூக்கில் பட்டு உயிர்போகும்படியாய் வலியெடுத்தது. கண்கள் பஞ்சடைந்து ஒரு வினாடி உலகமே கிர்ரென்றுச் சுழன்றாற் போலாயிற்று. மல்லாந்து விழப் போய், ஒருவாறு சமாளித்துக்கொண்டார். தலை சுற்றுவது நின்ற அடுத்த நிமிஷமே அவர் தன் கையில் தோல் பை இல்லாததை உணர்ந்தார். உடனே சரேலென்று திரும்பினார். அவரை வேண்டுமென்றே மோதிக்கொண்ட ஆள் தோல்பையைப் பிடுங்கிக் கொண்டு மின்னலாய் ஜனக்கூட்டத்திற்குள் மறைந்து போய்க் கொண்டேயிருந்தான். தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தினார் அவர்— ''என் பை! பிடித்துக் கொள்ளுங்கள். காட்ச்ஹீம், தீஃப், சோர், திருடன்! பிடியுங்கள்.''

அடுத்த நிமிஷம் பிளாட்பாரம் முழுவதும் கூச்சலும் ஓட்டமுமாய் ஆகிவிட்டது. அவரவர்கள் இதென்ன ரகளை என்று திக்பிரம்மையடைந்து போய் நின்று விட்டார்கள். அவர் ஓட முடியாமல் ஓடிக்கொண்டே— ''காட்ச் ஹிம்! விடாதீங்க! பிடித்துக்கொள்ளுங்கள், அதில் வைர நெக்லெஸ் இருக்கிறது''—என்று பைத்தியம் பிடித்தவரைப் போல கைகளை ஆட்டிக் கொண்டே இருந்தார்.

பையைப் பறித்துக்கொண்டு ஓடிய ஆள் பிளாட் பாரத்தைவிட்டு அங்கே நின்றுகொண்டிருந்த ரயிலுக்

குள் தாவி, நிமிஷத்தில் அந்த பக்கமாய் இறங்கி ஓடத் தொடங்கினான். ஓடிக்கொண்டே அவன் பையின் ஜிப்பை உருவி, அதற்குள் இருந்த சின்ன நகைப் பெட்டியைக் கையிலெடுத்து ஜேபியில் தள்ளிக் கொண்டு, பையை ரயிலுக்கடியில் வீசியெறிந்தான். அங்கிருந்து புகையைக் கக்கிக்கொண்டே நின்று கொண்டிருந்த இன்னொரு ரயில் இஞ்சின் வழியாய் தாவி மறுபக்கத்திற்குப் போய் அங்கே தண்டவாளத் திற்குக் குறுக்காய் ஓட்டம் பிடித்தான். ஓரிரு ரயில்வே கூலிகள் அவனைப் பின் தொடர்ந்து ஓடப்போய் அந்த வேகத்தைப் பிடிக்க முடியாமல் பின்தங்கிவிட்டார்கள். அவர்களுள் ஒருவர்— ''அதோ! பையை வீசியெறிந்து விட்டான்'' என்று கத்தினான். மேலும் இருவர் போய் அதை எடுத்துப்பார்த்தார்கள். அதில் நகை இல்லை.

இன்னும் கொஞ்ச தூரம் தாண்டியிருந்தால் பையைத் திருடிய அந்த ஆள் பாதுகாப்பான இடத்திற் குப் போய்ச் சேர்ந்திருக்கலாமோ என்னவோ? ஆனால் அதற்குள் அங்கே தண்டவாளங்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த ரயில்வே மெகானிக் ஒருவன் தொலை விலிருந்து இவன் ஓடி வந்ததையும், பின்னால் சிலர் துரத்திக்கொண்டு வந்ததையும் கவனித்து விட்டு, விஷயம் தெரியாவிட்டாலும் பின்னாலிருந்து வந்து கைகளை நீட்டிக் கட்டிப் பிடித்துக் கொண்டு விட்டான். திடீரென்று சிறைப்பட்டுப் போய்விட்ட அவன் தப்பித் துக் கொள்வதற்காகத் திமிறினான். கால்களால் உதைத் தான். தலையால் அவன் மார்பின் மீது பலமாய் குத்தி னான். கொஞ்ச நேரம் இருவருக்குமிடையே பயங்கர மான யுத்தம் நடந்தது. அடித்துக் கொண்டார்கள். குத்திக்கொண்டார்கள். அவன் கால்களோடு கால் களைப் பிணைத்துக்கொண்டு, கைகளால் நகரவொட்டா மல் தரையோடு அழுத்திப் பிடித்துக் கொண்ட ரயில்வே மெகானிக்கின் குரங்குப் பிடியிலிருந்து தப்பிக்க முடிய

வில்லை. அவனால் அதற்குள் தொலைவிலிருந்து எஞ்சியவர்கள் கூட வந்து சூழ்ந்துகொண்டுவிட்ட தால் அவன் பிடிபட்டுபோக வேண்டியிருந்தது.

பத்து நிமிஷத்தில் பையோடும் நகையோடும் அதைத் திருட முயன்ற ஆளையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்து விஸ்வநாதனுக்கு முன்னால் நிறுத்தினார்கள். அவர் பையைத் திறந்து நகையை அதற்குள் வைத்துவிட்டு 'அம்மாடா' என்று மூச்சு விட்டுக் கொண்டு பையை மார்போடு அழுத்திக் கொண்டார். எதிர்பாராமல் தன்னை இவ்வளவு ஆயா சத்திற்கு ஆளாக்கிவிட்ட அந்த ஆளைப் பார்த்ததுமே மூச்சிரைக்க நின்றுகொண்டிருந்த அவருக்குக் கோபம் தாங்க முடியாமல் வந்துவிட்டது. அவன் கன்னங்களில் மாறி மாறி விளாசிக்கொண்டே—"புத்தி இல்லையாடா ராஸ்கல்? எருமைப் போத்து மாதிரி இருக்கிறாயே?" என்றார். ஆத்திரத்தில் என்னென்னவோ திட்டவேண் டும் போலிருந்தது அவருக்கு. ஆனால் ஆயாசத்தால் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை.

சுற்றிலும் கூடியிருந்த ஜனங்கள் தலைக்குத்தலை வியாக்கியானங்களை பண்ணத் தொடங்கினார்கள்.

"என்ன வேலையப்பா இது? கை கால் நன்றாய் இருக்கிறவன், உழைத்துப் பிழைக்கக் கூடாது?" ஒருவர் மிரட்டினார்.

"மூஞ்சியைப் பாரு? பெரிய தொரை மாதிரி எப்படி இருக்கிறான்னு!"

"நிஜந்தான். தெரியாமலிருந்திருந்தால் யாரோ காலேஜ் ஸ்டூடென்ட் என்றெண்ணிக் கொண்டிருந்திருப் போம். அவன் உடையைப் பார்த்தால் என்னவோ பெரிய மனுஷனைப் போல தோன்றுகிறது."

''இந்த காலத்திலேயே அப்படித்தான், பெரிய மனுஷங்க எல்லோரும் திருடர்களாகவும், திருடனுங்க எல்லோரும் துரைகளாகவும் காட்சித் தருகிற காலம் இது!''

''நம் நாட்டில் இந்த மாதிரி வேலைவெட்டி இல்லாதவங்க அதிகமாயிட்டாங்கன்னால் நம்புங்க. இப்படிப் பட்டவங்களை நடுத்தெருவில் நிற்க வைத்து தூக்கில் போடணும். அப்பத்தான் எல்லோருக்கும் புத்திவரும். பயமும் இருக்கும். இந்த காலத்தில் ஜேப்படி பண்ணுவதென்பது வேர்க்கடலையைத் தின்பது போல அத்தனை ஈஸியாகிவிட்டது.''

''இந்த மாதத்தில் இங்கே இது மாதிரி நடப்பது மூன்றாவது தடவை சார்''— என்றான் ஒரு ரயில்வே கூலி.

அதற்குள் அங்கே வந்த போலீசு, திருடனை ஏற யிறங்கப் பார்த்து விட்டு, ''நீதானா அப்பனே'' என்றான்.

''தெரிஞ்சவன்தானா?'' யாரோ ஆர்வத்துடன் கேட்டார்கள்.

''ஐயோ, தெரியாமலென்ன? ஒரு முறை எங்கள் விருந்தாளியாய் வந்திருக்கிற தொரைதான்! வா அப்பனே வா! முந்தா நாள் எக்ஸ்பிஷனில் எலெக்ட்ரிக் ஃப்யூசை எடுத்துட்டு, இருட்டுப் பண்ணிட்டு பொம்பிளைங்க கழுத்திலிருந்த நகைகளை அபேஸ் பண்ணிக்கொண்ட திருட்டு கும்பல் உங்க கும்பல் தானேடா? வா, வா, கொஞ்சம் ஆளுங்க இருக்கிற இடத்தை சொல்றாயா? எனக்கு ப்ரமோஷன் கிடைக்கும்''— என்று பக்கத்தில் திரும்பி— ''நகரத்தில் சமீபத்தில் ஒரு கும்பல் ஏற்பட்டிருக்குங்க. எங்கே யாவது கொஞ்சம் ஜனங்கள் கூடி விட்டாங்கன்னால்

போதும், இவங்க அங்கே தயாராயிடுவாங்க"— என்று லாட்டியால் குத்திக்கொண்டே இழுத்துக்கொண்டு போனான் போலீசு ஆள்.

இத்தனை விதமாய் கேலிக்கு ஆளான அந்த ஆள் மட்டும் தலையைத் தூக்கவில்லை. குனிந்த தலையை நிமிர்த்தாமல், பேச்சு மூச்சு இல்லாமல் அப்படியே நின்று கொண்டிருந்தான். சற்று முன்னால் குஸ்தி போட்டதில் அவன் வாயிலிருந்து வந்த ரத்தம் முகவாய் வழியே கோடு கட்டிக்கொண்டு காய்ந்து போயிருந்தது. அதைத் துடைத்துக்கொள்ள முடியாதபடி அவன் கைகளைப் பின்னுக்குச் சேர்த்துக் கட்டியிருந்தது. அவன் உடல் பொன்நிறத்தில் இருந்தது. விலையுயர்ந்த உடைகளை உடுத்திக் கொண்டிருந்தான். வயது சுமார் இருபத்திரெண்டு இருக்கலாம். சட்டென்று பார்த்தால் பெரிய மனிதர் வீட்டுப்பிள்ளையைப் போல இருந்தான். அம்முகத் திலும் அக்கண்களிலும் இருந்த ஒருவிதக் களை அவ்வாறு எண்ணத் தோன்றிற்று.

ரஷ்யக் குழுவைப் பற்றிய விவரங்களை போட்டோ எடுக்க விரும்பி, குளிருக்கு சீக்கிரமாய் எழுந்திருக்க முடியாமல் போய், தாமதமாய் எழுந்து, அரக்கப்பரக்க விழுந்தடித்துக்கொண்டு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிப் போய்க் கொண்டிருந்த ஒரு பத்திரிகை நிருபருக்கு இதாவது கிடைத்ததே என்று தோன்றிற்று. அவர் திருட்டுத்தனம் பண்ணியவனை நல்ல கோணத்தில் க்ளோஸப்பில் படம் பிடித்துக்கொண்டார்.

விஸ்வநாதன் ஒருவாறு வெளியே வந்து தனக்காகக் காத்துக்கொண்டிருந்த காரில் வந்து உட்கார்ந்து கொண்டார் அவர் உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது. ஏறக்குறைய ஆறுமாத காலம் இடை விடாமல் கேரளத்திலிருந்த ஒரு கிராமத்தில் இயற்கை

சிகிச்சையைப் பெற்றுவிட்டுத் திரும்பி வந்திருக்கும் அவருக்குச் சென்னையில் காலடி எடுத்து வைத்த அடுத்த நிமிஷமே தன் நிலைமை சற்றும் மாறவில்லை என்றும் இன்னும் மோசமாகவே இருக்கிறது என்றும் எச்சரிக்கை தந்துவிட்டது.

அவர் எவ்வளவு எழுதியிருந்தும் லலிதா அலட்சியத்தைக் காட்டி சின்ன மகள் ரஞ்சிதாவை ஸ்டேஷனுக்கு அனுப்பவில்லை. அந்த அதிருப்தியோடு வருந்திக் கொண்டிருந்தபொழுது நடுவில் இது ஒன்று. ஒரு வினாடி அவர் கண்களுக்கு முன்னால் வாயிலிருந்து ரத்தம் வழிய, தலைகுனிந்தபடி நின்று கொண்டிருந்த அந்த ஆள் மிதந்தான். விஸ்வநாதனுக்குத் திரும்பவும் ஆத்திரம் வந்துவிட்டது. பையை மார்போடமூத்திக் கொண்டு— "திருட்டு ராஸ்கல்! கொன்று குழி தோண்டிப் போடணும் இப்படிப்பட்டவங்களை" என்றெண்ணிக் கொண்டார் ஆத்திரத்தோடு.

கார் நகர்ந்தது.

## 2

சென்னையிலிருந்த அத்தனை நடுத்தரக் குடும்பங்களும் அவ்விடத்தில்தான் வசித்து வருகிறதோ என்று தோன்றவைக்கும்படியான பேட்டை அது. குறுகலான சந்துகள், சாக்கடைகள் இருந்த வீதிகள், வீதியில் எங்கே பார்த்தாலும் குப்பையும் கூளமும், அவற்றிற்கிடையே குழந்தைகளின் விளையாட்டுகள் கூட.

ஒவ்வொரு சந்திலும் அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடிவரை துளி இடத்தைக்கூட காலியாய் விடாமல் வீட்டிற்குமேல் வீடாய் கட்டியிருந்தார்கள். ஒவ்வொரு

வீட்டிலும் ஏறக்குறைய பத்து போர்ஷன்கள் இருந்தன. அந்த பத்து போர்ஷன்களிலும் பலவித வேறுபட்ட மனத் தத்துவங்களைக் கொண்ட குடும்பங்கள் குடியிருந்தன.

அந்த நெரிசலான சந்திலிருந்த கோடி வீட்டிலிருந்து அதிகாலை வேளையில் தாரஸ்தாயியில் கத்தல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அந்த வீட்டின் எஜமானரும் எஜமானியும் எதற்காகவோ சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். வீதியில் போவோர் வருவோரும், அக்கம்பக்கத்தாரும் ஆர்வத்துடன் நின்று வேடிக்கைப் பார்க்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுத் தலைவரின் பெயர் சங்கரன். பாட்டு வாத்தியார். அவர் மனைவியின் பெயர் சுந்தரி. சுந்தரியின் சுபாவத்தைப்பற்றி ஒரேயடியாய் சொல்லி விட முடியாது. அவளை எல்லோரும் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டும். அப்படிப் புகழ்பவர்களுக்கு கேட்டதை இல்லை என்று சொல்லாமல் கொடுத்து விடுவாள்.

அப்படிப் புகழப் பிடிக்காதவர்களோ, பொறுமையில்லாதவர்களோ இருந்தால் சமயம் பார்த்து அவர்களை வம்பிற்கிழுத்து நடுச்சந்தியில் நாலுபேர் பார்த்துச் சிரிக்கும்படி அவமானப்படுத்திவிடுவாள். சுந்தரிக்குக் கணவன் சங்கரன் ஒரு உதவாக்கரை என்ற எண்ணம் இருந்து வந்தது. இக்குடும்பம் இவ்வளவு தூரமாவது நடந்து வந்துகொண்டிருந்ததென்றால் அது தன்னால் தான் என்ற இறுமாப்புடன் இருந்தாள். சங்கரன்—சுந்தரிக்குக் குழந்தைகள் இல்லை. சங்கரனின் தங்கை காயத்ரி கணவனை இழந்ததும் இவர்கள் வீட்டோடு வந்து தங்கி விட்டதால் அவர்களுடைய குழந்தைகளான சுவர்ணரேகாவையும் சந்திரசேகரனையும் தம்

குழந்தைகளாகப் பாவித்து வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கினார் சங்கரன். இது சுந்தரிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''குழந்தை வேண்டுமென்றால் சொந்தக்காரர்களுள் ஆயிரம் குழந்தைகள் இருக்கிறார்கள். அதில் ஒரு குழந்தையை எடுத்து வளர்க்காமல் இந்த தரித்திரங்கள் எதற்கு?'' என்றாள்.

இந்த விஷயமாய் கடந்த பதினைந்து வருடங்களாய் அவர்களுக்குள் வாரத்திற்கு ஒரு முறையாவது சச்சரவு வராமலிருக்காது. சண்டை முற்றிப்போய் விட்டால் சந்திரன் வீட்டை விட்டுப் போய் நாலைந்து நாட்கள் எங்கேயாவது இருந்து விட்டுத் திரும்பி வருவார். தன் நாத்தியான காயத்ரி இந்த வீட்டை விட்டு ஒழிந்து போனாயொழிய இந்த பீடை நீங்காது என்பது சுந்தரியின் நம்பிக்கை. அதனால் ஏதாவது கொஞ்சம் காரணம் அகப்பட்டாலும் போதும் அதைப் பிடித்துக் கொண்டு அவர்களை வீட்டை விட்டுத் துரத்தப் பார்ப்பாள். ஆனால் ஏனோ தெரியவில்லை இடைவிடாமல் செய்து கொண்டிருந்த இந்த முயற்சி மட்டும் பலிக்கவில்லை.

இந்த முறை அவளுக்கு பெரிய சாக்கே கிடைத்து விட்டது. நாத்தி காயத்திரியின் மகனான சந்திரசேகர் நேற்று காலையில் சென்ட்ரல் ஸ்டேஷனில் யாருடைய பையையோ திருடப்போய் பிடிபட்ட விஷயம் அவன் போட்டோவோடு பேப்பரில் வெளிவந்திருந்தது. காலையில் கொல்லையில் கிணற்றில் நீர் சேந்திக்கொண்டிருந்தபொழுது பக்கத்து வீட்டுப் பாட்டியின் பேரன் அனுமந்தன் சுவற்றிற்கருகில் எட்டிப் பார்த்து அவளைக் கூப்பிட்டு பேப்பரில் வெளிவந்திருந்த போட்டோவைக் காட்டிப் படித்துக் காட்டினான்.

சுந்தரி பக்கெட்டை கீழே வைத்து விட்டு அங்கிருந்தே "இதோ கேட்டீங்களா சேதியை?" என்று கைகளை ஆட்டிக் கொண்டே உள்ளே வந்தாள்.

சங்கரன் முன் அறையில் கயிற்றுக் கட்டிலுக்கு புது நாடாவைப் போட்டுக் கொண்டிருந்தார்.

சங்கரனுக்கு ஒரு பழக்கம் உண்டு. தினந்தோறும் மனைவி லேசில் காபியைக் கொடுக்கமாட்டாள். வெகு நேரங்கழித்துதான் முக்கி முனகிக் கொண்டே வருவாள். அதனால் பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டதுமே அவர் அப்படியே கடைவீதிக்குப் போய் உடுப்பி ஓட்டலில் சுடச்சுட காபியைத் தொண்டையில் ஊற்றிக் கொண்டு கப்சிப்பென்று திரும்பி வந்து விடுவார். அன்றைக்கும் அப்படியே போனார். காபிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு உட்கார்ந்ததுமே, கௌண்டருக்கருகில் உட்கார்ந்து கொண்டிருந்த முதலாளி சிட்டிகை போட்டு சங்கரனைக் கிட்டே வரச்சொல்லிக் கூப்பிட்டு—"இது மருமான் தானே?" என்று அப்பொழுதுதான் வந்திருந்த பேப்பரின் முதல் பக்கத்தில் வெளி வந்திருந்த சந்திரசேகரனின் போட்டோவைக் காட்டினார். சங்கரன் பதில் சொல்லவில்லை.

பேப்பரை வாங்கிப் படித்து விட்டு, அதை பத்திரமாய் மடித்து முதலாளிக்கருகில் வைத்து விட்டு ஆர்டர் கொடுத்திருந்த காபியைக்கூட குடிக்காமல் வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டார். வந்ததுமே தங்கை காயத்ரியிடமும் அவள் மகள் சுவர்ணரேகாவிடமும் இதைப் பற்றிச் சொல்லிவிட்டு, சுவற்றில் சாய்த்து வைத்திருந்த கயிற்றுக் கட்டிலைப் போட்டுக்கொண்டு நிதானமாய் நாடா பின்ன உட்கார்ந்துவிட்டார். இன்றைக்கு இனி மேல் வெளியே தலைக்காட்ட அவருக்குப் பிடிக்கவில்லை. எல்லோரும் நிற்க வைத்துக் கேட்பார்கள் என்று தெரியும் அவருக்கு. இன்றைக்கும் நாளைக்கும்

கண்ணில் படாமல் போனால் நாளன்றைக்கு அவ்வள வாய் யாருக்கும் ஞாபகம் இருக்காது. ஒருவிதத்தில் இந்த உலகம் ரொம்பவும் நல்லது. அதற்கு எத்தனையோ வியாபகங்கள் உள்ளன. எப்படிப்பட்ட விஷயமாயிருந் தாலும் நாளடைவில் பழசாகிவிடும். அதனால்தான் ஒரு மாதமாய் கயிற்றுக் கட்டிலுக்கு நாடா போடச் சொல்லி மனைவி நச்சரித்து வந்த போதிலும் காதில் போட்டுக் கொள்ளாமல் அலட்சியமாய் சுற்றிக் கொண்டிருந்த அவர் இன்றைக்கு இந்தக் காரியத்தைச் செய்யத் துணிந் தார். வெருமே வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தால் சந்தேகத்தோடு மனைவி கேள்விகளால் துளைத்தெடுப் பாள் என்று தெரியும் அவருக்கு.

''உங்களைத்தான்'' கிட்டே வந்து நின்று சொன் னாள் சுந்தரி.

''என்ன?'' மிக சாந்தமாய் கேட்டார் அவர்.

''ஐயோ! இன்னும் அப்படியே ஒன்றுமே ஆகாதது போல உட்கார்ந்திருக்கீங்களே?'' வியப்படைந்த வளாய் கன்னத்தில் இடித்துக் கொண்டே கேட்டாள்.

''ஏன்? இப்ப என்ன அவ்வளவு கலகம் வந்து சேர்ந்துவிட்டது? யாரோட வீடாவது தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறதா? எரிந்துகொண்டிருந்தால் சொல்லு. ரெண்டுபேருமாய் போய் தண்ணீரை ஊற்றி விட்டு வருவோம்'' ஏளனமாய் கேட்டார்.

''யாருடைய வீடோ ஏன் பற்றியெரியப் போகிறது? நம்ம வீட்டுக்குதான் வந்து சேர்ந்திருக்கிறது நெருப்பு.''

''சொல்றதைச் சரியாய் சொல்லித் தொலை.''

''உங்கள் செல்ல பிள்ளை—உங்கள் தங்கையின் அருமந்த புத்திரன்...''

''அந்த வர்ணனையெல்லாம் எதுக்கு? நம்ம சந்திர சேகரன்னு சொல்லக்கூடாதா?'' நிதானமாய் கேட்டார் சங்கரன்.

''ஆங்! சொல்லுவேன்! தலையில் கல்லைப் போட்டு விட்டான்னு.''

கைகளை ஆட்டிக் கொண்டு அவள் சொன்னதைக் கேட்டு எதிர்பார்த்தபடி கலங்கிப் போய்விடவில்லை அவர்.

காயத்ரி ''என்னவாச்சு அண்ணி? சேகர் என்ன வானான்?'' என்று பதறிப் போய் அறையை விட்டு வரவும் இல்லை.

சங்கரனையும், காயத்ரியின் அறையையும் மாறி மாறிப் பார்த்த சுந்தரிக்குச் சந்தேகம் வந்து விட்டது.

''என்ன, உங்களுக்கு மொதல்லேயே தெரியுமா?'' என்றாள்.

''தெரியும்'' சம்பாஷணையை மேற்கொண்டு நீட்ட பிடிக்காமல் முற்றுப்புள்ளி வைத்தாற்போலச் சொல்லி விட்டார் சங்கரன்.

சுந்தரி திகைப்படைந்து போனாள். பிறகு அதன் உள்ளர்த்தம் ஏதோ புரிந்துவிட்டாற்போல கண்களைச் சுழற்றி, தலையை ஆட்டிக்கொண்டே—''ஓ அதுவா? அப்படிச் சொல்லுங்கள். திடீரென்று கட்டிலின் மீது இவ்வளவு அக்கறை எப்படிப் பிறந்ததுன்னு பார்த் தேன்,'' என்றாள்.

''மூடு வாயை.''

''வாயை மூடணுமா? நானா? எதுக்கு? ஏன்? என் மகன் திருட்டுத்தனம் பண்ணிவிட்டான் என்றா? என் பெயர் சந்திச் சிரித்துவிட்டதுன்னா? எதுக்காக வாயை மூடிக்கணும் நான்னு கேட்கிறேன்?'' உலுக்கி எடுத்

தாள் அவள். சங்கரன் நிமிர்ந்து கோபமாய் பார்த்தார். "இல்லாவிட்டால் தெருவில் போய் நின்று கத்து" என்றார்.

"கத்தும் தலையெழுத்து எனக்கெதற்கு? இதோ! இன்றைக்கு அழுத்தமாய் கடைசி தடவையாய் கேட்கிறேன். நீங்கள் உண்டு இல்லைன்னு தீர்மானிக்கிற வரைக்கும் நான் விடமாட்டேன் இந்த திருட்டு கும்பலோடு என்னால் இனி ஒரு நிமிஷம்கூட சேர்ந்து இருக்க முடியாது."

"இருக்க முடியாவிட்டால் போ" அலட்சியமாய் கத்தினார் சங்கரன்.

"நான் எங்கேயும் போகமாட்டேன். இது என் வீடு. என்னிஷ்டம். கதியில்லாதவங்களும், மானத்தைக் காப்பாற்ற முடியாதவங்களும் யாரோ அவங்களே போகட்டும். நான் இனி சும்மாயிருக்கமாட்டேன். ஒரு முடிவுக்கு வரப்போறீங்களா இல்லையா நீங்க? ஆனாலும் இருங்க, நீங்கள் என்ன முடிவெடுப்பது? நானே கேட்கிறேன்."

அவள் விடுவிடென்று காயத்ரி இருந்த அறையின் வாசலில் போய் நின்று கதவின் மீது கையை வைத்து, "இந்தா! என்னம்மா மகாராணி, உன்னைத்தான்." என்று கூப்பிட்டாள்.

உள்ளேயிருந்து பதில் வரவில்லை. சங்கரன் நாடாக்களைக் கீழே வைத்துவிட்டு மளமளவென்று போய் மனைவியின் தோளைப் பிடித்து அப்பால் இழுத்துக் கொண்டு வந்தார். பற்களைக் கடித்து கோபத்தை அடக்கிக்கொண்டே, "உனக்கு புத்தி இருக்கா இல்லையா? ஏற்கனவே அவள் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கும்போது நடுவில் உன் ரகளை வேறா?" என்றார்.

சுந்தரியின் கோபம் தலைக்கேறிவிட்டது. தலைகால் புரியாமல் குதிக்கத் தொடங்கினாள். ''அழுகையா? எதுக்கு? என்னத்தை இழந்து விட்டாள் என்று? உலகத்தில் எல்லாவற்றையும் துறந்துவிட்டு, எல்லோரோடும் அத்தனை சம்பந்தங்களையும் உதறிக்கொண்டு வெட்கம் மானத்தை விட்டு விட்டவளுக்கு வருத்தம் எதுக்கு? நாம்ப வாயைத் திறப்பதற்கு முன்னாடியே நீலிக்கண்ணீர் விடத் தொடங்கிவிட்டாள். அழவேண்டியவள் நான். மானம் போயிடுத்து எனக்கு. இனிமேல் நாலுபேர் என்னை உலுக்கி எடுத்து பலவிதமாய் கேட்கும் போது தலையைத் தூக்கி பதில் சொல்ல முடியாமல் வெட்கத்தால் சாக வேண்டியிருப்பதற்கு நாம்பதான் அழணும். அவள் எதுக்கு அழணுங்கிறேன்?''

சங்கரன் மனைவியோடு சண்டைப் போட்டு லாபமில்லை என்று கெஞ்சுவதில் இறங்கிவிட்டார்.

''என்ன பண்றது சொல்லு? சேகர் நம்ப பையனாகவே இருந்திருந்தால் என்ன பண்ணியிருப்போம்? இழுத்து மூடிக்கொண்டிருந்திருப்போம் இல்லையா?''

சுந்தரி காளியைப் போல எழுந்தாள். ''என்னது, அவனா? அந்த திருட்டு ராஸ்கலா என் மகன்? அவன் என் மகனாயிருந்தால் இந்த மாதிரி காரியங்களைக் பண்ணினால் எப்பொழுதோ கழுத்தை நெறித்துப் கொன்று போட்டிருப்பேன். இப்படி அறைக்குள் மறைந்துகொண்டு உட்கார்ந்திருப்பேன்னு நினைச்சுட்டீங்களா நீங்கள்.''

''ஆங்! வாயால் எதை வேண்டுமானாலும் பேசிவிடலாம். நரம்பில்லாத நாக்கு எப்படி வளைத்தாலும் அப்படித் திரும்பும்! அதனால்தான் தெய்வம் குழந்தைகளே இல்லாமல் பண்ணிவிட்டாரோ என்னவோ?''

சாதாரணமாய் சொன்ன சங்கரன் வாய் தவறி சொல்லிவிட்டதற்கு நாக்கைக் கடித்துக் கொண்டார்.

ஆபத்து நடந்தே நடந்துவிட்டது. சுந்தரி பெண் புலியாய் சீறத் தொடங்கினாள்.

''என்னது? என்ன சொல்றீங்க நீங்க? எனக்குக் குழந்தைங்க இல்லைன்னுதானே? இல்லாவிட்டால் போகட்டும். பரவாயில்லை. நான் 'உம்' என்றுச் சொன்னால் போதும், நூறு பேர் வந்து என் காலடியில் விழுவாங்க. இந்தப் பேச்செல்லாம் தேவையில்லை. மொதல்ல அந்த விஷயத்தை முடிவு கட்டுங்க நீங்க.''

சங்கரன் பதில் பேசவில்லை.

''உங்களைத்தான். ஏன் பேசமாட்டீங்கிறீங்க?''

''என்னத்தைப் பேசச் சொல்கிறாய்?''

''உங்களுக்கு நான் வேண்டுமா? அவங்க வேண்டுமா?''

''அழகாயிருக்கு. வலது கண் வேணுமா இடது கண் வேணுமான்னு கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்.''

சுந்தரி ஆவேசத்துடன் ரோஷமாய் பார்த்தாள்.

''அப்படீன்னால், நானும் உங்க மனுஷங்களும் உங்களுக்குச் சமம் என்பதுதானே உங்கள் உத்தேசம்?''

''இப்பவாவது அதைப் புரிந்துகொண்டு இனி வாயை மூடிக்கொண்டால் சந்தோஷப்படுவேன்.''

சுந்தரிக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

''அந்தப் பாவிங்களும் நானும் உங்களுக்குச் சமமா? உங்க வார்த்தை இதானா! சரி, இன்றைக்கு நீங்கள் என் பிணத்தைப் பார்க்காவிட்டால் பாருங்கள்'' சுருக்கென்று கோபத்துடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

“சாகிறேன் சாகிறேன்னு நூறு தடவை சொல்ற வங்க யாருமே சாகமாட்டாங்க. உனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லையென்றால் பணம் தரேன். இப்பொழுதே புறப்பட்டு உன் பிறந்த வீட்டிற்குப் போ. அங்கே உங்கம்மா இருக்காங்க. அண்ணன்கள் இருக் காங்க. தம்பி இருக்கான். காயத்ரிக்கு என்னைத் தவிர வேறு யாருமே இல்லை. என் உடம்பில் உயிருள்ளவரை அவள் என்னிடந்தான் இருந்து தீரவேண்டும், சும்மா சும்மா இந்த விஷயத்தை எடுத்து என்னைத் தொந்தர விற்குள்ளாக்க வேண்டாம்னு உனக்கு எத்தனையோ தடவைகள் சொல்லிவிட்டேன். இப்பொழுது கடைசி தடவையாய் சொல்கிறேன். இனி வீணாய் தொல்லைக் கொடுக்காதே எனக்கு.”

சங்கரன் ஒரேயடியாய் அடித்துச் சொல்லி விட்ட தால் சுந்தரி ஒரு வினாடி சலனம் ஒடுங்கிப்போய் அழுகையையும் மறந்துப்போனவளாய் அப்படியே நின்றாள்.

பிறகு கோபமாய் பார்த்து, “அவ்வளவுதான் என் கிறீங்களா?” என்றாள்.

“அவ்வளவுதான்.”

சுந்தரி சட்டென்று கீழே விழுந்த புடவைத்தலைப் பால் முகத்தைப் பொத்திக் கொண்டு, மார்பில் அடித்துக் கொண்டே “ஐயோ ராமா! நான் என்ன தப்புப் பண்ணி விட்டேன்? என் குடும்பத்தை வயிற்றில் போட்டுக் கொண்டு என் புருஷனை எனக்கு ஆகாமல் பண்ற துக்குதானா வந்திருக்கு இந்த சனியன்? இந்தப் பீடையை விட்டு நீங்க வழிச் சொல்றவங்க இல் லையா?” என்று அழத்தொடங்கினாள்.

“மூடு வாயை” சங்கரன் கத்தினார்.

''ஐயோ கடவுளே! என் வீடே எனக்கு ஆகாமல் போயிடுத்தே. என் வீட்டில் அழுகிற சுதந்திரம்கூட எனக்கு இல்லாமல் போயிடுத்தே! நான் என்ன பண்ணிட்டேனப்பா? என் தலையில் இன்னும் என்ன எழுதி வைத்திருக்கிறதோ தெரியலையே?''

''ஆங்! இன்றைக்கு உன் முதுகு தோல் உரியப் போறதுன்னு எழுதி வைத்திருக்கிறார் போலிருக்கு.''

''அடிக்கப்போறீங்களா? அடியுங்கள்! அடியுங்கள்! ஒரே தடவையாய் கழுத்தை முறித்துக் கொன்றே போட்டுவிடுங்க. எல்லோர் கண்களும் குளிர்ந்துப் போகும்.''

''நீ வாயை மூடப்போகிறாயா இல்லையா மொதல்ல?'' சங்கரன் கயிற்றுக் கட்டிலைத் தள்ளி விட்டு, மூலையிலிருந்த குடையைக் கையிலெடுத்துக் கொண்டார்.

அதற்குள் அக்கம் பக்கத்தார்கள் எல்லோரும் எட்டி எட்டிப் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். அதைப் பார்த்த சுந்தரி குரலை இன்னும் உயர்த்தி,

''உங்கக் காலைப் பிடிக்கிறேங்க. நான் சொல்றதைக் கேளுங்க. இந்த திருட்டு கும்பலோடு நம்மால் வசிக்க முடியாதுங்க. என்றைக்காவது ஒரு நாள் நம்ப குடியையே சூறையாடிவிடுவாங்க இவங்க'' சுந்தரி வார்த்தைகளை முடிக்கக்கூடவில்லை முதுகில் பளீர் பளீரென்று குடையால் இரண்டு அடிகள் விழுந்தன.

''ஐயோ அம்மா! செத்துட்டேன்.''

''வாயை மூடு! மூடுகிறாயா இல்லையா?'' சங்கரன் திரும்பவும் குடையை எடுத்தார்.

அதற்குள் அறைக்குள்ளிருந்து எலும்புக்கூடே நடந்து வருவதுபோல நோயால் மெலிந்து இளைத்துப்

போயிருந்த காயத்ரி தளர்ச்சியுடன் நடந்து வந்து அண்ணனின் கையை அழுத்தமாய் பிடித்துத் தடுத்து விட்டு— ''உனக்கு புத்தி இல்லையா அண்ணா? இதென்ன ரகளை? உனக்கு கோடி கும்பிடுகள் போடுகிறேன்— அண்ணியை ஒன்றும் சொல்லாதே, நீ கொஞ்சம் வெளியே போய்விட்டுவா, போகாவிட்டால் என் மேல் ஆணை'' என்று தோளை பிடித்து வீதி பக்க மாய் தள்ளினாள்.

சங்கரன் தங்கையின் கையை உதறிக்கொண்டு சுந்தரியைப் பார்த்து தீவிரமாய்— ''நான் எதிரேயிருந் தால் உனக்கு எங்குமில்லாத வாயாடித்தனம் வந்து விடுகிறது. நான் வீட்டிற்கே வரப்போவதில்லை. எக்கேடுக் கெட்டுப்போங்க''— என்று உத்தரீயத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு விருட்டென்று வெளியே போய்விட்டார்.

''அண்ணி, எங்களை மன்னித்து விடு''— சுந்தரி யைத் தேற்றுவதற்காக அந்த பக்கமாய் வரப்போனாள் காயத்ரி.

சுந்தரி ஆத்திரத்துடன் காயத்ரியைப் பார்வை யாலேயே குதறிப் போட்டுவிடுவது போல பார்த்து— ''எனக்கும் என் கணவருக்கும் ஆகாமல் பண்ணிவிட்ட உன் நாடகம் எனக்கா தெரியாது? என் குடும்பம் நாச மாகிவிட்டது. என் குடும்பத்தை கெடுக்கவே வந்திருக் கீங்க. உன் பீடையை எப்படி ஒழிப்பேனோ?'' என்று திரும்பவும் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழத்தொடங்கினாள். காயத்ரி ஒரு வினாடி வெறித்துப் பார்த்துவிட்டு, பிறகு சுவற்றைப் பிடித்துக் கொண்டே தட்டுத்தடுமாறியபடி நடந்து தன் அறைக் குள் போய் விட்டாள்.

# 3

சங்கரன் வீட்டை விட்டுப் போனதுமே அதுவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அக்கம்பக்கத்தார் அனைவரும் தம் கைக்காரியங்களைப் போட்டுவிட்டு புலுபுலுவென்று ஓடி வந்து சுந்தரியைச் சூழ்ந்துக் கொண்டார்கள். தலைக்கு ஒருவிதமாய் விமர்சிக்கத் தொடங்கினார்கள்.

''என்னம்மா ரகளை? என்னதான் ஆச்சு?'' என்று கேட்டாள் எதிர் வீட்டு மீனாட்சி.

''உனக்குத் தெரியாதா? அவளோட நாத்தியின் மகன் சேகர் அரஸ்ட் ஆகிவிட்டான். நேற்று ரயிலி லிருந்து இறங்கிய ஒருத்தரோட பையைத் திருடப்போய் பிடிப்பட்டுவிட்டான்.'' சுந்தரியின் சார்பில் இன்னொ ருத்தி பதில் சொன்னாள்.

''ஐயோ! அவ்வளவு பட்டப்பகலிலேயா?'' மார்பில் கை வைத்துக்கொண்டு ஆச்சரியமடைந்தவளாய் கேட்டாள்.

''ஆனாலும் இதென்ன புத்தியோ? எருமைப் போத்து மாதிரி இருக்கிறான். கூலி கீலி செய்தால்கூட தினத்துக்கு ஐம்பது ரூபாய் வருமே.''

''கஷ்டப்பட்டு வேலை செய்ய உடம்பு வணங் காது.''

''ஆமாமாம். ஒரு நாள் உயிருக்குத் துணிந்து விட்டால் ஒரு மாத காலம் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சாப்பிடலாம்.''

''அதென்னவோ பாவம்! இத்தனைக் கஷ்டமும் நம்ப சுந்தரியின் தலையில்தான் வந்து விழுந்திருக்கு.''

''கஷ்டம், எதுக்குக் கஷ்டம்? கழுத்தைப் பிடித்து வெளியே துரத்தாமல்?'' ஒருத்தி ஆலோசனை தந்தாள்.

"அழகுதான்! அவள் பேச்சு எடுபட வேண்டாமா?" இன்னொருத்தி ராகம் இழுத்தாள்.

"என்னவோம்மா! திருட்டு மனுஷங்களோடு குடித்தனம் பண்ணுவது ரொம்ப கஷ்டம். வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டாற் போலதான்."

"இதானே அவள் வருத்தமெல்லாம்? ஆனாலும் இவள் அசட்டுத்தனந்தான் காரணம்! இதுவே நானாயிருந்தால்?" இன்னொருத்தி சுந்தரியின் கேசங்களைக் கோதிக் கொண்டே, முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சொன்னாள்.

"இந்த தொல்லையெல்லாம் எதுக்கு? வீணாய் இழுத்துப் போட்டுக் கொள்வதுதான்! உன் புருஷன் உன் பேச்சைக் கேட்கமாட்டார். அது நிஜம். அவருக்குத் தங்கைச் சொன்னதுதான் வேதவாக்கு. அது தெரிந்தும் குடும்பத்தை இப்படி நடுத்தெருவுக்கு ஏன் இழுத்து விட்டுக்கொண்டாய்? நீ என்ன பண்ணுவாய்? எல்லாம் உன் தலையெழுத்துன்னு நினைச்சு சமாதானப் படுத்திக் கொள்ள வேண்டியதுதான்."

"ஆமாம். தயவு தர்மம் என்று பார்க்கிற காலமில்லை இது. இல்லாவிட்டால் அவங்களுக்கென்ன வந்தது சொல்லு? இருந்த கொஞ்சத்தையும் அவங்களுக்கேதான் பண்ணுகிறார். அந்த நன்றிகூட இல்லாமல் அந்தப் பிள்ளை உன் மானத்தை இப்படிக் கப்பலேற்றுகிறான்! அந்தப் பொண்ணோ அப்படி! எப்பப் பார்த்தாலும் ஊர்ச் சுற்றிக்கொண்டிருப்பதைத் தவிர வீட்டு வேலையில் சுண்டு விரலை மடக்கி உனக்கு ஒத்தாசை செய்து பார்த்ததேயில்லை நாங்க"— என்று சொல்லி விட்டு, 'என்ன நான் சொன்னது நிஜத்தானா' தாளம் போடுபவர்கள் இருக்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்தாள் அவள்.

எல்லோரும் 'ஆம்' என்று தலையாட்டினார்கள்.

''குழந்தைகளைப் பெற்றுவிட்டால் போதுமா? அவங்களை வளர்க்கிற சாமர்த்தியம் வேண்டும்'' அவள் அறையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

''ஆட்டுக்கடாவைப் போல வளர்த்து ஊரில் அவிழ்த்து விட்டுவிட்டு, கட்டிலில் ஏறி உட்கார்ந்து கொண்டுவிட்டால் போதுமா?'' என்றாள் மீனாட்சி. எல்லோரும் பக்கென்றுச் சிரித்தார்கள். அந்த விதமாய் வாய்க்கு வந்தபடி தலைக்கு தலை வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கையில், வாசலில் ரிக்ஷா ஒன்று வந்து நின்றது.

''அதோ சுந்தரி, உன் நாத்தனாரின் பெண் வருகிறாள்'' என்றாள் ஒருத்தி அழுத்தமாய்.

''இவ்வளவு காலை நேரத்திலேயே எங்கே போயிருந்தாளோ?'' ஒருத்தி குரலைத் தாழ்த்திக் கொண்டே கேட்டாள்.

''அவளுக்கென்ன வந்தது? மகாராணி! எங்கே வேணுமானாலும் போவாள். இந்த மாநகரத்தில் போவதற்கு இடமா இல்லை? அழைத்துக்கொண்டு போகிறவர்கள்தான் வேண்டுமே தவிர''—

''உஷ்! பேசாமலிரு. அவளுக்குக் கேட்டு விடும்.''

''கேட்டால் எனக்கென்ன பயம்? முந்தாநேற்று அதென்னவோ இங்கிலீஷ் சினிமாவுக்கு என் புருஷன் போனபோது, அங்கே அவங்க வீட்டுக்கு அவ்வப் பொழுது சிவப்பாய் ஒருத்தன் வருவானே, அவனோடு தென்பட்டாளாம். நான் என்ன இல்லாததைச் சொல் றேனா? மூஞ்சிக்கு முன்னாடியே கேட்டுவிடுவேன்''— மீனாட்சி படபடத்தாள்.

ரிக்ஷாவிலிருந்து இறங்கிய பெண்ணிற்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கும். கண்கள் கவிஞர்கள்

வருணிப்பது போல கவர்ச்சியாய், அகலமாய், எடுப்பாய் இல்லாமல் போனாலும் அவற்றில் ததும்பிக் கொண்டிருந்த ஒரு உயிரோட்டம் எதிராளியைக் கவர்ந்து திரும்ப திரும்பப் பார்க்கத் தூண்டிற்று. சிரித்தால் ரோஜா வண்ணத்தில் இருந்த உதடுகள் விரிந்து அழகாய் இருந்த பல் வரிசைகள் தென்படும். ஆனால் சாதாரணமாய் சிரிக்கமாட்டாள்.

வாழ்க்கையில் சுகத்தைக்காட்டிலும் கஷ்டத்தை உணர்ந்தவளாய், பிரம்மைகளைவிட கசப்பான உண்மைகளையே அனுபவித்தவளாய், ஒவ்வொரு நிமிஷமும் எதிர்காலத்தைப் பற்றிய பயத்துடனேயே வளர்ந்து வந்திருப்பவளைப் போல தோன்றினாள். ஆனாலும் உள்ளத்தில் எப்படிப்பட்ட அலை வீசினாலும் முகத்தோற்றத்தில் அதைக் காட்டிக்கொள்ளாத பயிற்சி அவளிடம் நிறையவே இருந்தது சுவர்ணரேகாவிற்கு விவரம் தெரிந்ததிலிருந்தே நிமிஷத்திற்கு நிமிஷம் சூழ்நிலையோடும், அக்கம்பக்கத்தாரோடும், அதிர்ஷ்டத்தோடும், மாமியோடும் போராடுவது நன்றாய் பழக்கப்பட்டு போயிருந்தது. அதனால் வயதுக்கு மீறிய அனுபவமும், உண்மையை உணரக்கூடிய விவேகமும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் எதிர்த்து நிற்கக்கூடிய தைரியமும் படிந்து போயிருந்தன.

சுவர்ணரேகா ரிக்ஷாவிலிருந்து இறங்கியதுமே எதிர் வீட்டில் மாமியைச் சுற்றிலும் சூழ்ந்துக் கொண்டிருந்த மகளிர் கூட்டத்தைப் பார்த்து விட்டு திடுக்கிட்டுப் போனாள். அவளுக்கு இந்த மகளிர் கூட்டத்தோடு ஒத்து வராது. ஆனாலும் தான் என்ன தப்புப் பண்ணி விட்டோம் என்று இவர்களுக்கு பயப்பட வேண்டும் என்று தோன்றவே தைரியம் ஏற்பட்டது.

ரிக்ஷாக்காரனுக்கும் பணம் கொடுத்து விட்டு உள்ளே வந்தவள் தன்னை விழுங்கி விடுவதுபோல

பார்த்துக் கொண்டிருந்த அம்மகளிரைப் பார்த்து முறுவலுடன்— "இதென்ன! வேளைகெட்ட வேளையில் இங்கே வந்து கூடியிருக்கீங்க? இன்றைக்கு உங்கள் வீடுகளில் சமையல் கிமையல் கிடையாதா?" என்றாள்.

"இவ்வளவு காலை நேரத்தில் எங்கே போனாய்?" ஒருத்தி துப்புத் துலக்கினாள்.

"வேலை இருந்தது போனேன்."

"அதென்ன வேலை?"

சுவர்ணரேகா காதில் விழாதது போல இருந்தாள்.

"உங்க தம்பி அரஸ்ட் ஆயிட்டானாமே?" ஒருத்தி கேட்டாள்.

"ஆமாம்."

"ஆமாம், எனக்குத் தெரியாமல்தான் கேட்கிறேன். ஆனாலும் இதென்ன புத்தி அவனுக்கு?" இன்னொருத்தி கேட்டாள்.

சுவர்ணரேகாவின் முகத்தில் வினாடி நேரம் மென்மையான இடத்தில் அடியுண்டாற்போல வருத்தம் ஏற்பட்டது. ஆனால் அடுத்த நிமிஷமே தன்னை சுதாரித்துக் கொண்டு—அலட்சியமாய் பதிலளித்தாள்.

"என்ன பண்ணுவோம் மாமி? இந்த உலகத்திற்கு அனுப்பி வைக்கும்பொழுது சுவாமி ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு புத்தியைக் கொடுத்து அனுப்பி விடுகிறார். உங்களுக்கு எல்லோருடைய விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரே தவிப்பாய் இருக்கிறதில்லையா? அதுவும் அதே போலதான். ஏன்னு கேட்டால் என்ன சொல்ல முடியும்?"

கேட்டவளின் முகம் சுருங்கிவிட்டது.

சுவர்ணரேகா தாயின் அறைக்குள் நுழையப் போனாள். பின்னாலிருந்து கேலியாய் கேட்டது.

''இப்படி திருட்டுப் பிழைப்புப் பிழைத்துக் கொண்டு எல்லோரும் 'சீ' என்று சொல்லும்படியாய் வாழ்வதை விட எந்தக் குளம் குட்டையிலாவது விழுந்துச் சாவது மேல்.''

சுவர்ணரேகா சரேலென்று திரும்பினாள். கண்ணில் கோபம் சாணை பிடித்தக் கத்தியைப் போல பளபளத்தது. ஆனாலும் அடுத்த நிமிஷமே அதை மென்று விழுங்கி விட்டு—''அப்படீன்னால் மாமி! அது மட்டும் நிஜமானால் நீங்கள் மனப்பூர்வமாகவே இந்த வார்த்தைகளைச் சொல்லியிருந்தால் முதலில் நீங்களும் உங்கள் கணவருந்தான் அந்த காரியத்தை செய்யணும்.'' என்றாள்.

''நானும் என் கணவருமா? எதுக்கு?''

''எதுக்குன்னு உங்களுக்குத் தெரியாதா? உங்கள் வீட்டில் வந்து தஞ்சமடைந்த உங்கள் விதவைத் தங்கையின் சொத்துக்கள் எப்படி ஆறு மாதத்திற்குள் கற்பூரமாய் கரைந்து போயிற்று. மாரடைப்பில் செத்து விட்டதாய் சொன்ன அவள் சவத்தை போலீசார் வருவதற்குள்ளேயே தகனம் பண்ணிவிட வேண்டும் என்று நீங்கள் எவ்வளவு பரபரப்படைந்தீர்கள் என்றெல்லாம் எங்களுக்குத் தெரியும்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி— ''மீனாட்சி மாமீ! உங்கள் வீட்டிலிருக்கும் வெள்ளிக் கிண்ணங்கள், எவர்சில்வர் தட்டுகள், பித்தளை சொம்புகள் இதெல்லாம் நீங்கள் அங்கங்கே கல்யாணங்களிலும், பணக்காரர்களின் வீட்டிலும் சமையல் செய்த பொழுது திருட்டுத்தனமாய் எடுத்துக் கொண்டு வந்த சாமான்கள் என்று உங்களுக்குப்

பின்னால் இவங்கள்ளாம் குசுகுசுத்துக் கொண்டதை நிறைய தடவை கேட்டிருக்கிறேன். இந்த வார்த்தைகள் மட்டும் நிஜமானால், சொல்லுங்கள், நீங்கள் தூக்குப் போட்டுப்பீங்களா? விஷத்தைக் குடிப்பீங்களா? போகட்டும். என்ன பண்ணினால் நன்னாயிருக்கும் என்று மாமியை ஆலோசனைக் கேட்கலாம் என்கிறீர்களா?''

அங்கிருந்த அத்தனைப் பேர் வாய்களும் அடைத்துப் போய்விட்டன. எல்லோரும் வாயைப் பிளந்தபடி அப்படியே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அதற்குள் அறையிலிருந்து, ''ரேகா! நீ இங்கே வா'' என்ற காயத்ரியின் அழைப்பு கேட்டது. தாயின் அறைப் பக்கமாய் திரும்பப் போன சுவர்ணரேகா, ஒரு வினாடி நின்று எல்லோரையும் பார்த்து பயமில்லாமல்— ''அதனால் மாமி, தற்சமயம் இந்த காலத்தில் திருடன் இல்லாதவன் யாருமே இல்லை. பிடிபட்டவன் திருடன். படாதவன் தொரை. அவ்வளவுதான் வித்தியாசம்''— என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

எல்லோருக்கும் திடீரென்று சொரணை வந்தது. ஒரே சமயத்தில் நால்வரும் மளமளவென்று பேசிக் கொண்டார்கள்— ''என்ன தைரியம்! என்ன திமிர்!''

''ஆமாம், நாம்ப சுந்தரியைத் தேற்ற வந்தோமா, அல்லது இந்தச் சிறுக்கியிடமிருந்து வார்த்தைகளைக் கேட்க வந்தோமா?''

''நடந்த விதத்தைப் பார்த்தால் அப்படித்தான் இருக்கு'' சமையல் பண்ணும் அவள் சொன்னாள்— ''சுந்தரி அண்ணி! இன்னிக்கு உன் மூஞ்சியைப் பார்த்துச் சும்மாயிருந்தேன். இல்லாவிட்டால் நாக்கை அறுத்திருப்பேன். ஜென்மத்திலும் இந்த மாதிரி வார்த்தைகளை யார் வாயிலிருந்தும் கேட்டதில்லை.''

''இதப்பார்! சுந்தரி அன்றைக்கு நான் தந்த ரூபாயை சாயந்திரத்திற்குள் திருப்பி அனுப்பாமல் போனால் மரியாதையாய் இருக்காது. வாங்க போகலாம். வேணுமென்றால் சுந்தரியே நம்ப வீட்டுக்கு வரட்டும். நாம்ப மட்டும் ஜென்மத்திலும் இனி ஒரு போதும் இந்த வீட்டுப் படியை மிதிக்க வேண்டாம்.'' சுந்தரி கண்களை அகல விரித்தபடி பார்த்துக் கொண் டிருக்கையிலேயே எல்லோரும் புலுபுலுவென்று போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

சுந்தரிக்கு இம்முறை உண்மையாகவே அடக்க மாட்டாத துக்கம் வந்துவிட்டது. தாங்க முடியாத ஏமாற்றமும் ஏற்பட்டது. ஒரு நிமிஷத்திற்கு முன்னால் இனிக்க இனிக்கப் பேசியவர்கள் எதிர்பாராமல் இப்படிப் போய்விட்டதால் அவள் எழுந்து காளியைப் போல நாத்தியின் அறைக்கு வந்தாள். ''என்னம்மா? உனக்கென்ன அபகாரம் பண்ணினேன் நான்? திக்கில்லாதவளாயிற்றேன்னு உன்னையும் பசங்களை யும் வீட்டில் கொண்டுவந்து வைத்துக் கொண்டு இருந்ததையெல்லாம் செலவழித்ததுதானே என் தப்பு! தெரு நாயை ஏவி விட்டாற்போல இவளை என் மீது இப்படி ஏவிவிடுகிறாயா?''

காயத்ரி அதற்குள் மகளை கிட்டே இழுத்து கன்னங் களில் மாறி மாறி விளாசப் பார்த்தாள். ஆனால் சுவர்ண ரேகா அவள் கைக்கு அகப்படாமல் தொலைவில் போய் நின்றுகொண்டாள். காயத்ரி செய்வதறியாமல் அண்ணியைப் பார்த்து அழுகையை அடக்கிக் கொண்டே— ''அண்ணீ! அவள் என் மகள் இல்லை. உன் மகள்! உன் குழந்தைதான்னு நினைச்சுக்கொண்டு என்ன செய்வாயோ செய்துகொள். உன்னிஷ்டம். அவள் வாயை அடக்க என்னால் முடியவில்லை. அவளைக் கொல்லு. பழுக்கக் காய்ச்சிய கரண்டியால்

வாயில் சூடு போடு. எது பண்ணுவாயோ உன்னிஷ்டம். நான் மறுத்தால் பார்த்துக்கொள்'' என்றாள்.

தாய்க்கும் மாமிக்கும் நடுவில் நின்றுகொண்டிருந்த சுவர்ணா கேலியாய் மாமியைப் பார்த்து—''நான் உன் மகள் என்பது பெயருக்குத்தானேயொழிய சுபாவத்தில் அசல் மாமியைத்தான் கொண்டிருக்கிறேன் என்று எல்லோரும் சொல்றாங்க இல்லையாம்மா? அது நிஜம் கூட. மாமியோட சிஷ்யையாதலால் எனக்கு இவ்வளவு வாய் வந்திருக்கிறது, என் வாயில் சூடு இழுக்கனு மானால் முதலில் மாமி தன் வாயில் சூடுபோட்டுக் கணும். 'யதா குரு ததா சிஷ்ய' என்று சொல்லியிருக் கிறார்கள்'' என்றாள்.

''சீ! எப்பொழுதோ யாரோ பேச்சுக்குச் சொன்னதை வைத்துக்கொண்டு அதையே இப்பொழுது ஒப்பிச் கிறாயா? நீ என் மகள் ஏன் ஆகிறாய்? என் குடியை குலைப்பதற்கு வந்த ராட்சசியின் மகள்தான் நீ'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள் சுந்தரி.

## 4

கால் மணி நேரம் கழிந்தது. கட்டிலில் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்த காயத்ரி நடுங்கும் குரலில் கேட்க முடியாமல் கேட்டாள். ''அந்த பாவியைப் பற்றி மணியின் அப்பா என்ன சொன்னார் ரேகா?''

''இந்த தடவை அவ்வளவு எளிதாய் விட்டுவிட மாட்டாங்களாம்மா, அன்றைக்கு எக்ஸிபிஷனில் நடந்த ரகளையில் இவனோட கும்பல் இருந்ததாய் சந்தேகமாய் இருக்காம். அந்த கும்பல் இருக்குமிடத்தைப் ப[illegible] தெரியவில்லையாம். இவன் மூலமாய் துப்புத்து[illegible]

கணும்னு பார்க்கறாங்களாம். இம்முறை என்னால் எதுவுமே பண்ண முடியாதுன்னு சொல்லிட்டார் அவர்''

''கடவுளே'' காயத்ரி திடீரென்று ஆவேசத்துடன் மார்பில் அடித்துக் கொண்டாள். ''எனக்கு சாவு ஏன் வரவில்லை? இன்னும் இந்தப் பாவி வாழ்ந்து தீரணுமா? என்ன இருக்கிறதுன்னு வாழ்வேன் நான்?'' ரேகா சட்டென்று ஓடிப்போய் அவளைப் பிடித்துக் கொண்டாள். அவள் அவ்வாறு மார்பில் அடித்துக் கொண்டால் அது ஹிஸ்டீரியா வருவதற்கு அறிகுறி.

காயத்ரிக்கு அதற்குள் நினைவுத் தப்பிவிட்டது. தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள். அவளை அழுத்தமாய் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டாள் சுவர்ணரேகா. அவள் அழுதுகொண்டே கேட்டாள்— ''நீங்களிருவரும் வளர்ந்து பெரியவங்களாயிட்டால் என் கஷ்டங்கள் தீர்ந்துவிடும், நானும் ஒரு மனுஷியாய் நாலுநாள் சந்தோஷமாய் மூச்சுவிட முடியும் என்ற ஆசையால்தான் இத்தனை நாளாய் வாழ்க்கையோடு எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருந்தேன். முடிந்து விட்டது. அந்த ஆசைகூட தீர்ந்துப் போய்விட்டது. அவன் இப்படி உருப்படாமல் போய்விட்டான். நீ மட்டும் என்ன குறைச்சல்? நான் எவ்வளவு சொன்னாலும் கேட்காமல் அந்த கமலன் என்ற பையனோடு வேளைகெட்ட வேளையில் சுற்றுகிறாய். என் பேச்சில் லட்சியம் இருக்கா? மொதல்ல உனக்கு யார் மேல்தான் லட்சியம் இருக்கு? யார் மேலுமே இல்லை. உன் வாழ்க்கைக் கூட கவிழ்ந்துவிட்டதுன்னு தெரிந்த அன்றைக்கு ஆனந்தமாய் தூக்குப் போட்டுக்கொண்டு சாகிறேன். அது வரை சாகமாட்டேன்.''

இனி எதுவும் செய்ய முடியாதவளாய் தாயின் தலையை மடியில் வைத்துக் கொண்டு சிலையாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள். தாயின் இதயத்தில்

வெடித்துக் கொண்டிருந்த எரிமலையைப்பற்றி அவள் அறிவாள்.

ஒரு விதத்தில் சேகருக்குத் திருட்டுத்தனத்தைக் கற்றுத் தந்ததுகூட மாமிதான். அவனுக்கு வயிறார சாப்பாடு போடமாட்டாள். பஜ்ஜி, கடலை உருண்டைகள் போன்றவைகள் அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவைகளை சரியாய் தராமல் தீர்ந்து விட்டது என்று காலியான கிண்ணத்தைக் காட்டி விட்டு, உள்ளே ரகசியமாய் ஒளித்து வைத்திருப்பாள். உள்ளே வைத்திருக்கும் பொருட்கள் மாயமாகிவிட்டிருக்கும். சுந்தரி வெளியேயும் சொல்ல முடியாமல், மென்றும் விழுங்க முடியாமல் தேள்கொட்டிய திருடனைப் போல கொதித்துக் கொண்டிருப்பாள். சந்திரசேகரனின் இந்தப் பழக்கமே நாளடைவில் தன் தேவைகளுக்குக் கையில் பணம் இல்லாததால் திருடத் துணிந்து, பிறகு இதுவே நிலைத்து விட்டது.

சுவர்ணரேகா மட்டும் அவர்கள் காலிலும் இவர்கள் காலிலுமாய் விழுந்து அரும்பாடுபட்டு டியூஷன் ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தாள். அதன் மூலம் நாலு காசு கையில் வந்து கொண்டிருந்தது. ஆனால் அதுவும் இன்று போய்விட்டது. சேகர் அவளுடைய தம்பி என்று தெரிந்ததுமே, டியூஷன் சொல்லித் தந்து கொண்டிருந்த பெண்ணின் தாய், ''அம்மா! உன் மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. நீங்கள் நல்லவர் இல்லை. அதனால் நான் வேறு டியூஷனுக்கு ஏற்பாடு பண்ணிக்கொண்டுவிட்டேன்.'' என்று காலையில் பணத்தைக் கணக்குப் பார்த்துத் தந்துவிட்டார். சுவர்ண ரேகா திரும்பி வந்துவிட்டாள். அவள் முகத்தில் ரத்த மெல்லாம் வற்றிவிட்டாற் போலாயிற்று. தாயை சுகப் படுத்துவது எப்படி? இனி அவள் என்ன பண்ண வேண்டும்? ரேகாவின் உள்ளத்தில் இந்தக் கேள்விகள்

பூதாகாரமாய் எழும்பின. திடீரென்று எதிர்காலமே பெரிய பிரச்னையாய் தோன்றத் தொடங்கிவிட்டது அவளுக்கு.

# 5

நிலா வெளிச்சத்தில் வழுவழுப்பாய் கருப்புப் பாம்பைப் போல மினுமினுத்துக் கொண்டிருந்த தார் ரோடிற்கு இரு பக்கங்களிலும் அழகான, நவீனமான டிஸைன்களில் விசாலமான இடப்பரப்புகளில் பங்களாக்கள் சில இருந்தன. அவை பணம், செல்வாக்கு, வியாபாரம் போன்றவற்றில் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டிருந்தாற்போல தோன்றின. மேற் சொன்ன அந்த வீதியில் வலது பக்கத்திலிருந்த மூன்றாவது வீட்டில் எல்லா அறைகளிலும் இன்னும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அந்த வீட்டின் எஜமானர் இன்னும் சாப்பிடவில்லை என்பதற்கு அறிகுறியாய் வேலைக்காரர்கள் இன்னும் அங்குமிங்கும் வளைய வந்து கொண்டிருந்தார்கள். வீட்டைச் சுற்றிலும் உயரமான காம்பவுண்டுச் சுவர் இருந்தது.

அதற்குள் விசாலமாய் இருந்த முன் எல்லையில் பசும்புற்கள் ஒழுங்காய் பயிரிடப்பட்டிருந்தன. அதைச் சுற்றிலும் பல வித பூஞ்செடிகள். அவற்றில் இரவில் பூக்கும் பூக்கள் சில இதழ் விரிந்து கம்மென்ற வாசனையைப் பரப்பிக்கொண்டிருந்தது.

உள்ளே முன் அறை சோபாவில் உட்கார்ந்து உயரமான பெரிய ஷேட்லைட்டின் வெளிச்சத்தில் ஒரு பக்கமாய் சாய்ந்து உட்கார்ந்துக்கொண்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்தார் வீட்டு எஜமானரான விஸ்வநாதன். அவர் மடியில் தலை வைத்துக்கொண்டு படுத்

திருந்தாள் ரஞ்சிதா. புத்தகம் படித்துக்கொண்டிருந்த அவர் இடையிடையே நிறுத்திவிட்டு ஒரு வினாடி மடியில் படுத்துக் கொண்டிருந்த ரஞ்சிதாவின் முகத்தையும், அச்சிறுமியின் கழுத்தில் பளபளத்துக் கொண்டிருந்த நெக்லெஸ்ஸையும் பார்த்த பொழுதெல்லாம் அவருக்கு முந்தாநாள் ஸ்டேஷனில் இறங்கியதுமே அதைத் திருடப்பார்த்த அவ்விளைஞனின் முகமே ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தது. அந்த ஞாபகம் வந்தபொழுதெல்லாம் அவர் தாடை எலும்புகள் இறுக்கமாகிக் கொண்டிருந்தன.

விமலனையும், கமலனையும் அன்றைக்குத் தன்னோடு சேர்ந்து சாப்பிடுவதற்குக் கூப்பிட்டிருந்தார் அவர். இருவரும் சம்மதித்திருந்தார்கள். கமலன் வந்து வெகு நேரமாகிவிட்டும்கூட விமலன் இன்னும் வரவில்லை. ஆறு மணியிலிருந்து விமலனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார் அவர். பத்து மணியாகிவிட்டது. விமலன் இன்னும் வரவில்லை. வேறு யாராவதாயிருந்தால் நன்றாய் திட்டித் தீர்த்துவிட்டுப் படுக்கப் போயிருப்பார். ஆனால் விமலன் வேறு. அவனுக்கு ஏதாவது வேலை ஏற்பட்டிருந்தாலேயொழிய சொன்னச் சொல்லைத் தவறியிருக்கமாட்டான்.

கமலன் வந்தும் லாபமில்லை. விஸ்வநாதனுக்கெதிரே முள்ளின் மீது இருப்பதுபோல உட்கார்ந்திருந்தான். அதென்னவோ, அண்ணன் தம்பிகள் இருவருக்கும் அவர் ஒரே விதமான உரிமையைத் தந்திருந்த போதிலும் அதைப் பெற்றுக் கொண்டதில் இருவரும் வெவ்வேறு மனத்தத்துவங்களைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

கமலன் வந்ததுமே குசலப் பிரச்னைகளைக் கேட்டுவிட்டு, அவன் காலேஜைப் பற்றியும் படிப்பையும் பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டு ஊர் விசேஷங்

களைப் பற்றி கேட்டு விட்டு பிறகு, "மாடியில் லலிதா இருக்கிறாள் போ" என்றார்.

கமலன் 'அம்மாடா' என்று நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டே எழுந்து போனான். கமலன் போன திசையையே பார்த்து பெருமூச்சு விட்டார் விஸ்வநாதன். அண்ணன் தம்பி இருவருக்குமிடையே தான் எவ்வளவு வித்தியாசம் என்றெண்ணிக்கொண்டார்.

சிறு வயதிலிருந்தே வீட்டுப் பொறுப்புக்களைத் தலையில் 'போட்டுக் கொண்டு பிரச்னைகளோடு போராடிக்கொண்டிருந்தான் விமலன்.

கமலனுக்கோ எவ்வளவு வயது வந்த போதிலும் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படவில்லை. எப்பொழுது பார்த்தாலும் சினிமா, வெளியே சுற்றுவது இவைகளேதான்.

வாழ்க்கை உழைப்பதற்கே என்பது போல இருப்பான் விமலன். சந்தோஷப்படுவதற்கே என்பதுபோல நடந்து கொள்வான் கமலன்.

அண்ணன் தம்பிகளுக்கிடையே சுபாவத்தில் மட்டுமில்லை, தோற்றத்திலும்கூட மிக வித்தியாசம் இருந்தது.

விமலன் ஒழுங்கான கட்டுப்பாட்டுகளுடன் ஆரோக்கியமாய் உயரத்திற்குத் தகுந்த பருமனோடு, இருப்பான். அவன் நடவடிக்கைகளில் ஒரு விதமான கம்பீரம் இருந்தது. சுபாவத்தில் மென்மையான குணத்தோடு அலட்சியம் கூட தென்பட்டது.

கமலன் அவ்வாறு இல்லை. மிகவும் சந்தோஷப்படுபவன். பூவினும் மென்மையான அவன் இதயம் இந்த உலகத்தில் நிகழும் அநியாயம், அக்கிரமம் போன்றவைகளைக் கண்டு வெலவெலத்துப் போய் விடும். உலகத்தில் சகல மனிதர்களும் சமம் என்றும்

சமத்துவம் வந்தால்தான் உலகம் உருப்படும் என்றும் சொல்லிக் கொண்டிருப்பான்.

அவன் விரும்பும் இந்த சமத்துவம் உலகத்தில் என்றைக்குமே வராது என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் இதை மறுத்து, வந்தே தீரும் என்று கனவு கண்டு வந்த அவனை எல்லோரும் பைத்தியம் என்றே முடிவு கட்டிக் கொண்டிருந்தார்கள்.

கமலன் மாடியில் லலிதாவின் அறையில் உட்கார்ந்து தற்போது நாட்டில் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் அரசியல்கள், அதன் மூலமாய் சாதாரண மனிதர்களுக்கு நேர்ந்து கொண்டிருக்கும் அக்கிரமங்கள் முதலியவைகளைப் பற்றி தன் அபிப்பிராயங்களைத் தெரிவித்து குட்டிப் பிரசங்கமடித்துக் கொண்டிருந்தான். அவனுக்கெதிரே உட்கார்ந்து அரை குறையாய் கேட்டுக் கொண்டிருந்த லலிதாவின் பாதி கவனம் எதிரே மேஜைமீது கிடந்த நேற்றைய பேப்பரில் வெளிவந்திருந்த புகைப்படத்தின் மீதே இருந்தது. அதில் ஹாலிவுட் சினிமா நடிகனைப் போல நீண்ட முகத்துடன், திருத்தினாற்போலிருந்த அழகிய மூக்குடன் சுறுசுறுப்பான பார்வையுடனும் வாயிலிருந்து மோவாய் வரை ரத்தம் கோடு கட்டிக் கொண்டிருந்த ஒருத்தனின் புகைப்படம் இருந்தது. அந்த புகைப்படத்தை எவ்வளவு தடவை பார்த்தபோதிலும் லலிதாவுக்கு இன்னும் இன்னும் பார்க்க வேண்டும் போலவே இருந்தது.

அவன் யாரோ தெரியாது. நேற்று காலையில் தன் தந்தையிடமிருந்து நகையைப் பறிக்கப் போன ஆள் தான். என்ன சாகஸம்! லலிதாவுக்கு அற்புதமாய் இருந்தது. பட்டப்பகலில் அவ்வாறு திருட்டுத்தனம் பண்ணுவதற்கு எவ்வளவு தைரியமும் சாகஸமும் வேண்டும்? எப்படிப்பட்ட சாதுரியத்தைக் காட்ட

வேண்டும்! இந்த காலத்து இளைஞர்களிடம் இவ்வளவு தைரியம் எங்கேயாவது இருக்கிறதா? எவ்வளவு அழகாய் இருக்கிறான்! அந்தப் போட்டோவின் கீழே 'திருடன்' என்று போட்டிருந்ததால் தெரிந்தது. இல்லாவிட்டால் யாராவது வெளிநாட்டிற்குப் போய்விட்டு வந்த விளையாட்டு வீரன் என்றோ அல்லது யாராவது பிரபலமான புள்ளி என்றோதான் எண்ணிக் கொண்டிருப்பார்கள் எல்லோரும். பேப்பரை மடித்து கமலனிடம் தந்து—''கமல்! இதைப் பார்த்தாயா?'' என்றாள்.

தற்சமயம் நாட்டில் பரவியிருக்கும் வஞ்சங்களைப் பற்றி ஆவேசமாய் பேசிக் கொண்டிருந்த கமலன் ஒரு வினாடி நிறுத்திக்கொண்டு— ''அதென்ன?'' என்றான்.

''பார்'' பேப்பரைத் தந்து விட்டு ஜன்னல் வழியாய் வெளியே பார்க்கத் தொடங்கினாள்.

லலிதாவுக்கு அவள் தாயின் குணங்கள் நிறைய படிந்திருந்தன. அவள் தாய் வாழ்க்கையை வஞ்சனையில்லாமல் எல்லா விதத்திலும் அனுபவித்துவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவள். அந்த குணமே லலிதாவிடமும் படிந்திருந்தது. லலிதா பிறந்து பதினாலு ஆண்டுகளுக்குப் பிறகு ரஞ்சிதாவைப் பெற்றெடுத்தச் சமயத்தில் பிரசவத்தில் இறந்து விட்டாள் அவள் தாய். தாயை விழுங்கி விட்டு வந்த ரஞ்சிதாவைக் கண்டால் லலிதாவுக்குக் கொஞ்சமும் பிடிக்காது. தாயில்லாமல் பிறந்த ரஞ்சிதா தந்தையிடமே தாயன்பையும் உணர்ந்து கொண்டாள். சிறு வயதிலிருந்தே லலிதாவுக்குத் தந்தையின்பால் கௌரவம் இல்லை. அது தாய் இறந்த பிறகு இருமடங்காகி விட்டது.

லலிதாவைப் பண்ணிக்கொள்ள விமலன் மறுத்து விட்டபோது விஸ்வநாதன் எப்படியாவது அவளை

பலவந்தப்படுத்தி சம்மதிக்க வைக்காமல் பேசாமலிருந்து விட்டது லலிதாவுக்குத் தந்தையின்பால் கோபத்தை வரவழைத்தது. அதுமட்டுமில்லை, தன் பேச்சை மறுத்த தற்காக அவர் விமலனை விரோதித்துக் கொள்ளாமல் இன்னும் தோழமை கொண்டாடிக் கொண்டிருந்தது அவ ளுக்கு வெறுப்பாய் இருந்தது. அதோடு நிற்காமல் ஏமாற்றமடைந்த தன் மனதிற்கு ஆறுதலளிக்காமல் வெந்த புண்ணில் வேலை இட்டாற்போல மதுசூதனன் என்ற இன்னொருவனை அழைத்து வந்து அவள் தனக்கு அவனைப் பிடிக்கவில்லை என்று எவ்வளவு சொன்னபொழுதும் கேட்டுக் கொள்ளாமல் அவள் திருமணத்தை நிச்சயம் செய்து விட்டார்.

துடுக்குத்தனம் கொண்ட லலிதாவோடு வாழ்க் கையை சுகமாய் நடத்த வேண்டுமென்றால் மதுசூதன னைப்போன்ற வாயில்லாதவன்தான் சிறந்தவன் என்பது அவர் அபிப்பிராயம்.

மணமான நாலைந்து மாதங்கள் வரை கணவன் மனைவியர் இருவரும் விஸ்வநாதனிடமே இருந்து வந்தார்கள். லலிதா அவனோடு அடம் பிடிப்பதையும் விட்டேற்றியாய் இருந்ததையும் அவர் கவனிக்காமல் போகவில்லை.

சரியாய் பத்து மாதங்கள்கூட ஆகவில்லை. மதுசூதனன் ஜீப் விபத்தில் மரணமடைந்துவிட்டான். விஸ்வநாதனின் தலையில் இடி விழுந்தது. லலிதா மட்டும் பீடை ஒழிந்தது என்பது போல உணர்ந்தாள்.

ஏற்கனவே ஷோக்குகள் அதிகமான லலிதா பொட் டில்லாததைப் புதிய ஃபேஷனாய் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டாள். இருபது வயதிலேயே விதவையாகி விட்ட லலிதாவைப் பார்த்து வயிற்றைப் பிசைந் தெடுத்தது விஸ்வநாதனுக்கு. மறுமணம் செய்ய முயன்றார். ஆனால் அவள் விரும்பவில்லை. விடாப்

பிடியாய் மறுத்துவிட்டாள். மறுபடியும் அப்படிப்பட்ட முயற்சியைச் செய்தால் இம்முறை தன் பிணத்தைதான் பார்க்க நேரிடும் என்று சவாலிட்டாற்போல சொன்னாள். அதற்கு மேல் அவரால் பலவந்தம் செய்ய முடியவில்லை. விதவைக் கோலங்கள் உடலளவில் மட்டுமில்லை, மனத்தளவிலும்கூட லலிதாவிடம் படியவில்லை.

மனைவி இறந்தபொழுது செய்திருந்த வாக்குறுதியின்படி விஸ்வநாதன் தன் சொத்தின் மீது வரும் ஆதாயத்தில் பாதியை லலிதாவின் பெயரில் பேங்கில் போட்டு வைத்திருந்தார்.

'ஏற்கனவே குரங்கு, அதுவும் கள்ளைக் குடித்து விட்டது'—என்றாற்போல புதிதாய் கைக்கு வந்த பணத்தால் லலிதாவுக்குத் தலைகால் புரியவில்லை. இறக்கைக் கட்டிய குதிரையாய் மாறிவிட்டாள்.

அவள் அழகும் பணமும் நிறைய பேர் அவளைச் சுற்றிச் சூழ்ந்துகொள்ள செய்தன. ஆனால் அவர்கள் பால் லலிதாவுக்கு வெறுப்புத் தோன்றத் தொடங்கிற்று. ஆனால் தன்னை நன்றாய் புரிந்துகொள்ளக்கூடிய நபர் ஒருவருமே தென்படாததால் லலிதாவுக்கு எரிச்சலாய் இருந்தது. அவர்கள் மீது தனக்கு அன்பு இருப்பது போல நடித்து, அவர்கள் நெருக்கமானதுமே துச்சமாய் ஒதுக்கித் தள்ளி ஏளனமாய் பேசத் தொடங்கி விடுவாள். அதனால் அவளைச் சுற்றிப் புதுப்புது மனிதர்களை மாற்றிக் கொண்டேயிருப்பாள்.

தற்சமயம் லலிதாவின் பக்தர்களுள் தலைமையானவனாய்தென்பட்டவன் டாக்டர் கிஷோர். அவன் எம்.டி. பாசாகி பிரைவேட்டாய் பிராக்டீசு வைத்திருந்தான். லலிதாவுக்கு அவனோடு பரிச்சியம் ஏற்பட்டதோடு கூட அவள் நினைத்தபொழுதெல்லாம் அவனுடைய க்ளினிக்கிற்குப் போகும் பழக்கத்தை ஏற்படுத்திக்

கொண்டாள். இருவருமாய் சேர்ந்து சினிமாவுக்கோ, பொழுதுபோக்கிற்கோ போய்விடுவார்கள். நிறைய பேர் விஸ்வநாதனிடம் வந்து இதைப் பற்றிச் சொன்னார்கள்.

கிஷோருக்கு மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருந்ததாய் தெரிந்த அவர் லலிதாவைக் கண்டித்தார். அவனோடு பேசவோ,சந்திக்கவோ கூடாது என்று தடை விதித்தார். ஆதியிலிருந்தே தந்தை வேண்டாம் என்றால் அதையே செய்து தீரும் லலிதா அலட்சியமாய் தோளை குலுக்கி விட்டுப் போய் விட்டாள்.

ஒரு நாள் கிஷோரின் மனைவி குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு விஸ்வநாதனிடமே நேராய் வந்துவிட்டாள். அவரிடம் வந்து இருகைகளைக் கூப்பி அழுது கொண்டே தன் சிறிய குழந்தைக்கு ஜுரமாய் இருப்பதாகவும், தந்தைக்காக அழுது அரற்றுகிறான் என்றும், கிஷோரை நாலைந்து நாட்களாய் காண வில்லை என்றும், வீட்டிற்கு வரவில்லை என்றும், என்னவானானோ என்று கவலைப் படுவதா கவும், க்ளினிக் மூடப்பட்டுவிட்டது என்றும், கிஷோரைத் தவிர தனக்கு யாருமில்லை என்றும் இரைந்து பேசி அழத் தொடங்கினாள். வேலைக் காரர்கள் விநோதமாய் ஆர்வத்துடன் கேட்கத் தொடங் கினார்கள். விஸ்வநாதனுக்கு அவமானத்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது.

அவர் உடனடியாய் விமலனுக்கு போன் செய்து வரவழைத்து நடந்ததையெல்லாம் சொன்னார். விமலன், டிரைவர் ராமு இருவரும் சேர்ந்து தேடினார்கள்.

கிஷோர் வேறெங்கும் போய்விடவில்லை. சென்னை யிலிருந்து சில மைல்கள் தூரத்தில் ஊரெல்லையைத் தாண்டி இருந்த ஒரு கிராமத்தில் கிஷோரின் நண்பன் ஒருவன் ஊருக்குப் போயிருந்ததால் அவன் வீட்டில்

லலிதாவோடு போய் தங்கியிருந்தான். லலிதா சிநேகிதியின் கல்யாணத்திற்குப் போவதாய் சொல்லி விட்டு டிரைவரோடு புறப்பட்டு அங்கே வந்திருந்தாள். விமலன் போய் லலிதாவை அழைத்துக் கொண்டு வந்தான்.

ஏற்கனவே ரத்த அழுத்த ஆசாமியான அவரை இது மிகவும் பாதித்தது. நிலைமையை உணர்ந்து கொண்ட விமலன் அவரை ஓய்வு என்றப் பெயருடன் இந்த சூழ்நிலையை விட்டு தொலைவில் கேரளாவிற்கு அனுப்பி வைத்தான். அவருடைய பழைய நண்பரும் இயற்கை வைத்தியருமான ஒருவரிடம் போகும் முன் லலிதாவின் கைக்கு சல்லிக் காசுகூட கிடைக்காதவாறு கட்டு திட்டங்களை வகுத்து விட்டுப் போனார். அவர் வீட்டில் நான்குச் சுவர்களுக்கிடையே கைதியாய் திணறி கொண்டிருந்த லலிதா தன் அதிருப்தியையும் கோபத்தையும் வேலைக்காரர்களின் மீது காட்டினாள்.

விமலன் அவள் தந்தையைப் பற்றிச் சொல்லும் நிந்தனைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டு விட்டு தந்தையின்பால் அவளுக்கு உள்ள கடமைகளை பற்றி மென்மையான வார்த்தைகளால் இதபோதனை செய்வான். விமலன் தன்னை மணந்து கொள்ளாவிட்டாலும், சிநேகிதனாய் தன்னிடம் வந்துகொண்டிருந்தது அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. என்றாவது ஒரு நாள் அவன் தன் வலையில் வீழ்ந்து விடுவான் என்ற தைரியம் ஏற்படத் தொடங்கிற்று லலிதாவுக்கு.

வீதியில் மோட்டார் சைக்கிள் வந்து நின்ற சப்தம் கேட்டது. சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்த லலிதா கமலனைப் பார்த்து, "உங்கள் அண்ணன் வந்து விட்டான் போலிருக்கு" என்றாள்.

கமலனுக்கு அவள் சொன்னதுகூட காதில் விழ வில்லை. அவன் முகம் ரத்தம் இல்லாததுபோல சுண்டி விட்டிருந்தது. பேப்பரில் வெளி வந்திருந்த போட்டோ வையும் அதன் கீழே எழுதியிருந்த விவரங்களையும் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

''இதென்ன, இப்படி ஆகிவிட்டாய்? அந்த பையனை உனக்குத் தெரியுமா?'' ஆர்வத்துடன் கேட்டாள் லலிதா.

கமலன் பதில் சொல்லத் தடுமாறியவன்—''ஆங்! ஆஹா! இல்லை...'' என்று பேப்பரை பத்திரமாய் மடித்து லலிதாவின் மேஜை மீது வைத்தான்.

லலிதா மேஜை மீதிருந்து பேப்பரை எடுத்து அந்த போட்டோவைக் கூர்ந்து பார்க்கத் தொடங்கினார். மனதின் அடிவாரத்தில் எங்கேயோ இவனை ஒரு முறை பார்த்தால் நன்றாயிருக்கும் என்ற ஆசை உதித்தது

கீழே இருந்த விமலன் அப்பொழுதுதான் உள்ளே வந்தான்.

''என்ன விமல். இவ்வளவு தாமதம் எதுக்கு?'' விஸ்வநாதன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டுக் கேட்டார். ''என்ன பண்றது, புறப் பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஒருத்தன் கேஸைக் கொண்டு வந்துவிட்டான். கொலைக்கேசு. பணக்கார குடும்பத்தில் ரகசியமாய், நடந்திருக்கிறது. ரொம்பவும் சிக்கலான கேஸ். இதென்ன ரஞ்சிதா இப்படிப் படுத்துக் கொண்டிருக்கிறாளே, தூங்கிவிட்டாளா?'' கிட்ட வந்து கேட்டான்.

''நீ வருவதாய் சொன்னதால் வெகுநேரம் பார்த்து விட்டுத் தூங்கிவிட்டாள்.''

''இப்படிக் கொடுங்க, நான் படுக்க வைத்துவிட்டு வரேன்.''

அவன் ரஞ்சிதாவை அவள் படுக்கையில் படுக்க வைத்துவிட்டுத் திரும்பி வந்தான்.

சாப்பிடும் பொழுது கமலன் மட்டும் வேற்றுச் சிந்தனையுடன் சரியாய் சாப்பிடவில்லை. எல்லோரும் சாப்பிட்டு முடித்து விட்டு அடுத்த அறைக்கு வந்தார்கள். விஸ்வநாதன் திடீரென்று ஞாபகம் வந்தவராய் கேட்டார்—"கமலனின் கல்யாண விஷயம் என்ன வாச்சு விமல்? அந்த புண்டரீகனின் மகள் சம்பந்தம் நிச்சயம் ஆயிடுத்தா?"

"ஆங்! ஏறக்குறைய செட்டில் ஆனாற்போலதான். இரண்டு மூன்று நாட்களில் அவரை வரச்சொல்லி எழுதப் போகிறேன். பத்துப் பதினைந்து நாளில் ஒரு முகூர்த்தம் இருக்காம்."

கமலன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான். ஏற்கனவே ஒரு மாதிரியாய் இருக்கும் அவன் முகம் இன்னும் நிறமிழந்து தென்பட்டது.

லலிதா ஓரக்கண்ணால் கமலனின் முகத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலை கவனித்துக் கொண்டேயிருந்தாள். "அப்ப கமலுக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறதுன்னு அர்த்தமா?" மிகக் குழைவாய் கேட்டாள்.

"அவன் மூஞ்சி! அவன் விரும்பும் பெண்ணைப் பண்ணி வைத்தால் அவன் வாழ்க்கை விடிஞ்சாற் போலதான்..." நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டு சிரித்துக் கொண்டே சொன்னான் விமலன். அவன் கண்களில் தம்பியின்பால் பாசம் ததும்பிக் கொண்டிருந்தது.

கமலன் ஆம் என்றும் சொல்லவில்லை. அண்ணனின் வார்த்தைகளை மறுக்கவும் இல்லை. அவர்கள் பேசிக் கொண்டிருந்தது, தன்னைப் பற்றி இல்லை

என்றாற் போல உள்ளங்கையில் லலிதா போட்ட பாக்குப் பொடியை ஒவ்வொன்றாய் எடுத்து வாயில் போட்டுக் கொண்டே மென்றுகொண்டிருந்தான்.

## 6

பகல் பன்னிரெண்டு மணியைத் தாண்டிவிட்டது. இன்றைக்கு இனி வீட்டில் சமையல் கிமையல் கிடையாது என்பது போல சுந்தரி கட்டிலில் படுத்துக் கொண்டு விட்டாள். இனி இன்றைக்கு வீட்டில் யாருக்கும் சாப்பாட்டு யோகமில்லை என்று நன்றாய் தெரிந்து விட்டது. சங்கரன் வீட்டை விட்டுப் போய் நான்கு நாட்களாகி விட்டன. ஆள் ஜாடையைக் காணோம், காயத்ரிக்கு தினமும் இரண்டு மூன்று முறைகளாவது ஃபிட்ஸ் வந்து கொண்டிருந்தது. காலையில் வந்த ஃபிட்ஸ் தணிந்து, ரேகா தந்த தண்ணீரைக் குடித்துவிட்டு, சோர்வுடன் கட்டிலில் முடங்கிப் படுத்துக் கொண்டிருந்தாள்.

சுவர்ணரேகா ஜன்னலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். வயிற்றில் பசி குடைந்தெடுத்துக் கொண்டிருந்தது. வாரத்தில் இரண்டு நாட்கள், வெங்கடேஸ்வர சுவாமிக்கு சனிக்கிழமை, சாயிபாபாவுக்கு வியாழக்கிழமை என்று இரவில் சமையல் பண்ணவே மாட்டாள். நேற்று வியாழக்கிழமை, சங்கரன் வீட்டில் இல்லாததால் அவள் வழக்கமாய் பண்ணும் அந்தக் கொஞ்சம் உப்புமாவைக்கூட பண்ணவில்லை. நேற்று ராத்திரி சாப்பாடில்லை. இப்பொழுதும் இல்லை. ரேகாவால் தண்ணீரை மொண்டு மொண்டு குடித்த போதிலும் பசியை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

பன்னிரெண்டு மணியளவில் பக்கத்து வீட்டு மாமி பெரிய கிண்ணத்தில் வாழை இலையைப் பரப்பி அதில் புளியோதரை, சக்கரைப் பொங்கல், தயிர்சாதம், வாழைப்பழங்களை வைத்து அவர்கள் வீட்டில் ஏதோ பூஜை செய்ததாய் சொல்லி சுந்தரியை எழுப்பி உட்கார வைத்துச் சாப்பிடச் செய்தாள்.

சுந்தரி சாப்பிட்டுக்கொண்டே இடையிடையே ராகம் இழுத்துக் கொண்டிருந்தாள். "அவர் எங்கே இருக்காரோ தெரியவில்லை. பாவி நான் சும்மா இல்லாமல் போய்விட்டேன். இனி அவரைப் பார்க்க முடியுமோ முடியாதோ தெரியலை. அவருக்கு நானும் எனக்கு அவரும் தவிர எங்களுக்கு வேறு திக்கு யாரு? எங்களுக்குக் குழந்தையா குட்டியா? நான் பண்ணி வைத்தால் எல்லாவற்றையும் விழுங்குவாங்களே தவிர நான் சாப்பிடவில்லையேன்னு வருத்தப்படுகிறவங்க இந்த வீட்டில் யார் சொல்லுங்கள்?"

மாமி ஆறுதல் சொல்வதுபோல சொன்னாள்— "இதென்ன இப்படிச் சொல்கிறாய், நாங்கள்ளாம் இல்லையா உனக்கு? வாய் நல்லதாயிருந்தால் ஊரும் நல்லதாய் இருக்கும் என்பாங்க. சில பேரைப் போல ஒதுங்கி வாழ முடியாதும்மா நம்மால். நமக்கு அக்கம் பக்கம் நாலும் வேணும்" அறையில் கட்டிலோடு கட்டிலாய் படுத்துக்கொண்டிருந்த காயத்ரி இதைக் கேட்டதுமே நிமிர்ந்து ரேகா எங்கேயிருக்கிறாள் என்று கண்களாலேயே அறையையெல்லாம் துழாவிப் பார்த்தாள். அவள் பயந்தாற்போல ரேகா மாமிக்குச் சுடச்சுட பதில் சொல்வதற்கு எப்பொழுதும் போல எழுந்து செல்லவில்லை. பசியால் தலைச் சுற்றிக் கொண்டிருந்த ரேகாவிற்குச் சக்தியும் பொறுமையும் தளர்ந்துவிட்டிருந்தது. வயிற்றைக் குடைந்துகொண் டிருந்தது பசி. ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக்

கொண்டிருந்த அவளுக்கு தொலைவில் குப்பைத் தொட்டிக்கருகில் பக்கத்து வீட்டு மாமியின் வீட்டி லிருந்து எறிந்திருந்த இலைகளில் மிஞ்சியிருந்த தயிர் சாதத்தையும் புளியோதரையும் நக்கி நக்கித் தின்று கொண்டிருந்த தெரு நாய் தென்பட்டது. தன்னைவிட அந்த தெரு நாய் தேவலை என்ற யோசனை வந்ததும் தாங்க முடியாதவளாய் விருட்டென்று தலையைத் திருப்பிக்கொள்ளப் போனவளின் பார்வை சட்டென்று நின்று விட்டது.

தொலைவில் கமலன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள். அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. பசியைப் பற்றி ஒரு நிமிஷம் மறந்து விட்டாள். சட்டென்று எழுந்து வாசலுக்கு வந்தாள்.

''யாரது ரேகா?'' மகள் சரேலென்று குதித்து வெளியே போனதைப் பார்த்துச் சந்தேகத்துடன் கேட்டாள் தாய்.

''கமல் வந்திருக்காரும்மா'' ரேகாவின் குரல் சந்தோஷத்தால் மலர்ந்தது.

காயத்ரி விருப்பமில்லாத சங்கதியைக் கேட்க நேர்ந்தாற்போல முகம் சுளித்தாள்.

சுவர்ணரேகா வீதியில் வந்து நின்றபடி கமலனுக் காகக் காத்துக் கொண்டிருந்தாள். கமலன் மெதுவாய் அவளிடம் வந்தான்.

''கமல்'' ரேகா எதிரே போனாள். ''இதென்ன, இந்த வேளையில் வந்திருக்கீங்க?''

''ரேகா, ஒரு நிமிடம் என்னோடு வரமுடியுமா? உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். ரொம்ப அர்ஜென்ட்'' என்றான்.

''ஓ! கண்டிப்பாய் வரேன். ஒரு நிமிஷம் இருங்கள், இதோ வரேன்'' என்று உள்ளே போனாள்.

எப்பொழுது? ஏன்? எதற்கு என்றெல்லாம் ஆயிரம் கேள்விகள் கேட்டு வதைக்கும் ரேகா இன்றைக்கு இவ்வளவு சீக்கிரமாய் ஒப்புக்கொண்டு விட்டது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

அறைக்குள் வந்து மளமளவென்று செருப்பை மாட்டிக்கொண்ட மகளைப் பார்த்து "எங்கே கிளம் பிட்டாய்?" என்று கேட்டாள் தாய்.

"இங்கேதாம்மா, இப்பவே வந்து விடுவேன்"— மறு பேச்சிற்கு இடமில்லாமல் வெளியே வந்துவிட்டாள்.

"இந்தா ரேகா! என் பேச்சைக் கேளு, வேண்டாம், போகாதே, இப்படி வா" உள்ளேயிருந்து அவள் குரல் மிரட்டினாற்போல கேட்டது. கமலன் சந்தேகத்துடன் பார்த்தான். "ஒன்றுமில்லை. வாங்க, வெளியே வெயி லாய் இருக்கும் என்று அம்மாவுக்கு பயம். அவ்வளவு தான்" சிரிப்பை வரவழைத்துக்கொண்டே நடக்கத் தொடங்கினாள் ரேகா. கமலன் பின்தொடர்ந்தான்.

சுற்றுப்புறங்களில் எல்லோரும் ரேகாவையும் கமலனையும் விநோதமான மிருகங்கள் வீதியில் போவதைப் பார்ப்பது போல பார்க்கத் தொடங் கினார்கள்.

ரேகா அதையெல்லாம் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நிழலில் காதலனோடு போய்க் கொண்டிருக்கும் ராஜ குமாரியைப் போல மிடுக்காய், நிதானமாய், கம்பீரமாய் தலை நிமிர்ந்து நடந்துகொண்டிருந்தாள்.

அந்த வீதியைத் தாண்டி மெயின் ரோடிற்கு வந்ததுமே கமலன் ஜேபிலிருந்து கைக்குட்டையை எடுத்து நெற்றியில் படிந்த வியர்வைகளைத் துடைத்துக் கொண்டான்.

மூச்சை இழுத்து விட்டுக்கொண்டே— "என்ன மனிதர்களோ! பார்வையால் விழுங்கிவிடுவார்கள்

போலிருக்கே! அவங்க அப்படிப் பார்த்தபோது எனக்கு கால்களில் சங்கிலியைப் போட்டுப் பிணைத்துவிட்டாற் போல நடக்கவே வரவில்லை'' என்றான்.

''அவங்க எப்போதுமே அப்படிதான்'' என்றாள் ரேகா அலட்சியமாய்.

''சே! அந்த முட்களுக்கு நடுவே எப்படிதான் இருக்க முடிகிறதோ உன்னால்?''

''இந்த உலகத்தில் எல்லோருக்குமே வாழ்க்கை பூம்படுக்கையாய் இருக்காது கமல். கூடியவரை அந்த முட்கள் நம்மைக் குத்தாமல் இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் நாம் பண்ண வேண்டியது.''

இருவரும் நாற்சந்தியில் வந்து நின்றிருந்தார்கள்.

''எங்கே போகலாம்?'' என்றான் கமல்.

''நீங்கள் சொல்லுங்கள்'' என்றாள் ரேகா.

''வெயில் வறுத்தெடுக்கிறது. பார்க்குக்குப் போக லாமா? மரத்தடியில் குளிர்ச்சியாய் இருக்கும். உட்கார்ந் திருக்கலாம்''

''ஐயோ, பார்க்குக்கா? அவ்வளவு தூரம் என்னால் இப்பொழுது வரமுடியாது. நான் சீக்கிரமாய் வீட்டிற்குத் திரும்பிப் போய்விடணும். அம்மா எதிர்பார்த்துட்டிருப் பாங்க.''

''பின்னே எங்கே போகலாம்?'' கமலன் யோசனை யுடன் பார்த்தான்.

''எங்கே போனாலும் சரி, கொஞ்ச நேரம் நிம்மதி யாய் உட்கார்ந்துக் கொள்ளக்கூடிய இடமானால் நன்றாயிருக்கும்.''

கமலன் சுற்றுமுற்றும் பார்த்தான். தொலைவில் அதே வீதியில் கோடியில் ''லட்சுமி விலாஸ்'' என்ற

பூட்டல் தென்பட்டது. சமீபத்தில்தான் கட்டியிருந் தார்கள் அதை. சாப்பாட்டிற்கும், சர்வீஸிங்கிற்கும் அது மிகப் பிரபலமாகி விட்டிருந்தது. கமலன்— "அங்கே போய் உட்கார்ந்துகொள்ளலாம். அப்படியே ஒரு கப் காபி குடித்தாற்போலவும் இருக்கும்" என்றான்.

அவன் வாயிலிருந்து ஓட்டலின் பெயர் வெளி வந்ததுமே சுவர்ணரேகாவுக்கு உயிர் திரும்பி வந்தாற் போலிருந்தது.

# 7

பிற்பகல் வேளையாயிருந்ததால் ஓட்டலில் கூட்ட மில்லை. குடும்ப அறைகள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன. ரேகாவும் கமலனும் குடும்ப அறைக்குள் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

சர்வர் வந்ததுமே கமலன், "இரண்டு காபி" என்றான்.

"வெறும் காபிதானா?" ஏமாற்றத்துடன் பார்த்தாள் ரேகா.

"பின்னே? டிபன் கூட சாப்பிடுகிறாயா? என்ன சாப்பிடுகிறாய்?"

"பலே ஆள்தான் நீங்கள்! இப்ப டிபன் என்றால் என் சாப்பாடு? நீங்கள் ஏதோ அர்ஜென்ட் வேலை இருப் பதாய் சொன்னதால் சாப்பிட உட்காரப் போனவள் அப்படியே எழுந்து வந்துவிட்டேன். தட்டில் போட்ட தைச் சாப்பிடாமல் வந்து விட்டதற்குக் கோபித்துக் கொண்டு மாமி அதை எந்த தெரு நாய்க்காவது எறிந்து விட்டிருப்பாங்க இதற்குள்."

கமலன் நொந்துகொண்டான். உடனே சர்வரைப் பார்த்து, ''ஒரு சாப்பாடு'' என்றான்.

''ஒன்றா? நான் மட்டும் சாப்பிடும்போது நீங்கள் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பீங்களா? ரெண்டு சொல்லுங்க'' என்றாள் ரேகா.

''நான் சாப்பிட்டுவிட்டேன் ரேகா.''

''அது எப்பொழுதோ ஜீரணமாகியிருக்கும். உங்களுக்கென்ன? உங்கள் பணத்தை வீணடித்து விடமாட்டேன் நான். உங்களால் சாப்பிட முடியாததை முதலில் எடுத்து வெளியே வைத்து விடுங்கள். நான் சாப்பிட்டு விடுகிறேன்'' என்றாள்.

கமலன் சிரித்துவிட்டு இரண்டு சாப்பாட்டிற்கு ஆர்டர் கொடுத்தான். சர்வர் போனதும் ரேகா,

''கமல்! எங்க சேகர் அரெஸ்ட் ஆயிட்டான், தெரியுமா?'' கேட்டாள். இதைச் சொன்னபொழுது அவள் முகம் அவமானத்தாலும் வெட்கத்தாலும் சிவந்து விட்டது.

''தெரியும்'' என்றான் கமலன்.

ரேகா சரேலென்று நிமிர்ந்தாள். ''தெரியுமா? எதற்கு என்று கூட தெரியும்?''

கமலன் தெரியும் என்று தலையாட்டினான். ஆனால் தனக்குத் தெரிந்தவர்களிடமே சேகர் நகையைக் களவாடப் போய் பிடிபட்டான் என்ற விஷயத்தை மட்டும் சொல்லவில்லை,

''நேற்றைக்குத் தெரிந்தவங்க வீட்டிற்குப் போயிருந்த பொழுது அங்கே பேப்பரில் பார்த்தேன். எனக்கு ஏதோ போலாயிடுத்து. உடனே வந்து உன்னைத் தேற்றணும் போலிருந்தது. என்னால் உனக்கு ஏதாவது உதவ முடியுமான்னுச் சொல்லு. ரேகா! என் பரிச்ச

யத்தை நீ எப்படி எடுத்துக் கொண்டிருக்கிறாயோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் மட்டும் உன் சிநேகத்தை உயிருக்குயிராய் பாவிக்கிறேன். இந்த உலகத்தில் உன் சிநேகத்தைக்காட்டிலும் விலைமதிப்பு வாய்ந்தது இன்னொன்றுஇல்லை எனக்கு. சேகருக்கு என்னால் ஏதாவது உதவிப் பண்ண முடியும் என்று நீ எண்ணினால் சொல்லு, கண்டிப்பாய் செய்கிறேன்.''

ரேகாவின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று.

''உங்களுக்கு ரொம்பவும் நன்றி. ஆனால் அவனை இம்முறை அவ்வளவு எளிதாய் விட்டுவிட முடியாதுன்னு நினைக்கிறாங்க. இவனுக்குப் பின்னால் பெரிய கும்பல் இருக்கிறது என்றும், அந்த கும்பலைச் சேர்ந்தவங்கதான் சேகர் போன்ற பையன்களைக் கொண்டு அங்கங்கே திருட்டுத்தனங்களை நடத்தி வருகிறார்கள் என்றும் இந்த முறை இவன் மூலமாய் அவங்க இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு விடவேண்டும் என்றும் பார்க்கிறாங்களாம். நம்மால் பண்ண முடிந்தது எதுவும் இல்லை.''

அதற்குள் சர்வர் சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்தான். சுடச்சுட சாதத்தையும் சாம்பார் கறிகளையும் பார்த்ததும் ரேகாவுக்குக் கொஞ்ச நேரமாய் மறந்துப் போயிருந்த பசி திரும்பவும் வந்துவிட்டது. பசியுண்ட புலி இரையின் மீது பாய்ந்து அதைப் பரபரப்புடன் தின்பதுபோல சாப்பிட்டு முடித்தாள் அவள்.

கொஞ்ச நேரங்கழித்து அவன் சொன்னான், ''எங் கண்ணா எனக்குக் கல்யாண சம்பந்தம் நிச்சயம் பண்ணிட்டார்.''

''யார்? அந்த புண்டரீகனின் மகள் கஸ்தூரி என்றுச் சொன்னீங்களே, அவள்தானே?''

கமலன் 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

''ரேகா! என் வாழ்க்கையில் வேறொருத்திக்கு இட மில்லை. நான் உன்னைத் தவிர, நான் உன்னிடம் அர்ஜென்ட் வேலை என்றுச் சொன்னது இதைப்பற்றி தான்.''

''தாங்க்ஸ்! ஆனால் நீங்கள் இவவளவு பெரிய தியாகம் பண்ணுவதை என்னால் ஒப்புக்க முடியாது.''

''தியாகமில்லை ரேகா. அந்தப் பெண்ணை எனக் குப் பிடிக்கவில்லை.''

''ஓ, அதுவா சங்கதி! இருங்க. கை கழுவிக் கொண்டு வரேன்'' அவள் போய் கை கழுவிக் கொண்டு வந்தவள் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டாள்.

அவன் ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்துத் தந்தான். கைக்குட்டையை வாங்கி அதில் துடைத்துக் கொள்ளப் போன அவள் நின்று அதை பார்த்தாள். கைக்குட்டையின் மீது ஒரு மூலையில் 'வி' என்ற எழுத்து பச்சை நூலில் தைக்கப்பட்டிருந்தது.

''வி என்றால்?'' என்று கேட்டாள்.

ஜேபியிலிருந்து கைக்குட்டையோடு கூட இன்னும் இரண்டு கடிதங்களையும் வெளியே எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த கமலன் நிமிராமலேயே ''வி என்றால் விமலன்'' என்றான்.

''விமலன் என்றால், உங்கள்...''

''ஆம். எங்க அண்ணா விமலன்.''

கமலன் கையிலிருந்த கடிதத்தை ஒன்றிற்கு இரண்டு முறையாய் படித்துக் கொண்டிருந்தான். ரேகா கைக் குட்டையை மடித்து அவனிடம் தந்து விட்டு நாற்காலி யில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள்.

கையிலிருந்த இரண்டு கடிதங்களுள் ஒன்றை அவளிடம் தந்து விட்டு, ''இதைப் படித்துப் பார் ரேகா'' என்றான்.

அதில் இவ்வாறு இருந்தது.

மகாஸ்ரீ புண்டரீகன் அவர்களுக்கு,

சுவர்ணரேகா என்ற பெண் வினயமாய் வணக்கம் புரிந்து எழுதிக்கொண்டது. நீங்கள் உங்கள் ஒரே பெண்ணான கஸ்தூரியை கமலன் என்பவருக்குத் தந்து மணம் செய்துவைக்கப் போவதாய் தீர்மானித்துக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்ட என்னால் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதாமலிருக்க முடிய வில்லை. என் துணிச்சலுக்குத் தாங்கள் மன்னித்து விடுங்கள். நீங்கள் மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் இந்த கமலனும் நானும் மிகவும் நெருக்கமானவர்கள். எங்களிருவருக்கு மிடையேயுள்ள நெருக்கத்தைப் பற்றித் தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் நான் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ள இன்னொரு கடிதத்தைப் படியுங்கள், உங்களுக்குப் புரிந்துவிடும். அதுமட்டு மில்லை, இது கமலன் சமீபத்தில் எழுதிய கடிதந்தான் என்பதையும் தெரிந்து கொள்வீர்கள். இவ்விரண்டு கடிதங்களையும் எடுத்துக்கொண்டுபோய் கமலனை உலுக்கி எடுக்கலாம் நீங்கள். எனக்கு எந்த ஆட்சே பணையும் இல்லை. கமலனுக்கு இத்திருமணம் கட்டோடு பிடிக்கவில்லை. அண்ணனின் வார்த்தை களை மீற முடியாமல் ஒப்புக் கொண்டான். கமலனை என்னால் புரிந்து கொள்ள முடியும். உங்களுக்கு உங்கள் பெண் மீது கொஞ்சமாவது அன்பிருந்தால் இச்சம்பந்தத்தின் மீது ஆசை வைத்துக் கொள்வதை விட்டுவிடுவது நல்லது. சகப் பெண்ணாய் உங்கள்

மகள்பால் இருக்கும் கடமையை நான் நிறைவேற்றி விட்டேன். · அதற்கு பிறகு உங்கள் விருப்பம்.

இப்படிக்கு
'உங்கள் நலனைக்கருதும்
சுவர்ணரேகா.''

கடிதத்தைப் படித்து முடித்ததும் வியப்போடு கண்கள் அகல விரிய அவனைப் பார்த்தாள்.

''இந்தக் கல்யாணத்தைத் தடுக்க வேண்டுமென்றால் இது ஒன்றுதான் வழி. இந்தக் கடிதத்தை உன் கையெழுத்தில் காப்பிப் பண்ணி இந்த இன்னொரு லெட்டரையும் வைத்து அனுப்பணும் நீ ''

ரேகா அந்த இன்னொரு கடிதத்தையும் படிக்கத் தொடங்கினாள். கமலன் ரேகாவுக்கு எழுதினாற் போல அக்கடிதத்தில் இவ்வாறு இருந்தது.

—''ரேகா! என் கண்ணே!

உன் கடிதம் கிடைத்தது. உன் பயம், உன் கவலை, உன் பரபரப்பு இவ்வளவையும் பார்த்தபொழுது எனக்கு வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. ஆம். அந்த புண்டரீகனின் மகள் கஸ்தூரியோடு என் விவாகம் நிச்சயமானது உண்மைதான். ஆனால் என் உயிரே, என் அசட்டு ரேகாவே! இதில் நீ பயப்பட வேண்டியது எதுவுமில்லை என்று நான் உத்திரவாதம் தருகிறேன். இதில் இருக்கும் உண்மையான ரகசியம் என்னவென்றால் அந்த புண்டரீகன் பெரிய லிடிகேட். அவர் எங்களோடு உறவு கலந்துகொண்டால் எங்கள் விமலனுக்கு ஏகப்பட்ட கேசுகள் அவர் மூலம் கிடைக்கும். அவரிடம் மூன்று தலைமுறைக்குப் போதுமானச் சொத்துக்கள் இருக்கின்றன. அவள் ஒரே பெண். பெயர் கஸ்தூரியாம். ஆனால் பார்க்க காளிதேவியைப் போல இருப்பாள். முகமோ சூர்ப்பனகைதான்.

படிப்பறிவில்லாத ஜடம். அந்த புண்டரீகன் இருக்கிறானே அவன் ஒரு பிசினாறி, அவர் இதயம் மிகவும் பலவீனமாய் இருக்கிறது என்றும் அது எந்த நிமிஷத்திலும் பொட்டென்று வெடித்துவிடும் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டதாய் தெரிந்துகொண்ட பிறகுதான் ஒப்புக்கொண்டேன். அவ்வளவு சொத்துக்களை, அவ்வளவு லட்சங்களை சம்பாதிக்க வேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டப்படவேண்டும்? அந்த கஸ்தூரி பெயருக்கு என் மனைவியாய் அங்கேயே எங்கேயாவது பட்டிக்காட்டில் விழுந்துக் கிடப்பாள்— பணம் கைக்கு வந்ததுமே நாமிருவரும் ராஜா ராணிகளாய் இருக்கலாம். உலகத்தையெல்லாம் சுற்றிப்பார்க்க வேண்டும் என்ற உன் ஆசைகளை என்னால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த கஸ்தூரி என்ற கரிக்கட்டையை நான் பண்ணிக் கொள்ளப் போவது வெறும் கனவுதான் என்றும், நம்மிருவருக்கு மிடையே உள்ள பந்தத்திற்கு எந்த இடையூறும் ஏற்படாது என்றும் நான் உத்திரவாதம் அளிக்கிறேன். உனக்கு என் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லாவிட்டால் சொல்லு, அதற்குள்ளாகவே நான் உன்னை ரெஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக்கொண்டு விடுகிறேன். நீ எப்படிப் பண்ணச் சொல்கிறாயோ அப்படியே பண்ணத் தயாராய் இருக்கிறேன். நீ மட்டும் தயவு செய்து இப்பொழுது எந்த ரகளையும் பண்ணி விடாதே. தங்கமான நம் எதிர்காலம் மண்ணோடு மண்ணாகிவிடும். அந்த மூன்று முடிச்சுக்கள் விழட்டும் முதலில். அதற்கு பிறகு நம் இஷ்டம். நீ என்னை சரியாய் புரிந்துகொள்வாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
உன் கமலன்.''

கடிதத்தைப் படித்து முடித்ததும் ரேகா வாயடைத்துப் போனவளாய் கமலனைப் பார்க்கத் தொடங்

கினாள். "இந்தக் குறுக்கு வழியெல்லாம் எதற்கு? உங்க அண்ணாவிடம் எனக்குப் பிடிக்கவில்லை என்று நேருக்கு நேராய் சொல்லிவிடக் கூடாதா?" என்றாள்.

"சொன்னேன் ரேகா. ஒரு தடவையில்லை, நூறு தடவை. சும்மாயில்லை, சாப்பாட்டை விட்டுவிட்டுப் பட்டினிக் கிடந்தேன் கூட. அவன் கேட்டால்தானே?"

"உங்களுக்குப் பிடிக்காத சம்பந்தத்தைப் பண்ணுவ தால் அவருக்கு வரப்போகும் லாபம் என்ன?" புரியாமல் கேட்டாள்.

"லாப நஷ்ட சங்கதி எனக்குத் தெரியாது. எனக்கு என்ன வேண்டும் என்று என்னால் தெரிந்துகொள்ள முடியாது என்பது அவன் உத்தேசம். எனக்கு என்ன வேணுங்கிறது எனக்கு நன்றாய் தெரியுங்கிறதை ருசுவாக்கிவிடப் போகிறேன் நான்."

"அழகாயிருக்கு. நடுவில் நான் தலையிடுவதால் இது ஏதாவது எதிர்த் திரும்பி என் மீதே வந்து விட்டால்?"

"வராது. வரவிடமாட்டேன் நான். என் மேல் நம்பிக்கை இல்லையா உனக்கு?"

ரேகாவால் பதில் சொல்ல முடியவில்லை. யோசனை யில் ஆழ்ந்துபோனாற் போல அப்படியே உட்கார்ந் திருந்தாள்.

கமலன் பழிப்பது போல சொன்னான், "ரேகா இதுவே நீ என்னைக் கேட்டிருந்தால் நான் இவ்வளவு நேரம் யோசிப்பேனா?"

"உங்கள் விஷயம் வேறு கமல். நீங்கள் ஆண் பிள்ளை. நான்..."

"உன் மீது ஏதாவது வந்துவிடப் போகிறதேன்னு ஏனோ பயம் உனக்கு. நான் இல்லையா? நான் வர விடுவேனா?"

"இந்தக் கடிதங்களை இப்படி போஸ்ட் பண்ணினால் இந்தக் கல்யாணம் நின்று விடும் என்கிற நம்பிக்கை இருக்கா உன்னிடம்?"

"ஆங், கண்டிப்பாய் நின்றுவிடும். நீயுந்தானே பார்க்கப் போகிறாய்?"

ரேகா அவனைக் கூர்ந்து பார்த்தாள். மென்மையாய் பெண்களைப் போல இருந்த அவனிடம் சிநேகபூர்வமான உள்ளம் இருந்ததை உணர்ந்துதான் ரேகா அவனோடு இவ்வளவு தூரம் பரிச்சியத்தை வளர்த்துக் கொண்டாள். ரேகா தலையைச் சாய்த்துக்கொண்டு கீழுதட்டைப் பற்களால் அழுத்திக்கொண்டே கொஞ்ச நேரம் ஏதோ யோசித்து விட்டு பிறகு மற்றொரு முறை இரண்டு கடிதங்களையும் ஒன்றிற்கு இரண்டு தடவையாய் படித்தாள். கடைசியில் அவைகளை கமலனுக்கு முன்னால் வைத்துவிட்டு— "சரி கமல்! நான் உதவி பண்றதுக்குத் தயாராயிருக்கேன்" என்றாள்.

கமலனின் முகம் ஆயிரம் வாட் பல்பைப் போல மலர்ந்தது, "எனக்குத் தெரியும் ரேகா, நீ..."

"நில்லுங்கள் கமல், என்னை முழுவதும் சொல்ல விடுங்க."

"சொல்லு" கமலன் கேட்கத் தயாராய் உட்கார்ந்து கொண்டான்.

"கமல்! முதலில் இதைச் சொல்லுங்கள். இவ்வளவு நாட்களாக நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டே தானே வரீங்க, என்னைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

''ஓஹ்! இதென்ன கேள்வி ரேகா? என் பார்வையில் நீ ஒரு அழகு ராணி! சாபம் பெற்று பூமியில் வந்து வசிக்கிற தேவதை!''

ரேகாவுக்கு இந்த வார்த்தைகள் சந்தோஷத்தைத் தரவில்லை. மனதில் ஏற்பட்ட அருவருப்பை முகத்தில் பிரதிபலித்து விடாதபடி ஜாக்கிரதையை மேற்கொண்டு, ''இல்லை கமல்! அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் மிகச் சாதாரணமானவள். ஒருவிதத்தில் சொல்ல வேண்டுமென்றால் வெறும் சுயநலக்காரி என்றுகூடச் சொல்லலாம். பிரதி பலன் இல்லாமல் நான் எந்தக் காரி யத்தையும் செய்யமாட்டேன். நான் எந்தக் காரியத்தை செய்தாலும் அதில் எனக்குக் கொஞ்சம் லாபம் இருக்க வேண்டும். அது எனக்குச் சிறு வயதிலிருந்தே பழக்கப் பட்டது தெரியுமா?''

கமலன் தலையாட்டினான்.

ரேகா தீவிரமாய் சொன்னாள்—''கமல்! நாம்ப இப் பொழுது சிநேகிதர்களாய் இல்லாமல் அசல் வியாபாரி களாய் பேசிக்கொள்வோம். உங்களுக்கு இந்த கல்யா ணம் பிடிக்கவில்லை என்று சொன்னபோதிலும் உங்கள் விமலன் பொருட்படுத்தவில்லை. அதனால் நீங்கள் எப்படியாவது இந்த பலவந்தக் கல்யாணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். அப்படி தப்பித்துக் கொள்வதற்கு என் உதவி வேண்டும். நான் உதவி பண்ணத் தயாராய் தான் இருக்கேன். ஆனால் பிரதி பலனாய் நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்னுச் சொல்லுங்கள்.''

கமலன் கொஞ்ச நேரம் தடுமாறினான். உடனே சிரித்து விட்டு, ''ஓ எனக்குத் தெரியும். எங்கேயாவது சாப்பாடு. அப்புறமாய் சினிமா.''

''இல்லை. அவை நீங்கள் எழுதிய பாட்டைக் கேட் பதற்கு நான் வாங்கிக் கொள்ளும் லஞ்சம். இது பெரிய

விஷயம். இதன் ஃபீசு கூட அதிகமாகவே இருக்க வேணும்."

"என்ன வேணுமோ சொல்லு."

"என்ன தந்தால் நன்றாயிருக்கும்னு நீங்களே யோசியுங்கள்."

கமலன் ஆழ்ந்து யோசித்தான். உடனே தெரிந்து விட்டாற்போல— "ஆங்! ஒரு நல்ல பட்டுப்புடவை" என்றான்.

"பட்டுப்புடவையா? வேண்டாம். இவ்வளவு வறுமையில் இருக்கிற நான் அவ்வளவு விலையுயர்ந்த புடவையைக் கட்டிக் கொண்டால் கேலிக்குரியதாய் இருக்கும்."

"பின்னே வேறென்ன? சரி, தங்க நகைகளைப் போன்றது ஏதாவது..." ரேகாவின் வெறும் கழுத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"ஊஹூம், வேண்டாம். தங்கம் எனக்குப் பிடிக்காது. அதைப் பாதுகாக்க என்னால் முடியாது."

"அப்ப என்னதான் வேணும்? நீயே சொல்லி விடு."

"கமல்! எனக்கு நீங்கள் எதைப் பரிசாகத் தர நினைத்தாலும் அதன் விலையைப் பணமாய் ஏதாவது பாங்கிலாவது போட்டு வையுங்கள். அது மட்டுமில்லை, இனிமேல் எதுவாயிருந்தாலும் சரி, இந்த சினிமா, டிராமா எல்லாம் வேண்டாம். அதற்கு நீங்கள் செலவழிக்கும் பணத்தைக் கணக்கிட்டு என் கையில் தந்து விடுங்கள். அப்படிப் பண்ணினால் என்னை பிழைக்க வைத்தவர் ஆவீர்கள். எனக்கு நன்மை செய்தவரும் ஆவீர்கள்."

"ரேகா" கமலன் கலக்கமடைந்தான்.

குரல் தழுதழுக்க சொன்னாள் ரேகா. ''ஆமாம் கமல்! இன்றைக்கு நான் மனம் விட்டு இப்படிச் சொல்லி விட்டதற்கு ஒன்றும் நினைக்காதீங்க. நான் வறுமையில் இருக்கிற ஒரு பெண். படிப்பு அவ்வளவாய் இல்லை. உத்யோகம் பண்ணவேண்டும். என் காலில் நான் நிற்க வேண்டும் என்றிருந்தாலும், எனக்கு அந்த அவகாசம் கிட்டவேயில்லை. சில சமயம் எங்கம்மா வாரக்கணக்கில் பட்டினிக் கிடக்கும்போது, பசியால் சோர்ந்துபோய் சுருண்டுக் கிடக்கும்போது அவங்களுக்கு ஏதாவது பழமோ காயோ வாங்கித்தரவேண்டும் என்றும், பலவந்தமாய் சாப்பிடச் செய்யணும் என்றும் இருக்கும். என்னிடம் எப்பொழுதும் சல்லிக் காசுகூட இருக்காது. என் கையாலாகாதத் தனத்துக்கும், ஆதரவில்லாததனத் திற்கும் குத்திக் கொண்டு சாகணும் போல இருக்கும். எங்கள் சேகர் கைக்கெட்டியப் பையனாய் இல்லாதது எங்கள் துரதிர்ஷ்டம்.''

''ரேகா! நிறுத்து! இனி பேசாதே'' கமலன் ஆவேசமாய் சொன்னான்.

அவன் முகம் சிவந்திருந்தது. மிக வருத்தத்துடன் சொன்னான், ''ரேகா! சில சமயம் உன் சங்கோஜத்தை பார்த்தால் முதுகில் இரண்டு கொடுக்கவேண்டும் போல் கோபமாய் வரும். நம் சிநேகத்தை நான் எவ்வளவு அபூர்வமாய் பாவிக்கிறேன் என்று உனக்கே தெரியும். நீ எந்தச் சமயத்தில் என்ன வேண்டுமாலும் தயங்காமல் கேட்கலாம் என்று எவ்வளவோ தடவைகள் சொல்லியிருக்கிறேன். ஆனாலும் நீ என்றும் நம்பியதாய் தெரியவில்லை.''

''இல்லை கமல், இல்லை...''

''இப்பொழுது கடைசி தடவையாய் சொல்கிறேன். நான் இந்த உலகத்தில் இருக்கிறவரை நீ எதற்கும் கஷ்டப்படக்கூடாது.'' என்று ஜேபியிலிருந்து நூறு

ரூபாய் நோட்டுக்கள் இரண்டை எடுத்து, "தற்சமயம் இருநூறு ரூபாய் இருக்கிறது, போதுமா?" என்றான்.

"உங்களிஷ்டம். விலையை மதிப்பிட வேண்டியது நீங்கள்தான் என்று சொல்லி விட்டேனே."

"பேஷ். நல்லப் பெண்ணாயிருந்தால் நான் தந்ததை யெல்லாம் வாங்கிக் கொள்ளணும் நீ."

"கமல்! நீங்கள் எதுவாயிருந்தாலும் சரி, தானம் கொடுப்பதுபோல பாவித்தால் அது எனக்கு விஷத்திற்கு சமானம் ஆகும்."

"ஓ! மைகாட்! வாட் எ சில்லி ஐடியா! நோ, நோ! ஒரு நாளும் அப்படி எண்ணிக் கொள்ளமாட்டேன்" என்று மேலுக்குச் சொன்னாலும் மனத்திற்குள், "நான்சென்ஸ்! என்னைச் சேர்ந்தவளுக்கு நான் தானம் கொடுப்பதாவது! என்றாவது ஒரு நாள் இதெல்லாம் அவளுக்குச் சேர வேண்டியதுதானே?" என்றெண்ணிக் கொண்டான்.

"பார் ரேகா! நானும் அசல் வியாபார ரீதியில்தான் பேசுகிறேன். தற்சமயம் இந்த இருநூறு ரூபாய்கள் இந்தக் கடிதத்தை போஸ்ட் பண்ணுவதற்கும் அதற்கப் புறம் பலனைப் பார்த்து என் சந்தோஷத்திற்கு இருந்தாற்போல. சரிதானே?"

ரேகாவுக்கு ஏதோ போல் இருந்தது. என்னதான் வியாபாரம் என்ற பெயரை வைத்துக் கொண்டு சமாதானப்படுத்திக் கொள்ள நினைத்தாலும் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. அவன் நல்ல குணத்தைக் கறந்து கொள்கிறோமே என்ற உணர்ச்சி வெறுப்பை ஏற்படுத்திற்று. அதனால் உடனே தெளிவாய் சொல்லி விட்டாள்.

"கமல், என் தேவையை இரையாய் வைத்து ஏதோதோ பெயர் வைத்து உங்கள் நல்ல

குணத்தைச் சூறையாட வேண்டும் என்று எனக்கு என்றுமே இல்லை. நான் செய்த உதவி எவ்வள்வு. அதன் விலை மதிப்பு எவ்வளவு என்று நானே தீர்மானித்துச் சொல்கிறேன். அதன் விலை மதிப்பை நானே கேட்கிறேன். அதைத் தவிர எனக்கு ஒன்றும் தரவேண்டாம்.''

''ஓ! ரேகா! யு ஆர் டூ மச் சென்ஸிடிவ். இது உனக்கு நல்லதில்லை'' என்றான்.

ரேகா அவன் கேட்டுக் கொண்டாற்போலவே கடிதத்தை எழுதித் தந்தாள்.

கடிதத்தை போஸ்ட் பண்ணுவதற்காக கவர் வாங்குவதற்கு போஸ்ட் ஆபீசிற்குப் போன கமலன் ரேகாவின் பெயரில் அகௌண்ட் ஒன்றைத் திறந்து அதில் இரு நூறு ரூபாய்களைப் போட்டான்.

''இருநூறு வேண்டாம். நூறு போதும்; நூறை என் கையில் தாங்க'' என்றாள்.

''எதுக்கு?''

''காரியம் இருக்கு.''

கமலன் பதில் பேசாமல் தந்துவிட்டான்.

கமலன் தந்த பணத்தை வாங்கிப் பையில் போட்டுக் கொண்ட ரேகா கீழுதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டே மனத்திற்குள், ''கமல்! இப்பொழுது கதியில்லாமல் தேவைக்காக உங்களிடமிருந்து வாங்கிக் கொண்டாலும், எதிர்காலத்தில் என்றாவது நான் இதை உங்களுக்குத் திருப்பித் தந்து விட வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் நிம்மதியாய் இராது. என் அந்தராத்மா என்னை மன்னிக்காது'' என்றெண்ணிக் கொண்டாள்.

ரேகா வீட்டிற்குத் திரும்பி வந்தபோது நன்றாய் இருட்டி விட்டது. சுந்தரி வீட்டில் இல்லை. பக்கத்து வீட்டிலிருந்து அவள் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. விளக்கில்லாத இருட்டு அறையில் அழுது அழுது ஓய்ந்துவிட்டு நினைவு தப்பிப் போய் கட்டிலோடு கட்டிலாய் விழுந்து கிடந்தாள் தாய். ரேகா விளக்கைப் போட்டு விட்டு, "அம்மா" என்று கூப்பிட்டாள். அவள் பதில் குரல் கொடுக்கவில்லை.

ரேகா தான் வாங்கி வந்த ஆரஞ்சுப் பழங்கள், ஹார்லிக்ஸ், பிரெட், புதிதாய் வாங்கி வந்த ஃப்ளாஸ்க் முதலியவைகளை ஸ்டூலின் மீது வைத்துவிட்டு சமைய லறைக்குப் போய் ஒரு தட்டை எடுத்துக் கொண்டு வந்தாள். ஆரஞ்சுப்பழத்தை உரித்துச் சுளைகளை அதில் வைத்தாள். ஹார்லிக்ஸைக் கரைத்துக் கொண்டு வந்து எதிரே ஸ்டூலின் மீது வைத்தாள். தாயை இரு கைகளாலும் தோள்களைப் பிடித்து பலவந்தமாய் எழுப்பித் தன் மீது சாய்த்துக் கொண்டு, சிறு குழந்தைக்குத்தருவது போல ஒவ்வொரு துண்டுகளாய் அவைகளைத் தந்தாள். அரைகுறை நினைவோடிருந்த தாய் அவசரம் அவசர மாய் அவள் தந்ததைச் சாப்பிட்டதைப் பார்த்தபொழுது ரேகாவின் இதயம் கசிந்து கண்களில் கண்ணீர் வரத் தொடங்கிற்று.

'அம்மாவிற்காக—வாழ்க்கையில் எந்த சுகத்தையும் அனுபவித்திராத இந்த தாய்க்காக அவள் என்ன வேண்டுமானாலும் செய்வாள். எதற்கும் தயங்க மாட் டாள்; போராடுவாள்.'

தாயை ஹார்லிக்ஸ் குடிக்கச் செய்து விட்டு, சிறு குழந்தையைப் படுக்க வைப்பது போல படுக்க வைத்துவிட்டு, போர்வையைப் போர்த்தினாள். போர் வையை இழுத்து சரி பண்ணிக் கொண்டிருந்த மகளின் கையைச் சட்டென்று பிடித்துக் கொண்ட காயத்ரி

''ரேகா! உண்மையைச் சொல்லு, அந்த கமலன் என்ற பையன் என்ன செய்தான் உன்னை?'' என்றாள்.

''ஒன்றும் செய்யவில்லைம்மா. சேர்ந்து சாப்பிட்டோம். அவன் கஷ்டங்கள் எதையோ சொல்லிக் கொண்டான். அவ்வளவுதான்.'' மிக சாந்தமாய் பதிலளித்தாள் அவள்.

காயத்ரி மகளின் கையை வேகமாய் தட்டி விட்டாள். ''என்னிடமே பொய் சொல்கிறாயா? உன்னிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ளாமல் அவன் உனக்குப் பணம் எப்படித் தந்தான்?'' என்றாள்.

ரேகா மிக நிதானமாய், பொறுமையோடு சொன்னாள்.

''நீ எண்ணிக் கொண்டிருப்பது நான் போல ஒன்றும் தெரியாத அப்பாவி இல்லைன்னு நீ எப்பொழுது தான் தெரிந்து கொள்ளப் போகிறாய் அம்மா?. தெய்வம் எனக்கு எதுவும் தராவிட்டாலும் அபரிமிதமான புத்திசாலித்தனத்தை மட்டும் தந்திருக்கிறார் வாழ்க்கை எந்தத் தொல்லையும் இல்லாமல் நடத்திச் செல்வதற்கு அவை போதும், உனக்குத் தெரியாதும்மா, எதிராளிக்கு ஒன்றையும் தராமலேயே, நான் நினைத்ததை அவங்களிடமிருந்து சாமர்த்தியமாய் கறந்துக் கொள்கிற திறமை என்னிடம் இருக்கிறது. என்னைப் பற்றி நீ திகிலடையாதே. கவலையில்லாமல் இரு.''

''ரேகா, என் கண்ணே'' காயத்ரி கைகளை நீட்டினாள். ரேகா சட்டென்று குனிந்து அவள் கைகளுக்குள் சிறைப்பட்டாள். தாய் மகளை அழுத்தமாய் கட்டிக் கொண்டே, ''ரேகா! என் பேச்சை எதைக் கேட்டாலும் கேட்காமல் போனாலும் இது ஒன்றை மட்டும் கேளும்மா! ஆண்களைச் செத்தாலும் நம்பாதே! ஆணின் இனிக்க இனிக்கப் பேசும் வார்த்தைகளில்

உயிரை எடுக்கக் கூடிய பயங்கரமான விஷம் கலந்திருக்கும் என்பதை ஒருநாளும் மறந்து விடாதே'' என்றாள். ரேகாவின் முதுகை நீவி விட்டுக் கொண்டே, ''சரிம்மா. ஆண்களை மட்டுமேயில்லை, இந்த உலகத்தில் யாரையுமே நம்பமாட்டேன். என்னை நான் நம்புவதைத் தவிர'' கண்ணீரைத் துடைத்துக் கொண்டே உறுதியாய் பதிலளித்தாள் ரேகா.

## 8

அன்று பிற்பகல் வேளை. ஆண்கள் எல்லோரும் ஆபீசுகளுக்குப் போய் விட்டார்கள். வீதியில் ஜன சஞ்சாரம் இல்லை. சுந்தரி எதிர்த்த வீட்டுக்காரி அப்பளம் இடப்போவதாய் சொன்னதால் அவளுக்கு ஒத்தாசைப் பண்ணப் போய் விட்டாள். அவளுக்கும் மகளிர் கும்பலுக்கும் அதற்குள் ராசி ஏற்பட்டு விட்டது.

தாயின் அறையில் ஜன்னலுக்கருகில் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு மடியில் புத்தகத்தை வைத்துக் கொண்டே வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரேகா. புத்தகத்தை வைத்துக் கொண்டிருந்தாள் என்றப் பெயரேயொழிய, அவள் கவனமெல்லாம் அதில் இல்லை.

சங்கரன் வீட்டை விட்டுப் போனவர் இன்னும் திரும்பி வரவில்லை. கும்பகோணத்தில் ஏதோ நாடகக் கம்பெனிக்கு ஹார்மோனியம் வாசிப்பதாய் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் ஒரு மாதம் வரை வீட்டிற்குத் திரும்பி வர முடியாது என்றும் கடிதம் எழுதிபிருந்தார். அவ்வப்பொழுது அவ்வாறு பித்துப்பிடிக்கும் பொழுதெல்லாம் வீட்டை விட்டுப் போய், கால் போன

போக்கில் சுற்றிவிட்டு வருவது அவருக்குப் பழக்கப் பட்டதுதான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவரா கவே மாசடைந்த உடையுடனும் தாடி மீசையுடனும், ஒட்டி உலர்ந்த முகத்துடனும் ஒரு சுபமுகூர்த்தத்தில் காலையிலேயே வீட்டிற்குத் திரும்பி வந்து விடுவார். வந்ததுமே அவரை யாரும் விசாரிக்கக் கூடாது. வந்ததும் கை கால்களைக் கழுவிக் கொண்டு, கட்டிலில் ஏறி, இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துக் கொண்டு படுத்துக் கொண்டு விடுவார். பிறகு சாவதானமாய் எழுந்து குளித்து விட்டு உடைமாற்றிக் கொண்டு தானே தட்டை எடுத்து வைத்துக் கொண்டு, தானே போட்டுக் கொண்டு சாப்பிடுவார். அப்பொழுது கூட அந்தச் சுற்றுவட்டாரத்தில் யாரும் இருக்கக்கூடாது. இரண்டு நாட்கள் அப்படிப் பட்டும் படாமலும் இருந்து விட்டுப் பிறகு மெதுவாய் தானாகவே எல்லோருடனும் பேசத் தொடங்குவார். அடிக்கடி அவர் இவ்வாறு வீட்டை விட்டுப் போய் விடுவதால் இருந்த சங்கீத டியூஷன்கள் நிறைய போய் விட்டன. நாலைந்து பேர்கள் மட்டும் அவர் மீது இருந்த கௌரவத்தால் எப்பொழுது வரு கிறாரோ அப்பொழுது சொல்லித்தரச் சொல்லி சம்பளம் தந்து கொண்டிருப்பார்கள். சங்கரன் இல்லாதபொழுது கடைகளுக்குப் போக வேண்டிய வேலைகளையெல் லாம் ரேகாதான் செய்து வந்தாள். அதனால் பிடித்தாலும் பிடிக்காமல் போனாலும் ரேகாவுடன் சண்டை போடாமல் ஜாக்கிரதையாய் இருந்து வருவாள் சுந்தரி.

சங்கரன் இன்னும் திரும்பி வரவில்லை. வீட்டில் சாமான்கள் எல்லாம் தீர்ந்து விட்டன. கையில் பணம் இல்லை. கடன் கேட்டாலும் யாரும் தரவில்லை. என்ன செய்வதென்று என்று திகிலோடு உட்கார்ந்துகொண் டிருந்த மாமியிடம் ரேகா ஐம்பது ரூபாய்களைக் கொண்டு வந்து தந்தாள்.

பணத்தைப் பார்த்ததுமே சுந்தரியின் முகம் மலர்ந்தது.

''ஏது இது?'' என்றாள் சந்தோஷத்தோடு.

''கமலனிடமிருந்து கடன் கேட்டு வாங்கிக் கொண்டேன் மாமி.'' என்றாள் ரேகா.

''என்னவிருந்தாலும் அந்தப் பையன் நல்லப் பையன்தாம்மா.''

''நாம்ப கேட்டபொழுதெல்லாம் கடன் தரக்கூடிய அளவுக்கு நல்லவன் இல்லை மாமி! பணம் விஷயத்தில் ரொம்பவும் கறார். ரொம்பக் கஷ்டப்பட்டு கேட்ட பிறகு தான் கொடுத்தான்'' என்றாள் ரேகா. சுந்தரியின் முகம் வாடி விட்டது.

யோசனையில் ஆழ்ந்திருந்த ரேகா அறைக்குள் பட்டென்று ஏதோ வந்து விழுந்ததைப் பார்த்து திடுக் திரும்பிப் பார்த்தாள். வெளியேயிருந்து வந்து விழுந்த சின்ன மண் கட்டி சிதறிக்கிடந்தது. கல்லை வீசியெறிந்தது யாராயிருக்கும்? வேறு யார்? பக்கத்து வீட்டு அனுமந்தனாய்தான் இருக்கும். அவன் ஒருத்தன்! அவள் கொஞ்சம் வராந்தாவுக்குப் போனால் கூட போதும் ஜன்னல் வழியாய் பார்த்துப்பல்லை இளிப்பான், அந்தச் சிரிப்பைப் பார்த்தால் ரேகாவுக்கு அருவருப்பாய் இருக்கும். அவனை 'வா' என்று கூப்பிட்டுக் கன்னத்தில் நாலு கொடுக்க வேண்டும் போலிருக்கும். ஆனால் அவனுடைய பாட்டியின் வாய் மிகக்கெட்டது. அவள் கட்டைத் தொண்டையைத் திறந்து விட்டாளானால் மைக் இல்லாமலேயே அந்தச் சுற்றுவட்டாரம் முழுவதும் கேட்கும்.

அவள் யோசனையில் ஆழ்ந்திருந்த பொழுதே திரும்பவும் சின்ன கல் ஒன்று வந்து அவள் பாதத்திற்கருகில் விழுந்தது, இனி சும்மாயிருக்கக் கூடாது என்று

கோபத்துடன் அவள் எழுந்து கொல்லைப் பக்கம் வந்தாள். ஆனால் அங்கே யாருமில்லை. அனுமந்து தென்படும் ஜன்னல்கூட சாத்திதான் இருந்தது. ரேகாவுக்குத் தாங்கமுடியாத ஆச்சரியம் ஏற்பட்டது. அனுமந்தன் இல்லை யென்றால் வேறுயாராயிருக்கும்? காம்பவுண்டுச் சுவருக்கருகில் போய் எட்டிப் பார்த்தாள். அவ்விடத்தில் ஒரு வேப்பமரம் கப்பும் கிளையுமாய் அடர்த்தியாய் இருந்தது. ரேகா அதற்கருகில் போய் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு "யார்?" என்றாள். பதிலுக்கு மரக்கிளைகள் அசைந்தன.

ரேகா நிமிர்ந்து பார்த்தாள். அடர்ந்த அக்கிளை களுக்கிடையே யாரோ உட்கார்ந்திருந்தது தென்பட்டது.

"யாருன்னு கேட்கலை?" என்றாள். இம்முறை இலைகளை விலக்கிக்கொண்டு எட்டிப்பார்த்தபடி ஒரு முகம் "உஷ்" என்றது.

ரேகாவிற்கு பயத்தால் நாக்கு உலர்ந்துவிட்டது. பீதியோடு பின்னுக்கு நகர்ந்துகொண்டே, "யார் நீ?" என்றாள் உருமியபடி.

"உஷ்! கத்தாதே ரேகா" பற்களைக் கடித்துக் கொண்டே சொன்ன அந்த ஆள் இம்முறை முகத்தை நன்றாய் காட்டிக்கொண்டே சிரித்தான்.

ரேகா மார்பின் மீது கையை வைத்துக்கொண்டே, "சேகர், நீயா?" நம்பமாட்டாமல் கேட்டாள்.

"ஏன்? இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லையா?"

"நீ இங்கே எந்படிடா வந்தாய்? அவங்க உன்னை விட்டு விட்டாங்களா?" சந்தோஷம் தாங்க முடியாத வளாய் இரைந்து கேட்டுவிட்டாள்.

சேகர் திரும்பவும் "உஷ்" என்றான். "அவங்க என்னை விடவில்லை. நான்தான் அவங்களை உதறிக்

கொண்டேன். ஜெயிலை மாற்றிக் கொண்டிருந்பொழுது தப்பித்து ஓடி வந்தேன்.''

ரேகாவின் முகத்திலிருந்த சந்தோஷம் பறந்து விட்டது.

''ஓடி வந்துவிட்டாயா? அப்படீன்னால் அவங்க...''

''என்னைத் தேடிட்டிருக்காங்க.''

ரேகாவின் கண்கள் பயத்தால் படபடத்தன.

சேகர் தாழ்ந்திருந்த ஒரு கிளையில் உட்கார்ந்து கொண்டான். அங்கும் அவன் தலையும் தோள்களும் மட்டுமே கண்ணில் பட்டுக் கொண்டிருந்தன. எஞ்சிய உடம்பு மரக்கிளைகளுக்கிடையே மறைந்திருந்தது.

''என்னைப் பற்றிய நீங்கள் ஒன்றும் பயப்படாதீங்க. ரேகா, நீயும் அம்மாவும் அழுது கொண்டே உட்கார்ந்திருப்பீங்களேன்னுச் சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்.''

''அப்படீன்னால்?''

''பையத்தியமே! நான். இப்ப ஒருத்தனாய் இல்லையே? எனக்குப் பின்னால் பெரிய கும்பல் இருக்கு. எங்கள் கும்பலின் தலைவனுக்குச் சமூகத்தில் நிறையச் செல்வாக்கு இருக்கிறது. என்னை யாராலும் பிடித்து விட முடியாது. ஒருக்கால் பிடித்தாலும் ஒன்றும் பண்ணமாட்டாங்க.''

''என்னவோடா! நீ சொல்றது எனக்கு ஒன்றும் புரியலை. என் தலையில் ஏறவில்லை.''

''ஏறாவிட்டால் போகட்டும். நான் சுகமாய் இருக்கிறேன் என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மீதியை மறந்து போய்விடுங்கள்.'' என்று சொல்லிவிட்டு, ''ரேகா, காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை பசிக்கிறது'' என்றான்.

''இறங்கி உள்ளே வா... மாமி இல்லைடா, சாப்பிடு.''

''ஐயோ! நடுவில் அந்த ராட்சசி வந்து விட்டால்?''

''வந்தால் வரட்டும்! ஆனாலும் நான் வாசல் கதவிற் கருகில் நின்று கொண்டிருப்பேன் பார்த்துக்கொண்டே. நீ அம்மாவைப் பார்த்தது போலவும் இருக்கும்.''

''ஊஹூம். அம்மா இப்பொழுது என்னைப் பார்த்து விட்டு அழத் தொடங்கிவிட்டால் திரும்பிப் போவதற்கு எனக்கு கால்கள் ஆடாது. அதற்குள் யாராவது வந்து விட்டால் நன்றாயிருக்காது. சாதம் இருந்தால் இங்கே கொண்டு வா.''

''இங்கேயோ? எப்படி?''

''நான் சொல்றேன். இதோ கிணற்றிற்கருகில் பக்கெட் இருக்கே, அதை இங்கே கொண்டு வா சொல்றேன்.''

ரேகா ஓடிப்போய் பக்கெட்டைக் கொண்டு வந்தாள். ''தாம்புக் கயிற்றை மேலே வீசியெறி'' என்றான் சேகர். ரேகா வீசியெறிந்தாள். அதைப் பிடித்துக் கொண்டு, தான் உட்கார்ந்து கொண்டிருந்த மரக்கிளை யில் கட்டி விட்டு, ''போய் கிண்ணத்தில் சாதத்தைப் அந்த பிசைந்து எடுத்துக்கொண்டு வந்து பக்கெட்டில் வை. நான் மேலே இழுத்துக் கொள்கிறேன். சட்டென்று வா'' என்றான்.

''எவ்வளவு சாமர்த்தியங்களைக் கற்றுக்கொண் டிருக்கிறாயடா'' என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினாள் ரேகா. அவளுக்குக் கைகளும் கால்களும் நடுங்கிக் கொண்டேயிருந்தன. சங்கரன் ஊரிலில்லாத பொழுது சுந்தரி அடுப்புச் செலவு, வேலை இரண்டும் மிச்சமாகிறது என்றெண்ணிக்கொண்டு இரண்டு வேலை களுக்கும் சேர்த்து காலையிலேயே சமைத்து வைத்து விடுவாள். ரேகா மளமளவென்று கிண்ணம் ஒன்றை

..டுத்து அதில் பாதி சாதத்தை வைத்து ரசத்தை ஊற்றிப் பிசைந்து மறுபாதியை மோரில் பிசைந்து, காலையில் செய்திருந்த பாகற்காய் பொரியலைக் கொஞ்சம் மேலே வைத்து மளமளவென்று புழக்கடைக்கு எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள். பாகற்காய் பொரியலைப் பார்த்ததும் சேகரின் முகம் மலர்ந்தது. "நான் வருவேன்னு உனக்குத் தெரியும் போலிருக்கே ரேகா" என்றான் பக்கெட்டை மேலே இழுத்துக்கொண்டே.

ரேகாவின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. கண்களைத் துடைத்துக்கொண்டே, "இன்றைக்கு அந்தப் பொரியலைப் பண்ணும்போது உன் நினைவு தான் எனக்கு நிறைய வந்தது."

"அதனால்தானே கூப்பிட்டாற்போல வந்து விட்டேன்" சாப்பிட்டுக்கொண்டே சேகர் விவரமாய் சொன்னான். "ரேகா! நம்ப கஷ்டங்கள் மலையேறி விட்டாற்போலதான். என்னால் உங்களோடு சேர்ந்து இருக்க முடியாது. ஆனால் உங்களை ராஜாவாய் போஷிக்க முடியும் என்னால். அடுத்த தடவை உனக்குத் தென்படும் பொழுது பணம் தருகிறேன். அதை மாமி யின் முகத்தில் விட்டெறிந்து விடு. உங்களுக்கு இங்கே நன்றாய் இல்லையென்றால் நீயும் அம்மாவும் தனியாய் போய் இருங்கள். அம்மா எப்படி இருக்காங்க?என்னைத் திட்டுகிறாங்களா? திட்டட்டும். ரேகா, நான் எவ்வளவு வேண்டுமானாலும் கஷ்டப்படத் தயாராயிருக்கிறேன். ஆனால் நீயும் அம்மாவும் சுகமாய் இருக்கணும். அப்பொழுதுதான் எனக்குத் திருப்தியாய் இருக்கும்."

ரேகாவுக்கு இம்முறை தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. கண்ணீர் மடைத்திறந்தாற் போல வெளிவரத் தொடங்கிற்று. "தந்தை இல்லாத வங்க நிறையப் பேரைத் பார்த்திருக்கிறேன், ஆனால் நம்மைப் போன்ற துரதிர்ஷ்டம் கொண்டவங்களைப்

பார்த்ததில்லைடா சேகர்!'' என்றாள் கண்களைத் துடைத்துக்கொண்டே.

''துரதிர்ஷ்டசாலிங்கன்னு அதிருப்தி எதுக்கு? உனக்கு நானும் எனக்கு நீயும் நமக்கு அம்மாவும் இருக்காங்க. நிலைமையைப் பற்றிச் சொல்கிறாயா? போராடுவோம். இந்த உலகத்தில் அதிர்ஷ்டசாலிகள் என்று யாரும் இல்லாதது போலவே துரதிர்ஷ்டசாலிகளும் கூட யாரும் இல்லை ரேகா.''

தன்னைவிட இரண்டு வயது சிறியவனான சேகர், நேற்று முந்தாநாள் வரை 'ரேகா, ரேகா' என்று சிறு பையனைப் போல தனக்குப் பின்னால் சுற்றிக் கொண்டிருந்த சேகர்தானா இது என்று ரேகாவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. இன்னும் இரண்டு மூன்று நிமிடங்கள் இருந்திருந்தால் சேகர் சாப்பிட்டு முடித்திருப்பான். அவன் மோர் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பக்கத்து வீட்டுப் பாட்டியின் குரல் கணீரென்று கேட்டது. ''இவங்க மூஞ்சியில் நெருப்பை அள்ளிப் போடணும்! இவங்க கை ஒடிய! மேலே வைத்திருந்த மடி சொம்பைத் தொட்டு விட்டாயா? தொண்டை வரண்டுப் போய் ஒரு வாய் தண்ணீர் குடிக்கலாம்னு பார்த்தால் இல்லை. சனியன் பிடித்த அப்பளம் இடுவதற்குப் போகாமல் வீட்டிலேயே இருந்திருக்கணும்'' அவள் திட்டிக்கொண்டே குடத்தைத் தோளில் வைத்துக்கொண்டு இந்த பக்கமாகவே வந்து கொண்டிருந்தாள்.

ரேகாவும் சேகரும் திடுக்கிட்டுப் போனார்கள். சேகர் சட்டென்று பக்கெட்டுடன் சேர்ந்து கிளைகளுக்கிடையே மாயமானான். ரேகா சலனம் ஒடுங்கிப் போனவளாய் அப்படியே நின்றுவிட்டாள். அவள் அங்கிருந்து நகரும் அவகாசமே இல்லாமல் பாட்டி அவ்விடத்திற்கே வந்துவிட்டாள்.

வறுத்தெடுக்கும் வெயிலில் தனியாய் அதுவும் காம்பவுண்டுச் சுவருக்கருகில் நின்று கொண்டிருந்த ரேகாவை சந்தேகத்துடன் பார்த்து, ''இங்கே ஏன் நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று துப்புத்துலக்கினாள்.

''சும்மாத்தான் பாட்டி'' மரியாதையாய் பதிலளித்தாள் ரேகா.

அக்கம்பக்கத்து மாமிகள் சுந்தரியின் வீட்டில் உரிமையோடு வளைய வந்து கொண்டிருப்பது சகஜந்தான். ரேகா என்றுமில்லாதபடி மிக மரியாதையாய் பதிலளித்ததைப் பார்த்த அவளுக்குச் சந்தேகம் இருமடங்காகிவிட்டது.

''சும்மாத்தானா? ஏன்? வெளியில் நிலா வெளிச்சம் போல சுகமாய் இருக்கா? உங்க மாமி வீட்டில் இல்லையோனோ?''

''இல்லை.''

''உங்கம்மா என்ன பண்ணுகிறாள்?''

''தூங்கிட்டிருக்காங்க.''

''ஆங், அப்படிச் சொல்லு'' என்று பாட்டி காம்பவுண்டுச் சுவர் வழியாய் வெளியே எட்டிப் பார்த்தாள். அவளுக்கு அங்கே யாரும் தென்படவில்லை. அவள் சந்தேகம் என்னவென்று ஊகித்துக்கொண்ட ரேகாவிற்கு அவமானத்தாலும் ரோஷத்தாலும் மனம் கொதித்தது.

ரேகாவிடமிருந்து கிணற்றடிக்குப் போன பாட்டி கிணற்றைச் சுற்றி வந்து கொண்டே, ''பக்கெட் எங்கே? உள்ளே போட்டுட்டீங்களா? போட்டிருந்தால் எடுத்துக் கொடு'' என்றாள்.

ரேகாவிற்கு உயிரே பறந்து விட்டாற்போலிருந்தது. ''என்னவோ, எனக்கு தெரியாது பாட்டி'' வெடுக்கென்று

பதில் சொன்னாள். குறைந்த பட்சம் பக்கெட்டைக் காணோம் என்றாலாவது அவள் அங்கிருந்து போய் விடமாட்டாளா என்ற ஆசையோடு.

"நீங்கள் எடுக்கவில்லையா? என்னவாயிருக்கும்? கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தானே நான் குளித்து விட்டு குடத்தில் தண்ணீர் பிடித்துக்கொண்டு போனேன்? நான்தானே இங்கே போட்டுவிட்டு போனென்?"

அந்த பக்கெட்டை வாங்கியது அவள்தான். அந்தக் கிணற்றிலிருந்து அவள்தான் எல்லோரையும் விட அதிகமாய் வேளைக்கெட்ட வேளைகளில் எல்லாம் கூட வந்து தண்ணீர் சேந்தி எடுத்துக்கொண்டு போனாள், அதனால்தான் சுந்தரி எப்பொழுதோ வாங்கிய பக்கெட் ஓட்டையாகி விடவே, தன் பேரனை கொண்டு வாங்கிவரச் சொன்னாள். சுந்தரி பணம் தரப்போனபொழுது வாங்கிக் கொள்ளவில்லை.

"குரங்கு ஏதாவது எடுத்துக்கொண்டு போயி ருக்குமோ? முந்தாநாள் நான் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே பொட்டுக்கடலை உருண்டை வைத்திருந்த கிண்ணத்தை தூக்கிக்கொண்டு ஓடிப் போய்விட்டது."

"என்னவோ தெரியாது எனக்கு" அவளை அங்கிருந்து துரத்துவது எப்படி என்று உபாயத்தை யோசித்துக் கொண்டிருந்தாள் ரேகா.

வேப்ப மரத்தின் கிளைகள் அசைந்தன. பாட்டி நிமிர்ந்து பார்த்தாள்.

"அதோ கிளைகள் குலுங்குகிறதே! சந்தேகம் இல்லை. குரங்காய்தான் இருக்கும். ஐயோ புதுசாய் வாங்கிய பக்கெட்டாச்சே! இதன் வாயில் போட்டுக் கொண்டு விட்டதா என்ன?" என்றவள் அவர்கள் வீட்டு காம்பவுண்டுச் சுவர் பக்கமாய் போய், "டேய்

முழுமந்து எங்கேடா போய் தொலைந்தாய். சீக்கிரமாய் வாடா அப்பனே! சனியன் பிடித்த குரங்கு தங்கமான பக்கெட்டைத் தூக்கிக்கொண்டு போயிடுத்து'' என்று முரைந்து கத்தினாள்.

அனுமந்துவின் அறை ஜன்னல்கள் படீரென்று திறந்து கொண்டன. அங்கிருந்து பார்த்த அவன் எதிரே தென்பட்ட ரேகாவைப் பார்த்துப் பல்லை இளிக்கப் போனவன், பாட்டியைப் பார்த்து விட்டுச் சட்டென்று நிறுத்திக் கொண்டு, ''என்ன பாட்டி?'' என்றான்.

''இன்னும் என்ன என்று கேட்டுக் கொண்டு இடிச்சப் புளியாய் நிற்கிறாயேடா? சட்டென்று சுவர் ஏறிக் குதித்து வாடா. மரத்தின் மேல் குரங்கு இருக்கு.''

அனுமந்தன் பெயருக்கேற்றவனாய் சரேலென்று சுவர் ஏறிக் குதித்து வந்தான்.

ரேகாவின் இதயம் படபடத்தது. ''பாட்டி! சில குரங்குகள் கடித்துவிடும். ஜாக்கிரதையாய், இருக்கச் சொல்லுங்கள் உங்க பேரனிடம்'' என்று சொன்னாள், இரைந்து மேலே இருந்த சேகருக்கு உபாயத்தை எடுத்து சொன்னாற்போல.

''ஆங், கடிக்கும், கடிக்கும். விரட்டினால் அதுவே ஓடிவிடும்'' என்றாள் பாட்டி.

அனுமந்தனுக்குக் குரங்கு என்றால் பயம். ஆனால் ரேகாவுக்கு முன்னால் அதைக் காட்டிக் கொள்ளப் பிடிக்காமல் சுவற்றின் மீது ஏறி மரக்கிளைகளைப் பிடித்துக் கொண்டான். அங்கிருந்தே விரட்டுவதுபோல் ''சூ, சூ. ஹை ஹை'' என்றான்.

மேலேயிருந்து குரங்கு கீச் கீச்சென்று கத்திற்று.

''ஐயோ, இதென்னவோ மலைக்குரங்காய் இருக்கும் போலிருக்கே பாட்டி'' என்றாள்.

அனுமந்தன் பயந்து போக, ''இருந்தால் என்ன பண்ணி விடும்டா? தங்கமான பக்கெட்! மேல் கிளை களை உலுக்கு'' என்றாள் பாட்டி.

''ஜாக்கிரதை! பக்கெட்டைத் தலை மேல் போட்டு விடுமோ என்னவோ?'' என்றாள் ரேகா சேகருக்கு அறிவிப்புத் தருவது போல.

அனுமந்தன் தடுமாறிக் கொண்டேயிருந்தான். பாட்டி,'மேலேபோ மேலேபோ'என்று அவசரப்படுத்திக் கொண்டேயிருந்தாள். அதற்குள் பக்கெட் சரேலென்று அனுமந்துவின் தலை மேல் நழுவி விழுந்தேவிட்டது.

''ஐயோ, ஐயோ செத்தேன்'' அனுமந்தன் கத்திக் கொண்டே தலையைப் பிடித்துக் கொண்டு உடம்பு தள்ளாட, சுவற்றின் மேலிருந்து தொப்பென்று கீழே விழுந்தான்.

''ஐயோ அம்மோவ்! பிள்ளை தலையைப் பிளந்து விட்டதே நாசமாய்ப் போகிற குரங்கு!'' என்று பாட்டி ஓடிப்போய் தரையில் சுருண்டு விழுந்து கிடந்த அனுமந்தனை மடியில் போட்டுக் கொண்டாள்.

ரேகா கலக்கத்துடன் கிட்டே போனாள்.

''அப்பா, நீ பயந்துண்டேயிருந்தாயே, நான்தானே அனுப்பினேனடா. அனுமந்து, கண்ணே, தங்கமே'' என்று அழத் தொடங்கினாள் பாட்டி. அதற்குள் தொப் ரென்று காம்பவுண்டுச் சுவற்றுக்கப்பால் ஏதோ குதித்த சப்தம் கேட்டது. ரேகா சட்டென்று எழுந்திருந்து சுவற்றுக்கப்பால் எட்டிப் பார்த்தாள். சேகர் தெருவில் குறுக்காய் ஓடிக்கொண்டே, ரேகா தென்பட்டதும் கையைக் காற்றில் ஆட்டிவிட்டு மாயமாகி விட்டான். ரேகாவின் இதயத்திலிருந்து பெரிய பாரம் நீங்கினாற்

போயிருந்தது. 'அம்மாடா' என்று நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டாள்.

அனுமந்தனுக்குச் சொற்பமான காயந்தான் பட்டது. சுவற்றிலிருந்து பிடி தவறிக் கீழே விழுந்ததால் கால் சுளுக்கிக் கொண்டு வலியெடுத்தது. பாட்டியின் உதவி யோடு எழுந்திருந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டு நொண்டிக் கொண்டே வீட்டிற்குப் போய் விட்டான்.

ரேகா வீட்டிற்குள் வந்தாள். அங்கே திறந்து கிடந்த பாத்திரத்தில் சாதம் இல்லாமல் காலியாய் இருந்தது. அதைப் பார்த்ததுமே பகீரென்றது அவளுக்கு. மாமி வந்தால் என்னவென்று சொல்லுவது? ரேகா பயந்தாற் போலவே யோசிப்பதற்கு கூட நேரம் இல்லாமல் வாசலில் சுந்தரியின் குரல், "என்ன பாட்டி, என்னவாச்சு அனுமந்தனுக்கு?" என்று கேட்டாள்.

பாட்டி நடந்த கதையையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ரேகாவுக்கு மின்னலாய் யோசனை வந்தது. கிணற்றிற்கருகில் குளிர்ச்சிக்காகப் படுத்துக்கொண் டிருந்த நொண்டி நாயைக் கழுத்தைப் பிடித்து வீட்டிற் குள் இழுத்துக் கொண்டு வந்து சாதம் வைத்திருந்த பாத்திரத்திற்கு முன்னால் விட்டாள். பாத்திரத்திற்குள் தலையை நுழைத்துக்கொண்டு குய்யோ முய்யோ என்று கத்திக்கொண்டே சாதத்தைத் தின்னத் தொடங்கிற்று நாய்.

"சீ! சீ! நகரு! போகிறாயா இல்லையா?" நொண்டி நாயை நோக்கிப் பாத்திரத்தை தள்ளிக்கொண்டே அதை விரட்டுவதுபோல இரைந்து சொன்னாள் ரேகா.

"என்ன அங்கே?" என்று சமையலறைக்குள் வந்த சுந்தரி கிண்ணத்திற்குள் தலையைவிட்டுக்கொண்டிருந்த

நாயை பார்த்ததுமே, ''ஐயோ! ஐயோ! சாதப் பாத்திரத் திற்குள்ளேயே வாயை வைத்துவிட்டதே! நகரு...அப் படியே பார்த்துக்கொண்டே நிற்கிறாயே ரேகா, உதைத்து தள்ளாமல்'' என்று மூலையில் இருந்த துடைப்பத்தைக் கையிலெடுத்துகொண்டு அதன் முதுகில் நாலு போட்டாள். நாய் பாத்திரத்தை விட்டுவிட்டு வீலென்று அலறிக்கொண்டே புழக்கடைக்கு ஓடிற்று.

ரேகா அங்கிருந்து தாயின் அறைக்கு வந்து விட்டாள்.

சுந்தரியின் கத்தலுக்கு விழித்துகொண்ட காயத்ரி, ''என்ன ரேகா?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லைம்மா'' என்று மென்மையாய் பதிலளித்தாள் ரேகா. சமையலறையை சுத்தம் பண்ணி விட்டு, நாய் நக்கிய பாத்திரத்தை சுத்தமாய் கழுவி, அடுப்பை மூட்டி திரும்பவும் சாதம் வடிக்கபோன சுந்தரிக்கு கிண்ணத்தில் ரசம் குறைந்து விட்டிருந்ததும், பொரியல் இல்லாமல் போனதும், மோரில் கரண்டியை போட்டதும் தென்படவே யோசனையில் ஆழ்ந்தபடி அப்படியே நின்றுவிட்டாள். வினாடி நேரம் அவள் இரு புருவங்களும் தீர்க்காலோசனையில் மூழ்கியபடி நெருக்க மாயின. பிறகு அகில உலக திருடர் குழுவை பிடித்து விட்ட சீக்ரெட் ஏஜென்ட்டைப் போல விருவிருவென்று நடந்து நாத்தியின் அறைக்குள் வந்து. அவளுக்கெதிராய் நின்றுகொண்டு இடுப்பில் கைகளை வைத்துகொண்டு உறுமினாற்போல ''அண்ணி! இதென்ன புத்தி உனக்கு? இந்த திருட்டு தீனி தின்பதை எப்போதிலிருந்து தொடங்கினாய்?'' என்றாள்.

அப்பொழுதுதான் விழித்துக்கொண்டிருந்த காயத் ரிக்கு அவள் சொன்னது எதுவும் புரியவில்லை. புரிந்த போதிலும் ரேகாவுக்கு எப்படி மறுப்பது என்று தெரியாத தால் வாயை திறக்கவில்லை.

"என்னவோ, எனக்கு தெரியாது. நான் பார்த்த போது நாய் நக்கி கொண்டிருந்தது" என்றாள் ரேகா படுக்கென்று. பாழும் வாழ்க்கை? வராமல் வந்த மோகருக்கு ஒரு வாய் சாதம்கூட போட சுதந்திரமில்லாத வாழ்க்கை! சீ! பகைவர்க்கு கூட வேண்டாம்.

"நீங்கள் தாயும் மகளுமாய் சேர்ந்து என் கண்ணைத் துடைப்பதற்காக வேண்டுமென்றே நாயை வீட்டிற்குள் விட்டிருக்கிறீர்கள். என்னை என்ன முட்டாள் என்று எண்ணி விட்டீர்களா? அந்த நொண்டி நாய் பாகற்காய் பொரியலையெல்லாம் தின்று விட்டிருக்குமா எங்கே யாவது? ஒரு சொட்டு ரசம்கூட கீழே சிந்தாமல் நாசூக் காய் போட்டுகொண்டு தின்றதா? தின்றுவிட்டு அதை மூடி வைத்திருக்குமா? என்ன புத்திசாலித்தனம் அதற்கு! ஹஹ்ஹா! யாராவது கேட்டால் சிரிப்பாங்க."

ரேகா தாங்க முடியாமல் சொல்லிவிட்டாள்.

"மாமி! மன்னிச்சுவிடு. பசியாய் இருந்ததால் நான் தான் சாப்பிட்டுவிட்டேன்."

"நீயா? நீ சாப்பிட்டால் மட்டும் எவ்வளவு சாப்பிட் டிருப்பாய்? ஆனாலும் எங்கே உன் வயிற்றைக்காட்டு, பார்க்கிறேன்" என்று ரேகாவிடம் வந்து அவள் வயிறை தடவி பார்த்துவிட்டு, "ஏன் இப்படி பொய்யை தலையில் போட்டுக்கொள்கிறாய்? உனக்கு இந்த மாதிரி திருட்டு புத்தி கிடையாது என்றும் வேண்டுமானால் என்னை கேட்டுவிட்டே சாப்பிடுவாய் என்றும் எனக்கு தெரியாதா? காலையில் சாப்பாடு போடுகிறேன் வா என்றதற்கு, உங்கம்மா மகாராணி வரமாட்டேன் என்றாள்... ஆமாமாம், இதுவும் ஒரு நல்ல வழிதான், நான் போடுவதைவிட இப்படி திருட்டுத்தனமாய் சாப்பிடுவதுதான் நல்லது. மற்றவங்களுக்கு இருக்கா இல்லையான்னுகூட பார்த்துக்காமல் விழுங்கிவிடலாம்.

மேலுக்கு மட்டும் உபவாசம் பண்ணுவதாய் நடிப்பு'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

ஜுரத்தோடு காலையிலிருந்து படுத்து கிடந்த காயத்ரிக்கு எதிர்பாராமல் வந்து சேர்ந்த இந்த அபவாதத்தைத் தாங்கிகொள்ள முடியவில்லை. தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள்.

ரேகா அவளிடம் வந்து தோளில் கையை வைத்து, ரகசியமாய் சொன்னாள். ''அம்மா! அழாதேம்மா! சேகர் வந்தான். பசிக்கிறதுன்னு சொன்னதால் நான் சாப்பாடு போட்டு அனுப்பினேன்.''

காயத்ரி அவ்வளவு அழுகையிலும் மகன் பெயரை கேட்டதுமே நாதஸ்வரத்தை கேட்ட பாம்பைப்போல நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு ரேகா சொன்னது சட்டென்று புரியவில்லை.

ரேகா குரலை தாழ்த்திகொண்டு நடந்ததை யெல்லாம் சுருக்கமாய் சொன்னாள்.

''அவன் தப்பித்துக்கொண்டுவிட்டானா?''

''ஆமாம்மா.''

''ஐயோ! ஒரு நிமிஷம் என்னை கூப்பிடாமல் போய் விட்டாயே! கண்ணாரக் கண்டிருப்பேனே! போகட்டும் ரேகா. எங்கே இருந்தால் என்ன, அவனுக்கு எங்கே சுகமாய் இருக்கிறதோ அங்கேயே இருக்க சொல்லு. நான் உங்கள் இருவருள் யாரையுமே திட்டமாட்டேன். எனக்கு தெரியும். என் குழந்தைகள் ரத்தினங்கள். அவர்களின் மதிப்பை சரியாய் காட்டக்கூடிய திறமை இல்லாத துரதிர்ஷ்டம் என்னோடதுதான். அதனால் அந்த ரத்தினங்கள் புழுதி படிந்த ரத்தினங்கள் ஆகி விட்டன.''

"நடந்ததைப் பற்றி இப்பொழுது வருத்தப்பட்டு என்னம்மா லாபம்?" ரேகா தாயைத் தேற்றினாள்.

# 9

அன்று தபாலில் விமலனுக்கு புண்டரீகனிடமிருந்து கடிதம் வந்தது. அதற்குள் கமலன் போஸ்ட் பண்ணியிருந்த ரேகா எழுதிய கடிதத்தையும், கமலன் எழுதிய கடிதத்தையும் இணைத்து இதைப் பற்றி தான் நன்றாய் துப்புதுலக்கி தெரிந்துகொண்டு விட்டதாகவும், இக் கடிதங்கள் உண்மையானவையே என்று நம்புவதாகவும், அதனால் தன் பெண்ணிற்கு உங்கள் தம்பியை திருமணம் பண்ணிக்கொள்ள விருப்பம் இல்லை, நாங்கள் எங்கள் பெண்ணிற்கு வேறு சம்பந்தத்தை நிச்சயம் பண்ணிவிட்டோம் என்றும் உரலுக்குள் தலையிடாமல் தப்பித்து கொண்டுவிட்டதற்கு சந்தோஷப்படுகிறோம் என்றும் தெரிவித்து கடிதம் எழுதியிருந்தார்.

விமலனுக்கு தாங்க முடியாத கோபம் வந்துவிட்டது. கடிதத்தை அவனிடம் தந்துவிட்டு, "யார் இந்த ரேகா?" என்று நேரிடையாய் கேட்டான்.

"என் சிநேகிதி."

'உங்களிருவருக்கும் எவ்வளவு நாட்களாய் பரிச்சயம்?"

"சுமார் ஒரு வருடமாய்."

"ஒரு வருடமாகவா?" வியப்போடு பார்த்தான்.

"ஆமாம்."

அறையில் நிசப்தம் ஏற்பட்டது.

விமலன் நிதானமாய் கேட்டான். "நீ அந்தப் பெண்ணோடு சேர்ந்து அந்த புண்டரீகனுக்கு அப்படி பொய்யைப் புனைந்து எழுதியதன் உத்தேசம் என்ன?"

"எனக்கு இந்த கல்யாணம் பிடிக்கவில்லைன்னு உனக்கு தெரியப்படுத்துவதற்காகத்தான்."

"அதை என்னிடம் நேரிடையாகவே சொல்லி யிருக்கலாமே?"

"நீ கேட்டுக் கொள்வாய் என்ற நம்பிக்கை இல்லை எனக்கு."

"கேட்கிற வரைக்கும் நயமாய் எடுத்து சொல்லலாம் இல்லையா?"

"உனக்கு அவ்வளவு சாவதானமும் எனக்கு அவ்வளவு திறமையும் இல்லைன்னு எனக்கு தெரியும்."

"சரி, அது கிடக்கட்டும், இந்த ரேகா யார்?"

"அதான் சொன்னேனே, என் சிநேகிதி என்று."

"அந்தப் பெண் யார்? அவள் பொஸிஷன்? அதைப் பற்றி கேட்டேன்."

கமலன் பதில் சொல்லவில்லை.

"ஏதாவது படித்திருக்கிறாளா?" கிளாஸ்மேட்டாய் இருக்குமோ என்ற சந்தேகத்துடன் கேட்டான்.

"இல்லை."

"படிக்கவில்லையா? பின்னே? பணக்காரர்கள் வீட்டுப் பெண்ணா?" பார்ட்டிகள், பிக்னிக் சந்தர்ப்பங் களில் பரிச்சியம் ஆகியிருக்குமோ என்ற ஆசையில் கேட்டான்.

"இல்லை."

"அவங்கப்பா என்ன பண்றார்?"

''எனக்குத் தெரியாது ''

''அவங்க வீடு எங்கே?''

''சொல்லமாட்டேன்.''

''சொல்லமாட்டாயா?''

அண்ணன் தம்பிகள் இருவரும் நிமிர்ந்து நேரிடையாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஏன்?'' வியப்போடு கேட்டான் விமலன்.

''நீ என்னைப் பற்றி ஏதாவது சொல்லி அந்தப் பெண்ணின் மனதைக் கெடுத்து விடுவாய். உன்விஷயம் எனக்குத் தெரியும்.''

''அவ்வளவு பலவீனமானதா உன் சிநேகிதியின் மனது?'' கேலியாய் கேட்டான் விமலன்.

கமலன் பதில் பேசவில்லை.

''நீ மரியாதையாய் இன்றைக்கோ நாளைக்கோ அந்தப் பெண்ணை எனக்குப் பரிச்சியம் பண்ணு. அவளுடைய பிறப்பு, வளர்ப்பு, சரித்திரம் எல்லாவற்றையும் நான் சுயமாய் தெரிந்துகொள்கிறேன்.''

''விமல்! இந்த விஷயத்தில் மட்டும் நீ என்னை மன்னித்துவிடு. நீ சொன்னபடி என்னால் பண்ண முடியாது. என்னை என் வழியிலேயே விட்டு விடு. உனக்கு புண்ணியமாய்ப் போகட்டும்.''

''நீ சாதாரண கமலனாய் இருந்தால் உன்னை அப்படியே விட்டு விட்டிருப்பேன். ஆனால் உனக்குப் பின்னால் பத்து லட்சம் விலை மதிப்புள்ள சொத்து இருக்கிறது. அதிலிருந்து உனக்கு வருடத்திற்கு ஒன்றரை லட்சம் ஆதாயம் வந்துகொண்டிருக்கிறது. அது உனக்குச் சரியாய் உபயோகப்படும்படியாய் பண்ணுகிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. என்

யோசனைகளில் எண்பது சதவீதம் உனக்காகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். நீ வெறும் ஃபீசு இல்லாத கேசு. கூடிய சீக்கிரத்தில் நான் பார்த்துக் கொள்வது போலவே உன்னைப் பார்த்துக் கொள்கிற ஒரு பெண்ணைப் பார்த்து ஒப்படைத்து விடப் போகிறேன். உனக்குக் கல்யாணம் பண்ணி விட்டால் எனக்கு நிம்மதி.''

''கல்யாணம் பண்ணிக் கொள்ள நான் சித்தமாய் தான் இருக்கிறேன். ஆனால் நீ பார்த்த பெண்ணை மட்டும் இல்லை.''

''பின்னே யாரை? அந்த ரேகாவையா?''

''ஆமாம்.''

''உனக்கு அவ்வளவு பிடித்துப் போனதற்கு அந்தப் பெண்ணிடம் உள்ள சிறப்புதான் என்ன?''

''ரொம்ப நல்ல பெண். மிக புத்திசாலி. என்னை மிகவும் பிடிக்கும் அவளுக்கு.''

''உன்னைப் பிடிக்காதவங்க யாருடா? வெண்ணைப் போன்ற மனதுஉனக்கு! அதோடு இவ்வளவு சொத்துகள் உனக்குப் பின்னால் இருக்கும்போது! அதற்காக உன் மீது அன்பு இருப்பது போல நடிப்பாங்க. அதனால் தான். ஜாக்கிரதையாய் நீ அந்தப் பெண்ணோடு சுற்றிக்கொண்டு பரிச்சியம் ஏற்படுத்திக் கொண்டிருந்த போதிலும் எனக்குத் தெரியவேயில்லை என்றால் இது உன் சாமர்த்தியம் இல்லை, அந்தப் பெண்ணுடையது தான் என்று நன்றாகவே தெரிகிறது. கமல்! உனக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, நான் அந்தப் பெண்ணைப் பார்த்தே தீருவேன். அப்புறம்...''

"அப்புறம், உனக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காமல் போனாலும் சரி நான் ரேகாவை மணந்தே தீருவேன்." கமலன் பயமின்றி பிடிவாதமாய் சொன்னான்.

என்றுமில்லாதவாறு கமலிடம் தென்பட்ட இத் துணிச்சலுக்கு வியந்து போய் விட்டான் விமலன். வெகுநேரம் வரை தம்பியையே பார்த்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தான்.

கமலனுக்கு வருத்தமாய் இருந்தது. அவன் கண் களில் கண்ணீர் ததும்பிற்று. ரேகாவைப் பார்க்காம லேயே அவளைப் பற்றி விமலன் கெட்ட அபிப்பிராயம் ஏற்படுத்திக் கொண்டிருந்ததை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

விமலன் கடைசியில் மிக மென்மையாய், கம்பீர மாய் சொன்னான்—"பார் கமல்! நீ இவ்வளவு பிடிவாத மாய் இருந்தால் நான் மட்டும் ஏன் மறுத்து விடப் போகிறேன்? நீயும் உன் ரேகாவும், வீடு, வாசல் இல்லா மல், சாப்பாடு இல்லாமல் போனாலும் பார்க்குகள், கடைவீதிகளில் சுற்றிக் கொண்டு, கைகளைக் கோர்த்துக்கொண்டு காதல் பாட்டுக்களைப் பாடிக் கொண்டு வாழ முடியும் என்று சொன்னால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அப்பத்தான் தெரியும் உனக்கு. அந்த ரேகாவுக்கு உன் மீது ஏற்பட்டிருக்கும் இந்தக் காதல் உண்மையானதா இல்லையா என்று!"

விமலின் வார்த்தைகளை இனி கேட்க முடியாத வனாய் கமலன் பாத்ருமிற்குள் போய் கதவைப் பளீரென்று சாத்திக் கொண்டான்.

கமலனிடம் ஒரு பலவீனம் உண்டு. தன்னால் வாதாட முடியாத சமயத்தில் அவன் கையாலாகாத் தனம் எல்லாம் கண்ணீர் உருவில் வெளிவரத் தொடங்கி

விடும். இப்பொழுதும் அப்படித்தான். விமலன் இன்னும் ஏதோ யோசித்தவாறு அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

திடீரென்று பாத்ரூம் கதவுகள் திறந்து கொண்டன. கதவுக்கிடையேயிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி, ''விமல்! முன்பே சொல்லிவிட்டேன். ரேகாவை நீ ஏதாவது அவமானப்படுத்தி விட்டாற்போல தெரிந்தால் அப்பொழுதே உனக்கும் எனக்கும் உறவு விட்டுப் போய்விடும். அம்மா உனக்கு அதிகாரம் தந்திருப்பது என்னை சுகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, என்னை தொந்தரவிற்குள்ளாக்கி, கஷ்டத்தில் ஆழ்த்துவதற்கல்ல. ரேகா விஷயத்தில் நீ தலையிடுவதை என்னால் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. முன்பே சொல்லி விட்டேன்.''

விமலன் புருவங்களை நெறித்து, ஆச்சரியமடைந்தவனைப் போல் நடித்துக் கொண்டே தீவிரமாய் பார்த்தான். கதவுகள் சாத்திக் கொண்டுவிட்டன.

விமலன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். கோர்ட்டுக்கு நேரமாகி விட்டது. கட்டிலில் போட்டிருந்த கருப்புக்கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு புறப்படப் போனான்.

பின்னாலிருந்து பாத்ரூம் கதவுகள் திரும்பவும் திறந்து கொண்டன. விமலன் திரும்பிப் பார்த்தான். கமலனின் முகத்திலிருந்த ஆவேசம் தணிந்து விட்டிருந்தது. மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் ரீதியில் இருந்தான்.

''விமல்! ஒன் மினிட்! ஐயாம் சாரி! என் வார்த்தைகள் உன்னை வருத்தப்படுத்தியிருந்தால் என்னை மன்னித்து விடு. இந்த உலகத்தில் என் நலனை விரும்புகிறவன் நீதான் என்ற விஷயம் எனக்குத் தெரியும்.

ஆனால்... ஆனால் இந்த உலகத்தில் எல்லோரைக் காட்டிலும் நான் அதிகமாய் நேசிப்பது ரேகா ஒருத்தியைத்தான், இதை நீ இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் தெரிந்து கொள்வாய்.''

கமலனின் வாயிலிருந்து நேசிப்பது என்ற வார்த்தையைக் கேட்டதுமே விமலன் தன் மீது கம்பளிப்பூச்சி ஊரினாற்போல அருவருப்புடன் பார்த்தான்.

''நேசமா! அப்படீன்னால் என்ன? கதைகளிலும் சினிமாக்களிலும் காட்டுகிறார்களே அதுவா?''

''அதில்லை.''

''பின்னே எது? கொஞ்சம் விவரமாய்தான் சொல்லேன்.''

''சொல்லமாட்டேன். சொன்னாலும் உனக்குப் புரியாது. வார்த்தைகளால் சொல்ல முடியாத அபூர்வமான உணர்ச்சி அது. அதனால் நான் சொன்னாலும் உனக்கு புரியாது.''

கமலன் கதவைச் சாத்திக் கொண்டு விட்டான்.

இம்முறை ஷவரிலிருந்து நீர் தாரையாய் கொட்டிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. விமலன் வெளியே வந்துவிட்டான்.

சிற்றன்னை கமலனின் சொத்தைப் பார்த்துக் கொள்ளத் தனக்கு அதிகாரம் தந்திருப்பதாய் உயிலைப் பார்த்துத் தெரிந்து கொண்டதுமே விமலன் அதிர்ந்து விட்டான். கமலனை இந்த விஷயத்தில் அடக்கியாளுவதற்கு அவள் எவ்வளவு அவஸ்தை பட்டிருப்பாளோ? விமலன் பலதடவை அந்தக் கஷ்டங்களையெல்லாம் கண்கூடாய் பார்த்திருக்கிறான். இனி அந்தக் கஷ்டங்களையெல்லாம் அவன் படவேண்டும். விமலன் பயந்தாற் போலவே ஆயிற்று. கமலன் அவனுக்குப்

பெரிய தலை வேதனையாகிவிட்டான். கூடிய சீக்கிரத்தில் அவனுக்கு புத்திசாலியான ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் பணிண்விடவேண்டும் என்று மிகவும் அவசரப்பட்டுக் கொண்டிருந்தான்.

இந்தப் பணத்தை பாதுகாக்கும் பாரம் வந்து சேர்ந்து விட்ட பிறகு அண்ணன் தம்பிகளுக்கிடையே அபிப்பிராய பேதம் வந்துவிட்டது. தன் மீது இருக்கும் அன்பால் தான் பணம் கேட்ட பொழுதெல்லாம் விமலன் தந்து விடுவான் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த கமலன் சீக்கிரத்திலேயே ஏமாற்றத்திற்குள்ளானதோடு தன் உத்தேசம் தப்பு என்று வேறு தெரிந்து விட்டது. சிற்றன்னை அவன் மீது வைத்து விட்டுப் போன பொறுப்பை விமலன் அப்படியே ஏற்றுக்கொண்டு நடப்பான் என்று கமலன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. விமலன் எந்த விஷயத்தில் வேண்டுமானாலும்விட்டுக் கொடுத்து விடுவானே தவிர, பண விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுத்துவிட மாட்டான். மாதந்தோறும் கமலனின் தேவைகளுக்கு வேண்டிய பணங்களைக் கொஞ்சம் அதிகமாகவே தருவான். ஆனால் ஒவ்வொரு சின்ன விஷயமும் கூட அவனுக்குக் கணக்குக் காட்டவேண்டும். சில சமயம் பொய்க்கணக்கு எழுதி விமலனை ஏமாற்றப் பார்த்த கமலன் அந்த உபாயம் பலிக்காததோடு, பிடிபட்டுப் போய் திட்டையும் கேட்க வேண்டியிருந்தது. விமலன் அப்பொழுதிலிருந்து கணக்கு விஷயங்களில் மிகவும் கறாராய் இருக்கத் தொடங்கினான். எந்தச் சின்ன விஷயமும் அவர் பார்வையை விட்டுத் தப்பித்துவிட முடியாது.

கமலனுக்கு மூக்கணாங் கயிறு போட்டு விட வேண்டும் என்றெண்ணிதான் புண்டரீகனின் மகள் எல்லா விதத்திலும் சிறந்தவள் என்றெண்ணி அந்த சம்

...ர்த்தைப் பேசி முடித்திருந்தான் விமலன். இனி ...ரின் எதிர்காலத்தைப் பற்றித் தான் கவலைப்பட ...ண்டாம், நிச்சிந்தையாய் இருக்கலாம் என்று எதிர் ...ர்த்துக் கொண்டிருந்த விமலனின் ஆசைகளுக்குக் ...றுக்கே இந்த ரேகா எங்கிருந்தோ வந்துவிட்டாள். ...மலனுக்கும் இவளுக்கும் எப்படி பரிச்சியம்ஏற்பட்டது? ...மலன் அந்தப் பெண்ணின் வலைக்குள் நன்றாய் ...விழுந்து விட்டான் என்றே தோன்றிற்று. என்ன ...தைரியம் இருந்தால் அப்படி கமலனின் எதிர்கால மாமனாருக்கே நேரிடையாய் கடிதம் எழுதுவாள்? இப் பொழுது திரும்பவும் இந்த ரேகாவின் பிடியிலிருந்து கமலைக் காப்பாற்றுவதற்காகத் தான் எவ்வளவு உபா தைகளை யோசிக்க வேண்டுமோ? எவ்வளவு அவஸ் தைகளைப் பட வேண்டுமோ? விமலனுக்கு திடீரென்று கமலனின் மீதும் இறந்து விட்ட சிற்றன்னை மீதும் கோபம் வந்தது.

## 10

கமலனும் ரேகாவும் பார்க்கில் நடந்துகொண் டிருந்தார்கள். குளிர்ந்த மாலைப்பொழுது குளிர் நாளாக இருந்ததால் அதற்குள் பொழுது சாய்ந்துவிட்டது.

இருவரும் ஃபௌண்டனுக்கெதிராய் இருந்த புல் வெளியில் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டார்கள். கூட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த பறவைகளின் கலகலப்புச் சப்தம் ஆரவாரமாய் கேட்டது.

கமலன் புண்டரீகனிடமிருந்து லெட்டர் வந்த விவரத்தையும் அதைப் பார்த்து விட்டு அண்ணன் விமலனின், முகத் தோற்றம் எப்படி மாறிற்று என்றும்,

எல்லா விவரங்களையும் கண் காது வைத்துச் சொல்லி ரேகாவைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

சிரித்துச் சிரித்து சோர்ந்து போய்விட்ட ரேகா, "போதும், இனி சொல்லாதீர்கள். என்னால் சிரிக்க முடியவில்லை. சிரித்துச் சிரித்து விலா எலும்பு முறிந்து விடும் போலிருக்கு" என்றாள். கமலன் கர்வத்தோடு சிரித்தான்.

ரேகா பயந்தாற்போல நடித்து, "எல்லாம் நன்றாய் தான் இருக்கு. உங்களுக்கென்ன வந்தது. ஆம்பிள்ளை மகாராஜா. வீட்டில் உட்கார்ந்திருப்பீர்கள். ஒரு சுப முகூர்த்தத்தில் உங்கண்ணா வந்து என் மீது யுத்த பேரிகை முழங்கினால்...?" என்றாள்.

"அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது,, நீ கவலை யில்லாமல் இரு" என்றான் கமலன்.

"எப்படி நம்புவது? அவ்வளவு உறுதியாய் எப்ப டிச் சொல்றீங்க?"

"நீ இருக்குமிடம் விமலனுக்குத் தெரிந்து விடாமல் ஜாக்கிரதையாய் இருப்பேன் நான்."

"பலே ஆள்தான்" ரேகா சிரித்தாள்.

ஒரு விதத்தில் ரேகாவுக்குக்கூட இது திருப்தியாய் இருந்தது. விமலன் கமலனுக்கு பலவந்தக் கல்யாணம் பண்ணிவிடாமல் தன்னால் தடுக்க முடிந்தது. இவ்வுலகத்தில் மிக அரிதான, புனிதமான சிநேகம் தனக்குக் கிடைக்கும் பாக்கியத்தைத் தந்திருக்கும் கமலனுக்காக அவள் எதையும் செய்யத் தயாராய் இருந்தாள். கமலனுக்காக விமலனோடு நேருக்கு நேராய் சண்டை போடவும் தயாராயிருந்தாள்! பின்னே அதை மறுப்பதற்கு விமலன் யார் நடுவில்?

கமலனின் இத்தனை வருத்தங்களுக்கும் அவன் அப்பாவித்தனந்தான் காரணம். இந்த அப்பாவித் தனத்தை ஆதாரமாய் கொண்டு விமலன் சாமர்த் தியமாய் நாடகமாடிக் கொண்டிருக்கிறான் என்பது ரேகாவின் உத்தேசம். விமலனை நேருக்கு நேராய் பார்க்காவிட்டாலும் கமலனின் வார்த்தைகளைக் கொண்டு அவன் மிக சாதுரியம் மிகுந்தவன் என்றும், மற்றவர்கள் பேச்சைக்கூட கேட்கமாட்டான் என்றும், பிறரை மதிக்கவும் மாட்டான் என்றும் அகங்காரம் பிடித்தவன் என்றும் தீர்மானம் பண்ணிக் கொண்டாள். அவன் கையிலிருந்து அப்பாவியான கமலனைக் காப் பாற்ற வேண்டியது தன் கடமை என்று முடிவெடுத்துக் கொண்டாள் ரேகா.

கமலன் இதற்கு முன்பே தனக்கு நெருக்க மாக வேண்டும் என்று பார்த்த இரண்டு பெண்களின் மனதை விமலன் எப்படி உடைத்துவிட்டான்என்று இரக்கம் ததும்பும்படியாய் சொல்லத் தொடங்கினான். வனஜாவோடு தான்பட்ட தொல்லைகளைப் பற்றியும் அதிலிருந்து தன்னை மீட்பதற்காக விமலன் பட்ட பாட்டை பற்றியும் மட்டும் சொல்லவில்லை.

''என்னைத் தவிர உங்களுக்கு வேறு யாருமே சிநேகம் கிடையாதுன்னீங்களே?'' ரேகா பழிப்பது போல கேட்டாள்.

''இப்ப மட்டும் இருக்காங்களா என்ன? இதெல்லாம் விவரம் தெரிந்தும் தெரியாததுமான வயதில் ஏற்பட்ட பரிச்சியங்கள். இப்ப மறந்து போய் புழுதியில் படிந்து போய்விட்ட ஞாபகங்கள். ரேகா! உன்னைப் பார்த்த பிறகு அதெல்லாம் அப்படி முறிந்து போய் விட்டதை என் அதிர்ஷ்டமாய் பாவிக்கிறேன்.''

ரேகாவின் முகம் சீரியசாகிவிட்டது. ''என்னவோ, யாருக்குத் தெரியும்? என்னைவிட எல்லா விதத்திலும் உன்னதமான பெண் தென்பட்டால் நானும் கூட அப்படித்தான் தோன்றுவேனோ என்னவோ?''

''சே, சே, அதெல்லாம் இல்லை. நீ வேறு ரேகா!'' தொலைவில் பார்த்தபடி சொல்லிக் கொண்டிருந்த கமலன் சட்டென்று நின்றுவிட்டான். அவன் கண்கள் திடீரென்று அகன்றன.

''கமல்! என்னவாச்சு?'' கமலனிடம் ஏற்பட்ட இந்த மாறுபாட்டை கவனித்து விட்டு தானும் அந்த பக்கமாய் பார்த்தாள்.

கமலன் சரேலென்று ஒரே பாய்ச்சலாய் எழுந்து அடர்த்தியாய் இருந்த மரங்களுக்குப் பின்னால் மாயமானான்.

''என்ன? என்னவாச்சு கமல்?'' ரேகா தானும் கலக்கமடைந்தவளாய் எழுந்திருக்க போனாள்.

''உஷ்! பேசாதே! எழுந்திருக்காதே! அங்கேயே உட்கார்'' மரங்களுக்குப் பின்னாலிருந்தே எச்சரித்தான் கமலன்.

கமலனின் நடவடிக்கைகள் புரியாதவளாய் குழப்பத்துடன் திரும்பி கேட் பக்கமாய் பார்த்தாள் ரேகா. தொலைவில் இருந்த அந்த பெரிய கேட் வழியாய் ஒரு ஏலெட்டு வயது பெண் குழந்தையை இரண்டு பக்கமும் இரண்டு ஆண்கள் கையைப் பிடித்துகொண்டு நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் வயோதிகர். வேட்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்தார். அவர் உடம்பு தளர்ந்து இருந்தது. இன்னொருத்தன் இளைஞன். வெள்ளை பாண்டும் ஷர்ட்டும் அணிந்திருந்தான். கண்களில் கூலிங்கிளாஸ் இருந்தது. அழகான கிராப், உயரமாய் இருந்தான். அவன் நடையில் ஒரு

வித பெருந்தன்மையும் மிடுக்கும் இருந்தது. அவர்கள் சாவதானமாய் நடந்து வந்து கொண்டிருந்ததை பார்த்தால் பொழுது போக்கிற்காக பார்க்குக்கு வந்தாற் போலிருந்தது. அவர்கள் ஏதோ பேசிக்கொண்டே இந்த பக்கமாகவே வந்து கொண்டிருந்ததால் ரேகா முகத்தை திருப்பிகொண்டு ஃபௌண்டனைப் பார்க்க தொடங்கினாள். அவர்கள் ரேகாவை தாண்டிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் தம் கைகளில் பிடித்து கொண்டிருந்த அந்தச் சிறுமி அவ்விருவருக்குமே உயிருக்கு சமமானவள் என்று தோன்றிற்று. யார் அவர்கள்? கமலன் எதற்காக பயப்படுகிறான்? இந்த கேள்விகளால் குழம்பிக்கொண்டிருந்த ரேகா, மெதுவாய் அவர்களைப் பார்த்துகொண்டே உட்கார்ந்திருந்தாள்.

முன்னால் போய்கொண்டிருந்த அவர்களில் கூலிங் கிளாஸ் அணிந்து கொண்டிருந்த இளைஞன் ஏனோ தெரியாது ஒரு முறை பின்னுக்கு திரும்பி ரேகாவைப் பார்த்தான். அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த ரேகாவுக்கு சட்டென்று பார்வையை திருப்பிக்கொள்ளும் அவகாசம் கூட இல்லாமல் போய்விட்டது. ரேகா பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவர்கள் மெதுவாய் கண் மறைவாகி விட்டார்கள். பிறகு வெளியே வந்து ரேகாவிற்கருகில் உட்கார்ந்து கொண்டான் கமலன்.

''யார் அவங்க?'' ரேகா பரபரப்புடன் கேட்டாள்.

''அந்த கூலிங்கிளாஸ் போட்டுக்கொண்டிருக்கிற அவர் எங்க அண்ணன் விமலன்.''

''விமலன்!'' ரேகா அதிர்ந்துவிட்டாள். தன்னை யறியாமல் கண்கள் அகல விரிய, மார்பின் மீது கையை வைத்துகொண்டு, ''விமலனா? உங்கள் அண்ணாவா?'' என்றாள்.

''ஆமாம்.''

''என்ன மனிதர் நீங்கள்! முன்பே சொல்ல வேண்டாமா? நன்றாய் பார்த்திருப்பேனே'' பொன்னான சந்தர்ப்பம் கைநழுவி விட்டவளைப் போல கோபமாய் சொன்னாள் ரேகா. விமலன்! இவனா விமலன்!

எப்பொழுதும் கமலனின் வாயிலிருந்து அண்ணனை பற்றி 'ராட்சசன்', 'யமன்', என்ற வார்த்தைகளையே கேட்டிருந்த ரேகாவின் மனதில் மிக மாறுபட்ட ஊகம் இருந்து வந்தது. ஆனால் அழகாய் கம்பீரமாய் இருந்த அவன் தோற்றம் அந்த ராட்சசனின் தோற்றத்திற்கு முற்றிலும் வேறாய், மாறுபட்டு இருந்தது.

கமலன் ரேகாவிடம் தோன்றிய இந்த சஞ்சலத்தை கவனிக்காதவனாய் சொல்லிக்கொண்டே போனான், ''அந்த இன்னொருவர் விஸ்வநாதன். எங்கள் வீட்டிற் கருகில்தான் இருக்கிறார். எங்கப்பாவும் அவரும் நண்பர்கள். ஒரு விதத்தில் அவர் எங்கப்பாவின் பலவந்தத்தின் பேரில்தான் கல்கத்தாவிலிருந்த சொத்துக் களையெல்லாம் விற்றுவிட்டு இங்கே டெக்ஸ்டைல் மில் ஒன்றை வாங்கிக்கொண்டு எங்களோடேயே எங்களுக் கருகில் இருக்க வேண்டும் என்று இங்கேயே செட்டிலாகி விட்டார். எங்களுக்கு தூரத்து சொந்தமாகணும். ஆனாலும் சிநேகந்தான் முக்கியமாய் இருந்து வந்தது.''

''அந்த சின்னப் பெண் யார்?''

''அவர் மகள்.''

''மகளா?'' ரேகா வியப்படைந்தாள்.

''ஆமாம். மகள் என்றால் யாருமே நம்பமாட்டாங்க. பேத்தி என்றுதான் எண்ணிப்பாங்க. அவர் பெரிய பெண் பிறந்து பதினாலு வருஷங்களுக்கு பிறகு இந்தப் பெண் பிறந்தாள். இவள் பிறந்ததுமே தாய் இறந்து விட்டாள். பாவம் இந்தப் பெண். பேச வராது. அவள் மீது அவருக்கு உயிர். பெரிய பெண் லலிதாவைக்

கண்டால் பேயைப் பார்ப்பது போலதான் இருக்கும் அவருக்கு.''

''ஏன் அப்படி?''

''அந்தப் பெண்ணுக்கு பிடிக்காத கல்யாணத்தைப் பண்ணி வைத்தார். கல்யாணமான ஒரு வருஷத்திற்குள் அவன் கார் விபத்தில் இறந்துவிட்டான். தாயும் இறந்து விட்ட பிறகு இப்பொழுது அத்தனையும் அந்தப் பெண்ணின் இஷ்டந்தான். யார் பேச்சையும் பொருட் படுத்த மாட்டாள். அவளுக்கு எப்படி பிடிக்குமோ அப்படிதான் நடந்துப்பாள். தந்தைக்கும் மகளுக்கும் ஒரு நிமிஷம்கூட ஒத்து வராது.''

''ஐயோ பாவம்'' இரக்கத்துடன் பதிலளித்தாள்.

''அவருக்கு மகன் இல்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை. 'ஆனால் அந்த மகன் இல்லாத குறையை எங்கள் விமலனைப் பார்த்து தீர்த்துக் கொள்வார். அவனுக்கு அவர் மீது அளவுக்கு மீறிய மதிப்பு. அவருக்கும் விமலன் என்றால் உயிர். முன் பின் தெரியாதவங்க யாராவது பார்த்தால் அவங்க ரெண்டு பேரும் தந்தையும் மகனும் என்றுதான் நினைச்சுப் பாங்க.''

ரேகா கன்னத்தில் ஒரு கையை வைத்துகொண்டு, இன்னொரு கையால் புல்லை பிடுங்கிக்கொண்டே தரையை பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் தந்தை இருந்தால்! சில சமயம் தந்தை அன்புக்காக அவள் இதயந்தான் எவ்வளவு தவிக்கும்! எவ்வளவு வேதனை அடையும்! இந்த வாழ்க்யையில் வேறு எந்த குறையை வேண்டுமானாலும் மனிதனால் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் தாய் தகப்பனிடமிருந்து கிடைக்கும் அன்பிற்கும் செல்வத்திற்கும் தூரமாகி விடுவது தாங்க முடியாத வேதனை! அந்த லலிதா

என்ற பெண் பைத்தியமா? இல்லாவிட்டால் விஸ்வ நாதன் என்ற அந்த தந்தையோடு சண்டை போடுவ தாவது! தனக்கே அப்படிப்பட்ட தந்தை இருந்தால்...?

ஏதோ போலாகிவிட்ட ரேகாவின் முகத்தைப் பார்த்து கலக்கத்துடன் கேட்டான் கமலன், "ரேகா, ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை கமல்."

"ஒன்றுமில்லைன்னு நீ சொல்வதிலிருந்தே தெரி கிறது, ஏதோ இருக்குன்னு."

ரேகா பதில் பேசவில்லை. கண்களில் துளிர்த்த கண்ணீரை அடக்கிக்கொள்ள அரும்பாடுபட்டுக் கொண்டே ஃபௌண்டனிலிருந்து வெளிவந்து கொண் டிருந்த நீரையே பார்க்க தொடங்கினாள். கமலன் ரேகாவின் முகத்தையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அந்த விஸ்வநாதனைப் பார்த்தால், அந்தப் பெண் அவருக்கு உயிர் என்று நீங்கள் சொன்னதை கேட்டால் எனக்கு எப்படியோ இருக்கு."

"ரேகா" கமலன் புரியாமல் பார்த்தான்.

"அவர் மட்டுமில்லை. அவர் வயது ஆண்கள் யாரைப் பார்த்தாலும், எனக்கு அவங்களில் என் தந்தையைப் பார்த்துக்கணுங்கிற தவிப்பும் ஆசையும் ஏற்படத் தொடங்கிவிடுகிறது."

"ரேகா, நான் நிறைய தடவை கேட்கணும்னு நினைத்துக் கேட்காமல் இருந்துகொண்டு விடுவேன். உங்கப்பா உன் சிறு வயதிலேயே போய் விட்டாரா?" ரேகா மறுத்துத் தலையசைத்தாள். "எனக்குத் தெரியாது கமல்! அவரைப்பற்றிய எந்த ஞாபகமும் என் நினைவில் இல்லை. ஆனால் தந்தைக்காகவும், அந்தப் பாசத்திற்

காகவும் என் மனது எவ்வளவு தவித்துக் கொண்டிருக்கிறதுன்னு நான் யாரிடமும் சொல்லமாட்டேன். என் சிறு வயதில் நானும் சேகரும் பசங்களோடு சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கும்போது, சாயந்திரம் ஆபீசு விட்டு ஆண்கள் எல்லாம் வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே எங்களோடு விளையாடிக் கொண்டிருக்கும் பசங்கள் எல்லோரும் எங்களை விட்டு விட்டு, ''அப்பா வந்துட்டார்'', ''அப்பா வந்துட்டார்'' என்று புலுபுலுவென்று ஓடிப் போயிடுவாங்க. தனியாய் எஞ்சி நின்றுவிடும் நானும் சேகரும் ஒருவரையொருவர் திருதிருவென்று பார்த்துக்கொண்டு விட்டு வீட்டிற்குத் திரும்பி வருவோம். ஒருமுறை எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கு. நானும் ஒரு பெண்ணும் சுவரேறிக் குதிக்கப் போய் கீழே விட்டோம். உண்மையில் எனக்குதான் அந்தப் விழுந்து பெண்ணைவிட அதிகமாய் அடிப்பட்டது. சுவற்றிலிருந்து கீழே விழுந்ததுமே அவள் வீலென்று அலறினாளோ இல்லையோ வீட்டில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த தந்தை ஓடி வந்தார். இரு கைகளாலும் அவளைத் தூக்கி மார்போடணைத்துக் கொண்டு, ''என் கண்ணில்லையா? என் தங்கமில்லையா?'' என்று சமாதானப்படுத்திக் கொண்டே வீட்டிற்குள் எடுத்துச் சென்றார். பெண்ணை கவனித்துக் கொள்ளாததற்கு மனைவியைத் திட்டினார். எனக்கு ஏதோ போலிருந்தது. என் கால் சுளுக்கிக் கொண்டுவிட்டது. நடக்க முடியவில்லை. எனக்காக யார் வருவாங்க? எங்கம்மா வீட்டைத் தாண்டி வெளியே வரமாட்டாங்க. எங்க மாமிக்கு எங்கள் ரகளையெல்லாம் பிடிக்காது. மாமாவோ வீட்டிலேயே இருக்க மாட்டார். கடைசியில் நொண்டிக் கொண்டே வீட்டிற்கு வந்ததும் மாமியும் அம்மாவும் சேர்ந்து என்னைத் திட்டிய திட்டுக்கள் எனக்கு இப்பொழுதும் நினைவிருக்கு: அன்றிரவு நான் எனக்குத் தந்தை இல்லாதற்கு எவ்வளவு அழுதேனோ? சகப்

பசங்கள் எல்லோரும் அடிக்கடி எங்கப்பா எங்கப்பா என்றுச் சொல்லும்போது எனக்கும் சேகருக்கும் ஏதோ போல் இருக்கும்.

ஒரு முறை நானும் சேகரும் துணிந்து எங்கம்மா விடம் போய், ''எங்கப்பா எங்கே? எங்களுக்கு ஏன் அப்பா இல்லை?'' என்று கேட்டோம்.

அம்மா பதில் சொல்லாததோடு முகத்தை கைகளால் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங் கினாள்.

அங்கேயே உட்கார்ந்து அரிசி பொறுக்கிக் கொண் டிருந்த எங்க மாமி ஒரே பாய்ச்சலாய் ஓடி வந்து என் கூந்தலையும் சேகரின் காதையும் பிடித்து வீதிக்கு இழுத்துக் கொண்டு போனாள்.

''உங்கப்பா என்னவானார் தெரியுமா, கேளுங்கள். இல்லை. செத்துப் போய் பத்து வருஷமாகிறது'' என்றாள்.

''பொய்'' என்றேன் நான்.

ரோஷத்தோடு கேட்டேன் திரும்பவும், ''அப்பா செத்துட்டால் அம்மா ஏன் பொட்டு வெச்சுக்கிறாங்க இன்னும்?''

இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நின்றிருந்த மாமி உடனே வலது கையை நீட்டி என் கன்னத்தைக் கிள்ளி விட்டு, இன்னொரு கையால் தொடையில் அழுத்திவிட்டு, ''படவா! என் வாயை அடக்கி விட் டாயா? இன்னொரு தடவை இப்படிப் பேசினாயானால் நாக்கை நறுக்கி விடுவேன், ஜாக்கிரதை! ஜாண் அளவுக்கு இருந்துகொண்டு வாய் நீளம்!'' என்று என் முதுகில் நாலு கொடுத்தாள்.

''அக்காவை அடிக்காதே மாமி. இனிமேல் கேட்க மாட்டோம்'' என்றான் சேகர் அழுதுகொண்டே எனக்காகப் பரிந்து கொண்டு.

அதே சமயத்தில் வீட்டிற்கு வந்த மாமா என் அழுகையைக் கேட்டு விட்டு, மாமி சொன்னதையெல்லாம் கேட்ட பிறகு, என்னையும் சேகரையும் அழைத்துக் கொண்டு, வாசலுக்கு வந்து தான் படுத்துக் கொள்ளும் கட்டிலில் இரு பக்கங்களிலும் உட்கார வைத்துக் கொண்டு ''உங்கப்பா உங்கம்மாவின் அழுகையைக் கேட்க முடியாமல், உங்க மாமியின் சாதிப்புக்களை பட முடியாமல் வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டார்'' என்றார்.

''ஓடிப் போனால் திரும்பவும் தேடினால் கிடைக்க மாட்டாரா மாமா?'' என்று கேட்டான் சேகர்.

நானும் ஆசையாய் பார்த்தேன்.

''கிடைப்பார். ஏன் கிடைக்க மாட்டார். ஆனால் தேடணும் என்றால் போலீசாரின் உதவியைக் கேட்கணும். அவங்க நமக்கு உதவி பண்ணணும் என்றால் நாம்ப அவங்களுக்குப் பணம் தரணும். நம்மிடம் ஏது பணம், சொல்லு? நீ பெரியவனாகி, நன்றாய் படித்துப் பணம் சம்பாதித்தால், நாம்ப மூவருமாய் சேர்ந்து தேடலாம் அப்பொழுது'' நாங்கள் தலையாட்டினோம்.

ஆனால் வயதாக ஆக பிற்பாடு எனக்குத் தெரிந்தது. மாமா அன்றைக்குச் சின்னப் பசங்களான எங்களுக்கு மன நிம்மதியைத் தருவதற்காகச் சொன்ன கட்டுக் கதை அது. எங்க மாமி செத்துப் போய் விட்டார் என்கிறாங்க. எங்க மாமா ஓடிப்போய் விட்டார் என்கிறார். எது நிஜம் என்று எங்கம்மாவுக்குதான் தெரியும். ஆனால் அவங்க சொல்லமாட்டாங்க. அந்தப் பேச்சை எடுத்தபோதெல்லாம் இதயத்தைப் பிழியும்படி

யாய் அழுகிறாய்களே தவிர, பதில் சொல்ல மாட்டாங்க...'' கண்ணீரை துடைத்துக் கொண்டே சொல்லி முடித்தாள் ரேகா.

கமலன் இரக்கத்தோடு பார்த்தான்.

சுற்றிலும் சூழ்ந்திருந்த அந்த நிசப்தம், அந்த மரம், கிளைகள், ஃபௌண்டன், அந்தக் குளிர்ந்தக் காற்று எல்லாம் சேர்ந்து ரேகாவின் இதயத்திலுள்ள அந்த தீராத வேதனையை முதல் முதலாகக் கேட்பதுபோல, இரக்கம் ததும்பப் பார்ப்பது போல மௌனமாய் நின்று விட்டன.

## 11

விமலன் மிகவும் பிடிவாதக்காரன் என்பது எல்லோரும் அறிந்ததே. நினைத்ததை சாதித்துத் தீரும்வரை அவனுக்கு உறக்கம் வராது. நினைத்தது நடந்து முடியும் வரை அவன் பசியுண்ட சிங்கத்தைப் போல திரிந்து கொண்டிருப்பான்.

கமலனை வலையில் போட்டுக் கொண்டிருக்கும் இந்த ரேகா யார் என்று அவன் எவ்வளவு விதமாய் துப்புத் துலக்கலாமோ அவ்வளவு விதமாய் துப்புத் துலக்கியும் அவளைப் பற்றி எந்த விபரத்தையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவனால் கமலனின் நெருங்கிய நண்பர்கள் சிலரைக் கேட்டுப் பார்த்தான். அவர்களாலும் அந்தப் பெண் யார், எங்கே இருக்கிறாள் என்று எதுவும் சொல்ல முடியவில்லை. கமலன் யாருக்கும் இதைப் பற்றி சொல்லவில்லை. அந்தப் பெண் கமலனின் கிளாஸ்மேட் இல்லை. பிக்னிக், பார்ட்டி போன்றவைகளுக்கு வரும் பெண்ணும் இல்லை.

பின்னே யாராயிருக்கும்? எங்கிருந்து வந்து முளைத்தாள்? கமலனை வலையில் போட்டுக் கொண்டு, தங்கமான அவன் விவாக சம்பந்தத்தை நாசமாக்கி, தனக்கு இவ்வளவு அமைதியின்மையைத் தோற்றுவித்து கொண்டிருக்கும் அந்த ரேகாவை அவன் மிகத் தீவிரமாய், விடாப்பிடியாய் தேடத் தொடங்கினான்.

ஒரு மாதம் கழிந்து விட்டது. கடைசியில் வேறு வழியில்லாமல் விமலன் கமலனிடமே வந்தான்.

''அந்தப் பெண் எப்படி இருப்பாள் என்று தூரத்திருந்தாவது எனக்குக் காட்டு. குறைந்த பட்சம் எப்படி இருக்கிறாள் என்று தொலைவிலிருந்தேயாவது பார்க்கிறேன், நீ சொன்னது போல அந்தப் பெண்ணிற்கு வேண்டியது நீதான் என்றும் உன் பணம் இல்லை என்றும் எனக்கு நம்பிக்கையறத் தெரிந்தால், நானே முன் நின்று உங்களிருவருக்கும் கல்யாணத்தைப் பண்ணிவைத்துவிட்டு, உங்கள் சொத்தை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன்.'' என்று வார்த்தைகளால் வலை போட்டான்.

கமலன் நம்பிவிட்டான். ரேகாவை ஒரு முறை பார்த்துப் பரிச்சியம் பண்ணி வைப்பது தன் மூலமாகவே நடந்தால் எல்லாம் நல்லபடியாய் முடியும் என்பது அவன் நம்பிக்கை கடைசியில் தொலைவிலிருந்தே ரேகாவைக் காட்டுவதாய் ஒப்புக் கொண்டான் அவன். பார்த்த பிறகு கமலனுக்குத் தெரியாமல் ரேகாவோடு பேசக்கூடாது என்றும், தான் பரிச்சியம் பண்ணி வைக்கும்போது கூட அவளோடு ஏளனமாய் பேசக் கூடாது என்றும், அவளைப் பற்றிய விஷயம் எதையும் கேட்கக் கூடாது என்றும் எவ்வளவோ நிபந்தனைகளை வைத்தான் கமலன். விமலன் ஒப்புக் கொள்வதாய் தலையாட்டினான்.

இருவரும் விமலனின் ஸ்கூட்டரில் புறப்பட்டார்கள். விமலன் கமலன் சொன்ன வழியில் ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டுபோய் மார்க்கெட்டில் காய்கறி கடைகளுக்குப் பக்கத்தில் கொஞ்ச தூரத்தில் நிறுத்தினான். இருவரும் ஸ்கூட்டரில் உட்கார்ந்துகொண்டே அரைமணி நேரத்திற்கு மேல் காத்திருந்து பார்த்தார்கள். ரேகா வரவேயில்லை. கமலன் நேரத்தைப் பார்த்து விட்டு ''இனி இன்றைக்கு வரமாட்டாள் என்று நினைக்கிறேன்.'' என்றான்.

''போகட்டும், நாளைக்கு வருவோம்'' என்றான் விமலன் ஏமாற்றமடைந்து விடாமல்.

மறுநாள் விமலனும் கமலனும் மறுபடியும் வந்தார்கள். ரேகா அன்றைக்குக்கூட வரவில்லை.

''இன்றைக்குக்கூட வரவில்லையென்று சொன்னால் அவங்க வீட்டில் காய்கறி சாப்பிடுவதை விட்டுவிட்டு வெறும் சாதந்தான் சாப்பிடுகிறாங்களோ என்னவோ?'' என்றான் விமலன் கைக்கடியாரத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டே. ஸ்கூட்டரில் விமலனுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த கமலன் ரேகாவின் வீடு இருந்த வீதியைக் காட்டி,

''அந்த பக்கமாய் போ'' என்றான்.

விமலன் அந்த சந்திற்குள் ஓட்டிக்கொண்டே, ''அட! இந்த சந்து எனக்கு நன்றாய் தெரியும். பக்கத்து கடைவீதியில் என் க்ளயின்ட் ஒருத்தன் இருக்கிறான்'' என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே கமலன், ''விமல்! நிறுத்து, நிறுத்து! அதோ ரேகா!'' என்றான்.

''எங்கே?'' விமலன் பிரேக்கைப் போட்டு விட்டு, ஒரு காலை தரையில் ஊன்றிக்கொண்டே ஸ்கூட்டரை நிறுத்தினான்.

கமலன் விரல் சுட்டிக் காட்டினான். "அதோ! அந்த ரிக்ஷாவிலிருந்து இறங்கி சாமான்களை இறக்கிக் கொண்டிருக்கிறாளே, அவள்தான்."

விமலன் கண்கொட்டாமல் கூர்ந்து பார்த்தான். வீதியின் கோடியில் இருந்த வீட்டிற்கு முன்னால் ஒல்லியாய், உயரமாய் கொடியைப் போல இருந்த ஒரு பெண் தென்பட்டாள். ரேகா ரிக்ஷாவிலிருந்து எண்ணெய் டப்பா, அரிசி இருந்த பை, வீட்டிற்கு ஒரு மாதத்திற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் ஒவ்வொன்றாய் இறக்கி வராந்தாவிற்கு எடுத்துக் கொண்டுபோய் வைத்துகொண்டிருந்தாள்.

விமலனுக்கு அந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்தாற் போல இருந்தது. எங்கே? எந்தச் சந்தர்ப் பத்தில்? அவன் மூளையில் எவ்வளவு யோசித்துப் பார்த்தும் ஞாபகம் வரவில்லை. விமலன் புருவங் களைச் சுளித்து யோசித்துக் கொண்டிருந்தான்.

ரேகா ரிக்ஷாக்காரனுடன் ஏதோ சச்சரவு பண்ணிக் கொண்டிருந்தாள்.

அவன் கைகளை ஆட்டிக்கொண்டே இரைந்து கத்திக்கொண்டிருந்தான். "என்னம்மா! சாமி கோவில் வீதின்னு சொல்லிவிட்டு இம்மாந்தூரம் இழுத்துட்டு வரச்செஞ்சுட்டீங்க! ஓட்ட முடியாமல் என் கையெல்லாம் போயிடுத்து."

"நான் கோவிலுக்குப் பக்கத்து தெரு என்று தெளிவாய் சொன்னேன்" கோபமாய் சொல்லிக் கொண் டிருந்தாள் ரேகா.

"சொன்னாயோ என்னவோ? என் காதில் விழ வில்லை. என்ன பண்றது, வந்துட்டோமே! இன்னும் ஒரு ரூபாயை விட்டெறி."

''எதுக்காக விட்டெறியணும்? விட்டெறிவதற்கு இங்கே கொட்டிகிடக்கிறதுன்னு நினைத்துவிட்டாயா? கேட்டுக்கொள்ளாமல் போனது உன் தப்பு'' ரேகா அவனுக்கு பணத்தைத் தந்தாள்.

ரிக்ஷாக்காரன் பணத்தை தள்ளிவிட்டான். ''போகட்டும், இதை மட்டும் ஏன் தந்தாய்? நீயே வெச்சுக்கோம்மா. இன்னிக்கு என் உழைப்பை உனக்கு வெறுமே தாரை வார்த்தேன்னு எண்ணிக்கிறேன்.''

''வார்த்தைகளை ஜாக்கிரதையாய் பேசு.''

அதற்குள் அக்கம்பக்கத்தார் வெளியே வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். விமலன் ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டிருந்தான்.

போய்க்கொண்டிருந்த ரிக்ஷாக்காரன் லாபமில்லை என்றெண்ணிக்கொண்டு, திரும்பி வந்து, ''ஒரு ரூபாய் தராவிட்டால் எட்டணாவாவது விட்டெறி. காபியாவது குடிக்கிறேன்'' என்றான்.

''எட்டணா இல்லை, எட்டு பைசா கூட கொடுக்க மாட்டேன்.''

''கொடுக்காவிட்டால் போம்மா! உனக்கு எப்படி தெரியப்போகுது எங்க கஷ்டம்?''

''அப்பப்பா! ரேகா! எட்டணாவைத் தூக்கி எறியக் கூடாதா? சனியன் பிடித்த ரகளை! எல்லோரும் பார்க்கிறாங்க'' அதற்குள் வாசலுக்கு வந்த சுந்தரி கத்தினாள்.

''பார்க்கட்டுமே மாமி, பார்த்தால் நமக்கென்ன? வீட்டில் வேலை வெட்டி இல்லாதவங்க வீதியில் வந்து நின்றுகொண்டிருந்தால், பார்க்கிறாங்களேன்னு நாம்ப எதுக்காக நினைச்சுக்கணும்? அவன் மொதல்லேயே மரியாதையாய் கஷ்டப்பட்டேம்மான்னு சொல்லி கேட்டிருந்தால் கண்டிப்பாய் தந்திருப்பேன். இவ்வளவு

ரகளை வந்த பிறகு செத்தாலும் கொடுக்கமாட்டேன். கொடுத்தால் இது நம்ப நல்ல குணம் என்று நினைத்துக் கொள்ள மாட்டான். அவன் செய்த இந்த ரகளைக்கு பயந்து கொடுத்தோம்னு நினைத்துக்கொள்வான்.''

''ஓ யம்மா! பலே ஆளுதாம்மா நீ! என் துட்டை இப்படி விட்டெறி'' இனி லாபமில்லை என்றெண்ணிக் கொண்டு கையை நீட்டினான் ரிக்ஷாக்காரன். ரேகா தூக்கி எறிந்தாற்போல போட்டாள்.

கமலன் வெட்கத்தால் குறுகிப்போய் விட்டான். தன்மானத்தால் அவனுக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருந்தது. ஒரு ரூபாய்க்காக நடுத் தெருவில் இவ்வளவு ரகளை பண்ணியது அவனுக்கு உயிரே போய்விட்டாற் போல இருந்தது. சட்டென்று வேகமாய் ஓடிப்போய் ரேகாவின் வாயை பொத்திவிட வேண்டும் போல ஆவேசம் வந்தது. ஓரடி முன் நோக்கி வைத்தான் கூட. ஆனால் விமலனின் பலமான கை வந்து அவனை சட்டென்று பிடித்து தடுத்துவிட்டது.

''விடு என்னை, நான் போகிறேன்'' என்றான்.

''வேண்டாம்.''

விமலனுக்கு அந்தச் சண்டையும், ரேகா பயமில்லாமல் சண்டை போட்ட விதமும், அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் மறைந்திருந்த உண்மையும், பிடித்திருந்தன. அந்தச் சண்டை ஆர்வத்தை தரும்படியாய், காதிற்கினிமையாய் இருந்தது அவனுக்கு. அடேயப்பா! இந்தப் பெண் ரிக்ஷாக்காரனோடு மட்டுமேயில்லை, தனக்கு அநியாயம் இழைத்துவிட்டதாய் பாவிக்கும் ஒவ்வொரு விஷயத்திலுமே கத்தி இப்படி சண்டை போடுவதாய் தோன்றிற்று. கோபத்தில் சிவந்த முகமும், ரோஷத்தால் பளபளத்தக் கண்களும், சுற்றிலும் எல்லோரும் பார்க்கிறார்களே என்ற

அருவருப்பும், ஒரு ரிக்ஷாக்காரனோடு இப்படி வார்த்தைகளை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே என்ற வெறுப்பும், இவைகள் எல்லாவற்றோடும் சேர்ந்து ரேகாவின் முகம் கவர்ச்சியாய் விமலனின் முகத்தில் என்றும் அழியாதவாறு பதிந்துபோய் விட்டது. ரிக்ஷாக்காரன் திட்டிக்கொண்டு முணுமுணுத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தான். ரிக்ஷாக்காரனைப் பார்த்த பொழுது விமலனின் கண் முன்னாடி இன்னொரு காட்சி மிதந்தது. எட்டணாவைக் கூட வீணாய் செலவு பண்ணாதவள் கமலன் பண்ணும் ஊதாரி செலவுகளை எப்படி பொறுத்துக்கொள்வாள்? பொறுத்துக்கொள்ள மாட்டாள். தனக்கு பிடிக்காத விஷயம் நடந்து விட்டால் கமலனின் மனைவியாய் அவன் மீது அப் பெண் எப்படி பாய்ந்து குதறியெடுத்துவிடுவாள் என்று விமலன் ஊகித்துக் கொண்டான். இதைக்காட்டிலும் வேறு வேண்டுமா?

இந்தப் பெண்ணோடு அவன் வாழ்க்கை எள்ளுங் கொள்ளும் வெடித்தாற்போலவே ஆகிவிடும். தொலைவில் ரேகாவும் சுந்தரியுமாய் சேர்ந்து சாமான்களை ஒவ்வொன்றாய் உள்ளே எடுத்துப் போய்க்கொண்டிருந்தார்கள்.

''பக்கத்தில் இருக்கிறாளே, அந்தப் பெண்மணி யார்?''

''சுந்தரி என்ற அவங்க மாமி. பெரிய சண்டைக்காரி.''

''உன் ரேகாவையும் விடவா?'' விமலன் குறும்பாய் சிரித்தான்.

''எப்படியும் இவ்வளவு தூரம் வந்து விட்டோம். வா, அவங்க வீட்டுக்கே போகலாம். உன்னை பரிச்சியம் பண்றேன்'' என்றான் கமலன். அவனுக்கு

இது தர்ம சங்கடமாய் இருந்தது. ரேகாவை இந்த சூழ் நிலையில் காட்டவேண்டியிருக்கும் என்று அவன் கனவிலும் ஊகித்திருக்கவில்லை. இவ்வாறு தொலைவி லிருந்தே காட்டலாம் என்று எண்ணியது தன்னுடைய முட்டாள் தனந்தான். ரேகாவிடம் முன்கூட்டியே சொல்லியிருக்க வேண்டும். கமலனுக்கு தானே மன்னிக்க முடியாத தப்பு பண்ணி விட்டதாய் வருத்த மாய் இருந்தது.

ரேகாவின் உண்மையான நடவடிக்கைகளைப் பார்த்தால் ஒருக்கால் விமலனின் அபிப்பிராயம் மாறலாம். அந்த ஆசையுடன்தான் அவர்கள் வீட்டிற்கு கூட்டி செல்வதாய் சொன்னான். ஆனால் விமலன் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியில் ரேகாவிடம் பார்க்கவேண்டியதைப் பார்த்து விட்டதாய் தோன்றிற்று. அவனுக்கு. மனிதர்களின் சுபாவம் நாலு பேர்களுக்கு முன்னால் ஒருவிதமாகவும் இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

“இப்பொழுது வேண்டாம். சமயம் வரும்போது நானாகவே பரிச்சியம் பண்ணிக் கொள்கிறேன்” என்று ஸ்கூட்டரை வீட்டை நோக்கி திருப்பினான் விமலன்.

## 12

நகரத்தில் “அஜந்தா” என்ற புதிய ஓட்டல் ஒன் றைக் கட்டியிருந்தார்கள். மேற்கத்திய பாணியில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டிருந்த அந்த ஓட்டலுக்கு அன்று ரேகாவை அழைத்துக் கொண்டு வந்தான் கமலன். ஆர்டர் தந்த ப்ரூட் சாலட்டையும் ஐஸ் கிரீமை யும் கொண்டு வந்து வைத்தான் சர்வர்.

கமலன் நேப்கின்னை மடியில் பரப்பிக் கொண்டே திடீரென்று சொன்னான். ''ரேகா! எங்க விமலன் உன்னைப் பார்த்துவிட்டான்.''

''என்னையா? விமலனா? எங்கே? எப்பொழுது?'' திடுக்கிட்டுப் போனவளாய் கேட்டாள் ரேகா.

''ஆமாம். உன்னைத்தான். அன்றைக்கு மாலையில் நீ ரிக்ஷாக்காரனோடு எட்டணாவுக்காக உலக யுத்தம் நடந்தாற் போல ரகளை பண்ணினாயே, அப்பொழுது''

''ஓ! அப்பொழுதா?'' ரேகா சிரித்துவிட்டாள்.

கமலன் கோபமாய் சொன்னான். ''ரேகா! சில விஷயங்களில் நீஎனக்காகவாவது உன் குணங்களை மாற்றிக்கொள்ளணும். பாழாய்ப் போன எட்டணாவுக்காக அன்றைக்கு நீ, அதுவும் விமல் பார்த்துக் கொண்டிருக்கும்போது.''

''அழகாயிருக்கு! நீங்கள் அப்படி திருட்டுத்தனமாய் பார்த்துட்டிருந்தது எனக்கென்ன தெரியும்? தெரிந்திருந்தால் எட்டணா இல்லை ரெண்டு ரூபாயே கூட அவனுக்கு அதிகமாய் தந்து அனுப்பியிருப்பேன்.

''ஆனாலும் உங்களுக்கு இதென்ன புத்தி? நேராய் எங்கள் வீட்டிற்கு வராமல்.''

அன்றைக்கு பார்க்கில், கூலிங்கிளாஸ் அணிந்து கொண்டு உயரமாய் மிடுக்காய் இருந்த ஆள் விமலன் என்று தெரிந்த பிறகு ரேகாவுக்கு அவனை இன்னொரு தடவை பார்க்க வேண்டும் என்று மிக விருப்பமாய் இருந்தது.

கமலன் பதில் பேசாததால் ரேகா தானாகவே கேட்டாள். ''என்ன சொன்னார் உங்கண்ணா என்னைப் பார்த்துட்டு?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''நீ ராட்சசியாய் இருக்கிறாயாம். உன்னோடு நான் பரிச்சியம் பண்ணிக் கொண்டால் கொள்ளிக்கட்டையால் தலையைச் சொரிந்து கொள்வது போலவாம். புத்தி கொஞ்சமாவது இருந்தால் உடனே உன் சிநேகத்திற்கு குட்பை சொல்லி விடச் சொன்னான்.''

ரேகா நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள். முகம் சிவந்து விட்டது. கோபத்தை அடக்கிக் கொண்டே சிரிப்பை வரவழைத்துக் கொண்டே ''பேஷ்! இந்தக் கொஞ்சப் பரிச்சியத்திலேயே அவ்வளவு நன்றாய் சொல்ல முடிந்த உங்கள் விமலனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டுகிறேன் நான்.''

கமலன் மௌனமாய் உட்கார்ந்திருந்தான். ரேகா யோசனையில் ஆழ்ந்தபடியே ஐஸ்கிரீமை மெல்ல மெல்லச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அதற்குள் பின்னாலிருந்து திடீரென்று ''கமல்'' என்ற அழைப்பு மென்மையாய், கம்பீரமாய் கேட்டது.

இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். கதவிற்கெதிராய் விமலன் நின்றுகொண்டிருந்தான்.

அவன் கமலனைப் பார்த்து, ''ஒரு நிமிஷம் என்னோடு வா. வேலை இருக்கு.'' என்றான் எழுந்து வரச் சொல்லி உத்தரவிடுவது போல.

கமலன் ரேகாவைப் பார்த்தான். இருவரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள். கமலன் போவதா வேண்டாமா என்று பார்த்தான்.

''போங்க, போய்விட்டு சீக்கிரமாய் வாங்க.'' என்றாள் ரேகா. கமலன் எழுந்து போனான்.

பத்து நிமிஷம் ஆயிற்று.

ரேகாவுக்கு ஏதோபோலிருந்தது. விமலன் தன்னைப் பற்றிச் சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. தன்னை மதிப்பாய் நோக்காதவர்களை ஹீனமாய் பார்ப்பது அவள் வழக்கம். விமலன் மீது தாழ்வான அபிப்பிராயம் ஏற்பட்டது. அதற்குள் காலடிச் சப்தம் கேட்டது. ரேகா நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன இவ்வளவு தாமதம்? என்ன சொன்னார் உங்கள் எமன்?''

ரேகா சட்டென்று நிறுத்திக் கொண்டாள். அவள் கண்கள் அகன்றன. கையிலிருந்த ஸ்பூன் கீழே விழுந்தது. திரும்பி வந்தது. கமலன் இல்லை. விமலன்!

''மே ஐ கமின்?'' என்று வினயமாய் கேட்டான். ரேகா இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். விமலன் நேராய் வந்து சற்று முன்னால் கமலன் உட்கார்ந்துகொண்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். ரேகா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''எக்ஸ்க்யூஸ்மி'' என்று அவள் முழங்கைக்கருகில் இருந்த மெனுகார்டை எடுத்து, சர்வர் வந்ததுமே,

''ஸ்ட்ராங் காபி ஒன்'' என்று ஆர்டர் தந்தான்.

சர்வர் போனதும் ''என் பெயர் விமலன்! கமல் என் தம்பி'' என்றான்.

''தெரியும்.''

''தெரியுமா? எப்படி?'' ஆச்சரியமடைந்தவனாய் கேட்டான்.

''இதற்கு முன்பே கமலன் தொலைவிலிருந்தே ஓரிரு முறை காட்டியிருக்கிறார்.''

''அப்படியா? என்னிடம் அவன் சொன்னதே இல்லையே?''

''கமல் பண்ணும் ஒவ்வொரு காரியத்தையும் உங்களிடம் சொல்ல வேண்டுமா?''

''இல்லைதான். ஏன், சொல்லக்கூடாதுன்னு நீங்கள் கற்றுத் தந்துகொண்டிருக்கீங்களா?'' என்றான்.

''ஒருத்தர் கற்றுக் கொடுத்தால் கற்றுக்கொள்கிற ஆள் இல்லை கமல்.''

''தாங்க்ஸ்! அவனைப்பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருப்பதற்கு...''

''நல்லவங்களைப்பற்றி எப்பொழுதும் நல்ல அபிப் பிராயந்தான் இருக்கும்'' தன்னை ராட்சசி என்று சொன்னவனோடு மரியாதையாய் பேசவேண்டிய தேவையில்லை என்று தோன்றிற்று அவளுக்கு.

சர்வர் விமலனுக்கு முன்னால் காபியைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனான். விமலன் கூலிங் கிளாஸைக் கழற்றி மூலையில் வைத்தான். ரேகா பொறுமையை வரவழைத்துக் கொண்டு பயமில்லாமல் அவன் முகத்தோன்றத்தை கவனிக்கத் தொடங்கினாள். அவன் நெற்றி விசாலமாய் இருந்தது. புருவங்கள் திருத்தி னாற்போல இருந்தன. கேசங்கள் மென்மையாய், கோணல் வகிட்டோடு அழகிய கிராப்பாய் இருந்தது.

சர்க்கரையை எடுத்து காபியில் கலந்து கொண்டே கேட்டான் விமலன்—''உங்கப்பா என்ன பண்றார்?''

''ஒன்றும் பண்ணலை.''

ரேகா வெடுக்கென்று சொன்ன அந்த பதிலைக் கேட்டு அவன் நிமிர்ந்து பார்த்தான். ஒரு வினாடி இருவர் பார்வையும் கலந்தன. விமலனின் பார்வையைத் தான் ரேகா சுண்டியிழுத்து நிறுத்தி வைத்து விட்டாளோ அல்லது ரேகாவின் பார்வையைத்தான் விமலன் இழுத்து நிறுத்திவிட்டானோ தெரியாது இருவருக்குமே. இருவர்

பார்வையும் ஒரு வினாடி கலந்து கொண்டு அப்படியே நின்று விட்டன. இரண்டு வினாடிகள் கழிந்தன. கடைசியில் விமலன் தானே பார்வையை அகற்றிக் கொண்டான்.

''அவரை நான் சந்திக்கணும்.''

''அவரை நீங்கள் சந்திக்கணும் என்றால் நீங்கள் சுவர்க்கத்திற்குதான் போகணும். அவர் இறந்து விட்டார்.''

''ஓ! ஐயாம் சாரி! அண்ணன் தம்பிகள் யாராவது இருக்காங்களா?''

''இருக்காங்க.''

''எவ்வளவு பேர்?''

''ஒருத்தன் தான்.''

''என்ன பண்ணிட்டிருக்கான்?''

''ஒன்றும் பண்ணவில்லை.''

''ஒன்றும் பண்ணவில்லையா? வயது என்ன?''

''இருபது.''

விமலன் வியப்போடு பார்த்தான். ரேகாவுக்குக் கோபம் வந்தது. ''ஆனாலும் ஏதாவது ஒன்றைப் பண்ண வேண்டிய வயதுதான். படிப்பு முடிந்து விட்டதா?''

''முடிந்து விட்டது.''

''ஐ ஸீ!''

திரும்பவும் நிசப்தம் ஏற்பட்டது.

விமலனுக்குக் கூட எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தபொழுது இப்பெண்ணிடம் நல்லது கெட்டதைப் பேசிவிட்டு, விமலனின் சுபாவம், அவன் நிலைமை

முதலியவைகளைப் பற்றிச் சொல்லலாம் என்றுதான் வந்தான். மனதைப் புண்படுத்தாமல், கூடியவரை மென்மையாய் கமலனை விடுதலை பண்ணி விடும்படியாய் கேட்டுக் கொள்ளலாம் என்றுதான் வந்தான். ஆனால் பலே சாமார்த்தியசாலியான இந்த ரேகாவை வென்று விடமுடியாது என்று வெகு சீக்கிரத்திலேயே தெரிந்துவிட்டது. அவன் பொறுமை தளர்ந்து போகத் தொடங்கிற்று.

''உங்கள் விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் உங்கள் சார்பில் பெரியவங்க யாருமே இல்லையா?''

''என் விஷயம் என்றால்?'' எதிர்க்கேள்வி கேட்டாள்.

விமலனுக்கு ஆத்திரம் வந்தது. ''கமலனை நீங்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்புவதைப் பற்றி.'' ரேகா பதில் பேசவில்லை.

''ஆனாலும் உங்களைப் போன்றவங்க பெரியவங்க கட்டுப்பாட்டின் கீழ் இருப்பீங்கன்னு நான் நம்பலை. நீங்கள் சம்மதித்தால் நான் உங்களோடேயே பேசுகிறேன்.'' ரேகா பதில் பேசாமல் இருந்தாள்.

''நீங்கள் எந்த காரியம் செய்தாலும் ஒரு உத்தேசத்தோடுதான் செய்வீங்களா, அல்லது வேடிக்கைக்கும், பொழுது போக்குக்கும் கூட செய்வீங்களா?''

''எனக்கு ஏதாவது லாபம் இருந்தாலோயாழிய நான் எந்தக் காரியத்தையும் பண்ணமாட்டேன்,'' கச்சிதமாய் வந்தது பதில்.

விமலன் கூலிங் கிளாஸைக் கையிலெத்துக் கொண்டு அதை அப்பிடியும் இப்படியும் சுற்றிக் கொண்டே சொன்னான்,

"கமலனின் வருங்கால மாமனாருக்கு நீங்கள் கடிதம் போட்டதன் உத்தேசம்?"

"கமலுக்குப் பிடிக்காத கல்யாணத்தைத் தடுக்க வேண்டும் என்றுதான்."

"அதனால் உங்களுக்கு ஏற்படும் லாபம்!"

"இதில் லாபநஷ்டப் பேச்சிற்கு இடமில்லை."

"இப்பத்தானே சொன்னீங்க, லாபமில்லாமல் எந்தக் காரியத்தையும் பண்ணமாட்டேன்னு."

ரேகா பிடிபட்டுப் போனவளாய் பார்த்தாள். விமலனின் கண்கள் குறுப்பாய் சிரித்தன.

ரேகா தன்னை சமாளித்துக் கொண்டு பெருமையாய் சொன்னாள். "அழகாயிருக்கு! சிநேகிதர்களுக்கும் நெருக்கமானவர்களுக்கும் அந்த நியாயம் பொருந் தாது."

"ஓஹோ உங்கள் உத்தேசங்களுக்கு சமயத்தைப் பொறுத்து அர்த்தம் இருக்கும் போலிருக்கிறது."

அவள் வார்த்தைகளிலிருந்த கேலியையும் பழிப்பையும் பலவந்தமாய் விழுங்கிக் கொண்டு பொறுமையாய் பேசாமலிருந்தாள் ரேகா.

"அப்படீன்னால் கமலனை அந்த விவாகத்திலிருந்து தப்பிக்கச் செய்ததில் உங்களுக்கு சுயலாபம் எதுவுமில்லை என்கிறீர்கள். அப்படித்தானே?"

"அது என் பெர்சனல் விஷயம். முன்பின் தெரியாதவங்களோடு நான் அதைப் பற்றிச் சொல்ல வேண்டிய தேவையில்லை."

"கமலன் என் தம்பி, அவனுக்கு கார்டியன் நான். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் என் அனுமதியில்லாமல் அவன் கல்யாணம் நடக்காது."

''ஐ ஸீ'' சற்று முன்னால் விமலன் சொன்னதைப் பார்த்துத் தானும் அவ்வாறே சொன்னாள்.

அவன் முகம் சிவந்துவிட்டது. நாற்காலியில் சங்கடத்துடன் நெளிந்து பின்னுக்குச் சாய்ந்துகொண்டே ரேகாவைத் திரும்பவும் கூர்ந்து பார்க்கத் தொடங்கினான்.

ரேகா விமலனின் பார்வையைப் பொருட்படுத்தாதவளைப் போல ஐஸ்கிரீமை ஸ்பூனால் எடுத்துச் சாப்பிட தொடங்கினாள். அவளுக்கு அவன் பார்ப்பது தர்மசங்கடமாய் இருந்தது. விஷயத்தை மளமளவென்று சொல்லி விட்டுப் போய்விடக்கூடாதா? அது சரி கமல் எங்கே? இவ்வளவு நேரமாகியும் இன்னும் ஏன் வரவேயில்லை? என்னவாகி விட்டது அவனுக்கு? இந்தச் சந்தேகங்களால் வெந்துகொண்டிருந்த ரேகாவுக்குத் தான் ஒரு ராட்சசியானாற்போலவும் தனக்கு முன்னால் ஒரு கங்காளத்தை வைத்துக் கொண்டு அதிலிருந்து பெரிய கரண்டியில் எடுத்துச் சாப்பிடக்கூடாத பதார்த்தம் எதையோ சாப்பிட்டுக் கொண்டிருந்தாற்போலவும் தோன்றத் தொடங்கிற்று. விமலனின் பார்வைக்கு அப்படிப்பட்ட சக்தி இருந்ததோ என்னவோ?

திடீரென்றுச் சொன்னான் விமலன். அவன் முகம் கடுமையாய், குரல் கம்பீரமாய் இருந்தது. ''கமலன் உங்களுக்கு எப்படிப்பட்ட ஆசைகளை கற்பித்திருப் பானோ எனக்குத் தெரியாது. ஆனால் சில காரணங் களினால் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சரி, உங்கள் விவாகம் அவனோடு நடக்காது என்பதைத் தெரிவிப் பதற்காகத்தான் இந்த அவகாசத்தை ஏற்படுத்திக் கொண்டு நான் இங்கே வந்தேன்.'' விமலன் ரேகாவை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தாற்போல ரேகா நிமிரவில்லை. பதற்றமடையவும் இல்லை. ஆவேசமாய் எதுவும்

பேசவும் இல்லை. முகத்தைச் சுளுக்கிக்கொண்டு எரிச்சலுடன் பார்த்தாள். விமலனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது.

'இந்தப் பெண்ணின் உத்தேசந்தான் என்ன? நீ என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள். கமலன் நான் சொன்னபடிதான் கேட்பான், என்ற துணிச்சலா? கமலனை என் உள்ளங்கையில் ஏந்திக் கொண்டிருக்கிறேன். உன் பேச்சால் எனக்கென்ன லாபம் என்ற அலட்சியமா? அவனுக்கு கோபம் வந்தது. எழுந்து நின்றுகொண்டே சொன்னான்.

''சொத்துப்பத்துக்கள் உடையவனை கணவனாய் அடைய வேண்டும் என்ற உங்கள் தவிப்பையும் ஆசையையும் நான் புரிந்துகொள்கிறேன். ஆனால் கமலனுக்கு மனைவியாகக்கூடிய பெண் வேறு. அந்த குணங்கள் எதுவும் உன்னிடம் இல்லை.'' விமலன் ஜேபியைத் தடவிக்கொண்டே, டைரி ஒன்றை எடுத்து அதிலிருந்து ஒரு பக்கத்தை சர்ரென்று கிழித்தான். பென்ஸிலால், மளமளவென்று ஏதோ கிறுக்கிவிட்டு, அந்தக் காகிதத்தை ரேகாவின் மேல் விட்டெறிந்து விட்டு, ''இது என் விலாசம். இந்த விலாசத்திற்கு உங்கள் விருப்பத்தின் விலை, கமலை நீங்கள் விடுதலை பண்ணுவதற்கு வேண்டிய பிரதிபலன், இவைகளைக் கணக்கிட்டு போஸ்ட் பண்ணினால், அதை நீங்கள் எந்த விதத்திலும் எங்கே கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ அங்கே கொடுத்து விடுகிறேன். அவனை இப்படி கழுகுகளைப் போன்ற பெண்களின் பிடியிலிருந்து காப்பாற்றுவது எனக்கொன்றும் புதிதில்லை'' என்றான்.

ரேகாவுக்கு அவன் என்ன பேசுகிறான் என்று புரியவில்லை. தன் மீது பட்டுக் கீழே விழப்போன காகிதத்தைக் கைகளால் பிடித்துக்கொண்டு பார்த்தாள், அதில்

அவன் மளமளவென்று கிறுக்கித் தள்ளியிருந்தது அவன் விலாசத்தை, ''விமலன் எம்.ஏ.பி.எல். ராஜா நிலையம், ராயபுரம், சென்னை'' என்றிருந்தது.

''பிறகு, உங்களுக்கு அந்த பிரதி பலனை ஒப்படைக்கும் சமயத்தில் நீங்கள் எனக்கு கமலன் உங்களுக்கு எழுதிய கடிதங்களையெல்லாம் தந்து விடணும்'' என்றான் விமலன் டைரியை ஜேபியில் வைத்துக் கொண்டே.

''தராவிட்டால்?'' கையிலிருந்த காகிதத்திலிருந்து பார்வையை நிமிர்த்தி நேராய் அவனைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''அதன் விளைவை நீங்களே பார்ப்பீங்க.''

''சரி.''

''அப்படீன்னால்?''

''நீங்கள் எனக்கு பண ஆசையைத் தூண்டியிருக்கிறீர்கள். நான் அதற்கு அடிமையாகிவிடுகிறேனா இல்லையா என்று நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.''

''உங்கள் உத்தேசம்?''

''நீங்கள் கேட்டுக்கொண்டபடி கமலனை என்னால் விடுதலை பண்ணுவது என்பது கனவிலும் நடக்காத காரியம்'' ரேகா கையிலிருந்த காகிதத்தை அவன் மீது வீசியெறிந்தாள்.

விமலன் விக்கித்துப்போய் நின்றுவிட்டான். ஒரு வினாடி தன் மீது பட்டுவிட்டு மேஜை மேல் விழுந்த அக்காகிதத்தையும் ரேகாவையும் மாறிமாறிப் பார்த்தான். ரேகா சற்றும் பயமில்லாமல் சலனமின்றி உட்கார்ந்திருந்தாள் அவனையே பார்த்தபடி. கொஞ்ச நேரம் கோபத்தை அடக்கிக்கொண்டே அவளைப் பார்த்த அவன் சட்டென்று உள்ளங்கைகள் இரண்டை

யும் மேஜை மீது இரு பக்கங்களிலுமாய் ஊன்றிக் கொண்டு, லேசாய் அவளுக்கு முன்னால் குனிந்து மிக மென்மையாய் கேட்டான். ''எதுக்காக இந்த நடிப்பு? நீங்கள் கல்யாணம் பண்ணிக்கொள்கிற டைப்பே இல்லை என்றும், ஒருக்கால் பண்ணிக்கொண்டாலும் கமலனை போன்றவங்களை கனவிலும் ஏற்றுக்கொள்ள மாட்டீங்க என்றும் உங்களால் அவனைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும் உங்களைப் பார்த்த முதல் பார்வையிலேயே ஊகித்துக்கொண்டு விட்டேன் நான். உங்களுக்கு வேண்டியது கமலன் இல்லை, அவன் பணம்தான் என்றும், அந்தப் பணத்தை அடைவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருக்கீங்க என்றும் இப்பொழுது தெரிகிறது.'' அவன் கண்கள் குறும்பாய் பார்த்தன. குரல் அவமானப் படுத்துவது போல கேலியாய் ஒலித்தது. கூரிய கம்பால் குத்துவது போல சொன்னான், ''ஆனாலும் நமக்குள் ஒரு வார்த்தை. கல்யாணம் பண்ணிக்கொண்டால் என்ன வரும்? கணவன், குழந்தைகள், கால்கட்டுதான். இப்படி ஆட்களைக் கையில் சிக்கவைத்து விட்டுக் கொண்டிருந்தால், வயதாவதற்குள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சம்பாதித்துவிடலாம். நாலு தினுசு மனிதர் களையும் ருசிபார்த்தாற்போல் இருக்கும். எவ்வளவு நல்ல வியாபாரம். என்ன சொல்றீங்க?''

ரேகா பைத்தியம் பிடித்தவளைப்போல ஸ்தம்பித்துப் போனவளாய் கண்கள் அகல விரிய, அப்படியே பார்க்கத் தொடங்கினாள்.

''சொல்லுங்கள். என்ன சொல்றீங்க? இப்பவாவது நான் சொன்னதற்கு ஒப்புக்கிறீங்களா?''

''ஒப்புக்க மாட்டேன். ஒப்புக்காமல் போனால்?''

''உங்களைப் போன்ற பிடிவாதக்காரியும் முட்டாளும் இந்த உலகத்திலேயே இல்லை என்பேன். நீங்கள்

ஒப்புக்கொள்ளாமல் , போனால் நான் என்ன செய்வேன்னு கூட சொல்லிவிடச் சொல்றீங்களா? நான் நினைத்தால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை. உங்களை எந்தக் கேஸிலாவது சிக்கவைத்து ஜெயிலுக் குள் தள்ளிவிட முடியும் என்னால். நீங்கள் சக மனிதர் களுக்கு முன்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியாதபடி அவமானப்படுத்திவிட முடியும். ஆனால் எனக்கு அந்த உத்தேசம் இல்லை என்று முன்பே சொல்லிவிடுகிறேன். உங்களோடு காதும் காதும் வைத்தாற்போல ராசியாகி விடத்தான் சித்தமாயிருக்கிறேன் நான்.''

ரேகா பற்களைக் கடித்துக்கொண்டே பதிலளித் தாள். ''நானும் கமலனும் உயிர் சிநேகிதர்கள். உங்கள் பயமுறுத்தலுக்கெல்லாம் நான் ஒன்றும் பயந்து விடமாட்டேன். கடவுளால்கூட எங்கள் சிநேகத்தைப் பிரித்துவிட முடியாது. நீங்கள் என்ன வேண்டுமானா லும் செய்துகொள்ளுங்கள்.''

''பெண் ஒருத்திக்கு இவ்வளவு துணிச்சல் ஆகாது.''

''ஆண்பிள்ளை என்ற அகங்காரத்தோடு வாய்க்கு வந்தபடி பேசுவது உங்களுக்கும் அழகல்ல.''

விமலன் எழுந்து சரியாய் நின்று கொண்டு சாந் தத்தை வரவழைத்துக் கொண்டே சொன்னான். ''அன் றைக்கு தொலைவிலிருந்தே பார்த்து அழகான பெண் ணாய் இருப்பதோடு கொஞ்ச நஞ்சம் புத்திசாலியாயும் இருப்பாய் என்று எதிர்பார்த்தேன். அதனால்தான் இவ் வளவு மரியாதையோடு உன்னோடு பேச்சு வார்த்தை நடத்தலாம்னு வந்தேன். பெண்களுக்கு இவ்வளவு துணிச்சலும் தீய சாகஸமும் உதவாது. விவேகமும் சீர் தூக்கிப் பார்க்கிற தன்மையும் இல்லாவிட்டால் என் றாவது ஒருநாள் அறுந்த காற்றாடியைப் போல எங்கே யாவது ஓரிடத்தில் குலைந்து போய்விடும். கமலனுக்கு வரப்போகும் மனைவியிடம் வினயம் இருக்க

வேண்டும். கட்டிய கணவனாய் அவனிடம் கௌரவம் இருக்க வேண்டும். ஆனால் அவன் சொத்தின் மீது ஆசையும், காமமும் இருக்கக் கூடாது. இந்த லட்சணங்கள் எல்லாம் உங்களிடம் இருக்கிறதா இல்லையான்னு யோசித்துப் பாாத்துக் கொள்ளுங்கள்.''

''தனக்கு வரவேண்டிய மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று கமலனால் தீர்மானித்துக் கொள்ள முடியும். உங்கள் தீாமானங்களுக்குத் தலை வணங்க வேண்டிய தேவை அவருக்குக் கொஞ்சமும் இல்லை. அவருக்குப் பிடிக்காத கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ள சொல்லி தொந்தரவு பண்ணுகிற அதிகாரம் உங்களுக்கு இல்லவே இல்லை. அவங்கம்மா உங்களுக்கு அதிகாரம் தந்திருப்பது அவர் சொத்தின் மீது தானே தவிர, அவர் மீது இல்லை என்ற விஷயத்தை எவ்வளவு சீக்கிரமாய் உணர்ந்து கொள்கிறீர்களோ அவ்வளவு நல்லது.''

விமலன் ஒரு வினாடி வாயடைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டான். அவன் எவ்வளவு அழுத்தமாய் தன் அபிப்பிராயத்தைச் சொன்னானோ அதே அளவுக்கு அழுத்தமாய் அவள் தன் அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டாள். அறையில் கொஞ்ச நேரம் மிக பயங்கரமான நிசப்தம் ஏற்பட்டது.

கடைசியில் விமலன் கூலிங்கிளாஸை எடுத்து மாட்டிக்கொண்டே சொன்னான், ''சரி! உங்களுக்கு நல்ல விதமாய் விஷயத்தை எடுத்துச் சொல்லலாம் என்று வந்தேன். பேராசையோடு கமலனின் சொத்தின் மீதே கண் வைத்திருக்கும் உங்களுக்கு என் இதபோதனை தலைக்கு ஏறாதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. உங்களுக்கு எப்படிப் பாடம் கற்பிக்கிறது என்றும், கமலனை உங்கள் கையிலிருந்து எப்படி மீட்கிறது என்றும் தெரியாத முட்டாள் இல்லை. நான் வரேன்.''

''விஷ் யூ குட்லக்'' என்றாள் ரேகா.

போகத் திரும்பிக் கொண்டிருந்த விமலன் முதுகில் சாட்டையடி பட்டுவிட்டாற் போல சரேலென்று திரும்பிப் பார்த்தான்.

ரேகா கர்வமாய், மிடுக்காய் சொன்னாள். ''உங்கள் அளவுக்கு மீறிய அதிகாரத்திலிருந்து கமலனை எப்படி மீட்கிறது என்றும் எனக்குத் தெரியும்.''

விமலனின் கன்னங்களில் பிரதிபலித்த செம்மையைக் கொண்டும், முறுக்கேறிக் கொண்டிருந்த தாடை எலும்பைக் கொண்டும் அவனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டாள் ரேகா. ஒரு நிமிஷம் அவன் வலது கை நகர்ந்த விதத்தைப் பார்த்து வந்து தன் கன்னத்தில் ஓங்கி ஒன்று கொடுத்துவிடுவானோ என்ற பயம் ஏற்பட்டது ரேகாவுக்கு. ஆனால் விமலனின் முகத்தில் கோபம் மாயமாகிவிட்டது.

சட்டென்று சிவந்த ஈறுகள் தெரியும்படியாய், வெண்மையான பல்வரிசைகள் அழகாய் தெரியும்படியாய் சிரித்துக்கொண்டே வேடிக்கையாய் சொல்வது போல சொன்னான். ''குட்! உங்களை என்னால் இந்த ஜென்மத்தில் மறந்துவிட முடியாது ஆங், சொல்ல மறந்துவிட்டேனே! கமல் இப்பொழுது வரமாட்டான். நீங்கள் வீட்டிற்குப் போகலாம். விஷ் யூ பெஸ்ட் ஆப் லக்'' என்று சொல்லி விட்டு பதிலுக்காகக் காத்திருக்காமல் விருட்டென்று திரும்பிப் போய் விட்டான். ஸ்பிரிங் கதவு அவன் போனதற்கு அடையாளமாய் வெகு நேரம் அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டேயிருந்தது.

# 13

ரேகா ஒரு வினாடி ஆழ்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டாள். அவளுக்குத் தாங்க முடியாத சோர்வு வந்து சேர்ந்தது. விமலன் எதிரேயிருந்தபொழுது வரவழைத்துக் கொண்ட தைரியமும் பலமும் அவளை விட்டுப் போய் விட்டது. வெகு நேரம் நெற்றிப் பொட்டை அழுத்திக்கொண்டே யோசனையில் ஆழ்ந்த படி உட்கார்ந்திருந்தாள். அதற்குள் சர்வர் வந்து பில்லை ரேகாவிற்கு முன்னால் வைத்துவிட்டுப் போய் விட்டான்.

அதிர்ச்சியடைந்தவளாய் பில்லைப் பார்த்தாள் ரேகா. அவளுக்கு பகீரென்றது. ''கமலன் வரமாட்டான். விஷ் யூ பெஸ்ட் ஆப் லக்'' விமலின் குரல் குறும்பாய் கணீரென்று எதிரொலித்தது! அவளுக்கு என்ன பண்ணு வதென்று தெரியவில்லை. பில் நிறையவே ஆகியிருந்தது, அவளிடம் பணம் இருக்காது என்று தெரிந்தும் கூட கமலன் இவ்வாறு செய்துவிட்டானே! உம், இது கமலன் செய்த காரியமில்லை. விமலன் செய்தது! அந்த ராட்சசன்! அவன் தான் வேண்டுமென்றே வந்து அவளை அவமானப்படுத்தி விட்டதோடுகூட இவர்களிடமிருந்து கூட அவள் அவமானப் படவேண்டும் என்று இவ்வாறு விட்டுவிட்டான். ரேகாவுக்கு அழுகை வந்துவிட்டது. இந்த விஷமச் சூழ்நிலையிலிருந்து எப்படி மீள்வது?

அவள் உடம்பில் புடவை, ஜாக்கெட், கைகளில் கண்ணாடி வளையல்களைத் தவிர, விலைமதிப்பான சாமான் எதுவுமே இல்லை. உடம்பில் குந்துமணி தங்கம் கூட இல்லாதது பெண்களுக்கு எவ்வளவு ஆபத்து! இதயத்தில் ரயில் எஞ்சின் ஓடவே, ரேகா வியர்வையை துடைத்துக்கொண்டாள். மனம் சுழற்காற்றில் சிக்குண்ட சருகாய் படபடத்துக் கொண்டிருந்தது.

தினுசு தினுசாக ஆர்டர் தந்து, ராஜாதி ராஜனைப் போல கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து வயிராறத் தின்று விட்டு, கூட வந்த ஆள் பில் தராமல் போய் விட்டான் என்றும், தன்னிடம் பணம் இல்லை என்றும் சொன்னால் சிரிக்கமாட்டார்களா? இந்த ஓட்டல்காரர்கள் அவளை நம்புவார்களா? ஏதோ நாடகம் என்றெண்ணமாட்டார்களா?

''நான் நினைத்தால் எந்த கேசிலாவது சிக்க வைத்து ஜெயிலில் தள்ளிவிட முடியும். எந்த அவமானமும் பண்ண முடியும்'' என்று சொன்ன விமலனின் வார்த்தைகள் செவிகளில் சுழன்று வந்தன. அவள் முகம் களையிழந்தது. அந்த யோசனையே மூர்ச்சையடைந்து விடுவது போல செய்தது அவளை. ஒருக்கால் இங்கிருந்தே நேராய் ஜெயிலுக்கு போகவேண்டியிருக்குமோ? விமலன் ஊகித்தாற் போல ஆகிவிடக்கூடாது. அப்படி நடந்து விடக்கூடாது. தான் இங்கிருந்து எப்படியாவது மரியாதையாய் வெளியேற வேண்டும். அவள் மூளையிலிருந்த சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு அங்கிருந்து வெளியேறும் உபாயத்தை யோசிக்கத் தொடங்கினாள்.

அதற்குள் அறைக்குள் யாரோ எட்டிப் பார்த்து விட்டு அங்கே பெண்கள் இருந்ததால் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். தன்னையறியாமல் சந்தோஷமாய் ''அனுமந்து'' என்று கத்தினாள். அனுமந்தன் திரும்பி வந்தான்.

''அனுமந்தா! இப்படி வா.''—ரேகா திரும்பவும் கூப்பிட்டாள்.

அனுமந்தன் நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்க்கத் தொடங்கினான். தன்னைதானா ரேகா

இவ்வளவு இனிமையாய் கூப்பிடுகிறாள்! கால்களும் கைகளும் இயங்கவில்லை அவனுக்கு.

"உன்னைத்தான்" திரும்பவும் கூப்பிட்டாள்.

அனுமந்தன் கனவில் நடப்பவனைப் போல கிட்ட வந்தான்.

"உட்கார்! பரவாயில்லை, நான் தனியாய்தான் வந்தேன். ஓட்டல் ரொம்ப நன்றாய் இருக்கோனோ?"

அனுமந்தன் ரேகாவுக்கெதிரே வந்து உட்கார்ந்து கொண்டான், சர்வர் வந்ததும் ரேகா தானே ஆர்டர் கொடுத்தாள். அனுமந்தனுக்கு இன்னும் தான் காண்பது கனவா நினைவா என்று தெரியவில்லை. சர்வர் கொண்டு வந்ததை அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ரேகா மிகப் பரிவோடு அன்று காலில் பட்ட அடி எப்படி யிருக்கிறது என்று விசாரித்தாள். சர்வரிடம் எல்லா வற்றையுமாய் சேர்த்து பில் போடச் சொன்னாள். சர்வர் பில்லைக் கொண்டு வந்து ரேகாவிடம் வைத்தான்.

"நான் தரேன்" என்றான் அனுமந்தன் மரியாதைக் காக.

"ஆஹா, வேண்டாம். நான் தரேன்." ரேகா பலவந்தம் செய்தாள்.

"கூடாது. நீங்கள் மறுக்கக்கூடாது. நான் தரேன்."

அனுமந்தன் துணிந்து உரிமையோடு ரேகாவின் கையிலிருந்த பில்லைப் பிடுங்கிக் கொண்டான்.

ரேகா விருப்பமில்லாமலேயே ஒத்துக் கொள்வது போல பில்லைத் தந்தாள். பில்லைப் பார்த்ததும் அனு மந்தனின் தலை சுற்றிற்று. பில்லையும் ரேகாவையும் மாறி மாறிப் பார்த்தான். சர்வர் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

அதற்குள் எழுந்து நின்ற ரேகா—"சரி, நீ கொடுத்து விட்டு வா, அதற்குள் ஒரு பிரெண்டிற்கு போன் பண்ணி விட்டு வரேன்" என்று அவன் பதிலுக்காகக் காத்தி ராமல் வெளியே வந்து விட்டாள்.

அறையை விட்டு வெளியே வந்த ரேகா மளமள வென்று பின்னாலிருந்து யாரோ தன்னைத் துரத்திக் கொண்டு வந்தாற்போல ஓட்டல் எல்லையைத் தாண்டி வெளியே வந்து, ஒரு முறை மார்பின் மீது கையை வைத்துக் கொண்டு நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண் டாள்.

## 14

மறு நாள் காலையிலேயே வந்துவிட்டான் கமலன். அவள் சந்து முனையிலேயே கையில் தேங்காய், அகர் பத்திகளைத் தட்டில் வைத்துக் கொண்டு கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்த சுந்தரியைப் பார்த்துவிட்டான். அதனால்தான் நேராய் வீட்டிற்கு வந்து வராந்தாவில் நின்று கொண்டு தைரியமாய் "ரேகா" என்று கூவினான்.

ரேகா சமையலறையில் இருந்தாள்.

"ரேகா, யாரோ கூப்பிடறாங்க பார்" குளிக்கப் போய்க் கொண்டிருந்த காயத்ரி கத்திவிட்டு புழக்கடை பக்கம் போய் விட்டாள்.

"யாரு?" என்று வெளியே வந்த ரேகா, கமலனைப் பார்த்ததும் வெகுண்டாள். "நீங்களா? போதும், போதும் நடங்கள் நீங்கள். பணக்காரர்களுக்கே ஒரு கும்பிடு" கோபமாய் சொன்னாள்.

"ரேகா, இதென்ன சீரியஸாய் பேசுகிறாய்? என்ன ஆச்சு?" கவலையுடன் கேட்டான் கமலன்.

''என்னவாச்சா? இன்னும் வெட்கமில்லாமல் கேட்க வந்து விட்டீங்களா? உங்க விமலன் சொல்லவில் லையா?''

''விமலனா? ஒன்றும் சொல்லவில்லையே? என்ன வாச்சு? சீக்கிரமாய் சொல்லு.''

''நீங்கள் பத்து நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுவதாய் சொல்லி விட்டு ஏன் வரவில்லை நேற்றைக்கு?''

''அதைச் சொல்லத்தானே நானே வந்திருக்கிறேன். என் கிளாஸ்மேட் மதுரையிலிருந்து இங்கே வந்திருக் கிறான். வீட்டில் விசாரித்தபோது நான் இல்லை. விமலன் நான் எங்கே போனேனோ தெரியாது என்று சொல்லி விட்டான். ஆனால் விமலனிடம் வேலை பண்ணிக் கொண்டிருக்கும் டைப்பிஸ்ட்—'காலையில் யாருக்கோ போனில் பேசிக்கொண்டிருந்த பொழுது கமலன் அஜந்தா ஓட்டலுக்கு இன்று தன் பிரெண் டோடு போகப் போவதால் இன்று தன்னால் வரமுடி யாது' என்று சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட தாய் சொன்னாளாம். அதனால் அந்த நண்பன் இன்னும் மூன்று மணி நேரந்தான் இருக்கிறது ரயிலுக்கு. அதற்குள் பார்க்க வேண்டும் என்று அவசரப்படுத்தவே, அவனுக்கு அஜந்தா ஓட்டல் எங்கே இருக்கிறது என்று தெரியாததால் விமலன் அவனை ஸ்கூட்டரில் இங்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டான். அவன் என்னைப் பார்த்ததும் கட்டிக் கொண்டு விட்டான். நான் எவ்வளவோ சொல்லியும் என்னைத் தன்னோடு இழுத்துக்கொண்டு போய்விட்டான். நான் உள்ளே வந்து நிமிஷம் உன்னிடம் சொல்லிவிட்டு வருவதாய் சொன்னேன். ஆனால் அவன் கேட்டுக் கொள்ளவில்லை. விமலன் கூட ''போய் விட்டு வா, நான் அந்தப் பெண்ணிடம் சொல்லிவிடுகிறேன்'' என்றுச் சொல்லிவிட்டான். நண்பன் என்னை

இழுத்துக்கொண்டு ஸ்கூட்டருக்குப் பின்னால் தள்ளி விடவே வேறு வழியில்லாமல் போய் விட்டது. நான் ஒரு வழியாய் நண்பனை உதறிவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபொழுது ஓட்டலில் நீயும் இல்லை.''

ரேகா சிரத்தையாய் கமலன் சொன்ன சால்ஜாப்புக் களைக் கேட்டாள். பிறகு சுருக்கமாய் தனக்கும் விமலனுக்கும் இடையே நடந்த சம்பாஷணைகளைச் சொன்னாள். பில் தருவதற்குத் தான் பட்ட பாட்டை யும் அனுமந்தன் தன்னை வந்து காப்பாற்றியதையும் சொன்னாள்.

கமலன் கண்களைத் துடைத்துக்கொண்டே சொன்னான். ''ரேகா! நான்தான் இத்தனைக்கும் பொறுப்பாளி. என்னை மன்னித்து விடு.''

''இன்று காலையிலேயே அனுமந்தனிடம் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன் என்று வையுங்கள். ஆனால் அந்தப் பணத்தை அவனுக்குத் தந்தபொழுது அவங்க பாட்டிக்கு ஒரே சந்தேகம். எப்பொழுது வாங்கிக்கொண்டாய், எதற்காக வாங்கிக் கொண்டாய் என்று என்னை ஆயிரம் கேள்விகள் கேட்டுவிட்டாங்க. அப்பப்பா! அந்த ஓட்டலில் எவ்வளவு அவமானத்திலிருந்து தப்பித்துக்கொண் டேன் தெரியுமா?'' அவள் உடம்பு சிலிர்த்தது. ''விமலனை உனக்கு உண்மையிலேயே பழி வாங்க வேண்டும் என்று இருக்கிறதா?'' தீவிரமாய் கேட்டான் கமலன்.

''இருக்கிறது.''

''அப்படீன்னால் எந்தத் தயக்கமும் இல்லாமல் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்!''

ரேகா அதிர்ந்துபோய் பார்த்தாள்.

''நிஜந்தான் ரேகா, மனப்பூர்வமாய் சொல்கிறேன்.''

அவனைக் கூர்ந்து பார்த்த ரேகாவுக்கு அவன் உணர்ச்சித் துடிப்புடன் இருந்ததையும், கண்கள் வினோதமான ஒளியோடு பளபளத்ததும் தென்பட்டது. ரேகா மெதுவாய், மிக மென்மையாய் சொன்னாள். ''வேண்டாம் கமல்! எனக்கு அவமானம் நேர்ந்து விட்டதேங்கிற வேதனையில் நீங்கள் அத்துமீறி யோசிக் கிறீங்க. நீங்கள் ஆவேசத்தோடு பேசுகிறீர்களே தவிர வேறில்லை. பரவாயில்லை. நிறைய அவமானங்களை யெல்லாம் தாங்கிக்கொண்டு பழக்கப்பட்டிருக்கிறேன் நான். நீங்கள் ஒன்றும் எண்ணிக் கொள்ள வேண்டாம். விமல் எப்படி நடந்துகொண்டாலும் சரி நம் சிநேகத்திற் குக் குறுக்காய் வர முடியாது.''

''இல்லை ரேகா! நான் மனப்பூர்வமாகவே சொல் கிறேன். உன் வாயிலிருந்து வரப்போகும் பதிலில்தான் என் எதிர்காலமே ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை மட்டும் மறந்துவிடாதே. வரேன் ரேகா'' அவன் போக முயன்றவன் ஒரு வினாடி திரும்பிப் பார்த்து விட்டு,''ரேகா! இன்று என் மனதைத் திறந்து உன்னிடம் சொல்லிவிட்டது சந்தோஷமாயிருக்கு. ஒருக்கால் உனக்கு சம்மதமில்லாமல் போனால் நம்மிருவரின் சிநேகிதத்தை யாராலும் பிரித்துவிட முடியாது என்ற உன் வார்த்தைகளையே ஆழ்ந்து மனதில் பதிப்பித்துக் கொள்கிறேன். போதுமா?''

ரேகா சரியென்று தலையாட்டினாள். கமலன் போய் விட்டான்.

ரேகா வெகுநேரம் சிலையாய் அப்படியே நின்று கொண்டிருந்தாள். அவள் கமலனைத் திருமணம் பண்ணிக் கொள்வதா? ஒரு நாள்கூட அவளுக்கு அந்த எண்ணமே தோன்றியதில்லையே? கமலன் அவளை இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறான் என்று உணர்ந்ததும் ரேகாவுக்கு ஏதோ போல்தான் இருந்தது.

அவள் சிநேகம் என்ற ஒன்றையே பின்பற்றி வந்தாளே யொழிய, இதைப் பற்றி எண்ணியும் பார்த்ததில்லை. ரேகாவின் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வீதியில் அடி யெடுத்து வைத்த கமலனின் மனம் மிகச் சந்தோஷமாய் இருந்தது. அவன் மனமெல்லாம் தோகை விரித்தாடிய மயிலைப் போல இருந்தது. நாற்சந்தியில் நின்று கொண்டு உரக்கத் தன் சந்தோஷத்தை எல்லோருக்கும் சொன்னாற் போல மனம் உல்லாசமாய் இருந்தது. கமலனுக்கு ரேகாவிடம் இருந்த ஒரு பலவீனம் நன்றாய் புரிந்தது. அவன் விமலனின் அதிகாரத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமலிருப்பதாகவும், அவன் ஆணை களுக்குக் கீழ்பட்டுத் தவித்துப் போய்க் கொண்டிருப்ப தாகவும் நடித்தால், ரேகா இரக்கத்தோடு தன் பக்கமாய் வருவாள். தனக்காக என்ன வேண்டுமானாலும் செய் வாள் என்று நம்பினான். கமலன் இந்த ஆதாரத்தை நன்றாய் பிடித்துக்கொண்டான். ரேகாவை அடைய வேண்டுமென்றால் இது ஒன்றே தன் லட்சியம் என்று நம்பினான்.

அன்று மாலையில் விமலன் தன் அறையில் உட் கார்ந்துகொண்டு நாளைக்கு கோர்ட்டில் வாதாட வேண்டிய கேசுகளைப் பார்த்து முக்கியமான பாயிண்டு களைக் குறித்துக்கொண்டிருந்தான்.

கதவைத் தள்ளிக் கொண்டே, ''விமல்'' என்று வந்தான் கமலன்.

''எஸ்.''

''கொஞ்சம் அந்த ஃபைலைக் கீழே வைத்து விட்டு இந்த பக்கமாய் திரும்பு. உன்னை ஒரு கேள்வி கேட் கணும்.''

''காதில் விழுகிறது, சொல்லு.''

கமலன் சொல்லவில்லை.

விமலன் ஃபைலைப் பார்த்துக்கொண்டே ரிவால்விங் சேரில் கிர்ரென்று சுழன்றான்.

"எஸ்" சட்டென்று சொல்லு என்பது போலிருந்தது அவன் தோரணை.

"நேற்றைக்கு என்னிடம் அவ்வளவு சொல்லிவிட்டு அந்த ஒட்டலில் நீ அப்படி ரேகாவை அவமானப்படுத்தியதில் உன் உத்தேசம் என்ன?" விமலன் ஃபைலை விட்டு நிமிர்ந்தான்.

"உனக்கு வெட்கமாயில்லை?" ரோஷமாய் கேட்டான் கமலன்.

விமலனின் புருவங்கள் முடிச்சேறின.

"பெண் என்று கூட பார்க்காமல் அவ்வளவு அவமானப் படுத்தினாயா?"

"என்ன பண்ணினேன் நான்?" விமலன் அப்பாவியாய் கேட்டான்.

"ரேகாவை நான் அந்த ஓட்டலுக்கு அழைத்துச் சென்றிருந்ததை நீ அறிவாய். என்னை பலவந்தமாய் அப்பால் அனுப்பி வைத்துவிட்ட உனக்கு, என் சார்பில் பில்லைத் தரணும் என்ற பொறுப்பு இல்லையா? அந்தப் பெண் தனியாய் முன்பின் அறிமுகமில்லாதவங்களுக்கிடையே என்னவாவாள் என்று நினைத்துப் பார்த்தாயா?"

"என்னவாச்சு?" ஒரு வினாடி கையிலிருந்த ஃபைலை மறந்து போய் ஆர்வத்துடன் கேட்டான்.

"கடவுள் கிருபையால் ஒன்றுமாகலை. ஏதாவது ஆகியிருந்தால்?"

"ஒன்றும் ஆகலையோனோ? உன் ரேகா மிகவும் சாமர்த்தியசாலி என்று நான் அன்றே சொல்லவில்லையா?"

அலட்சியமாய் சொன்னான். விமலன்.

"நீ இவ்வளவு தூரம் விரோதம் வைத்துக்கொண்டு அவமானப்படுத்துகிற அந்தப் பெண் ஒரு நாள் இந்த வீட்டிற்கே இல்லாளாய் வரப்போகிறாள் என்ற விஷயத்தை மறந்து விடாதே."

"நான் ஒருத்தன் இந்த வீட்டில் இருக்கும் போது அது நடக்காத காரியம்."

"பார்த்துக் கொண்டிரு" என்றான் கமலன் சவா லிடுவது போல.

"பார்த்துடறேன்." விமலன் சரேலென்று திரும்பவும் மேஜையை நோக்கித் திருப்பினான் சுழல் நாற்காலியை.

"சாரி டு டிஸ்டர்ப் யூ" கமலன் மன்னிப்பு ஒன்றை அள்ளி வீசிவிட்டுப் போய் விட்டான். தனக்கு முன்னால் இருந்த ஃபைலில் வினாடி நேரம் ரேகாவின் முகம் சவாலிடுவது போல தென்படத் தொடங்கிற்று விமலனுக்கு.

## 15

ரேகாவுக்கு அன்றைக்குத் தபாலில் பெயர் இல்லாமல் ஒரு கடிதம் வந்தது. அதில் கையெழுத்து இல்லை.

"என் மீது நம்பிக்கை இருந்தால், என்னைப் பாாக்க வேண்டும் என்றிருந்தால் ஐந்து மணிக்கு வியாழக் கிழமை மாலையில் பார்க்கில் வந்து சந்திக்கவும்" என்று இருந்தது. கீழே கையெழுத்திற்கு பதில் சந்திரனின் பிறை வரையப்பட்டிருந்தது. அந்தக் கையெழுத்தை அடையாளம் புரிந்துகொண்ட ரேகா சரியாய் அந்தச் சமயத்திற்குப் புறப்பட்டாள்.

"இப்ப எங்கே புறப்பட்டு விட்டாய்?" என்றாள் தாய்.

"வேறெங்கே? அதான் அந்த மகானுபாவர் இருக்கிறானே அங்கேதான் போவாள்" நடு அறையில் உட்கார்ந்து அரிசி பொறுக்கிக் கொண்டிருந்த சுந்தரி பழிப்பதுபோல சொன்னாள். அவள் கமலனை உத்தேசித்துச் சொல்வதாய் உணர்ந்த ரேகா மனதில் ஏற்பட்ட கோபத்தை விழுங்கிக் கொண்டே பேசாமலிருந்தாள்.

"சீக்கிரம் வந்துவிடுவேம்மா" என்றாள் ரேகா.

"வயது வந்த பெண்; இப்படிச் சுற்றினால் ஜென்மத்திலும் கல்யாணம் ஆகாது" சுந்தரி கன்னத்தில் இடித்துக் கொண்டாள்.

போகத் திரும்பிய ரேகா நின்றாள். சாந்தமாய் பதில் சொன்னாள், "போகட்டும் மாமி! இப்ப நீங்க யாரும் எனக்கு கல்யாணம் பண்ணத் தயாராய் உட்கார்ந்திருக்கவில்லையோனோ? என் சுற்றல் மூலமாய் கைவிட்டுப்போன சம்பந்தம் எதுவும் இல்லையே? நீ எனக்கு ஒரு கணவனை கொண்டு வருகிற அன்றைக்கு அப்படியே நீ சொன்னாற் போலவே எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீட்டில் உட்கார்ந்திருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு போய் விட்டாள்.

"வாயைத் திறக்கவே பயமாயிருக்கு. சூடு போட்டாற்போல பேசுகிறாள். அத்துமீறிப் பேசுகிறாள்." ரேகா போன திசையையே பார்த்தபடி கோபத்துடன் சொன்னாள் சுந்தரி.

ரேகா பார்க்கிற்கு வந்தபொழுது குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் புல்வெளியில் உட்கார்ந்து குழந்தைகள் ஆடுவதை

வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். விதம் விதமான பூக்கள் மலர்ந்து மிக அழகாய் இருந்தன. ரேகாவுக்கு அந்த பூக்களும் அந்தக் குழந்தைகளும் ஒரே விதமாய் கலகலப்பாய் புனிதமாய் தென் பட்டார்கள்.

''ரேகா!''

பின்னாலிருந்து கூப்பிட்டது கேட்கவே ரேகா திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். எதிரே அசல் முஸ்லிம் உடைகளுடன் தலையில் குச்சுத் தொப்பியுடன், முகத்தில் கருப்புக் கண்ணாடியுடன் யாரோ நின்றுகொண் டிருந்தார்கள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான்தான். இங்கே மூக்குக் கண்ணாடியைக் கழற்ற முடியாது.''

அக்குரலும் அச்சிரிப்பும் சேகருடையது. ஆனால் ரேகாவால் அடையாளம் கண்டு பிடிக்க முடியாதபடி இருந்தது அவன் உருவம்.

''கொஞ்ச நேரம் அங்கே உட்கார்ந்திருக்கலாம் வா.''

ரேகா அவனைப் பின் தொடர்ந்தாள். இருவரும் ஜன சஞ்சாரமில்லாத இடத்தில் ஒரு சிமென்ட் பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டார்கள்.

''எவ்வளவு நாளைக்கு இந்த அஞ்ஞாத வாசம்?'' என்றாள் ரேகா.

''உயிரோடிருக்கிற வரைக்கும்'' சிரித்தான் சேகர்.

''சிரிப்பாய் இருக்கிறதா உனக்கு?''

''சிரித்து வாழக் கற்றுக் கொண்டிருக்கிறேன் ரேகா.''

''ஆமாம், நீ சிரிக்கிறாய். அம்மாவையும் என்னையும் அழ வைத்துவிட்டு! அப்படித்தானே!''

சேகரின் முகத்தில் சிரிப்பு மாயமாயிற்று. கெஞ்சினாற்போல சொன்னான், "இருக்கிற இந்தக் கொஞ்ச நேரத்தில் என்னோடு சண்டை போடாதேயேன் ரேகா. என் மனதைப் புண்படுத்தும் வார்த்தைகள் எதையும் சொல்லாதே." ரேகாவின் மனம் இளகிவிட்டது. "நீ எங்கேதான் இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"சொல்லக்கூடாது. அதெல்லாம் டாப் சீக்ரெட்."

"என்னிடம் கூட சொல்லக்கூடாதா?"

"ஊஹூம்,"

"நாங்களேகூட நினைத்தும் பார்க்கக்கூடாது. அவ்வளவு ரகசியம்."

இருவருக்குமிடையே நிசப்தம் ஏற்பட்டது. அந்த நிசப்தத்தைச் சிதறடித்தபடி சொன்னாள் ரேகா, "அம்மா உன்னைப் பார்க்கணும்னு ரொம்ப தவிச்சுப் போயிட்டிருக்காங்க."

"அடுத்த தடவை அம்மாவையும் உன்னோடு கூட்டிக்கொண்டு வா."

"நீயே இந்த தடவை வீட்டுக்கு வந்தால் என்ன?"

"வர முடியாது. நானே வீட்டுக்கு வரணுமென்றால் நீங்கள் அந்த வீட்டை மாற்றிவிட்டு நான் சொல்கிற வேறு இடத்தில் வீடு எடுத்துக்கொள்ளணும்."

ரேகா பயந்து போய் தம்பியின் கையைப் பிடித்துக் கொண்டாள். "சேகர்! நீ பேசுவதைக் கேட்டால் எனக்கென்னவோ பயமாயிருக்கு. நீ ஏதோ போகக் கூடாத வழியில் போய்க்கொண்டிருப்பதாய் தோன்று கிறது எனக்கு. என் பேச்சைக் கேளு. போலீசாரிடம் பிடிபட்டுப் போய்விடு."

''அது கனவிலும் நடக்காது. முடியாது. துரதிர்ஷ்டமானவர்களுக்கு எங்கே இருந்தாலும் வாழ்க்கை ஒன்று தான். தைரியமும் துணிச்சலும் வேண்டுமே தவிர, இந்த உலகத்தில் மனிதனால் போகக்கூடாத வழி என்று எதுவும் இல்லை. ஆனாலும் ஒரு தடவை திருடனாய் முத்திரை குத்தப்பட்டு, விரல் சுட்டிக்காட்டப்பட்டு விட்ட பிறகு, திரும்பவும் அதே சமூகத்திற்கு வந்து அந்த முத்திரையை அழிப்பது என்பது சாத்தியப்படாது. நம் சமூகத்தைச் சேர்ந்தவங்களுக்கு அவமானப்படுத்த எளிதாய் வருமே தவிர, அரவணைப்பது வராது. அது எனக்கு நன்றாய் தெரியும். நான் கஷ்டப்பட்டாலும் உங்களை சுகப்படுத்த முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இங்கே கிடைத்திருக்கிறது.''

ரேகா பெருமூச்சு விட்டாள். சேகரைப் பார்த்தோம் என்ற சந்தோஷம் சற்றும் ஏற்படவில்லை ரேகாவுக்கு. அவன் தன்னைவிட்டு எங்கோ தொலை தூரத்திற்குப் போய்கொண்டிருப்பது போல இதயம் கனத்தது. அவள் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது, பணத்தை எடுத்துத் தந்த சேகரின் கையை வேகமாய் தள்ளி விட்டாள். முகத்தைத் திருப்பிக்கொண்டு தொலைவில் பார்க்கத் தொடங்கினாள்.

''ரேகா! இருக்கிற கொஞ்ச நேரத்திலும் என்னோடு சண்டை போட வேண்டாம் என்று சொல்லவில்லையா?''

''நீ மொதல்ல இந்தப் பணம் ஏது என்று சொல்லு?''

''ஏதாவது! என் உழைப்பு. நான் இரவும் பகலுமாய் பயமில்லாமல், வெறுப்பைக் காட்டாமல் சிரமப்பட்டதற்கு எனக்குக் கிடைத்த பலன்.''

''சிரமம்! ரொம்பப் பெரிய சிரமம்! இதைச் சொல்லிக்க வெட்கமாயில்லை உனக்கு? பிறரைக் கொள்ளை

யடித்துச் சாப்பிடுகிற சிரமந்தானே உன்னுடைய சிரமம்? இந்தப் பணம் யாருடைய கண்ணீரோ? யாருடைய உசிரோ?"

"ரேகா.''

"சிரமப்படு. உனக்காவும் உன் சுகத்திற்காகவும் எவ்வளவு வேண்டுமானாலும் சிரமப்பட்டுக் கொள். என்ன வேண்டுமானாலும் செய்து கொள். ஆனால் அம்மாவுக்கும் எனக்கும் மட்டும் இந்தப் பாவக் காசில் ஒரு பைசாகூட வேண்டாம். இப்படி மற்றவங்க சிரமத்தைத் தின்று வயிற்றை நிரப்பிக் கொள்வதைவிட பட்டினி இருந்துச் சாவதே மேல்.''

"ரேகா! ப்ளீஸ்!'' சேகர் ரேகாவின் கையைப் பிடித்துக் கொண்டான்.

கையை விடுவித்துக் கொண்டு ஆவேசத்துடன் ரோஷமாய் சொன்னாள் அவள்—"கடைசி தடவையாய் கேட்கிறேன். என் மீதும் அம்மா மீதும் உனக்கு ஏதாவது கொஞ்சமாவது பாசம் இருந்தால் நீ என்னோடு வந்து போலீசாரிடம் பிடிபட்டுப் போய் விடு. நடந்ததை யெல்லாம் சொல்லி, நம்ப குடும்ப நிலையைப் பற்றி விவரித்துச் சொன்னால் யாருக்குமே இரக்கம் ஏற்படாமல் போகாது.''

சேகர் பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னான் — "உன் மூஞ்சி! உனக்கு உலகமே தெரியாது. என்ன சொன்னாலும் புரியாதுகூட.''

"வரப்போகிறாயா இல்லையா?'' எழுந்து நின்று கொண்டே கேட்டாள்.

சேகர் ரேகாவின் கையைப் பிடித்து பலவந்தமாய் உட்கார வைத்தான்.

குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டான், "ரேகா! ஒரே வார்த்தையில் சொல்லி விடு. உனக்கு நான்

உயிரோடிருக்கணும் என்றிருக்கிறதா, செத்துப் போய் விடணும்னு இருக்கா?''

''இதென்ன கேள்வி?''

''நீ முதலில் பதில் சொல்லு.''

''உனக்குத் தெரியாதா?''

''தெரியும். நான் உயிரோடிருக்கணும் என்றுதான் விரும்புவாய்.''

''நிஜந்தான். இப்படி ஆபத்தோடு விளையாடிக் கொண்டு இல்லை. சுகமாய், அமைதியாய், நிம்மதியாய் வாழணும் என்றுதான் நினைப்பேன்.''

''நிஜந்தான், நான் மறுக்கவில்லை. ஆனால் நான் இறங்கியிருப்பது ஒரு புதை மணலுக்குள். இதிலிருந்து என்னை யாராலுமே மேலே தூக்கி எடுத்துவிட முடியாது. யாராவது காப்பாற்ற வேண்டும் என்று முயற்சி பண்ணுவது போல சந்தேகம் ஏற்பட்டாலும் போதும், என் உயிர் என் உடம்பில் இருக்காது. 'எங்கேயாவது சுகமாய் வாழ்ந்து கொண்டிரு, அது போதும்' என்று என்னை நீங்கள் விட்டுவிட்டால் என்னைக் காப்பாற்றினவங்க ஆவீங்க. இதைவிட என்னால் ஒன்றும் சொல்ல முடியாது, என்னை எதுவும் கேட்காதே இதற்குமேல்.''

ரேகா சேகரின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். இருபது வயதுகூட நிரம்பாத அம்முகத்தில் சொல்ல முடியாத வேதனையும், செய்வதறியாத தன்மையும், கோபமும் துக்கமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. ஆனாலும் அவைகளை அடக்கிக் கொண்டிருந்தான்.

சேகர் ரேகாவின் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பையை எடுத்து, அதற்குள் பணத்தை வைத்து மூடி திரும்பவும் அவள் தோளிலேயே தொங்க விட்டான்.

அவன் குரல் வேதனையாய் ஒலித்தது— "இங்கே நான் ஒருத்தன் மட்டுமே இல்லை. என்னைப் போன்றவங்க நிறைய பேர் இருக்காங்க. எல்லோரும் அண்ணன் தம்பிகளைப் போல இருக்கிறோம். சேர்ந்து பாடுபட்டுச் சேர்ந்து பலனை அனுபவிக்கிறோம். நீ இருக்கிற சமூகத்தில் மட்டும் எல்லோரும் நல்ல ஒழுக்கங்களுடன்தான் இருக்காங்களா ரேகா? எங்களுக்கும் அவங்களுக்கும் ஒன்றுதான் வித்தியாசம். எங்களுக்கு வேஷம் கிடையாது. அவங்களுக்கு இருக்கிறது, அவ்வளவுதான்."

ரேகா திக்பிரம்மை அடைந்தவளாய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இப்படிப் பேசுவது அவள் தம்பி சேகர்தானா? எவ்வளவு பேசுகிறான்.

கையிலிருந்த வாட்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான் சேகர்,

"இன்னும் பத்து நிமிஷம் டயம் இருக்கிறது. ஆங், மறந்து விட்டேனே. மாமாவும் மாமியும் உங்களிருவரையும் ஒன்றும் சொல்லாமலிருந்தால் சரி, இல்லாவிட்டால் அம்மாவும் நீயும் வேறு வீடு பார்த்துக் கொண்டு விடுங்கள். பணத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப் பட வேண்டாம்."

"பார்க்கலாம். ஒப்புக்கொண்டால்..." என்றாள் ரேகா திகிலோடு.

"நீ முயற்சி பண்ணு. முயற்சி பண்ணினால் கண்டிப்பாய் ஒப்புக் கொள்வாங்க."

ரேகா பதில் பேசவில்லை.

சேகர் ரேகாவின் புடவையைப் பார்த்துச் சொன்னான், "நீ இன்னும் நல்ல உடைகளை வாங்கிக்

கொள் ரேகா. இந்த காலத்தில் பணம் எப்படி வந்தது என்ற கேள்வியைப் பற்றி யாருக்குமே அக்கறை யில்லை. ஆள் எப்படி மதிப்பாய் இருக்கிறான், எவ்வளவு விலையுயர்ந்த உடைகளை உடுத்திக் கொண்டிருக்கிறான் என்பதற்குதான் மதிப்புக் கொடுக்கிறாங்க.

சேகர் திரும்பவும் நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.

''நேரமாயிடுத்து. இன்னும் ஐந்து நிமிஷத்தில் பச்சை வேன் ஒன்று வந்து நிற்கும். அது வந்ததுமே நான் போய் விடுவேன். கொஞ்ச நேரம் உன் கையை நான் இப்படியே பிடித்துக் கொண்டிருக்கணும் போலிருக்கு ரேகா'' என்றான்.

ரேகாகூட சேகரின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டாள். மனமெல்லாம் குழப்பமாகவும் திகிலாகவும் ஆகிவிட்டது. அந்தச் சமயத்தில் ரேகாவுக்குத் தோன்றிற்று, எந்தக் காரியமாயிருந்தாலும் சரி, அது நல்லதாகவும் இருக்கட்டும், கெட்டதாகவும் இருக்கட்டும், மனிதனுக்கு உயிர்கொடுப்பதாகவோ அல்லது உயிரை எடுப்பதாகவோ கூட இருக்கட்டும், எந்த வழியாக வேண்டுமானாலும் இருக்கட்டும், அதை இருவரும் சேர்ந்து செய்து, ஒருக்கால் சேகர் அந்த புதை மணலிலிருந்து மீண்டு வர முடியாமல் போனால் தானே அந்த புதை மணலுக்குள் இறங்கிவிட்டால்? சேகரின் கையைப் பிடித்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்து போயிருந்த ரேகாவுக்கு தொலைவில் பரிச்சியமான உருவம் ஏதோ தென்பட்டது. யாரது? நன்றாய் கவனித்தாள், சந்தேகமில்லை, விமலன்தான். அவனே தான்! ரஞ்சிதாவைப் பார்க்கிலிருந்த ஊஞ்சலில் உட்கார

வைத்துவிட்டு, லேசாய் சிரித்துக்கொண்டே ஊஞ்சலை ஆட்டிக்கொண்டே இந்த பக்கமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ரேகா நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள். எவ்வளவு நேரமாய் அவன் அவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தானோ தெரியாது. அவனைப் பார்த்தால் வெகுநேரமாய் பார்த்துக் கொண்டிருந்தாற் போலவே தோன்றிற்று.

சேகர் சொல்லிக்கொண்டிருந்தான். ''ரேகா! சில சமயம் எனக்கு எவ்வளவு அழுகை வரும் தெரியுமா? நான் கனவிலும் ஊகித்துப் பாத்திராத வாழ்க்கையில் போய் விழுந்து விட்டேன். சில சமயம் இரவெல்லாம் தூக்கம் வராது. அப்பொழுதே ஓடி வந்து அம்மாவின் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டு முன் போல அப்பாவியாய் இருந்துவிட வேண்டும் போலிருக் கும். கூண்டுக்குள் குருவியாய் என் உயிர் துடிதுடித்துக் கொண்டிருக்கும். நீங்கள் எனக்கு இருக்கீங்க என்ற நினைவு ஒன்றுதான் எனக்கு பலத்தைத் தந்து கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் எப்பொழுதோ ஏதாவது ரயிலடியில் தலையை வைத்திருப்பேன்.''

சேகரின் குரல், அவன் அதைச் சொன்ன விதம், தீனம், வேதனை இவ்வளவும் சேர்ந்து ரேகா ஒரு வினாடி விமலனைப் பற்றியே மறந்து போய் சேகரைப் பைத்தியம் பிடித்தவளைப் போல பார்க்கும்படியாய்ச் செய்துவிட்டன. ''சேகர் உனக்கு நாங்கள் இருக் கிறோம், எங்களுக்கு நீ இருக்கிறாய். இந்த விஷயத்தைக் கனவிலும் மறந்து போய்விடாதே நீ'' என்று எச்சரித் தாள்.

தொலைவிலிருந்து கார் ஹாரன் சப்தம் கேட்டது. சேகர் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

பச்சை நிறக் கார் இந்தப் பக்கமாகவே வந்து கொண்டிருந்தது.

சேகர் ரேகாவின் கையை அழுத்திவிட்டு விடப் பிடிக்காதவனைப் போல விட்டான். எழுந்து நின்று கொண்டு மளமளவென்று சொன்னான், ''எப்பொழுதாவது இப்படி வந்து கொண்டிருப்பேன். ஒவ்வொரு தடவைகளும் கடிதம் போட முடியாது. எந்த வழியிலாவது செய்தி சொல்லியனுப்புகிறேன். நான் வரச் சொன்ன இடத்திற்கு நீ வா. நீ வராவிட்டால் நான் மிகவும் வருத்தப்படுவேன். அம்மாவிடம் சொல்லு நான் மிகச் சந்தோஷமாய் சுகமாய் இருக்கேன்னு, இதையெல்லாம் சொல்லாதே. சொல்லமாட்டாயோனோ? எங்கே சத்தியம் போடு.'' கையை நீட்டிக் கேட்டான்.

ரேகா பதில் சொல்ல முடியாதவளாய் பார்த்தாள். சேகர் தாமதத்தைப் பொறுக்கமாட்டாதவனாய், தானே ரேகாவின் கையை இழுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டு, ''அம்மாவிடம் சொன்னாயானால் நான் செத்துப் போய் விட்டதற்குச் சமம். என் மேல் ஆணை'' என்றான்.

ரேகா 'சொல்லமாட்டேன்' என்று தலையாட்டினாள்.

''நிஜந்தானே?''

''நிஜந்தான்.''

''என்னைப் பற்றி ஏதேதோ யோசித்து உன் மனதைக் கெடுத்துக் கொள்ள மாட்டாயே?''

ரேகா கண்ணீரை அடக்கிக்கொண்டே 'மாட்டேன்' என்று தலையசைத்தாள்.

''நான் வரேன்.''

''திரும்பவும் ஒரு முறை வா.''

''கண்டிப்பாய் முயற்சி பண்றேன்.''

சேகர் ஓட்டமும் நடையுமாய் வேனை நோக்கிப் போனான்.

வேனுக்குள் ஏறிக் கொள்வதற்கு முன்னால் நின்று ரேகாவை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு கையை ஆட்டினான். கண்ணீர் திரையிட்டக் கண்களோடு ரேகாவும் கையை ஆட்டினாள்.

சேகர் ஏறிக் கொண்டதுமே வேன் புறப்பட்டு விட்டது.

ரேகாவுக்குக் கண்ணீரை அடக்கிக் கொள்ள முடிய வில்லை. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே என்றுமே கடவுளை பிரார்த்தனைப் பண்ணியிராத ரேகா, 'தெய்வமே! அவனுக்கு நீதான் துணை!' என்றெண்ணிக் கொள்ளத் தொடங்கினாள்.

ரேகா அங்கிருந்து கேட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கையில் விமலன்கூட ரஞ்சிதாவின் கையை பிடித்துக்கொண்டே அவளைப் பின்தொடர்ந்து அந்த பக்கமாய் வந்தான். அவனைப் பார்த்தும் பார்க்காதது போல முகத்தைத் திருப்பிக்கொண்டாள் ரேகா.

"க்ஷேமமா?" மெனக்கெட்டுக் கொண்டு விசாரித் தான் விமலன்.

"ஆங்! உங்கள் தயவால்!" விழிப்பாய், கேலியாய் பதிலளித்தாள்.

விமலன் அந்தப் பழிப்பைப் பொருட்படுத்தாமல்— "தனியாய்தான் வந்தீங்களா?" என்று கேட்டான் மிக மரியாதையாய்.

ரேகாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. அவன் பார்த்தான். பார்த்தும் ஏன் கேட்க வேண்டும்? அவள் என்ன பதில் சொல்கிறாள் என்று பார்ப்பதற் காகவா?

''இல்லை, ஒரு ஃபிரெண்டோடு சேர்ந்து வந்தேன்.''

''சேர்ந்து வந்தீங்களா? சந்திக்க வந்தீங்களா?''

விமலனின் புருவங்கள் குறும்பாய் ஏறின.

''எதுவாயிருந்தாலும் உங்களுக்குச் சம்பந்தமில்லா லாதது.'' வெடுக்கென்று சொல்லி விட்டு ரேகா நடக்கத் தொடங்கினாள்.

''லிப்ட் வேணுமா? நான் காரில் வந்திருக்கிறேன். கொண்டு போய் விட்டுவிடுகிறேன்.''

''தாங்க்ஸ் தேவையில்லை.''

அவன் உதடுகள் அலட்சியமாய் சிரித்தன.

''ஏன், சற்று முன் போன நண்பன் எங்கேயாவது பார்த்து விடப்போகிறானே என்ற பயமா?''

ரேகா கோபமாய் அவனைப் பார்த்தாள்.

''யார் அந்த அதிர்ஷ்டக்காரன்? நம்ப மதத்தைச் சேர்ந்தவனைப் போல இல்லையே?'' ஏளனமாய் கேட்டான்.

''ஆமாம். உங்கள் மதத்தைச் சேர்ந்தவன் மட்டும் இல்லை.''

பதிலை இரு பொருள்பட ஏளனமாய் வீசியெறிந்தாள்.

''ஆமாம். எனக்குத் தெரியும். பணத்தின் மீது ஆசை பட்டு, பணத்துக்காக எந்தக் காரியத்தையும் பண்ணத் துணிந்தவங்க எல்லோருடையதும் ஒரே மதந்தான். அந்த மதத்தைச் சேர்ந்தவன் அல்ல நான். உண்மையை சொல்லு, யார் அவன்? அவனுக்கும் உனக்கு எப்படிப் பட்ட சம்பந்தம்?'' உலுக்கி எடுப்பது போல கேட்டான்.

ஒரு வினாடி வாயடைத்துப் போனவளாய் பார்த்தாலும் உடனே சமாளித்துக் கொண்டு ரேகா இருமடங்கு அலட்சியமாய் சொன்னாள்.

''உங்களுக்கு சம்பந்தப்படாத விஷயம். வேலை வெட்டி இல்லாமல், சமயோஜிதம் தெரியாமல் பேசுகிறவங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய வேலை எனக்கு இல்லை.''

கோபம் தாங்கமாட்டாதவனாய் சொன்னான் விமலன். ''கமலன், இவன், இன்னும் எவ்வளவு பேர் இருக்காங்க உன் உள்ளங்கைக்குள்? எவ்வளவு பேர் வேண்டும் உனக்கு?'' அவள் செய்த ஏளனத்திற்கும் அலட்சியத்திற்கும் பதில் சொல்ல முடியாதவளாய் சலனமொடுங்கிப்போய் கண்கள் அகல விரிய அவனையே பார்த்தபடி அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

''நீ நிஜமாய் கமலனை கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று மனப்பூர்வமாய் எண்ணிக் கொண்டிருந்தால் இந்தப் பழைய சிநேகங்களுக்கு விடை கொடுத்து விட்டிருப்பாய். இதைக்கொண்டு உனக்கு வேண்டியது கமலன் இல்லை என்றும், அவன் பணம்தான் என்றும் தெளிவாய் புரிகிறது. இந்த உண்மையை அந்த முட்டாளின் மூளையில் எப்படிப் பதியவைப்பது என்று எனக்குப் புரியவில்லை. இன்னொரு தடவை கடைசியாய் கேட்கிறேன். உன்னிடமிருந்து கமலனை விடுதலை பண்ணுவதற்கு பிரதிபலனாய் உனக்கு என்ன வேண்டுமோ சொல்லு. நீ எதைக் கேட்டாலும் மறுபேச்சில்லாமல் தருவதற்கு நான் சித்தமாய் இருக்கிறேன்.''

''என்ன வேண்டுமானாலும் தருவீங்களா?''

விமலனுக்கு அந்தச் சமயத்தில் ரேகா தன்னால் தர முடியாத எதையோதான் கேட்கப் போகிறாள் என்று தோன்றிற்று.

"பணத்தால் வாங்க முடிந்தது எதுவாயிருந்தாலும் சரி, எவ்வளவானாலும் சரி."

ரேகா அவனைப் பார்த்தாள். கோபத்தால் பள பளத்த கண்களோடு கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும் கேலியையும் அவன் முகத்தில் விட்டெறிவது போல சொன்னாள்— "உங்களுக்கு இவ்வளவு சிரமந்தான் எதற்கு? உங் களிடம் அன்றைக்கே சொல்லி விட்டேனே, எனக்குத் தேவையானது கமலனின் சிநேகந்தானே தவிர நீங்கள் தரும் பணம் இல்லை என்று! இந்த உண்மையை உங்கள் மூளையில் எப்படி திணிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. எவ்வளவு தடவைதான் கேட்பீங்க. தடவை சொன்னதுமே கிரகித்துக் கொள்ளாத நீங்களும் ஒரு லாயரா? கடைசி தடவையாய் சொல் றேன், நீங்கள் எவ்வளவு தடவை கேட்டாலும் என் பதில் இதேதான். உங்களால் முடிந்தால் உங்கள் தம்பியின் மனதை என்னிடமிருந்து திருப்பிக் கொள்ளுங் கள். அது மட்டுமில்லை, எவருமே என் பின்னால் வந்து சுற்ற வேண்டாம். என்னைத் தொந்தரவு படுத்த வேண்டாம். இன்னொரு தடவை இப்படி என் பின்னாடி வந்து என்னோடு பேசவேண்டும் என்று முயற்சி பண்ணினால் 'ரோட் சைட் ரோமியோ' என்று சொல்லி நியூசென்ஸின் கீழ் போலீஸ் கம்ளைண்ட் தந்து விடுவேன். உங்களுக்குக் கொஞ்சமாவது புத்தியிருந் தால், அப்படி என்னால் அவமானப்படாமல் ஜாக்கிரதை யாய் இருங்கள். புத்திசாலித்தனம் உங்கள் ஒருவருக்கு தான் என்றில்லை, எல்லோருக்குமே இருக்கிறது. வரேன்." என்று சொல்லி விட்டு ரேகா திரும்பிப்பாராமல் மளமளவென்று போய் விட்டாள்.

விமலன் சிலையாய் நின்று விட்டான். அவனிடம் இவ்வளவு தூரம் முகத்தில் அறைந்தாற்போல பேசியவர் கள் இதுவரை யாரும் இல்லை.

'உங்களால் முடிந்தால் உங்கள் தம்பியின் மனதை என்னிடமிருந்து திருப்பிக் கொள்ளுங்கள்' — என்ற ரேகாவின் வார்த்தைகள் செவிகளில் சுழன்று வந்து கொண்டிருந்தன, என்ன தைரியம்! என்ன திமிர்!

கமலன் எழுதியிருக்கும் கடிதங்கள் தன்னிடம் இருக்கின்றன என்ற தைரியந்தானே! அவன் தன் உள்ளங்கைக்குள் இருக்கிறான் என்ற அகங்காரந் தானே!

விமலனின் கண்கள் கோபத்தால் சிவந்தன.

கமலனுக்காக இல்லாவிட்டாலும் இன்றைக்கு நிகழ்ந்த இந்த அவமானத்திற்காவது அந்தப் பெண்ணை பழிவாங்க வேண்டும். மென்மையான அன்பு இதயங் கொண்ட அவன் மனதைப் புண்படுத்தி விட்டாள். அதற்கு இரு மடங்காய் ரேகாவைதான் புண்படுத்தி விடவேண்டும். அப்பொழுதுதான் அவன் அவமானத் தீ குளிரும். கோபத்தாலும் அவமானத்தாலும் நடுங்கிப் போன விமலன், ரேகாவின்பால் பகைமை கொண்ட பாம்பாய் சீற்றமடைந்தான்.

## 16

அன்றிரவு ரேகாவின் கனவில் சேகர் ஓடிக்கொண்டி ருந்தான், அவளும் அவனைப் பின்தொடர்ந்து ''சேகர்! சேகர்!'' என்று கத்திக் கொண்டே ஓடிக்கொண்டிருக் கிறாள். ஆனால் சேகர் நிற்கவில்லை. அந்த வேகத்தை அவளாலும் பிடிக்க முடியவில்லை.

சேகர் துப்பாக்கிகளை ஏந்திக் கொண்டு வரிசையாய் நின்று கொண்டிருந்த மனிதர்களுக்கிடையே ஓடிக் கொண்டிருந்தாள்,

''சேகர், நில் போகாதே, நின்று விடு, இங்கே பார்,'' தொண்டைக் கிழிய, பைத்தியம் பிடித்தவளைப் போல கத்திக் கொண்டிருக்கிறாள் அவள்.

திடீரென்று யாரோ கத்தியை வீசினார்கள். துப்பாக்கிகள் முழங்கின.

ஓடிக் கொண்டிருந்த சேகர் வயிற்றைப் பிடித்துக் கொண்டு தரையில் சுருண்டு விழுந்து பந்தாய் உருண்டு கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றிலும் சிவந்த ரத்தம் கால்வாய் கட்டிக் கொண்டிருக்கிறது.

வீலென்று அலறுகிறாள் அவள்.

''ரேகா! ரேகா! என்னது?'' தாய் எழுந்து வந்து ரேகாவின் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

''அம்மா! அம்மா!'' ஆயாசத்துடன் எழுந்து உட்கார்ந்து கொண்டாள் ரேகா.

''என்ன, கெட்டக் கனவு ஏதாவது வந்ததா?''

ரேகா கண்களை கசக்கிக் கொண்டே'' ஆமாம்மா.'

சோர்வுடன் சொன்னாள்.

''என்னது?''

ரேகா சொல்லவில்லை. தாயும் பலவந்தம் பண்ண வில்லை. ரேகா திரும்பிப் படுத்துக் கொண்டாள். சேகர் சேகர்! மனம் இன்னும் குமுறிக் கொண்டேயிருந்தது கண்ணீர் மடை திறந்தாற் போல வெளிவந்துக்கொண் டிருந்தது. கைகளைக் கூப்பிக் கடவுளை பிரார்த்தனை பண்ணிக்கொண்டாள்.

''தெய்வமே! அவனுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள். கத்தியும் ஜெயிலும் போன்ற வாழ்க்கையாய் இருந்தாலும் நீ மனம் வைத்தால் புஷ்ப பல்லாக்காய் க்ஷேமமாகவே கழிந்துவிடும். கஷ்டங்கள் ஏதாவது இருந்தால் அதை எனக்கே கொடுத்து விடு. நான் அனுபவிக்கிறேன்'' என்று சிறுபெண்ணைப்போல வேண்டிக் கொள்ளத் தொடங்கினாள்.

மறுநாள் எழுந்திருக்கும் பொழுதே மிகத் தாமதமாகி விட்டது. ரேகா எழுந்து வந்தபொது சங்கரன் கட்டிலில் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். ரேகா நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டாள்.

''அம்மாடா! மாமா வந்து விட்டார். சேகரின் விஷயத்தையெல்லாம் சொல்லிவிட்டு ஏதாவது ஒரு வழியை யோசிக்க வேண்டும். தேவையானால் மாமாவோடு சேர்ந்து போய் ஏதாவது போலீஸ் ஆபீசரின் காலில் விழுந்து சேகரை விடுதலை பண்ணும் வழியைப் பார்க்க வேண்டும்'' என்றெண்ணிக் கொண்டாள்.

சுந்தரி நாத்தியின் அறைக்கு வந்து,''ஒரு நூற்று ரூபாய் இருந்தால் கொடு! அவர் திரும்பி வந்ததுமே கோவிலில் அபிஷேகம் பண்ணுவதாய் வேண்டிக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''நூறா? என்னிடமா?'' காயத்ரி திகைப்படைந்தவளாய் பார்த்தாள்.

''ஏன் ஒன்றும் தெரியாதவளைப்போல பேசுகிறாய்? உனக்கு மகள் இருக்கிறாள்! அவளுக்கு சம்பாதிக்கிற சாமர்த்தியம் இருக்கிறது, உன்னிடம் நூறு ரூபாய்கூட இல்லைன்னால் நான் நம்பி விடுவேன்னு நினைக்கிறாயா?''

நடந்த விஷயம் என்னவென்றால், நேற்றிரவு எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது அவள்

காவின் பையைக் குடைந்தாள். அதில் கற்றையாய் நோட்டுகள் தென்பட்டன. அதைப் பார்த்ததுமே அவளுக்குக் கோவிலில் அபிஷேகம் பண்ண வேண்டும் என்று தோன்றி விட்டது. அதோடு சங்கரனும்கூட வந்து விட்டார். அதனால் பணம் கேட்டாள். காயத்ரிக்கு ஒன்றும் தெரியாது.

"என்னிடம் ஏது அண்ணி?" என்றாள் பயந்து போய்.

சுந்தரி தலை பின்னிக்கொண்டிருந்த ரேகாவைப் பார்த்து—"ஒன்றுமேவா இல்லை?" என்றாள்.

"இரு மாமி" அதற்குள் விஷயத்தை ஊகித்துக் கொண்டுவிட்ட ரேகா டபாய்த்து லாபமில்லை என்று ஒப்புக்கொண்டுவிட்டாள்.

அவள் உள்ளே போய் கைப்பையைத் திறந்து அதில் சேகர் தன்னிடம் தந்த பணத்தைத் தொடாமல், நேற்று தான் போஸ்ட் ஆபீசிலிருந்து தாய்க்காக எடுத்து வந்த நூறு ருபாய்களையும் கொண்டுவந்து மாமியிடம் தந்தாள்.

"இன்னொரு நூறு ரூபாய் கொடு" கண்டிப்பாய் கேட்டாள் சுந்தரி.

"எதுக்கு மாமி?"

"தண்ணீரில் கரைத்துக் குடிப்பதற்கு! எதுக்காம் எதுக்கு? ஆயிரம் கேள்விகள் கேட்பாய். தேவையாய் இருந்ததால்தானே கேட்கிறேன், எனக்கொன்றும் சும்மா தந்து விடவேண்டாம். நான் ஒன்றும் உன் பணத்தால் சினிமாவுக்கும் டிராமாவுக்கும் போய்விடப் போறதில்லை."

"இதற்குமேல் என்னால் தரமுடியாது மாமி! எனக்கு பணம் வேண்டியிருக்கு." ரேகா பொறுமையை வரவழைத்துக்கொண்டு சாந்தமாய் பதிலளித்தாள்.

சேகர் தந்த பணத்தை அவனிடமே திருப்பித் தந்து விட்டு, இது நல்லதில்லை என்றும் இப்படி நீ கஷ்டப்பட்டாலும் எங்களுக்குப் பிரயோஜனம் இல்லை என்றும், எங்களால் சுகப்பட்டுவிட முடியாது என்றும் அழுத்தந் திருத்தமாய் சொல்லிவிடவேண்டும் என்றும் நேற்றிரவே தீர்மானித்துக் கொண்டு விட்டாள்.

"பார்த்தாயோனோ? உன் மகள் இவ்வளவு கச்சிதமாய் சொல்லுகிறாள் பார்! இந்த சாமர்த்தியமும் துணிச்சலும் எனக்கு இருந்திருந்தால் இவ்வளவு பணத்தை உங்கள் மூஞ்சியில் விட்டெறிந்திருப்பேன். பணம் இருக்கும்போது கடனாய் தரச் சொன்னால் இவ்வளவு ரகளையா?" என்றாள் காயத்ரியைப் பார்த்து.

காயத்ரி எழுந்து வந்து ரேகாவின் கையிலிருந்த கைப்பையை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு சுந்தரியின் கையில் தந்து—"இதில் எவ்வளவு பணம் இருக்கோ அத்தனையும் உன்னோடதுதான் அண்ணி, எடுத்துக் கொள்" என்றாள்.

"அம்மா" ரேகா கலக்கத்தோடு தடுத்தபடி கத்தினாள்.

"நீ வாயை மூடிக் கொண்டிரு."

"உனக்குத் தெரியாதும்மா இந்தப் பணம்..."

"வாயை மூடிக் கொண்டிருக்கச் சொன்னேனா இல்லையா?"

சுந்தரி பையை எடுத்துக் கொண்டு ரேகாவை கர்வமாய் பார்த்து விட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

"ஏது அந்தப் பணம் உனக்கு?" காயத்ரி மகளைக் கேட்டாள்.

"மாமியின் கையில் போய்ச் சேர்ந்து விட்ட பிறகு இனி சொல்ல வேண்டியதுகூட தேவையில்லாதது."

"இப்படிப்பட்ட வாழ்வு வாழ்வதைவிட எதிலாவது விழுந்து சாகலாமே ரேகா! சுவாமி உன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடக்கூடிய பலத்தை எனக்கு எப்பொழுது தரப்போகிறாரோ?"

"ஏம்மா சும்மா இதையே சொல்லுகிறாய்? நான் என்ன பண்ணக்கூடாத காரியத்தைப் பண்ணிவிட்டேன்? எனக்கு எந்தப் பக்கத்திலும் வழியே கிடைக்காதபொழுது, நீ பண்ண நினைத்துக்கொண்டிருக்கிற காரியத்தையே பண்ணி விடுகிறேன்" துக்கத்தால் தொண்டை அடைக்க அழுகையை அடக்கி கொண்டே சொன்னாள் ரேகா.

சுந்தரி கோவிலில் அபிஷேகம் செய்தாள். மறுநாள் ஆர்ப்பாட்டமாய் கௌரி பூஜை பண்ணி, பூஜையைப் பார்க்க வந்தவர்களுக்கெல்லாம் நன்றாய் சாப்பாடு போட்டு தாம்பூலத்தில் பழம், பூ, ரவிக்கை வைத்துக் கொடுத்தாள். எல்லோரும் சுந்தரியின் பெரிய கையையும் தாராளத்தையும் புகழ்ந்து வாழ்த்திவிட்டுப் போனார்கள்.

ரேகா சோர்ந்து போய் ஜன்னலுக்கருகில் முழங்கால்களுக்கிடையே தலையைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அந்தப் பணத்திற்காக சேகர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பானோ? அவன் உயிருக்கு துணிந்து வேலை பண்ணி கொண்டு வந்து கொடுத்த பணம் இப்படிச் செலவாகி விட்டது. உண்மையைச் சொல்லப்போனால் அது ஒருவிதத்தில் பாவப் பணந்தான். அந்த பணத்தால் செய்கிற இந்த பூஜைகள் தெய்வத்திற்குப் போய்ச் சேருமா?

இருந்த ஒரு டியூஷனும் போய்விட்டதால் ரேகாவுக்கு உயிரே போய்விட்டாற் போல இருந்தது. வேறு

இடங்களில் முயன்றும் கிடைக்கவில்லை. யார் வீட்டுப் படியில் ஏறினாலும் ஏளனமாய் பேசினார்கள். யாரிடம் போய் எது கேட்டாலும் புழுவைப் பார்ப்பது போல ஏளனமாய் பார்த்தார்கள். கமலனைப் பார்த்தால் தனக்கு ஏதாவது உத்யோகம், ஊஹூம், உத்யோகம் கூட இல்லை, ஏதாவது வயிற்றுப் பிழைப்பிற்கு ஆதாரம் காட்டச் சொல்லிக் கேட்க வேண்டும். கமலன் மனம் வைத்தால் அவளுக்கு ஏதாவது வழி கிடைக்காமல் போகாது. பரீட்சை மும்முரத்தில் இருந்து வந்த கமலன் கொஞ்ச நாட்களாய் கண்ணில் படவேயில்லை. அவன் பரீட்சைகள் முடிவடையப் போகின்றன. பி ஏ. முடிந்த பிறகு இனி படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடப் போவதாய் இப்பொழுதே சொல்லிவிட்டான் கமலன். என்னவோ படிக்க முடிந்தவர்களுக்குப் படிப்பின் மீது அலட்சியம்! முடியாதவர்களுக்குத் தவிப்பு!

ரேகாவுக்கு அவ்வப்பொழுது ‘சரி போகட்டும் அவன் விருப்பப்பிரகாரம் கமலனைக் கல்யாணம் செய்து கொண்டால்?’ என்று தோன்றத் தொடங்கிற்று. ஆனால் உடனேயே மனம் மறுப்பை எடுத்துக் காட்டிற்று. ஊஹூம், கமலனைக் கணவனாய் அவள் கனவிலும் ஊகித்திருக்கவில்லை. கமலன் மீது ரேகா வுக்கு அளவில்லாத அன்பும், பரிவும் இருந்தது உண்மையே. ஆனால் அவை சேகரைப் பார்த்ததுமே ஏற்படும் சாதாரண உணர்ச்சிகள்.

கணவனைப் பார்த்ததுமே மனதில் ஏற்படும் இனிய நினைவுகளும், வெட்கத்தை உண்டாக்கும் அன்பும், பாசமும் எதுவுமே இல்லை. கமலனைக் கல்யாணம் செய்து கொள்வது என்றால் ஒரு விதத்தில் அவனுக்குத் தீராத அநியாயத்தை இழைப்பது போலதான் ஆகும். பணத்தைத் தண்ணீராய் வாரியிறைக்கும் கமலனின் சுபாவத்தை அவள் அறிவாள். அவனை மணந்து

கொண்டால் அப்பணத்தைப் பற்றிய ஜாக்கிரதைகளை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். அதனால் அவள் அழுத்தமாய் கண்டிக்க வேண்டி யிருக்கும். இந்த விதமாய் அவள் கமலனுக்கு மதிப் பளிக்காமல் அவன் பணத்திற்கு மதிப்பளிக்கத் தொடங்கிவிட்டால் அது அவனுக்குப் பெரிய தண்டனை யாகி விடும். உண்மையைச் சொல்லப் போனால் விமலன் ராட்சசனாய் இருந்து அப்பணத்தைக் காவல் காத்துக் கொண்டிருப்பதால்தான் அது கமலனின் கையில் எஞ்சியிருக்கிறது. இல்லாவிட்டால் இதற்குள் கமலனின் உதாரகுணம் அவனை தானதர்மங்கள் அது இது என்று செலவுகளைப் பண்ணவைத்து ஓட்டாண்டி யாக்கிவிட்டிருக்கும். கமலன் மிக இரக்க சுபாவம் கொண்டவன். ஏதாவது பிறர் வருத்தங்களைக் கொஞ்சம் கண்டுவிட்டாலும் போதும் அவன் மனம் உருகிவிடும். பாத்திரமறிந்து தானம் பண்ண வேண்டும் என்ற விஷயமே தெரியாது. இருக்கும் வரை எடுத்துத் தந்து விடுவதுதான் அவன் சுபாவம். அவன் வாழ்க்கை எந்தப் பூசலும் இல்லாமல் நிம்மதியாய் கழிய வேண்டு மென்றால் பணத்தைப் பற்றிய ஜாக்கிரதைகளை மேற்கொள்ளக்கூடிய மனைவி வந்தால்தான் முடியும். அவனைக் கணவனாய் ஊகித்துப் பார்த்தபொழுது அவனிடம் அவளுக்குப் பிடிக்காத குணங்கள் நிறைய் இருந்தன. சிநேகம் வேறு. தாம்பத்தியம் வேறு. தன்னை மனைவியாய் அடையவேண்டுமென்று கமலன் தவித்துக்கொண்டிருப்பதை சமீபத்தில்தான் நன்றாய் தெரிந்துகொண்ட ரேகா அவன் மனதைப் புண் படுத்தாதவாறு அந்த அபிப்பிராயத்திலிருந்து அவனை எப்படி மீட்கச் செய்வது என்று யோசிக்கத் தொடங் கினாள். தன் விருப்பமின்மையை வெளிப்படுத்தினால் அவனைத் தான் ஏதோ தாழ்வாய் மதிப்பிட்டுவிட்டதாய் கமலன் வருத்தப்படக்கூடாது. அவமானப்படுத்தினாற்

போலவும் நினைத்துக்கொண்டு விடக்கூடாது. இது மிகவும் நுட்பமான விஷயம். மிகவும் ஜாக்கிரதையாய் மென்மையாய் பண்ண வேண்டிய காரியம்— என்றெண்ணிக் கொண்டாள் ரேகா.

## 17

ஊரில் எங்கேயாவது பாட்டுக்கச்சேரியோ, நாடகமோ அல்லது கண்காட்சியோ நடந்தால் லலிதா வுக்குக் கொண்டாட்டம். எங்கே எந்த புரோகிராம் நடக்கிறது என்று தெரிந்துகொள்வதும், அதற்குப் போகும்பொழுது என்ன புடவை கட்டிக்கொண்டு போக வேண்டும் என்றும், எந்த நகையைப் போட்டுக் கொண்டு, கேசங்களை எந்தவிதமாய் அலங்கரித்துக் கொண்டு போகவேண்டும் என்றும் யோசிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் கிடையாது அவளுக்கு.

வீடு இருந்தது. ஆனால் வீட்டு பாரம் லலிதாவின் மேலில்லை. அந்த வீட்டில் பிரச்சினைகள் இருந்தன. ஆனால் அவைகளோடு லலிதாவுக்குச் சம்பந்தமில்லை. வேண்டிய ஓய்வும், கவலை எதுவும் இல்லாத நிம்மதியும் கிடைத்தன. இந்த உலகத்தில் கைநிறைய வேலை யில்லாத ஒவ்வொரு வரும் நினைத்துக் கொள்வதைப் போலவே லலிதா கூட தான் மிகவும் துரதிர்ஷ்டசாலி என்றெண்ணிக் கொள்வாள்.

அன்று காலையில் லலிதா டிப்டாப்பாகத் தயாராகி, தனியாய் காரை எடுத்துக்கொண்டு தானே ஓட்டிக் கொண்டு ஃபிளவர் ஷோ பார்ப்பதற்குப் புறப்பட்டாள். லலிதா கண்காட்சிக்குப் போய்க்கொண்டிருக்கையில் வழியில் கிஷோர் எதிர்ப்பட்டான். அவன் பார்த்து விஷ்பண்ணியதால், வேறு வழியில்லாமல் காரை நிறுத்த

வேண்டியிருந்தது. லலிதாவுக்கு இப்பொழுதெல்லாம் கிஷோர் மீது வெறுப்பாய் இருந்தது. அவனுக்கு அவள் மீது எங்குமில்லாத பக்தி இருப்பதை உணர்ந்த லலிதா முதல் முதலில் மிகவும் மகிழ்ந்து போனாள். ஆனால் அவன் பக்தி மிகவும் எல்லை கடந்து, வெட்கங்கெட்டு மனைவி குழந்தைகளை அலட்சியம் செய்வதோடு, கடைசியில் க்ளினிக்கையும் நோயாளிகளையும்கூட மறந்து போகக்கூடிய நிலைக்கு வந்துவிட்டதைத் தெரிந்து கொண்டதும் அவளுக்கு வெறுப்பு தோன்றத் தொடங்கிவிட்டது.

பெண்பித்துப் பிடித்துத் திரியும் ஆண்களை லலிதா வெறுத்து விடுவாள் என்ற விஷயம் கிஷோருக்குத் தெரியாது, கிஷோர் எங்கேயோ போய்க் கொண்டிருந்தான். லலிதா விருப்பமில்லாமலேயே லிப்ட் கொடுத்தாள். காரில் போய்க் கொண்டிருக்கையில் வழக்கப் பிரகாரம் அவன் காட்டிய உரிமைகளுக்கு உள்ளூர வெறுப்படைந்துகொண்டே மேலுக்கு மட்டும் விட்டேற்றியாய் இருந்து கொண்டாள்.

காரிலிருந்து இறங்கும்பொழுது மிகவும் ஆசையோடு கேட்டான் கிஷோர்— ''பிளாசாவில் நல்ல பிக்சர் இருக்கு, சாயந்திரம் போகலாமா?''

''ஊஹூம், எங்கப்பா ஊரிலிருந்து வந்த பிறகு நான் வெளியே சுற்றுவதை விட்டுவிட்டேன், அதோடு அவருக்கு உடம்பு கூட சரியாயில்லை'' என்று பதிலளித்தாள் லலிதா.

கிஷோரை இறக்கி விட்டு விட்டு கண்காட்சிக்கு வந்தபொழுது மிகத் தாமதமாகிவிட்டது. அதற்குள் ஆண்களும் பெண்களுமாய் நிறைய பேர் கூடியிருந்தார்கள் கண்காட்சியில். லலிதா பூக்களைப் பார்வையிட்டுக்கொண்டே வந்துகொண்டிருக்கையில் எதிரே வந்து

கொண்டிருந்த ஒரு வயதான தம்பதியருக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டபொழுது அவள் ஹை ஹீல்ஸ் ஷூ நழுவி ஒரு பக்கமாய் விழப் போனாள். சட்டென்று பின்னாலிருந்து ஒரு கை வந்து விழுந்துவிடாமல் அவளைத் தடுத்துப் பிடித்துக்கொண்டது.

''ஐயாம் சாரி, தாங்க் யூ!'' தனக்குக் கைகொடுத்தவனைப் பார்த்துச் சொன்னாள் லலிதா.

''தட்ஸ் ஆல் ரைட்'' என்று சொல்லிவிட்டு அவன் முன்னுக்குப் போய்விட்டான்.

லலிதா போய்க் கொண்டிருந்த அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ஒல்லியாய் உயரமாய் இருந்தான் அவன். வெள்ளை சூட்டில் இருந்தான். கண்களுக்குக் கொஞ்சம் பெரிய கூலிங் கிளாஸ். அழகான கிராப்.

முன்னால் போய்க் கொண்டிருந்த அவன் ஏனோ திரும்பிப் பார்த்தான். லலிதா தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்து விட்டு லேசாய் முறுவல் பூத்தான். அவளும் சிரித்தாள். அவன் கூட்டத்தில் கலந்து போய் விட்டான். லலிதாவின் மார்பு வேகமாய் துடித்தது. அவன் சிரிப்பில் ஒருவித குழந்தை தனம் இருந்தது. அவனை இன்னொரு தடவை பார்த்தாலொழிய பிழைக்க முடியாது போல் தோன்றிற்று அந்த நிமிஷத்தில். பூக்களைப் பார்த்துக் கொண்டே அவனை தேடத் தொடங்கினாள்.

அதென்ன நம்பிக்கையோ தெரியாது—அவன் கண்டிப்பாய் திரும்பி வருவான் என்று தோன்றத் தொடங்கிற்று. லலிதா ஊகித்தாற்போலவே அவன் அந்தப் பக்கத்திலிருந்து மெல்ல மெல்ல பூக்களைப் பார்ப்பதுபோல பார்த்துக் கொண்டே லலிதா நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்து நின்று விட்டான்.

லலிதாவின் மார்பு வேகமாய் அடித்துக் கொள்ளத் தொடங்கிற்று. ஒரு வினாடி ஒருவரையொருவர் கவனிக்காததுபோல பூக்களையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள்.

தான் முதலில் பேசினால் இளப்பமாகி விடலாமோ என்றெண்ணி வாயைத் திறக்காமல் இருந்தாள் லலிதா.

கடைசியில் அவனே சொன்னான்—''இந்தப் பூக்கள் ரொம்ப நன்றாயிருக்கு.''

''ஆமாம்'' சட்டென்று சொல்லி விட்டாள் லலிதா.

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். லலிதா ஆச்சரியமடைந்தவளாய் பார்த்தாள். இருவரும் எதிர்ப்பாராமல் திடீரென்று சந்தித்துக் கொண்டவர்களைப் போல. ''அட'' என்றெண்ணிக் கொண்டார்கள்.

இம்முறை லலிதா அழகாய் தன் சிரிப்பை அள்ளி வீசினாள். அவள் போட்ட எடை தப்பாகவில்லை. அவன் திரும்பவும் தென்பட்டு விட்டான். இருவரும் சேர்ந்து தோளோடு தோள் உராய்ந்து கொள்வது போல மிக நெருக்கமாய் நின்று பூக்களைப் பார்வையிட்டார்கள். வெகுநேரங்கழித்து இருவரும் வெளியே வந்தார்கள்.

''நீங்கள் எப்படிப் போறீங்க? கார் இருக்கா?'' என்றாள் லலிதா.

அவன் சிரித்தான் வேடிக்கையாய். ''காரா? எனக்கா? ஊஹூம். நான் ரொம்ப ஏழை.''

லலிதா ஒரு வினாடி விலையுயர்ந்த அவன் உடைகளைப் பார்த்தாள். உடனே சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''பலே ஆள்தான்! உங்களைப் போன்றவங்க ஏழைங்களானாலும், இந்த நாட்டில் பணக்காரங்

களிடம் இன்னும் எவ்வளவு பணம் இருக்குமோன்னு நினைச்சுப்பாங்க புதியவர்கள். உங்களுக்கு கார் இல்லாதது இன்றைக்கு என் அதிர்ஷ்டமாய் நினைக்கிறேன். வாங்க, நான் கொண்டுபோய் விட்டு விடுகிறேன்.''

''உங்களுக்கு ஏன் சிரமம்?'' சங்கோஜத்துடன் சொன்னான் அவன்.

''இப்படிப்பட்ட சிரமம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். பொழுது போக்கும்கூட'' என்றாள் சிரித்துக்கொண்டே.

''நீங்க ரொம்ப அழகாய் சிரிக்கிறீங்க!''

''காம்ப்ளிமென்ட்! தாங்க்ஸ்.''

லலிதாவுக்கு அவன் கவனம் அவள் கழுத்திலிருந்த பச்சையும் கெம்பும் பதித்த நகையின் மீது நிலைத்துப் போய்விட்டது தெரியாது. அவன் கண்களைச் சுற்றிலும் கருப்புத் துணியைச் சுற்றினாற்போல அந்த கருப்புக் கண்ணாடி இருந்ததால் அவன் எந்த பக்கமாய் பார்க்கிறான் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இருவரும் காரில் வந்து உட்கார்ந்துகொண்டார்கள். காரை ஓட்டிக்கொண்டே கேட்டாள் லலிதா.

''காபி குடிக்கிற பழக்கம் உண்டா?''

''ஊஹூம்,''

''போகட்டும், மற்றவங்களைக் குடிக்கவைக்கிற பழக்கம் உண்டா?''

''ஊஹூம்.''

''குட்! அப்படீன்னால் உங்களிடம் இருப்பதெல்லாமே நல்ல குணங்கள்தான் போலிருக்கிறது. எனக்கு நீங்கள் மிகவும் வேறுபட்டவர்.''

அவன் பதில் பேசவில்லை.

லலிதா காரை நவீன பாணியில் முற்றிலும் மேல் நாட்டு முறைப்படி நடக்கும் ஓட்டல் ஒன்றிற்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினாள்.

அவன் தடுப்பது போல சொன்னான், ''நோ, நோ! நீங்கள் என்னை மன்னிக்கணும். வேறு எங்கேஜ் மென்ட் இருக்கு. இன்னொரு தடவை எப்பொழு தாவது...''

''இன்னொரு தடவை நாம்ப சந்திக்க முடியும் என்கிறீங்களா?''

''நீங்கள் விரும்பினால் கண்டிப்பாய் முடியும்.''

''நீங்கள் என்னோடு சேர்ந்து காபி குடிப்பீங்க என்ற வாக்குறுதியை மனதில் வைத்துக்கொண்டு இப்போதைக்கு உங்களை விட்டுவிடுகிறேன். எங்கே இறக்கி விடணும் உங்களை?''

''மாம்பலத்திற்கருகில்.''

அவன் சொன்ன சாலையிலேயே காரை ஓட்டிக் கொண்டு போனவள் கேட்டாள்— ''என் பேர் லலிதா. உங்கள் பேர்?''

''ஜான்.''

''உங்கள் வீடு.''

''இங்கிருந்து வெகு தூரம். உங்களால் வர முடியாத அளவுக்கு. என்னால் அழைத்துக்கொண்டு போக முடியாத அளவுக்கு.''

''குடும்பம் இருக்கிறதா?''

''இல்லை.''

''தனியாய்தான் இருக்கீங்களா?''

''ஆமாம்.''

லலிதா நிம்மதியாய் மூச்சு விட்டுக்கொண்டே தனக்குள் எண்ணிக்கொண்டாள். "எந்தப் பிக்கல் பிடுங்கல்களும் இல்லாத மனிதர் என்று சொல்லுங்கள். எவ்வளவு சுகம்!"

"என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

"சொல்லச் சொல்றீங்களா?"

லலிதா காதுகளிலிருந்த முத்துத் தொங்கட்டான்கள் ஆடும்படியாய் தலையை ஆட்டினாள்.

"இருட்டு வியாபாரம்."

அவன் எதிர்பார்த்தாற்போல லலிதா நிமிர்ந்து பார்க்கவில்லை. பதறிவிடவில்லை. கொஞ்ச நேரங் கழித்து முறுவலுடன் புகழ்வதுபோலச் சொன்னாள்.

"இப்ப நம் நாட்டில் புத்திசாலிங்க எல்லோரும் அந்த வியாபாரத்தில்தான் இருக்காங்க. அதற்கு அபாரமான சாமர்த்தியம் வேண்டும். அதில் நீங்கள் கெட்டிக்காரர் என்று நினைக்கிறேன்."

அவன் வியப்படைந்தவனாய் பார்த்தான்.

மாம்பலம் வந்தது. அவன் சொன்ன இடத்தில் அவள் காரை நிறுத்தினாள்.

அவன் இறங்கும்பொழுது லலிதா, "எனக்கு கொடுத்த வாக்கை மறந்துவிட மாட்டீங்களே?" என்றாள்.

"மறந்துவிட முடியுமா என்ன?" அவன் பார்வை மற்றொருமுறை லலிதாவின் கழுத்தின் மீது படிந்தது.

"நாளைக்கு சரியாய் பத்துமணிக்கு ஃப்ளவர் ஷோவுக்கு அருகில் காத்திருக்கிறேன்."

"தாங்க்ஸ்."

அவன் இறங்கிக்கொண்டு கதவை சாத்திவிட்டான். லலிதா மின்னலாய் வெட்டும் கண்களோடு அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு காரைத் திருப்பி ஓட்டிக்கொண்டு போய்விட்டாள். அவன் அப்படியே பார்த்துக் கொண்டே நின்றிருக்க, லலிதாவின் கார் மெல்ல மெல்ல கண் மறைவாகிப்போயிற்று.

'அப்பப்பா! என்ன மனுஷி! பிற ஆண்களுடன் பெண்கள் எங்கேயாவது இவ்வளவு உரிமையோடு நடந்துகொள்வார்களா?' கண்மறைவாகிக் கொண்டி ருந்த காரையே பார்த்தபடி மார்பை நீவி விட்டுக் கொண்டே தனக்குள் எண்ணிக்கொண்டான் சேகர்.

அவன் கண் முன் முறுவலை அள்ளி வீசிக்கொண் டிருந்த லலிதாவின் அழகிய ரோஜா வண்ண உதடு களைக் காட்டிலும், வெண்மையாய் சங்குப்போல இருந்த அந்தக் கழுத்தில் தென்பட்ட விலையுயர்ந்த மாலைதான் தென்பட்டுக்கொண்டிருந்தது.

## 18

அன்றைக்கு கமலன் வந்ததுமே ரேகாவை சீக்கிரமாய் தன்னோடு புறப்பட்டு வரச் சொல்லி அவசரப்படுத்தினான்.

"எதுக்கு என்னவாயிடுத்து?" அவசரம் அவசரமாய் தயாராகிக்கொண்டே பதற்றத்துடன் கேட்டாள் ரேகா.

"சொல்றேன், நீ சட்டென்று புறப்படு. வெளியே டாக்ஸி வெயிட் பண்ணிட்டிருக்கு."

ரேகா சட்டென்று புறப்பட்டு வந்தாள்.

அவ்வப்பொழுது ஏதாவது சாக்குடன் ரேகாவிட மிருந்து பணம் கிடைத்துக்கொண்டிருந்ததால் சுந்தரி

கூட ரேகாவை முன்போல் பழிப்பதில்லை. தாய் காயத்ரியோ ரேகாவின் க்ஷேமத்தின் மீதிருந்த ஆசையை என்றோ விட்டுவிட்டாள். இனி சங்கரனுக்கு சுருட்டுப் பழக்கம் இருந்ததாகத் தெரிந்துகொண்ட கமலன் இரண்டு மூன்று தடவைகள் வாங்குவதை ஒரே தடவை யாய் நிறைய சுருட்டுகளை வாங்கி வந்து வெகுமதியாய் கொடுத்தான். அவரைக் கண்டதுமே வினயமாய் கைகளைக் கூப்பி— "வணக்கம் சார்" என்பான். வாழ்க்கையில் எந்தக் கோணங்களிலிருந்தும் கௌரவம், மரியாதைகளை உணர்ந்திராத சங்கரன் பொங்கிப் போய்— "உட்காரு! உட்காரு. ரேகா உள்ளேயிருக் கிறாள் போலிருக்கிறது! அம்மா ரேகா! கமலன் வந்திருக் கான்ம்மா" என்று கத்துவார். அந்த விதமாய் கமலன் அந்த வீட்டில் தன் உரிமையை வளர்த்துகொண்டான். ரேகாவைச் சந்திப்பதற்கு முன் போல் அவன் அவஸ் தைப் படுவதில்லை. காய்கறிக் கடைகளுக்கருகிலோ, மார்க்கெட்டிற்கருகிலோ மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ரேகா கமலனோடு சேர்ந்து டாக்ஸியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, "எங்கே?" என்றாள்.

'சொல்றேன் வா" என்றான் கமலன் முகம் பளபளக்க.

"அப்பப்பா! அதென்னவென்று சொல்லிவிடக் கூடாதா? என்னால் சஸ்பென்ஸ் தாங்க முடியவில்லை."

"சாப்பிடப் போகும்பொழுது ருசியை ஏன் கேட்கணும்?"

டாக்ஸி பத்து நிமிஷத்தில் ஒரு வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. "இறங்கு" என்றான் கமலன்.

ரேகா "ப்ளீடர் வீட்டிற்கு எதுக்கு?" என்று சந்தேகத்தோடு கேட்டாள்— எதிரே 'யஷ்வந்தன்

அட்வகேட்' என்றிருந்த பெயர் பலகையைப் பார்த்து விட்டு.

''இறங்கு மொதல்ல.''

ரேகா இறங்கினாள். கமலன் டாக்ஸியை வெயிட் பண்ணிக் கொண்டிருக்கும்படிச் சொன்னான்.

கமலன் லாயரிடம் ரேகாவைப் பரிச்சியம் செய்தான். ''இந்தப் பெண் எனக்கு மனைவியாய் வரப்போகிறவள். பெயர் சுவர்ணரேகா. ஒரு முறை என் சொத்து விவரங்களையெல்லாம் உங்கள் வாய் மூலமாய் சுயமாய் கேட்க வேண்டும் என்று விரும்புகிறாள். அதன் சம்பந்தப்பட்ட காகிதங்களைக் காட்டுங்கள்'' என்றான்.

லாயர் கமலனையும் ரேகாவையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு அலமாரியைத் திறந்து சில காகிதங்களை எடுத்துக்கொண்டு வந்து, சொத்து விவரங்களைப் படிக்கத் தொடங்கினார். படித்துக்கொண்டே இடையிடையே ரேகாவை ''கேட்டுக்கொண்டிருக்கிறாயா?'' என்பது போல பார்த்தார்.

ரேகாவுக்கு இதெல்லாம் ஏதோ போலிருந்தது. லாயர் ஒரே பார்வையிலேயே அவளைத் துச்சமாய் மதித்து விட்டார் ஆனாலும் கமலன் அவளைக் கேட்காமல் அவள் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல் இப்படிப் பண்ணி விட்டானே, ஏன்? ரேகா லாயர் சொல்லிக்கொண்டிருந்த விவரங்களைக் கேட்கத் தொடங்கினாள்.

''செங்கல்பட்டிற்கருகில் முப்பது ஏக்கர் கரும்புத் தோட்டம் இருக்கிறது. அங்கேயே இன்னொரு பக்கம் இருபது ஏக்கர் மாகாணி உள்ளது. செங்கல்பட்டிற் கருகில் ஃபேக்டரியில் ஷேர்கள் உள்ளன. இங்கே இரண்டு வீடுகள், இரண்டாயிரம் சதுர கெஜம் காலி மனை, மார்க்கெட்டிற்கருகில் எட்டுக் கடைகளும்

உள்ளன. வீட்டின் மீதும் கடைகளின் மீதும் மாதத்திற்குப் பதினைந்தாயிரம் ரூபாய்கள் ஆதாயம் வந்து கொண்டிருக்கிறது. இதைத் தவிர பேங்கில் ஃபிக்செட் டிபாஸிட்டில் இரண்டு லட்சங்களும், சாதாரணக் கணக்கில் அறுபதாயிரமும் உள்ளன.''

ரேகா வாயை பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் காதுகளையே அவளால் நம்ப முடியவில்லை. கமலனுக்கு இவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றனவா? இவ்வளவு செல்வந்தனா இவன்? இவ்வளவு செல்வந்தனாயிருந்தும் மிகச் சாதாரணமாய் எந்த ஆடம்பரமும் இல்லாமல் தன் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறான். ரேகா கமலனைத் திரும்பி கண்கள் அகல விரியப் பார்த்தாள்.

லாயர் கடகடவென்று சொத்து விவரங்களைப் படித்து விட்டு,''இன்னும் என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டார் ரேகாவைப் பார்த்து.

ரேகா வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள்.

கமலன் அவரிடம் கேட்டான், ''பாருங்கள் சப்போஸ் நான் இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன். அது எங்கண்ணாவுக்குப் பிடிக்கவில்லை, அவன் ஆட்சேபணை இருப்பதால் எனக்கு கல்யாணம் ஆன பிறகு இந்த ஆதாயம் ஏதாவது...'' தயக்கத்துடன் பார்த்தான்.

லாயர் மறுத்துத் தலையை அசைத்தார்.

''ஊஹூம். ஒன்றும் ஆகாது. உன் சொத்தின் முழு உரிமையும் உனக்குத்தான். உங்கம்மா உயிலில் கல்யாணம் ஆகிறவரைக்கும் விமலனின் அதிகாரம் இருக்க வேண்டும் என்றும், கல்யாணமான பிறகுகூட அவன் ஆலோசனை எதுவுமில்லாமல் நீ எதுவும் செய்ய கூடாதென்றும் விரும்புவதாய் மட்டுமே எழுதியிருந்

தாங்க. விருப்பம் வேறு, உரிமை வேறு.'' கமலனின் முகம் மலர்ந்தது.

''அப்படீன்னால் எங்களிருவரின் கல்யாணத்துக்கும் எந்தவிதமான தடையும் இருக்காது என்கிறீர்கள் ''

''இருக்காது.''

அவர் மற்றொரு முறை ரேகாவைப் பார்த்தார். ரேகா வுக்கு அப்பார்வை சுருக்கென்றது. அக்கண்களில் ரேகாவின்பால் மரியாதை லேசும் இல்லை.

கமலன் எழுந்துகொண்டே கேட்டான். ''விமலன் என் மீது கேசு ஏதாவது போடுவதற்கு...''

''வழியில்லை.''

கமலன் கையை நீட்டி, ''தாங்க் யூ சார். வரேன்!'' என்றான்,

அவர் பட்டும் படாமலும் கமலனின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு விடை கொடுத்தார்.

வெளியே வந்துகொண்டிருக்கையில் ரேகாவுக்கு தனக்குப் பின்னால் அவர் பார்வை கூரிய அம்பாய் வந்து தாக்கிக் கொண்டிருந்தாற்போலவே இருந்தது. இருவரும் வெளியே வந்ததுமே ரேகா, ''கமல், இதெல் லாம் என்ன?'' என்றாள்.

''சொல்கிறேன் வா.''

கமலன் என்றுமில்லாதவாறு உரிமையோடு ரேகா வின் கையைப் பிடித்து டாக்ஸிக்கருகில் அழைத்து வந்து ''ஏறு'' என்றான்.

ரேகா ஏறி உட்கார்ந்து கொண்டாள். கமலனும் ஏறி உட்கார்ந்து கொண்டே டிரைவரிடம் ஏதோ விலாசத்தைச் சொன்னான். டாக்சி புறப்பட்டது.

கமலன் ரேகாவின் கையைத் தன் கையில் ஏந்திக் கொண்டு மென்மையாய் சொன்னான்—"ரேகா, என்னை பற்றிய எல்லா விவரங்களும் உனக்குத் தெரிந்து விட்டது. இந்த உலகத்தில் நிறைய பேர் பணத்துக்காக நிறைய காரியங்களைப் பண்ணுகிறார்கள். நீ பணத் துக்காகவாவது என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்."

"கமல்!"

"நான் இப்பொழுதெல்லாம் ஒவ்வொரு நிமிஷமும் உன்னைப் பற்றியேதான் யோசித்துக் கொண்டிருக் கிறேன். உன் வரவால் என் வாழ்க்கையில் புதிய தளிர்கள் துளிர்க்கத் தொடங்கியிருக்கின்றன. என் மனதில் உன் மீது இருக்கும் அபூர்வ உணர்ச்சியைப் பற்றி வார்த்தைகளால் சொன்னாலும் உனக்குப் புரியாது. அது எனக்கு நிறைய உற்சாகத்தை தருகிறது. இப்பொழுதெல்லாம் எவ்வளவு நன்றாய் கவிதைகளை எழுத முடிகிறது தெரியுமா என்னால்? உன்னிடம் ஏதோ சக்தி இருக்கிறது. அது மந்திர தண்டமாய் என்னை மெய் மறக்கச் செய்கிறது. நீ என்னுடையவள் ஆக வேண்டும். நான் நிரந்தரமாய் உன்னுடையவனாகிவிட வேண்டும். நீ மறுத்தால் என் வாழ்க்கையே சூனியமாகி விடும்."

"கமல்! கமல்! அப்படிச் சொல்லாதீங்க."

ரேகா கலக்கத்துடன் சொன்னாள்.

"ஒப்புக் கொண்டு விட்டேனென்று சொல்லி விடு ரேகா."

"நான் யோசிக்கணும்."

"இவ்வளவுதானா? அப்படீன்னால் உன் யோச சனைக்கு என்றுமே முடிவு ஏற்படாதுன்னு சொல்லு. நீயாகவே முடிவெடுத்துக் கொள்கிற சக்தி உன்னிடம் இல்லாவிட்டால் அந்த பாரத்தை என் மேல் போட்டு

விடு. நான் இல்லாவிட்டால் என் பணமாவது உன்னைக் கவரவில்லையா ரேகா?''

''உங்கள் பணத்தால் கவரப்பட்டு உங்களுக்கு மனைவியாய் வருகிறவங்களால் உங்களை சுகப்படுத்த முடியாது கமல்! உங்களை உங்களாகவே பார்க்கக் கூடிய நபர் வேண்டும் உங்களுக்கு.''

''அசல் விமலனைப் போலவே பேசுகிறாயே!''

விமலனைப் பற்றிய பேச்சு வந்ததும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

பிறகு நிதானமாய்- தான் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்குப் புரியக்கூடிய விதத்தில் நிதானமாய் சொல்லத் தொடங்கினாள் ரேகா, 'பாருங்க கமல்! நான் விவரம் தெரிந்ததிலிருந்து இது வரை அக்கம்பக்கத்தாருடனும், மாமியோடும், சூழ்நிலையோடும், துரதிர்ஷ்டத்தோடும் போராடிக் கொண்டே இருக்கிறேன். இனி என்னால் முடியாது. என் பலம் தீர்ந்து விட்டது. குறைந்தபட்சம் கல்யாணமான பிறகாவது கவலையில்லாமல், அமைதியாய், தூய்மையாய் கணவனின் நிழலில் கழிக்க வேண்டும் என்றிருக்கிறது. எனக்கு எந்த போக பாக்கியங்களும் தேவையில்லை. ஹோதா வேண்டும். அன்பும், அரவணைப்பும் வேண்டும். நிறைந்த மனதோடு அன்பைப் பகிர்ந்தளிக்கும் அனுபவம் வேண்டும்.''

''அதெல்லாம் என்னிடம் உனக்குக் கிடைக்கும் ரேகா. நான் வாக்குறுதி தரேன்.''

''எனக்கு நம்பிக்கையில்லை கமல்.''

''நம்பிக்கை இல்லையா? ஏன்?'' முகம் சிறுக்கக் கேட்டான் கமலன்.

''உங்களோடு திருமணமான அடுத்த நிமிஷத்திலிருந்தே நான் உங்கள் விமலனோடு சண்டை

போட்டுக் கொண்டிருக்க வேண்டும். அது என்னா முடியாது.''

''அப்படி நடக்க விடமாட்டேன் ரேகா. நம்மிரு ருக்குமிடையே அவன் தலையீடே இருக்காது. எல்லாம் உன்னிஷ்டம். உன்னிஷ்ட பிரகாரந்தான் நடக்கும்.''

''வேண்டாம்! கமல் வேண்டாம்! விமலனோடு இல்லாவிட்டாலும் உங்களோடாவது சச்சரவு வரும்.''

''என்னோடா? நம்மிருவருக்கும் சண்டையா, அபிப்பிராய பேதமா?'' கமலன் சிரித்தான்.

அதற்குள் டாக்ஸி ஒரு வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது.

''இதென்ன? இங்கே எதுக்காக வந்திருக்கோம்? இது யாருடைய வீடு?'' குழப்பத்துடன் கேட்டாள் ரேகா.

''இறங்கு, சொல்கிறேன்'' என்றான் கமலன்.

ரேகா இறங்கினாள்.

வீதி விசாலமாய் நீட்டாய் இருந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை தெரிந்த தார்ரோடிற்கு இருபக்கங் களிலும் அற்புதமான, அழகான உயரமான மாடி வீடுகள் வரிசையாய் ஒன்றையடுத்து இன்னொன்றாய் இருந்தன. சாக்கடைகளுக்கும் சந்தடிகளுக்குமிடையே இக்கட்டில் இருந்து வந்த ரேகாவுக்கு ஒரு வினாடி அந்த வீதியும் அச்சூழ்நிலையும் சுவர்க்கமாய் தென்பட்டன. கமலன் டாக்ஸிக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டான்.

# 19

“வரப்போகும் மனைவி நீ. உன் வீட்டை ஒரு தடவை பார்த்துக்கொள்” என்றான் கமலன் கேட்டைத் திறந்துகொண்டே. உள்ளே அடியெடுத்து வைத்த ரேகா ஒரு வினாடி இரு பக்கங்களையும் பார்த்தாள். காம்பவுண்டை ஒட்டியிருந்த முன் எல்லை சிமெண்ட் போடப்பட்டு சுத்தமாய் இருந்தது. சுவற்றோரத்தில் மட்டும் வரிசையாய் விதவிதமான பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தன.

ஜேபியிலிருந்து சாவியை எடுத்து கமலன் கதவைத் திறந்தான். வாசல் கதவைத் தவிர உள் அறைக் கதவுகள், ஜன்னல்கள் எல்லாம் திறந்து திரைச் சீலைகளை ஒதுக்கி இழுத்துக் கட்டப்பட்டிருந்தன. முன் அறைக்குள் அடியெடுத்து வைத்த ரேகா ஒரு நிமிஷம் அப்படியே நின்று விட்டாள். தரையில் நீலமும் சிவப்பும் கலந்த பூக்களோடு கூடிய காஷ்மீர் கம்பளம் பரப்பப்பட்டிருந்தது. அறைக்கு நடுவே விலையுயர்ந்த சோபா. நான்கு மூலைகளிலும் சின்ன பெஞ்சுகளின் மீது விரிப்புப் போடப்பட்டு அதன் மீது வெங்கலச் சிலைகள். கதவு, ஜன்னல்களின் திரைச் சீலைகளும் கம்பளமும் ஒரே நிறத்தில் மாட்ச் ஆகும் படியாய் கண்களுக்கு இதமாய் இருந்தன.

“அங்கே நின்றுவிட்டாயே, உள்ளே வா ரேகா” கமலன் கூப்பிட்டான்.

உள்ளே அறைகள் அதிகமாய் இல்லை. முன் அறையையொட்டி விமலனின் ஆபீஸ் அறை இருந்தது. அதைத் தாண்டினால் பெரிய ஹால் இருந்தது. அதையொட்டி சமையலறை இருந்தது. சமையலறைக் கும் விமலனின் ஆபீஸ் அறைக்குமிடையே வாசல்

இருந்தது. ஆனால் அது மூடப்பட்டு அங்கும் இங்கும் திரைச் சீலைகள் போடப்பட்டிருந்தன.

''இதோ இது எங்கள் சமையலறை'' சாத்தியிருந்த சமையலறைக் கதவைத் திறந்துகொண்டே சொன்னான் கமலன்.

அவனுக்குப் பின்னாடியே நின்றுகொண்டிருந்த ரேகா உள்ளே எட்டிப் பார்த்தாள். உடனே ஆச்சரியத்தாள். அவள் கண்கள் அகல விரிந்தன. சமையல் செய்வதற்கு வசதியாய் உயரமான மேடை. அதன் மீது கியாஸ் ஸ்டவ் இருந்தது. வலது பக்கத்தில் பாத்திரங்களும் கரண்டிகளும் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தன. அவை நன்றாய் கழுவியிருந்தாற்போல பளபளத்துக் கொண்டிருந்தன. எதிரே கண்ணாடிக் கதவுகளுடன் இருந்த அலமாரியில் பிளாஸ்டிக் டப்பாக்களில் ஒவ்வொரு சாமான்களும் கண்ணுக்குத் தெரியும்படியாய், சமையலுக்கு வேண்டிய எல்லா சாமான்களும் இருந்தன. காய் நறுக்கும் கத்திலிருந்து, எலுமிச்சம்பழம் பிழியும் பிளாஸ்டிக் கிண்ணம் வரை எல்லாம் கண்ணுக்கெதிரே தென்பட்டுக் கொண்டிருந்தன. அந்த சமையலறைக்குள் யாராவது புதிதாய் நுழைந்தாலும் கூட மளமளவென்று பத்தே நிமிஷத்தில் சமையல் பண்ணிவிடலாம். ரேகா மிகவும் வியப்படைந்தவளாய், ''இதெல்லாம் யாருடைய திறமை?'' என்று கேட்டாள் மெச்சிக் கொண்டாற் போல.

''வேறு யாருடையது? எங்க விமலனோடதுதான்! எந்த சாமானையும் எடுத்த இடத்தில் வைக்க வேண்டும் அவனுக்கு. வீட்டில் ஒரு சின்ன காகிதத் துண்டுகூட குப்பைப் போட்டு விடக்கூடாது. கிடந்தால் எடுத்துக் கொண்டு போய் குப்பைக் கூடையில் போட்டுவிட வேண்டும் என்பான். சில சமயம் நான் அங்கே இருக்கும் சாமான்களை இங்கேயும், இங்கே இருக்கும்

சாமானை அங்கேயும் வைத்துவிட்டு அவனிடமிருந்து திட்டு வாங்கிக் கொண்டிருப்பேன்'' என்றான் கமலன்.

'நீங்கள் எந்த விஷயத்தில்தான் திட்டு வாங்காமல் இருந்து விடுவீர்கள்?' என்றெண்ணிக் கொண்டாள் ரேகா தனக்குள்.

ஆனாலும் இதென்ன, ஆண்கள் என்றால் ஒரே கசாமுசாவென்று அசுத்தமாய் சாமான்கள் எல்லாம் தாறுமாறாய் இரைந்து கிடக்க வேண்டுமா? பெண் திக்கு இல்லாத வீடு என்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்துவிட வேண்டும். இந்த வீட்டிலோ சாமான்கள் எல்லாம் நீட்டாய் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருக் கின்றன. இதைப் பார்த்தால் இந்த வீட்டு எஜமானருக் குப் பெண்ணின் தேவையே வேண்டியதில்லை என்பது போலவே இருக்கிறது. இந்த விமலனைப் பார்த்தால் பெண் இல்லாவிட்டால் தான் சந்தோஷமாய் இருக்கிறது என்பதுபோல அல்லவா இருக்கிறான்! இவ்வளவு கச்சித மாய் ஒழுங்கு முறைப்படி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ள முடிந்த ஆணுக்கு உண்மையிலே பெண்ணின் தேவையே இருக்காதோ? இருந்தாலும் பொருட்படுத்த மாட்டார்கள் கூட. இப்படிப்பட்ட சுத்தம் தெரிந்த ஆணுக்கு மனைவியாகும் பெண் செத்தாள்! பிரம்மச்சாரி களின் வீடு இவ்வளவு நீட்டாய் இருந்தது ரேகாவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை.

''உங்கள் விமலன் இதையெல்லாம் பண்ணு வாரா? எதிரே தென்படுகிற இந்த கிண்ணங்கள் கரண்டி களையெல்லாம் உங்கள் விமலன் தேய்த்து கவிழ்த்து வைத்ததுதானா? வேலைவெட்டி நன்றாய் வரும் போலிருக்கே?'' என்றாள் ரேகா கேலியாய்.

''எங்க விமல் தேய்த்ததாவது?'' கமலன் புரியாமல் வியப்போடு பார்த்தான்.

"பின்னே இதெல்லாம் அவரோட திறமை என்று சொன்னீங்களே?"

"ஓ! அதுவா! அழகாயிருக்கு நீ சொல்றது! நான் அவன் பண்ணினான் என்றேனா? என்ன மனுஷி நீ ரேகா? நம்ப நாட்டில் எந்த ஆணாவது பண்ணுவானா இந்தக் காரியங்களை? அப்பிடி பண்ற நாள் வந்தால் இந்த நாட்டின் சௌபாக்கியம் ஆயிரம் இதழ் தாமரையைப் போல மலர்ந்து விடாதோ? எங்கண்ணா பண்ணவில்லை. எங்க கங்கம்மா பண்ணியதுதான் இதெல்லாம்" என்றான் கமலன்.

"ஆங்! அப்படிச் சொல்லுங்கள். கடைசியில் சிறப்பு எல்லாம் பெண்ணின் கைக்குதான் என்று சொல்லுங்கள்" என்றாள் ரேகா சிரித்துக் கொண்டே.

"பெண்ணின் கையாய் இருந்து விட்டால் மட்டும் போதுமா ரேகா அம்மையாரே? வீடு, வேலைக்காரர்கள் என்றாலே எனக்குக் கல்லும் குதிரையுந்தான் ஞாபகத்திற்கு வரும். எங்கள் கங்கம்மா எல்லோர் வீட்டிலும் இவ்வளவு நன்றாய் பண்ணுவாள் என்று நீ நினைத்தால் ஏமாந்து போவாய்."

"உங்க கங்கம்மாவுக்கு எவ்வளவு வயதிருக்கும்? ஆமாம், இந்த வீட்டின் மீது அவ்வளவு அக்கறை இருந்ததென்றால் விமலன் மீது ஏதாவது ஸ்பெஷலாய் அன்பு இருக்குமோ என்னவோ?"

ரேகாவின் கண்களில் பிரதிபலித்த சந்தேகத்தை நன்றாய் புரிந்துகொண்டு விட்டான் கமலன்.

"பெண் புத்தியைக் காட்டிக் கொண்டுவிட்டாய் டியர்! கங்கம்மாவுக்கு வயது அறுபதிற்குக் குறையாமல் இருக்கும். ஆனால் ஆள் நல்ல திடமாய் கர்லாக் கட்டையைப் போல இருப்பாள். வேலையில் இறங்கி விட்டால் பத்துப் பேருக்குச் சமானம். வாயைத் திறந்து

விட்டால் நூறுபேருக்கு பதில் சொல்லி விடுவாள், கொஞ்சம் எங்க விமலனிடந்தான் பயம், அடக்கம் எல்லாவற்றையும் காட்டுவாள்.''

''அதென்ன ஸ்பெஷலோ?''

''எப்பொழுதோ அவள் மகன் ஒரு கொலைக் கேசில் சிக்கிக் கொண்டு ஜெயிலுக்குப் போனபொழுது அந்தக் கேஸை விமலன் எடுத்துக் கொண்டான், அவன் திறமையால் மயிரிழையில் அவனுக்குத் தூக்கு தண்டனை தப்பிற்று. ஏழை என்று எங்க விமலன் அவங்களிடமிருந்து பீசுகூட வாங்கிக் கொள்ளவில்லை. அந்த நன்றி கங்கம்மாவிடம் நிறைய இருந்தது.''

விமலனைப் போன்றவர்களுக்கு இரக்கம் கூடவா? தயவு தர்மம் கூடவா? அவளால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

கமலன் சமையலறைக்குள் நுழைந்துகொண்டே கேட்டான்.

''ஆல் ரைட்! நாம்ப ஸ்டவ்வைப் பற்ற வைக்கப் போகிறோம். தேவியாருக்கு காபியா தேநீரா?''

''வெறும் காபிதானா?'' என்றாள் ரேகா!

''டிபன்கூட வேண்டுமா? என்ன வேண்டும், சொல்லு? ஸ்வீட் எனக்குப் பண்ண வராது. உம், எது சீக்கிரமாய் பண்ணலாம் சொல்லு?''

''உப்புமா?''

''ஓ. கே. கிராண்ட்டெட்.''

கமலன் ஸ்டவ்வைப் பற்ற வைத்தான். ரேகாவும் சமையலறைக்குள் போனாள். அலமாரியைத் திறந்து உப்புமாவுக்குத் தேவையானவைகளை எவ்வளவு வேண்டுமோ அவ்வளவை எடுத்து வைத்தாள். கமலன் கடாயியை வைத்து கடுகு முதலியவைகளைப் போட்டுக்

கொண்டிருக்கையில் அவள் மளமளவென்று இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம் முதலியவைகளை நறுக்கி தந்தாள்.

ரேகாவின் மனம் யோசித்தது. இந்த வீடும், முக்கிய மாய் இந்த சமையலறையும் அமைதியான இச்சூழ்நிலை யையும் பார்த்தால் எந்தப் பெண்ணிற்குமே இந்த வீட்டின் தலைவியாய் இருந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும் என்ற ஆசை தோன்றாமல் போகாது. எவ்வளவு சின்னதாய் அழகாய், சௌகரியமாய் இருக் கிறது என்றெண்ணிக் கொண்டாள் ரேகா.

உப்புமாவும் காபியும் பத்தே நிமிஷத்தில் தயாராகி விட்டன.

கமலன் காபியை பாட்டில் ஊற்றி, உப்புமாவை பிளேட்டுகளில் வைத்து ட்ரேயில் ஏந்திக் கொண்டு—''கீழே தயாராகி விட்டது. இனி மேலே போய் சாப்பிடு வோம். உனக்கு மாடியைக் காட்டினாற் போலவும் இருக்கும். நீ சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு வந்த பரிசுகளையெல்லாம் காட்டி விடுகிறேன்'' என்றான்.

ரேகா தலையாட்டினாள். இருவரும் மாடிக்கு வந்தார்கள். மாடியில் வராந்தாவையொட்டி இரண்டு அறைகள் இருந்தன. அதில் வலது பக்கமாய் இருந்தது கமலன் விமலனின் படுக்கையறை. இன்னொன்று விமலனின் ஸ்டடி ரூம். மீதி பாகமெல்லாம் காலியாய் இருந்தது. கோடைகாலத்தில் கட்டிலைப் போட்டுக் கொண்டு படுத்துகொள்ளலாம் அங்கே. நிலா வெளிச்சத் தில் உட்கார்ந்து பேசலாம். அங்கிருந்து பார்த்தால் தொலைவில் கோவில் கோபுரம் தென்பட்டது. காற்று நன்றாய் வீசிற்று. அறையில் கட்டிலில் விரிக்கப் பட்டிருந்த துப்பட்டிகளோடு ஜன்னல் கதவுகளின் திரைச் சீலைகள் மேட்ச் ஆகும்படியாய் இருந்தன.

ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் சிரத்தை எடுத்துக் கொண்டிருந்த விஷயம் நன்றாய் தெரிந்தது.

விமலனின் ஸ்டடி ரூமில் இருந்த பீரோக்களில் சட்டப் புத்தகங்கள் நிறைய அடுக்கி வைக்கப் பட்டிருந்தன ஜன்னலோரமாய் எழுதும் மேஜையும் சுழல் நாற்காலியும் இருந்தன.

கமலன் வராந்தாவிலிருந்த டீபாயைக் கொண்டு வந்து இரு கட்டில்களுக்கும் நடுவே போட்டு, அதன் மேல் ட்ரேயை வைத்தான்.

''உட்கார் ரேகா'' கமலன் ரேகாவை உபசரித்து விட்டு, வழக்கப்படி தன் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

ரேகா வந்து விமலனின் கட்டிலோரத்தில் பட்டும் படாமலுல் உட்கார்ந்துகொண்டாள்.

''சாப்பிடுங்கள் தேவியாரே'' உப்புமா தட்டை நீட்டினான்.

ரேகா உப்புமாவைச் சாப்பிட்டுக்கொண்டே அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''கமல்! இவ்வளவும் உங்களுடைய சொத்து தானா? விமலனுக்கு இதில் பாமோ இல்லையா?'' என்று கேட்டாள்.

''எல்லாம் என்னோடதுதான். எப்படி இருக்கும்? இதெல்லாம் எங்கம்மா பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த சீதனம். விமலனின் அம்மா ஏழைக் குடும்பத்தி லிருந்து வந்தவங்க. எங்கப்பாவின் முதல் மனைவி அதான் விமலனின் அம்மா செத்துப்போனதுமே எங்கம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு அவங்க வீட்டோடு வீட்டு மாப்பிள்ளையாய் வந்துட்டாரு. எங்க தாத்தா ரொம்ப நல்லவராதலால் சிறு வயதிலேயே

எங்களுக்கு அப்பா இல்லாதபோதிலும் விமலனைக்கூட என்னோடு வளர்த்து படிப்பு சொல்லித்தந்தார்.''

ரேகாவுக்கு மிகச் சந்தோஷமாயிருந்தது அச் செய்தி.

''அப்படீன்னால் விமலனுக்கு இந்த வீட்டில் தன்னோடது என்று எதுவுமே இல்லைன்னு சொல்லுங்கள்!'' என்றாள்.

கமலன் தலையை சொரிந்துகொண்டான்.

''எதுவுமே என்றால்? அடுத்த அறையில் வண்டி வண்டியாய் இருக்கிற அந்த புத்தகங்கள் எல்லாம் அவனோடதுதானே?''

''புத்தகங்கள் விஷயத்தை விடுங்கள், கமல்! ஒருக்கால் எப்பொழுதாவது உங்களிருவருக்கும் அபிப்பிராய பேதம் வந்ததுன்னு வையுங்கள், எனக்கு அவரைப் பிடிக்கவில்லைன்னு வையுங்கள்...''

''எனக்கு வரப்போகிற மனைவிக்கு அவனைப் பிடிக்கவில்லைன்னு வைத்துக்கொள், அப்பொழுது நான் 'மிஸ்டர் விமல், கெட் அவுட்' என்று சொன்னால் வீட்டை விட்டு கட்டிய துணியோடு அவன் வெளியே நடக்க வேண்டியதுதான்'' கர்வமாய் மார்பைக் காட்டிக் கொண்டே சொன்னான் கமலன்.

ரேகாவுக்கு விமலன் தன்னைவிட எந்த விதத்திலும் மேலானவனாய் தோன்றவில்லை.

ஒன்றுமில்லாத விமலனுக்கு எதைப் பார்த்து அவ்வளவு திமிர்! அவளுக்கும் அவனுக்கும் எந்த விதத்திலும் வித்தியாசமில்லை. இருவரும் ஒரே ரகமாய் தான் இருக்கிறார்கள். அவன் ஆணாய் இருப்பதால் கொஞ்சம் கஷ்டப்பட்டு அந்த சட்டப்படிப்புப் படித்து பட்டம் வாங்கியிருக்கிறான்.

ஒன்றுமே இல்லாத மனிதனுக்கு ஏன் அந்தப் பெருமையும் தடபுடலும்? ரேகாவுக்கு இன்றைக்கு மிக உற்சாகமாய் இருந்தது. விமலனின் நிஜ சொரூபம் தெரிந்து விட்டாற்போல இருந்தது.

காபியைக் குடித்துகொண்டே, கமலனோடு பேசிக் கொண்டே அவன் வாங்கிய பரிசுகளைப் பார்த்துக் கொண்டே, மற்றொரு முறை அறையைச் சுற்றுமுற்றும் பரிசோதித்த ரேகாவின் பார்வை சட்டென்று ஓரிடத்தில் நின்றுவிட்டது.

விமலனின் தலைமாட்டில் இருந்த தலையணை கிழியத் தயாராய் இருந்தது. மிகப் பழையதாய் நடுவில் கலர் நூல்களில் 'விமலன்' என்று கோணலும் மாணலு மாய் தைக்கப்பட்டிருந்த எழுத்துக்களோடு சாயம் போய் விட்டிருந்தது. ரேகா அந்த தலையணையை கவனமாய் பார்த்தவள், "இதென்ன, இவ்வளவு பழைய தாய் இருக்கிறதே! பார்த்தால் த்ரேதா யுகத்துத் தலையணையைப் போல இருக்கு. யாராவது ப்ரெசன்ட் பண்ணியதா?" என்றாள், அதை எடுத்து மடியில் வைத்துக்கொண்டே.

கமலன் முகத்தைச் சுளித்துக்கொண்டு "ஆமாம்" என்றான்.

"யார் தந்தாங்க?" விமலன் அவ்வளவு ஜாக்கிரதை யாய் பத்திரப்படுத்தி வைத்திருந்த இந்த ஞாபகம் யாருடையதாய் இருக்கும் என்ற ஆர்வத்துடன் கேட்டாள்.

"அவங்கம்மா."

ரேகா ஆச்சரியமடைந்தவளாய் பார்த்தாள்.

"அது எங்க தாத்தா காலத்துத் தலையணை. இன்றைக்கோ நாளைக்கோ அவன் பிறந்த நாளாகவோ அல்லது அவங்கம்மா இறந்த நாளாகவோ இருக்கும்

வருஷத்தில் அந்த ரெண்டு நாட்கள் மட்டுமே வைத்துக் கொண்டு படுத்து விட்டு திரும்பவும் பத்திரமாய் பீரோவில் வைத்துப் பூட்டி விடுவான். அவனும் அவனோட அர்த்தமில்லாத சென்ட்டிமென்ட்டும்! எனக்கோ முட்டாள்தனம் என்று தோன்றும். அதைச் செத்தாலும் வண்ணானுக்குக்கூட போடமாட்டான். தானே தோய்த்து இஸ்திரி போட்டுகொள்வான்.''

ரேகா ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். அவன் தாய் தந்தையா இவ்வளவு நாட்களாய் மிக ஜாக்கிரதையாய் பேணிக்கொண்டு வருகிறான்! ராட்சசத் தன்மைகொண்ட அவன் மனநிலையில் இவ்வளவு நுட்பமான உணர்ச்சிகள் கூடவா? ரேகாவால் ஏனோ நம்ப முடியவில்லை.

கமலன் விமலனின் சிறு வயதைப் பற்றித் தனக்கு ஞாபகமிருந்த ஓரிரண்டு சம்பவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ரேகா அவன் வார்த்தைகளைக் கேட்டுக்கொண் டிருந்தாற்போல நடித்துக்கொண்டே 'விமலன்' என்ற எழுத்துக்கள் இருந்த இடத்தில் கொஞ்சம் காப்பியைச் சிந்திவிட்டு, கமலன் பார்க்காதவாறு அதைப் பழைய இடத்திலே வைத்துவிட்டாள். அந்த காபிக் கறையை அதில் பார்க்கும்பொழுது அவன் முகம் எப்படிப்போகும் என்று பார்க்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு. விமலன் தலைக்குத் தடவிக்கொள்ளும் ஹேர் ஆயில் வாசனை மூக்கைத் துளைத்தது. ஏதோ இனிமையான, மயத்தைத் தரும்படியான வாசனையைப் போல இருந்தது.

ரேகா காபியைக் குடித்து முடித்ததுமே கட்டிலை விட்டிறங்கி வந்து ஜன்னலுக்கருகில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். அங்கிருந்து வீதியைப் பார்த்தபொழுது சாலைக்கு இருமருங்கிலும் இருந்த

வீடுகள் அழகாய் கம்பீரமாய் தாம் செல்வந்தர்கள் என்று ஒருவரோடொருவர் போட்டி போட்டுகொண்டு எடுத்துக்காட்ட விரும்பினாற்போல ஒவ்வொரு வீடும் கட்டிட அமைப்பில் ஒன்றைத் தூக்கி அடிக்கும்படியாய் இன்னொன்று இருந்தது.

ரேகா பார்த்துகொண்டிருக்கும்பொழுதே அந்த வீதியில் கமலன் வீட்டிற்கு எதிர்த்த வரிசையில் அந்தப் பக்கத்திலிருந்து இரண்டாவதாய் இருந்த வீட்டிற்கு முன்னால் ஒரு கருப்புக் கார் வந்து நின்றது. அந்தக் காரிலிருந்து ரேகாவின் வயதேயிருந்த ஒரு பெண்ணும், சுமார் பத்து வயது சிறுமியொருவளும் இறங்கினார்கள். இருவர் கைகளிலும் நிறைய பாக்கெட்டுகள் இருந்தன. காரிலிருந்து டிரைவர் மேலும் சில பாக்கெட்டுகளை எடுத்துகொண்டு அவர்களைத் தொடர்ந்து உள்ளே போனான். ரேகா கண்கொட்டாமல் அவர்களையே பார்த்துகொண்டிருந்தாள்.

அதற்குள் கமலன் எப்பொழுது வந்தானோ தெரியாது. திடீரென்று அவளுக்குப் பின்னால் வந்து நின்று சொன்னான், "ரேகா! அந்த கருப்புக் கார் நின்றதே இப்பொழுது, அந்த வீடுதான் விஸ்வநாதனின் வீடு. அந்தக் காரிலிருந்து இறங்கிய அவ்விருவரும் அவருடைய மகள்கள். பெரிய பெண் லலிதாவும், சிறிய பெண் ரஞ்சிதாவும்."

"விஸ்வநாதன் என்றால்?"

"அன்றைக்கு நீ எங்க விமலனோடு பார்க்கில் பார்த்தாயே, அவர்."

"ஓ!" ரேகாவுக்கு உடனே ஞாபகம் வந்துவிட்டது.

ஏனோ தெரியவில்லை, நிறைந்த முகத்துடன், கம்பீரமாய், பெரிய மனிதர் தோரணையில் தென்பட்ட

அவர் ரேகாவின் மனதில் அழியாத சிற்பமாய் இடம் பெற்றுவிட்டார்.

ரேகா ஆர்வத்துடன் அந்த வீட்டைப் பார்த்தாள். சுற்றிலும் விசாலமாய் இருந்த முன் எல்லைகளுடன், சிரத்தையாய் வளர்ந்திருந்த தோட்டங்கள் தென் பட்டன. கமலனின் வீடு அப்படி இருந்திருக்க வேண்டும். இவ்வளவு பணம் இருக்கும் கமலனிடம் கார் ஏன் இல்லையோ?

உடனே கமலனை திரும்பிப் பார்த்து கேட்டாள், "கமல்! நீங்கள் அந்த மாதிரி ஒரு வீட்டை ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது?"

"எந்த மாதிரி?"

ரேகா சுட்டிக் காட்டினாள்.

"அதுவா! விடிஞ்சாற் போலதான்! இப்பொழுதே இந்தச் சின்ன வீட்டைச் சரியாய் வைத்துக்கொள்ள முடியாமல் தவித்துப் போய்கொண்டிருக்கிறோம். நாளுக்கு இருபது மணி நேரம் வெளியே சுற்றிக் கொண்டிருக்கும் எங்களுக்கு இதை விடப் பெரிய வீடு எதுக்கு? இரண்டே அறைகள் இருந்தாலே போதுமே"

ரேகாவுக்கு கமலனின் வார்த்தைகள் ரசிக்கவில்லை. இந்த உலகத்தில் நிறைய பேர் அப்படித்தான். கடவுள் வழங்கியதை சேமித்து வைக்க வேண்டும் என்று ஜாக்கிரதைகளை எடுத்துகொண்டு பெரும்பாலான தொகைகளைச் செலவு கூட பண்ணமாட்டார்கள். சேர்த்து வைத்து அதைப் பார்த்துத் திருப்தியடைவ திலேயே நிறைய பேர் வாழ்க்கை கழிந்துபோய் விடுகிறது. அனுபவிக்க மாட்டார்கள். நடுத்தரக் குடும்பத்தைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் பேர்கள் இந்த 'ஜாக்கிரதையாய் சேமிக்கும்' சுழற்காற்றில் சிக்குண்டு

விர்விர்ரென்று சுழன்றுகொண்டே அப்படியே கண்ணை மூடி விடுவார்கள்.

ரேகாவுக்கு திடீரென்று தான் இங்கே வராமல் இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று தோன்றிற்று. இதையெல்லாம் பார்த்த பிறகு மனதில் ஏதோ அதிருப்தியும் வெறுமையும்தான் எதையோ பெறமுடியாமல் போய்கொண்டிருக்கிறோம் என்ற உணர்ச்சியும் ஏற்படத் தொடங்கிற்று. அவள் விரும்பினால் இதெல்லாம் அவளுடையதாகி விடும். சந்தேகமில்லை. ஆனால் கமலனின் மனைவியாக வேண்டுமென்றால் அவள் தனக்கு உயிரினும் மேலான ஆசையைத் துறக்க வேண்டும். வாழ்க்கையில் இருக்கும் ஒரே ஒரு கனவைப் பணயமாய் வைக்கவேண்டும். மனிதன் எப்படிப் பட்டச் சூழ்நிலையிலும் ஒன்றைப் பெறுவதற்காக இன்னொன்றை இழந்துவிடக்கூடாது. அதிலும் விலை மதிப்பு வாய்ந்ததாய் எண்ணுவதை மட்டும் இழக்கவே கூடாது.

கமலன் ரேகாவின் கவனத்தை இந்த பக்கமாய் திருப்புவதற்காக மெதுவாய் திரைச் சீலையை மூடி விட்டான்.

''ரேகா.'' என்றான் பரிவோடு.

''என்ன?'' எதேச்சையாய் அவன் பக்கமாய் திரும்பியவள் கேட்டாள்.

''ரேகா'' கமலனின் குரல் ஏதோ போல் இருந்தது. அவன் கண்களில் புதிய ஒளி தென்பட்டது.

விழிப்படைந்த ரேகா கண் மூடித் திறப்பதற்குள் மனதில் தோன்றிய பதற்றத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் கட்டுப்படுத்திகொண்டாள்.

''என்ன கமல்?'' அவனிடம் தோன்றிய உணர்ச்சி களைப் புரிந்துகொள்ளாதவளைப்போலவே கேட்டாள்.

கமலன் பதிலுக்கு உடனே தன் இரு கைகளையும் நீட்டினான்.

''கமல்.''

''கிட்டே வா ரேகா.''

சுற்றிலும் சூழ்ந்திருந்த ஏகாந்தம் கமலனிடம் எப்பொழுதும் இருந்துவரும் பயத்தையும் தயக்கத்தையும் விரட்டியடித்து விட்டது. விருப்பத்தால் அவன் கண்களில் மயக்கம் ஏறியிருந்தது. ரேகாவுக்கு அவனைத் தடுப்பது முடியாத காரியம் என்று தோன்றிற்று. சட்டென்று கைப்பையை எடுத்துகொண்டு ''நான் போகிறேன் கமல்! ரொம்ப நேரமாயிடுத்து'' என்றாள்.

''ஒரு நிமிஷத்தில் தாமதமாகிவிடாது.''

''கமல், ப்ளீஸ்!'' கெஞ்சினாள் ரேகா.

''ப்ளீஸ் ரேகா!'' வேண்டிக்கொண்டான் அவன்.

அவன் கைகள் விருப்பத்தோடு புஸ்ஸென்று சீறும் ஜோடிப் பாம்புகளைப் போல நீட்டிகொண்டிருந்தன. கொஞ்சம் நகர்ந்தால் போதும் பாய்ந்து வந்து தன்னைக் கட்டி அணைத்துக்கொண்டு விடும் போலிருந்த அவைகளையே ஒரு வினாடி பைத்தியம் பிடித்தவளைப் போல பார்க்கத் தொடங்கினாள் ரேகா.

கமலனிடம் என்றுமே கண்டிராத உணர்ச்சி துடிப்பையும் ஆவேசத்தையும் பார்த்த ரேகாவுக்கு உண்மையாகவே பயம் தோன்றிற்று. அவனைத் தடுப்பது முடியாத காரியம் என்றெண்ணியதுமே அவள் முதுகுத் தண்டு பயத்தால் சிலிர்த்தது. ''ஊஹூம், வேண்டாம்'' மறுத்து தலையசைத்து தன் விருப்ப மின்மையை நன்றாய் தெரியப்படுத்திவிட்டு மறு

பேச்சிற்கு இடமில்லாமல் சட்டென்று மின்னலாய் வெளியே ஓடிவிட்டாள்.

"ரேகா" பின்னாலிருந்து கத்திக்கொண்டிருந்தான் கமலன்.

சூறாவளியாய் வெளியே ஓடிவந்து, இரண்டு இரண்டு படிகளாய் தாண்டிக்கொண்டே கீழே இறங்கி வந்துகொண்டிருந்த ரேகா நடுவில் திடீரென்று தடுத்து நிறுத்தினாற்போல நின்று விட்டாள். எதிரே விமலன் மெதுவாய் ஒவ்வொரு படியாய் ஏறி வந்துகொண்டிருந் தான். மாடியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த பேச்சு குரல் யாருடையதாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டே ஏறிவந்துகொண்டிருந்த அவன் ரேகாவைப் பார்த்ததுமே டக்கென்று நின்றுவிட்டான். ரேகாவின் கண்கள் பூதத்தைப் பார்த்த சிறு குழந்தையை போல பயத்தால் படபடத்து கொண்டிருந்தன. விமலன் கண்கள் அகல விரிய தன் கண்களையே தான் நம்ப மாட்டாதவனாய் பார்த்துக்கொண்டிருந்தான்.

"ரேகா, ப்ளீஸ், ஒரு தடவை கிட்டே வா. கணவன் மனைவியாகப் போகிறோம், நம்ப வீடு, நம்ப அறை. இதில் தப்பென்ன இருக்கு?" அறைக்குள்ளிருந்து கெஞ்சுவது போல கேட்டுகொண்டிருந்தது கமலனின் குரல். சுற்றுவட்டாரத்தில் யாருமே இல்லை என்ற தைரியத்தில் அவன் சங்கோஜமில்லாமல் பேசிக் கொண்டிருந்தான். ரேகாவுக்கு பூமியே வெடித்து தன்னை விழுங்கிவிட்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று. விமலன் ஒரு வினாடி ரேகாவையும் அறையையும் மாறிமாறிப் பார்த்தான். பிறகு அவன் பார்வை ரேகாவின் மீது நிலைத்தது. அக்கண்களில் உலகத்திலுள்ள வெறுப்பு, ஏமாற்றம் அவ்வளவும் தேங்கி நின்றாற்போல இருந்தன. ரேகா ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்று வழிவிடவே, அவன் மாடிக்குப் போய்விட்டான்.

உள்ளே வந்த விமலனைப் பார்த்ததும் கமலன் எப்படி தூக்கிவாரிப்போட நின்றுவிடுவான் என்று ரேகா ஊகித்துகொண்டாள். கமலன் பேச்சு மூச்சில்லாமல் சட்டென்று வாசலை தாண்டப்போனான். ''கமல்'' பின்னாலிருந்து இடியாய் கேட்டது விமலனின் குரல்.

''எ... என்ன?'' சுண்டினால் ரத்தம் வரும் போலாகி விட்ட முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான் கமலன். அவன் முகத்திலிருந்த மயக்கமும் ஆசையும் விமலனைக் கண்டதுமே சூரியனைக் கண்ட பனி போல மாயமாகிவிட்டன.

''இதென்ன வீடா, அல்லது கள்ளுக்கடையா?'' விமலன் கீழேயிருந்த தண்ணீர் தம்பளரைக் காலால் உதைத்து தள்ளிய சப்தமும் அது உடனே சுவர் வரை போய் உருண்டு நின்றதும் கேட்டது.

கமலன் பேசவில்லை. அறையெல்லாம் பயங்கர மான நிசப்தத்தில் ஆழ்ந்து போனாற்போல ஆயிற்று: அந்த நிசப்தத்தைச் சிதறடித்துகொண்டே சிம்ம கர்ஜனையாய் கேட்டது அவன் குரல்.

''புத்தி இல்லையாடா உனக்கு? இப்படிப்பட்ட கடைச்சரக்குகளை வீட்டிற்கு கூட்டிக்கொண்டு வருவாயா? இன்னொரு தடவை இப்படிப் பண்ணினா யானால்...''

ரேகாவுக்குத் தலை மீது இடி விழுந்தாற்போல ஆயிற்று. விமலன் இன்னும் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். கமலன் பதிலுக்கு ஏதோ முனகிக் கொண்டிருந்தான்.

ரேகா அதற்குமேல் கேட்க முடியாதவளாய் விருட்டென்று படியிறங்கி வந்துவிட்டாள். 'இப்படிப் பட்ட கடைச்சரக்கு' விமலன் வேண்டுமென்றே குத்திய அந்த விஷ அம்பு தன்மானமுடைய ரேகாவின் இதயத்

தில் நன்றாய் பதிந்து போய்விட்டது. அந்த வருத்தத்தைத் தாங்க முடியாமல் அவள் கண்களிலிருந்து கிர்ரென்று நீர் சுரந்தது. ரேகா விவரம் தெரிந்ததிலிருந்து நிறைய அவமானங்களை அடைந்திருக்கிறாள். ஆனால் விமலன் செய்த இந்த அவமானத்தைப் போல் எதுவுமே இல்லை.

கீழ் அறையில் வந்து நின்ற ரேகா ரோஷத்துடன் செய்வதறியாமல் நின்றுகொண்டிருந்தாள்.

பின்னாலிருந்து கமலன் வந்தான். "ரேகா! ப்ளீஸ்! நீ ஒன்றும் நினைத்துகொள்ளாதே. விமலனுக்கு இப்பெல்லாம் வாயில் வந்தபடி பேசுவது பழக்கப் பட்டுப் போய் விட்டது" என்றான் கைகளைப் பிசைந்துகொண்டே கமலன். அவன் குரலில் இருந்த மயக்கம் முற்றிலும் விடுபட்டுபோய் விட்டது. எதிர் பாராமல் நேர்ந்துவிட்ட இச்சம்பவத்திற்கு என்ன சால்ஜாப்பு சொல்லிக்கொள்வது என்று தெரியாமல் கலக்கமடைந்துகொண்டிருந்தான்.

கண்களில் பொங்கி வந்த கண்ணீரை அரும்பாடு பட்டு அடக்கிக்கொண்ட ரேகா அவனை நேராய் பார்த்து கேட்டாள்—

"கமல்! ஒரு வார்த்தை கேட்கிறேன். இது உங்கள் வீடா? அவர் வீடா?"

"என் வீடுதான்."

"அப்படியிருக்கும்போது அவரிடம் தெளிவாய் என் வீடு, என் இஷ்டம் என்று ஏன் சொல்லவில்லை நீங்கள்?"

"சொல்லலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால், ஆனால் அப்படி திடீரென்று பார்த்ததும்..."

"நிஜத்தைச் சொல்லுங்கள். அவர் வீட்டில் இல்லை, இப்போதைக்கு வரமாட்டார் என்ற தைரியத்

தில்தானே என்னைக் கூட்டிட்டு வந்தீங்க? அப்படித் தானே?''

''அப்பப்பா! அதில்லை ரேகா.''

''இன்றைக்கு உங்கள் வீட்டிற்கு என்னை பலவந்த மாய் அழைத்து வந்து நீங்கள் காட்டிய இந்த அதிதி மரியாதையை நான் ஜென்மத்திலும் மறக்கமாட்டேன்'' கண்களில் துளிர்த்த நீரை அடக்கிக்கொண்டே வேக மாய் முகத்தைத் திருப்பிக்கொண்டாள் ரேகா.

கடைச்சரக்காம் கடைச்சரக்கு! தான் என்ன ரகமோ? தானும் ஒரு பெண்ணாய் இருந்து, தந்தை இல்லாமல் போய், தாய் எதற்கும் பயன்படாமல் போய் அக்கம்பக்கத்தாரோடும், வீட்டாரோடும், வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷமும் யுத்தம் பண்ணிக்கொண்டு இருபது வருஷகாலத்தைக் கழித்திருந்தால்தான் எந்த ரகம் என்று தெரிந்திருக்கும்! எதைப் பார்த்து இந்த அகங்காரம்? தனக்கு என்ன இருக்கிறது என்று இந்த திமிர்!

ரேகாவுக்கு துக்கம் தணிந்து ரோஷம் வந்தது. இருவரும் வெளியே வந்தார்கள். டாக்சி பிடித்து ஏறி உட்கார்ந்துகொண்டார்கள். கமலன் ரேகாவின் கையைத் தன் கையில் எடுத்துகொண்டு நாத் தழுத் தழுக்கச் சொன்னான்— ''ரேகா, இந்த உதவாக் கரையை, யாரையும் எதிர்த்துப் பேச தைரியமில்லாத இந்தக் கோழையை மன்னித்துவிடு ரேகா! நான் சிறு வயதிலிருந்தே அப்படித்தான். இந்த உலகத்தில் உன் ஒருத்தியிடந்தான் எனக்கு நான் விரும்பிய சுதந்திரம் கிடைத்தது. அதனால்தான் உன் பரிச்சியம் எனக்கு அவ்வளவு அபூர்வமாகிவிட்டது. அதனால்தான் அடிக்கடி என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்று பைத்தியம் பிடித்தவனைப் போல வெட்கத்தைவிட்டு உன்னை கேட்டுகொண்டேயிருக்கிறேன். உன்னை மனைவியாய் அடைந்து என் வாழ்க்கையை உன்

கையில் ஒப்படைத்துவிட்டு, நிம்மதியாய், எளிமையாய் சந்தோஷமாய் வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்பது என் ஆசை. தெய்வம் என் வாழ்க்கையில் என்ன எழுதி வைத்திருக்கிறதோ தெரியவில்லை'' கடைசி வார்த்தைகள் கமலனின் இதயத்தைப் பிளக்கும் படியாய் வெளிவந்ததை ரேகா புரிந்துகொண்டாள். ரேகா இரக்கம் ததும்ப அவன் கைகளைத் தன் கைகளில் எடுத்துகொண்டாள். டாக்ஸி ரேகாவின் வீட்டை நெருங்கிகொண்டிருந்தது.

ரேகா திடீரென்று மென்மையாய், மிக உறுதியாய் சொல்வது போல சொன்னாள், ''நான் சம்மதிக்கிறேன். கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்கள்.''

''ரேகா...''

''நிஜந்தான்! இந்தக் கல்யாணத்தைப் பற்றி எங்கள் வீட்டாருக்கோ விமலனுக்கோ தெரியப்படுத்த வேண்டிய தேவையில்லை. கல்யாணம் மிகவும் சுருக்க மாய் ரகசியமாய் நடந்தேறிவிடவேண்டும்.''

''சரி ரேகா.''

''கமல்! திரும்பவும் உங்கள் விமலன் மறுப்பதற்கு வழியில்லாதபடி எல்லாம் ரகசியமாய் நடந்தேற வேண்டும்.''

''அதையெல்லாம் நான் பார்த்துகொள்கிறேன். விமலன் இல்லை, நீ ஒப்புக்கொள்ள வேண்டியது ஒன்று தானே தவிர, தெய்வமே கூட நமக்கு குறுக்கே வந்துவிட முடியாது.''

கமலனின் இதயம் புல்லரித்தது. கண்கள் பிரகாச மாயின. அவன் உள்ளம் வானத்தில் பறக்கத் தொடங் கிற்று. 'தாங்க்ஸ் விமல்! மெனி மெனி தாங்க்ஸ்! எதிர்

பாராமல் நீ செய்த அவமானம் எனக்கு வரமாய் மாறிவிட்டது. ஜென்மமெல்லாம் உனக்கு நன்றியோடு இருப்பேன்' மனதிற்குள் வாழ்த்தினான் கமலன்.

## 20

இரவு பத்து மணியைத் தாண்டிவிட்டது. லாயர் யஷ்வந்தன் வீட்டு ஆபீசு அறையில் இன்னும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவருக்கெதிரே விமலன் உட்கார்ந்திருந்தான். லாயர் காகிதங்களை அடுக்கி வைத்துக்கொண்டே விமலனோடு பேசிக்கொண்டிருந்தார். வெகுநேரமாய் அவர்களுக்கிடையே பிரச்சினையைப் பற்றிய வாதனைகள் நடந்துகொண்டிருந்தன. லாயர் முடிவாய் சொல்லிவிட்டார்— ''என்ன பண்ணி விடுவாயப்பா நீ? அவன் என்ன சின்னப் பையனா கன்னத்தில் இரண்டு கொடுத்து அறைக்குள் தள்ளி பூட்டுவதற்கு? மைனரைத் தாண்டிய ஆள். பெண்களின் வலையில் விழாமல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்ற புத்தி அவனுக்கு இருக்கணுமே தவிர, நீ எவ்வளவு நாளைக்குதான் இப்படி தவித்துக்கொண்டே உட்கார்ந்திருப்பாய்?''

''அதனால்தானே நான் கூடிய சீக்கிரத்தில் அவனுக்கு கல்யாணம் பண்ணிவிடணும் என்று முயன்றதே! அந்த புண்டரீகனின் சம்பந்தம் முடியும் தறுவாயில் வந்த சமயத்தில் இதோ, இப்படி நடந்து விட்டது.''

''ஆமாம், நீ என்னதான் பண்ணச்சொல்கிறாய்? ஆலோசனை கேட்க என்னிடம் வந்தாய். நன்றாய் தான் இருக்கு. ஆனால் எந்த பக்கத்திலிருந்து பார்த்தாலும் நாளைக்கு இந்தக் கல்யாணத்தை தடுக்க கூடிய வழியே தென்படவில்லை எனக்கு.''

''நானும் அதான் யோசிக்கிறேன். சரி நாளைக்கு எப்படியோ தடுத்து விடுகிறேன்னு வையுங்கள். அப்புறமாய்? நான் நாலைந்து நாளில் டில்லிக்குப் போகணும். திரும்பி வர பத்து பதினைந்து நாளாகும் அந்தப் பெண்ணோ எதற்கும் துணிந்தவள். இவனோ வெரும் அவசரக்காரன். அதற்குள் என்ன வேணு மானாலும் ஆகலாம். இந்த யோசனையால்தான் எனக்கு மூச்சுக்கூட விட முடியவில்லை.''

லாயர் பதில் பேசவில்லை.

விமலன் பேப்பர் வெயிட்டைத் திருப்பிக் கொண்டே ''அப்படியும், போகட்டும் அவன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறோனே என்றெண்ணி, நான் அந்தப் பெண்ணை பற்றித் துப்புத் துலக்கினேன். எனக்கு எந்தப் பக்கத்தி லிருந்தும் நல்லதாகவோ, கௌரவமானதாகவோ தென்படவில்லை. தாயின் நடத்தை நல்லதில்லையாம். அது ஒரு மர்மமாய் விஷயம் தெரியமாட்டேங்கிறது. தம்பி ஒருத்தன் உண்டாம். ஆனால் வெறும் ரௌடி. சமீபத்தில் ஏதோ திருட்டுத்தனம் பண்ணிவிட்டு ஜெயிலில் இருக்கிறான். அந்தப் பெண்ணோட நடத் தையோ கேட்க வேண்டாம். வேறு யாரும் சொல்லத் தேவையில்லை. என் கண்ணாலே நானே பார்த்தேன். இதெல்லாம் தெரிந்தும்கூட அவன் முட்டாள்தனமா கவோ அப்பாவித்தனமாகவோ அந்தப் பெண்தான் வேண்டும் என்றால் என்னால் பார்த்துக் கொண்டே எப்படி சும்மாயிருந்து விடமுடியும்?''

''சும்மாயில்லாமல் என்ன பண்ணி விடுவாய்? நீ அவன் நலனுக்காகச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து விட்டாய் இனி அவன் தலையெழுத்து என்று கைகளைக் கழுவிக் கொண்டு சும்மாயிருந்து விடு. நானும் நாலு வருஷமாய் பார்த்துக் கொண்டேதானே வரேன். நீ கமலனைப் பற்றி யோசிக்கும் சமயத்தை

உன் கேசுகளுக்காகப் பயன்படுத்தியிருந்தால் உன் வரும்படி இதற்குள் இரண்டு மடங்கு ஆகியிருக்கும்.''

விமலன் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடக்கத் தொடங்கினான். அவன் மூளை தீவிரமாய் வேலைப் பண்ணிக் கொண்டிருந்தது. யோசனையுடனேயே சொன்னான்.

''இவன் சாதாரணமாய் யாரோடும் இவ்வளவு நாள் சிநேகத்தை நீடித்து வைத்துக் கொள்ளமாட்டான். இவனுக்கு சிநேகத்திலிருந்து தலைவாரிக் கொள்வது வரை அத்தனையிலும் புதுசு புதுசாய் இருக்கணும். உடைகளாய் இருந்தாலும் சரி, நாலு தடவை போட்டுக் கொண்டதும் வெறுத்துப்போய் யாருக்காவது தூக்கி தானம் பண்ணி விடுவான். தங்கம்மா சாப்பாட்டில் ஒரே வாரத்தில் இரண்டு தடவை எந்தப் பொரியலையோ சாம்பாரையோ பண்ணிவிட்டாலும் போதும் 'எப்பொழுது பார்த்தாலும் இதேதானா?'' என்று தட்டைத் தூக்கி எறியாதக் குறையாய் தள்ளி விட்டுப் போய் விடுவான். அப்படிப்பட்டவன் இவ்வளவு நாட்களாய் இந்தப் பெண்ணோடு சிநேகத்தை எப்படி நீடித்துக் கொண்டிருக்கிறானோ?''

''அதான் தெரிகிறதே! அது அந்தப் பெண்ணோட சாமர்த்தியம்! இவனோட முட்டாள்தனம் என்று!''

''உங்களுக்கும் அப்படித்தான் தோன்றுகிறதா?''

''இருக்கிற விஷயத்தைச் சொல்றேன். நாளைக்கு முகூர்த்தம் எத்தனை மணிக்கு? விவரங்களை நன்றாய் தெரிந்து கொண்டாயா?''

''ஆங்! காலை பதினோரு மணிக்கு ரெஜிஸ்தரார் ஆபீசில் கையெழுத்துப் போடுவது, மாலையில் திருநீர்மலை முருகன் சந்நிதியில் சாஸ்திரோக்தமாய் அக்னி சாட்சியாய் தாலி கட்டுவது.''

"ரொம்ப ரகசியமாய்தான் ஏற்பாடு பண்ணிக் கொண்டிருக்கிறாங்க."

"அதான் சொன்னேனே! அந்தப் பெண் அசாதாரணமான சாமார்த்தியசாலி என்று! எல்லா பக்கங்களிலிருந்தும் தன் உரிமைக்கு ருசுக்களையும் சாட்சிகளையும் சேகரித்துக் கொண்டிருக்கிறாள் என்றும் சொல்லுங்கள்."

"நம் டாக்டர் சொன்னாற்போல அவர் தந்த பௌடரைக் காபியில் கலந்து காலையிலேயே அவனுக்குக் கொடுத்து விட்டுச் சும்மாயிருந்துகொள். ராத்திரி வரைக்கும் உடம்பில் சொரணைகூட இல்லாமல் அப்படியே தூங்கிக் கொண்டிருப்பான்." என்றார் அவர்.

"அதையும் பண்ணலாம். ஆனால் என்ன பிரயோஜனம்? ஒருநாள் தடுத்துவிட்டால் நின்று போய்விடக் கூடியதில்லையே? இந்த ஆபத்து நிழலாய் தொடர்ந்து கொண்டே தானே இருக்கும்? நான் டில்லிக்குப் போய்விட்டுப் பத்துப் பதினைந்து நாள் கழித்துத் திரும்பி வருவதற்குள் அவங்க திரும்பியும் ஏதாவது பண்ணி விடலாம். அங்கே போன பிறகு இந்த யோசனையால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடாதா? என் மனது என் வேலையில் நான் ஈடுபட்ட இடங்கொடுக்குமா? ஊஹூம். என்னாலாகாது. எனக்குத் தூக்கமே வராது. நான் போவதற்குள் ஏதாவது ஒன்று அவங்க ரெண்டுப் பேரும் நிரந்தரமாய் தம்பதிகளாவதற்கு முடியாதபடி பண்ணிவிட்டுப் போகணும்."

"அப்ப அந்த ரேகாவின் வீட்டிற்கே போய் அவங்களை எந்த விதத்திலாவது மிரட்டி பயமுறுத்தினால்?"

"ஊஹூம், லாபமில்லை."

"ஏன்?"

''அந்த வீட்டில் இருக்கிற ஆம்பிள்ளைக்கு வாயில் நாக்கு இல்லை. அவருக்கு நாடகப் பைத்தியம் உண்டு, வீட்டிலேயே இருக்க மாட்டார். பொம்பிள்ளை ராஜியம். அதோடுகூட அந்தப் பெண்ணை அவங்க யாராலுமே அடக்கிவிட முடியாது.''

லாயர் திரும்பவும் ஃபைல்களைப் பார்க்கத் தொடங்கினார். விமலன் தீர்க்காலோசனையில் மூழ்கியபடி குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தவன் திடீரென்று நின்றான். டக்கென்று திரும்பினான். அவனுக்கு மின்னலாய் யோசனை ஒன்று மூளையில் எளிச்சிடவே, கண்கள் மின்னின. ''ஒரு காரியம் செய்தால்?'' என்றான்.

''என்ன?'' நிமிர்ந்து பார்த்து பரபரப்போடு கேட்டார் லாயர். விமலன் அவர் மேஜைக்கருகில் வந்தான். இரண்டு உள்ளங்கைகளையும் மேஜை மீது ஊன்றிக்கொண்டு கொஞ்சம் முன்னுக்கு குனிந்து கொண்டு அவர் கண்களையே பார்த்துகொண்டு சொன்னான்— ''அந்தப் பெண்ணை நாளைக்கு நான் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டால்?''

லாயர் கண்களை அகல விரித்துகொண்டே அவனைப் பார்த்து— ''என்னது? நீயா? நீயா?'' என்றார்.

''ஆமாம், நாளை மாலையில்தானே கல்யாணம்? கல்யாணம் நடக்குமிடம் மாறிவிடும். மணமகன் மாறிவிடுவான். அவ்வளவுதான் வித்தியாசம். அவன் கட்ட வேண்டிய தாலியையே நான் கட்டிவிடுகிறேன். கமலன் அந்தப் பெண்ணின் கையில் சிக்கிக்கொள்வதை விட அந்தப் பெண்ணையே என் கையில் சிக்க வைத்துக் கொண்டுவிடுகிறேன்.''

''விமல்!'' பைத்தியமே பிடித்து விட்டது அவருக்கு. விமலன் மெதுவாய் அவருக்கெதிரேயிருந்த நாற்காலியில்

உட்கார்ந்துகொண்டே— "ஆமாம். இது நல்ல வழி. இப்படி நடந்தால் எனக்கு நிச்சிந்தையாய் இருக்கும். டில்லி இல்லை, கல்கத்தாவுக்குப் போனாலும் பம்பாய்க்குப் போனாலும் எப்பொழுது திரும்பி வந்தாலும் பயமில்லை. இதோடு போராட்டம் இருக்காது."

"விமல்! இப்படி நீ எவ்வளவு பேரைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியும்?" ஆவேசமாய் கேட்டார் லாயர்.

"கமல் இன்னொரு பெண்ணின் வலையில் விழக்கூடிய ஆபத்து இனிமேல் வராது. வர விடமாட்டேன் நான். அவன் இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாகவே ஏதோ ஒரு சம்பந்தத்தைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைத்து விடுவேன் நான்."

"விமல்! உனக்கு புத்தியே பேதலித்துவிட்டது. அவனோட க்ஷேமத்தைப் பற்றி யோசிக்கிற நீ, உன் விஷயத்தைப் பார்த்துகொள்ளவில்லை?"

"இதில் என் விஷயம் என்ன இருக்கு?"

"இல்லையா? கமலனை அபாயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு நீ அதில் சிக்கிக்கொள்கிறாய்."

"இதில் எனக்கு வரக்கூடிய ஆபத்து என்ன?"

"இல்லையா? கல்யாணம் என்றால் என்னவென்று நினைத்துகொண்டிருக்கிறாய்? ஒரு பக்கத்தில் அந்தப் பெண்ணின் குடும்பம் நல்லதில்லைன்னு சொல்கிறாய் வேறு."

"நான் எனக்காக அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லையே?"

"இருந்தால் மட்டும்? அந்தப் பெண்ணின் நடத்தை சரியில்லை என்று நீயே சொல்கிறாய். நாளைக்கு அந்தப் பெண் இதை வெளியே கொண்டுவந்து ரகளை

பண்ணினால் உலகம் வேறு விதமாய் நினைத்துக் கொள்ளக்கூடிய அவகாசம் இருக்கிறது. பொன்னான உன் எதிர்காலம் நாசமாகிவிடும். ஜாக்கிரதை விமல்! இப்பத்தான் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறாய் நீ. அதுவும் உன் தொழில் ரொம்பக் கெட்டது. பொறாமை யும் போட்டியும் இதில் அதிகம். நீ முன்னுக்கு வந்து கொண்டிருப்பதைப் பார்த்து பொறாமைப்படுபவர்கள் என்ன வேண்டுமானாலும் பண்ணலாம். கமலனைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆவேசத்தில் முன் யோசனை இல்லாமல் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வளில்லாத அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு உன் வாழ்க்கையை நடுச்சந்திக்குக் கொண்டு வந்துவிடாதே. பிறர் சிரிக்கும்படியாய் ஆகிவிடும். கமலனுக்கென்ன வந்தது? அவனுக்கு பணம் இருக் கிறது எப்படியாவது வாழ முடியும். உனக்கு உன் லாயர் தொழில்தான் வாழ்க்கை என்ற விஷயத்தை மறந்து போய்விடாதே.''

தன் நலனை உத்தேசித்து அவர் சொன்ன அறிவுரை களைக் கேட்டு விமலனுக்கு நன்றியால் கண்கள் கசிந்தன. ஆனால் தனக்கு ஏதோ ஆகிவிடும் என்று அவர் பயமுறுத்தியது அவனுக்குப் பிடிக்கவில்லை. ''என்னவாகி விடும்? அந்தப் பெண் என்னை என்ன பண்ணிவிடுவாள்?'' என்றான்.

''என்ன வேணுமானாலும் பண்ணலாம். நாளைக்கு நேராய் உன் வீட்டிற்கு வந்து உன்னோடு குடித்தனம் பண்ணப்போகிறேன் என்று சொன்னால் என்ன பண்ணு வாய் நீ?''

விமலனுக்கு அருவறுப்பு ஏற்பட்டது. அதைக் காட்டிக்கொள்ளாமல் லேசாய் தோளைக் குலுக்கிக் கொண்டே— ''வரட்டுமே. தேவையில்லாத பெண்ணை

களைந்துகொள்ளத் தெரியாத முட்டாளில்லை நான்'' என்றான்.

''இனி என்னால் உனக்கு சொல்லக்கூடியது எதுவுமில்லை.''

''இதன் மூலம் அந்தப் பெண் கமலனை மணந்து கொள்ள முடியாதபடி கைகால்களைக் கட்டிப் போட்டாற் போல ஆகும். இதை அப்புறமாய் அந்தப் பெண்ணிற்கு நான் எடுத்து சொல்லிவிடுகிறேன்.''

ஸ்ாயர் கம்பீரமாய் சொன்னார்— ''மணமகனை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதில்லை. அந்தப் பெண்ணிற்கு உடம்பில் கொஞ்சமாவது சொரணை இருந்தால் உன்னைத் தாலி கட்டவே விடமாட்டாள்.''

''அவள் உடம்பில் சொரணை இல்லாமல் பண்ணி விடுவேன் நான்.''

''அப்படீன்னால்?'' அவர் நிமிர்ந்து பார்த்தார்.

''நாளைக்கு நீங்களே நேராய் பார்க்கப்போறீங்க'' என்றான் விமலன் முறுவலுடன்.

''அங்கிருக்கும் மீதி பேர்கள் எல்லாம்?''

''அதையெற்லாம் நான் பார்த்துகொள்கிறேன். அங்கே இருக்கப் போறவங்க எல்லோரும் என் ஆட்களாகவேதான் இருப்பாங்க'' விமலன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தான்— ''சரி நான் வரேன். ரொம்ப நேரமாயிடுத்து. உங்களுக்கு சிரமம் தந்ததற்கு மன்னியுங்கள்.''

''இதில் நான் பட்ட சிரமம் எதுவும் இல்லை. உங்கள் குடும்ப நண்பனாய் இந்தக் கல்யாணத்தை தடுத்து நிறுத்துவதற்கு நீ என்ன பண்ணச்சொன்னாலும் டாக்டரைப் போலவே நானும் சித்தமாய் இருக்கிறேன். ஆனால் இப்ப நீ சொன்னது மட்டும்...''

"அந்த முடிவை மாற்றிக்கொள்ள முடியாது."

"அவசரப்படாதே. வீட்டிற்குப் போனதும் நிதானமாய் உட்கார்ந்துகொண்டு இன்னொரு முறை யோசித்துப்பார். நாளைக்கு கல்யாணத்தை வேறெந்த வழியிலாவது கூட தடுக்கலாம்."

அவன் உதடுகளில் நன்றியோடு கூடிய புன்னகை நெளிந்தது. போக முயன்றவன் நின்றான்— "நாளைக்கு நீங்கள் என்னோடு வரீங்களோனோ?"

"வராமல் இருப்பேனா? கமலனுக்காக இல்லாவிட்டாலும் உனக்காகவாவது வருவேன். எனக்கு ஒரு தங்கை மகள் இருக்கிறாள். உன்னிடம் சொல்லவில்லையே தவிர, உன் மீது ஆசை வைத்திருந்தேன்" என்றார் மூக்குக்கண்ணாடியை சரிபண்ணிக்கொண்டே. விமலன் சிரித்துகொண்டே விடை பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

"எந்த ஜமீன்தார் வம்சத்திலாவது பிறந்த ஒரே மகளுக்கு ஏகப்பட்ட சொத்து சுதந்திரங்களோடு, மருமகனாக வேண்டியவன் நீ. எந்தச் சிறப்பும் இல்லாத ஒரு சாதாரணப் பெண்ணின் கழுத்தில் கமலனுக்காகத்தான் இருக்கட்டுமே, தாலி கட்டி விடுவாயா நீ?" கோபமாய் எண்ணிக்கொண்டார் அவர்.

## 21

அன்றுதான் கமலன்—ரேகாவுக்குத் திருமணம். என்றுமில்லாத வழக்கமாய் பொலபொலவென்று விடிந்து கொண்டிருந்தபொழுதே எழுந்து விட்டான் அவன். ஷேவ் பண்ணிக்கொண்டான். ஏழு மணிக்கெல்லாம் தலைக்கு குளித்து முடித்தான். கண்ணாடிக்கு முன்னால்

நின்றுகொண்டு தயாராகத் தொடங்கினான். ஃபுல் சூட் அணிந்து கொண்டான்.

விமலனும் கமலனோடு கூடவே எழுந்திருந்தான். அவனுக்கு இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. அண்ணன் தம்பிகள் இருவருக்கும் வேலைக்காரி விமலனிடம் விருப்பப்படியே காபி டிபனை மாடிக்கே கொண்டு வந்து கொடுத்தாள்.

டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கமலன் தனக்கு அர்ஜென்டாய் ஐந்தாயிரம் ரூபாய் வேண்டும் என்று கேட்டான்.

''ஐந்தாயிரமா?'' விமலன் ஆச்சரியப்படுவது போல நடித்துக்கொண்டே கேட்டான்.

''ஆமாம் ஐந்தாயிரம்! ஆப்டரால் ஐந்தாயிரம் என்றால் எவ்வளவு? ஐம்பது ரூபாய்க்குச் சமானம். இந்த காலத்தில் பணத்தின் மதிப்பு எவ்வளவு வீழ்ந்து விட்டதுன்னு தெரியும் எனக்கு.''

''எந்த நிதிக்காவது தானம் பண்ணப்போகிறாயா?''

''இல்லை''

''பின்னே எதுக்கு?''

''விமல்! இன்றையிலிருந்து, இந்த நிமிஷத்தி லிருந்து உன்னோடு ஏன், எதுக்கு என்கிற கேள்விகளுக் கெல்லாம் நான் பதில் சொல்லப் போறதில்லை. தயவு செய்து இனி ஒரு போதும் என்னை இந்த மாதிரி கேட்காதே.''

''குட்! உருப்படக்கூடிய மனிதனாகி விட்டாய்னுச் சொல்லு! இதற்காக அந்த ரேகாவுக்கு தாங்க்ஸ் சொல்லணும்.''

''விமல்...''

''ஏன்டா அப்பிடி கத்துகிறாய்? இப்ப நான் என்ன சொல்லி விட்டேன்? உன்னைப் பார்க்கும்பொழுது அவள் மீது எனக்கு எங்குமில்லாத பாசம் பிறந்து விட்டது, எவ்வளவு மாற்றி விட்டாள் உன்னை? எவ்வளவு சுதந்திர மனிதனாகி விட்டாய்? உண்மையில் எனக்கு ரொம்பப் பொறாமையாய் இருக்கு. ஒரு முறை நம்ப வீட்டிற்கு கூட்டிக் கொண்டு வா. என் பாராட்டுக் களைத் தெரிவிக்கிறேன்.''

கமலன் பதில் பேசவில்லை.

விமலன் எழுந்து சென்று பீரோவைத் திறந்து பணத்தை எண்ணிக் கொண்டு வந்து கமலனிடம் தந்தான்.

''தாங்க்ஸ்.''

''போதுமா?''

''இன்றைக்குப் போதும்.''

''இன்றைக்கா? அப்படீன்னால் இந்தப் பணத்தை ஒரே நாளில் செலவழித்து விடப் போகிறாய் என்று சொல்லு. டேய்! தினந்தினம் ஒரு ஐம்பது ரூபாயை சம்பாதித்துப் பார். அப்பொழுது ஐம்பது ரூபாய் ஐந்தா யிரமாய் எப்படித் தெரியும்னு உனக்கே புத்தி வரும்.''

கமலனின் முகம் மலர்ந்தது. விமலன் இவ்வளவு சுல்பமாய், அதிகமாய் கேள்விகள் கேட்காமல் பணம் தந்து விடுவான் என்றும் இவ்வளவு எளிதாய் தன்னை விட்டு விடுவான் என்றும் எதிர்பார்த்திருக்கவில்லை அவன். எதற்கும் நல்லதென்று தெரிந்த மார்வாடியிட மிருந்து நூற்றுக்குப் பத்து ரூபாய் வட்டி வீதம் ஐந்தா யிரம் ரூபாய்களைக் கடன் வாங்கிக் கொண்டிருந்தான்.

''என்ன விசேஷம்? இவ்வளவு காலங்கார்த்தா லேயே மணமகனைப் போல தயாராகியிருக்காயே?''

விமலனின் வாயிலிருந்து 'மணமகன்' என்ற வார்த்தை வெளிவந்ததுமே கமலன் சட்டென்று பிடி பட்டுப் போனவனைப் போல அவனைப் பார்த்தான். ஆனால் விமலனின் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை.

காபியைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டிருந் தான்.

அவன் பார்வை கோப்பையில் விழுந்து கொண்டி ருந்த காபியின் மீதே நிலைத்திருந்ததால் அவன் முகத் தில் என்ன உணர்ச்சி இருந்தது என்று கமலனுக்குப் புரியவில்லை.

''எங்கேயாவது போகப் போகிறாயா?''

''ஆமாம்.''

''எங்கே?''

கமலன் பதில் பேசவில்லை.

''ஓ! மறந்தே போய் விட்டேனே! இப்பத்தானே இந்த மாதிரியான கேள்விகளைக் கேட்க வேண்டாம் என்று சொன்னாய், ஐயாம் சாரி. ஐ வித்ட்ரா மை க்வஸ்ச்சன்'' என்றான் சிரித்துக் கொண்டே.

கமலன் நிம்மதியாய் பெருமூச்சு விட்டான்.

''இன்று முழுவதும் எனக்கு ஒரு நிமிஷம்கூட ஓய்வு கிடைக்காது. மத்தியானம் சாப்பிடக்கூட வீட்டிற்கு வரமாட்டேன். என்னோடு உனக்கு எந்த வேலையும் இல்லையே?''

ஓரக்கண்ணால் தம்பியைப் பார்த்துக் கொண்டே கேட்டேன் விமலன்.

கமலனின் முகம் மலர்ந்தது.

''ஊஹூம். எனக்கெந்த வேலையும் இல்லை.''

டிபன் சாப்பிட்டு முடிப்பதற்குள்ளாக கமலன் நாலைந்து முறை கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். காபியைக் குடிப்பதற்கு முன்னால் கோட்டு ஜேபியைத் தடவிப் பார்த்துக் கொண்டு சட்டென்று ஏதோ நினைவிற்கு வந்தவனாய் எழுந்துபோய் தன் பீரோவைத் திறந்து அதிலிருந்து சின்னப் பெட்டி ஒன்றை எடுத்து விமலன் ப்ார்க்காதவாறு அந்த பக்கமாய் திரும்பி கோட்டு ஜேபிக்குள் வைத்துக் கொண்டான்.

விமலன் சரியாய் இந்த அவகாசத்திற்காகவே காத்திருந்தாற்போல ஜேபியிலிருந்த சின்ன பொட்டலத்தை எடுத்துத் திறந்து அதிலிருந்த பௌடரை கமலனின் காபியில் போட்டு விட்டான். கமலன் மறுபடியும் இந்த பக்கமாய் திரும்பியபோது விமலன் ஸ்பூனால் சர்க்கரையை எடுத்து கமலனின் காபியில் போட்டுக் கலந்து கொண்டே—''வா! காபியைக் குடி!'' என்று கூப்பிட்டான்.

கமலன் வந்து உட்கார்ந்துகொண்டு காபியைக் குடித்து விட்டான். விமலன் மெதுவாய் காபியைக் குடித்துக் கொண்டே தம்பியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பத்து நிமிஷம் கழிந்தன. சாக்ஸை மாட்டிக்கொண்டு பூட்ஸைப் போட்டுக் கொண்டு, மற்றொரு முறை கண்ணாடியில் தன் உருவத்தை அப்படியும் இப்படியுமாய் திரும்பிப் பார்த்துக் கொண்டு திருப்தியடைந்தவனாய் விமலனிடம் 'போய் விட்டு வருகிறேன்' என்று சொல்லி விட்டு வாசல்வரை போனவன் வயிற்றைப் பிடித்து கொண்டு நின்று விட்டான். இரண்டு நிமிஷங்கள் அப்படியே நின்றுகொண்டிருந்தான்.

விமலன் கலக்கமடைந்தவனைப் போல நடித்துக் கொண்டே கிட்டே வந்தான்.

கவலையோடு தோளில் கை வைத்து—''என்னடா, ஏன் அப்படி நின்று விட்டாய்? என்னவாச்சு?'' என்றான்.

''ஒன்றுமில்லை. வயிற்றைக் கொஞ்சம் புரட்டிற்று. அதனால்தான்.''

''புரட்டிற்றா? ஏன்?''

கமலன் அவன் கையைத் தள்ளி விட்டு வாஷ் பேஸினை நோக்கிப் போனான். வாந்தியெடுத்தது. சற்றுமுன் அவன் சாப்பிட்ட டிபன் காபி வாந்தியாகி விட்டன.

விமலன் அவன் தோளைச் சுற்றிலும் கைகளைப் போட்டு நடத்தி அழைத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தான். பத்து நிமிஷங்கள் ஆயிற்று.

அவனுக்குச் சொல்ல முடியாத சோர்வோடு தலைச் சுற்றுவது போலிருந்தது.

''ஏன்டா, குறைந்துவிட்டதா? டாக்டருக்கு போன் பண்ணட்டுமா?'' என்றான் விமலன்.

''வேண்டாம், வேண்டாம். அதே குறைந்துவிடும். அதான் வாந்தியெடுத்து விட்டதே! கொஞ்சம் மயக்க மாய் இருக்கு, அவ்வளவுதான். நான் போய் தீரணும்'' என்றான் கட்டிலில் பின்னுக்குச் சாய்ந்துகொண்டே.

''கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளடா, என்ன அவசரம். என்ன தலைபோகிற காரியம்? அந்த மகாராணியைச் சந்திக்கத்தானே?'' என்றான்.

''உனக்குத் தெரியாது விமல்! போகணும், நான் போய்த் தீரணும்'' கமலன் எழுந்து போக முயன்றான். விமலன் அவன் தோளைப்பிடித்துத் தடுத்து உட்கார வைத்தான். மூடிக்கொண்டு போன இமைகளை பலவந்தமாய் திறக்க முயன்றுகொண்டே கோபமாய்

பார்த்தான் கமலன். ''விமல்! மொதல்லேயே சொல்லிட்டேன் உனக்கொண்ணும் தெரியாதுன்னு. நான் போகணும். ரொம்ப அர்ஜென்ட். ரேகா காத்துக் கொண்டிருப்பாள். இப்பொழுது நான் போகாவிட்டால் என்னை மன்னிக்கமாட்டாள். இனி ஜென்மத்திலும் என் முஞ்சியில் விழிக்கமாட்டாள்'' அதற்குள் அவனுக்குத் தன் வார்த்தைகளே தனக்கு வெகு தூரத்திலிருந்து கேட்பது போல ஆயின. ஆழ்ந்த உறக்கம் போன்றது அவனுக்குக் கண்களின் மீது திரை படிந்தாற்போல இறங்கி வரத் தொடங்கிற்று. ''வரேன் ரேகா! போய் விடாதே!'' கமலன் கத்த வேண்டுமென்று பார்த்தான். ஆனால் வாயிலிருந்து வார்த்தைகள் பெயரவில்லை. கைகள் மட்டும் ஆதரவில்லாமல் காற்றில் அப்படியும் இப்படியும் அசைந்தன. அதற்குள் அவன் மெல்ல படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

தொலைவில் நின்று கண்கொட்டாமல் கமலனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த விமலன் அவனுக்கு நினைவு தப்பிவிட்டது தெரிந்ததுமே கிட்டே வந்தான். கமலனை சரியாய் படுக்க வைத்தான். உடனே போய் டாக்டருக்கு போன் பண்ணி நடந்ததையெல்லாம் சொன்னான். பக்கத்துத் தெருவில் இருந்த டாக்டர் பத்து நிமிஷங்களில் வந்துவிட்டார். கமலனை பரிசோதித்து விட்டு திருப்தியாய் தலையாட்டினார். ஒன்றும் பயமில்லை. ராத்திரிக்குள் டக்கென்று எழுந்து உட்கார்ந்துகொண்டுவிடுவான். பயப்படத் தேவையில்லை. எழுந்ததுமே சுடச்சுட ஒரு கப் ஹார்லிக்ஸோ போர்ன்விட்டாவோ குடிக்கத் தந்தால் போதும் நாளைக்காலையில் சாதாரணமாய் ஆகிவிடும் என்றார்.

அவரை அனுப்பி வைக்கக் கூடவே வந்த விமலன் அவர் கிட்டை காரில் வைத்துவிட்டு, ''தாங்க் யூ டாக்டர்! உங்கள் உதவியை என்றும் மறக்கமாட்டேன்'' என்றான்.

"இதில் அவ்வளவு தூரம் நன்றி சொல்ல வேண்டியது என்ன இருக்கு? நான் இந்த வீட்டிற்குக் குடும்ப டாக்டர்! என் தர்மத்தை நான் நிறைவேற்றி னேன்."

"நீங்கள் இந்த உபாயத்தைச் சொல்லியிருக்கா விட்டால் இன்றைக்கு இவனைப் பிடிக்க என்னால் முடிந்திருக்காது."

"ஆமாம், பின்னே சின்னப் பையனா என்ன, ரெண்டு கொடுத்து வீட்டில் உட்காரவைப்பதற்கு! இந்த காலத்து இளைஞர்களிடம் இதுதான் பெரிய சிக்கல். அவங்களுக்கும் தெரியாது. சொன்னாலும் கேட்க மாட்டாங்க. நீங்க மட்டும் எவ்வளவு நாளைக்கு இப்படி கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பீங்க? கூடிய சீக்கிரத்தில் கல்யாணத்தைப் பண்ணி வைச்சுடுங்க. இப்படிப் பட்டவங்க பெண்டாட்டியின் கண்ணசைப்பின்படி தான் ஒவ்வொரு காரியமும் பண்ணுவாங்க."

"நானும் அதற்குதான் முயற்சி பண்ணிக் கொண் டிருக்கேன்."

டாக்டரை அனுப்பி விட்டு உள்ளே வந்த விமலன் கமலனின் கழுத்திலிருந்த டையை லூசாக்கிவிட்டு பட்டன்களை அவிழ்த்தான். சாக்ஸுகளைக் கழற்றி னான். அவன் தலையைத் தூக்கித் தலையணை மேல் சரியாய் வைத்தான். கமலனின் முகத்தை ஒரு வினாடி கூர்ந்து பார்த்தான். அவன் கண்களில் பாசம் பொங்கி வந்தது. ஒரு வினாடி கண்கள் கசிந்தும் விட்டன. "கமல்! நான் இன்றைக்குச் செய்த இந்தக் காரியத்தால் நீ தற்காலிகமாய் வருத்தப் பட்டாலும் எதிர்காலத்தில் உன் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் மனமார எனக்கு நன்றியைச் சொல்லாமலிருக்க மாட்டாய். உனக் காக, கேவலம் உனக்காகவே இன்றைக்கு நான் ராட்ச

சியைப்போன்ற அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலி யைக் கட்ட சித்தமாகிவிட்டேன்'' என்றெண்ணிக் கொண்டான்.

அடுத்த கால் மணி நேரத்தில் விமலன் மளமள வென்று தயாராகி, கமலனைத் தான் திரும்பி வரும்வரை பார்த்துக் கொள்ளும்படி கங்கம்மாவிடம் சொல்லிவிட்டு ஸ்கூட்டரில் லாயர் வீட்டிற்குப் புறப்பட்டான். விமலன் வந்ததும், அதற்குள் தயாராகி விட்டிருந்த அவர் பர பரப்புடன் எதிரே வந்து ''என்ன தீர்மானித்துக் கொண் டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''இன்னும் என்ன தீர்மானிக்கிறது? அதான் நேற் றிரவே தீர்மானம் ஆகிவிட்டதே!'' என்றான்.

''அப்படீன்னால்?'' அவனை சந்தேகத்தோடு பார்த் தார்.

''நான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கத் தீர்மானித்துக் கொண்டு விட்டேன்'' என்றான் முறு வலுடன்.

''விமல்! கடைசி தடவையாய் சொல்றேன். நாம்ப எந்தக் காரியத்தைப் பண்ணினாலும் பச்சாதாபப்படக் கூடாது. அப்புறமாய்...''

''படமாட்டேன் நான்'' திடமாய் சொன்னான் அவன்.

விமலனின் தத்துவத்தைப்பற்றி அவர் அறியாத தில்லை. எதையும் லேசில் முடிவெடுக்க மாட்டான். எடுத்துவிட்டால் பின்வாங்குவது என்பது அவன் அகராதியிலேயே கிடையாது. டிரைவர் லாயரின் காரை வெளியே எடுத்தான். விமலன் ஸ்கூட்டரை லாயரின் கேரேஜிற்குள் வைத்தான்.

''வாங்க, உங்களையும் இன்னும் நாலு பேரையும், கோவிலுக்கருகில் இறக்கிவிட்டு விட்டு, நான் ரிஜிஸ் தரார் ஆபீசுக்குப் போகிறேன்.''

''மீதி நாலு பேர் யார்?''

''மணமகளை அலங்காரம் பண்ணுவதற்கு இரண்டு பெண்கள், புரோகிதர். கல்யாணம் நடந்து கொண்டிருக்கும்போது பலவிதமாய் போட்டோக்கள் எடுப்பதற்கு என் டைப்பிஸ்ட்.''

''விமல்! ஆனால் இதெல்லாம் ஏதாவது எதிர்த் திரும்பி நம்மையே உதைத்தால்?'' சந்தேகத்தோடு கேட்டார் அவர்.

''நான் தனியாய் தாங்கிக்கொள்கிறேன் அதை. நீங்கள் யாரும் என்னோடு துணை வரத்தேவையில்லை. நான் யாரையும் இதில் சிக்கவைத்துவிட மாட்டேன்.'' திடமாய் சொன்னான் அவன். இருவரும் ஏறி உட்கார்ந் ததும் கொண்டதும் கார் புறப்பட்டது.

□

**ரே**கா அன்றைக்கு அழுந்திருந்தாள் என்ற பெயரேயொழிய அவள் மனம் தன் வசத்தில் இல்லை. இரவெல்லாம் பயத்தோடும் திகிலோடும் கண்ணை மூட வில்லை. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட அன்றைக்கு எழுந்திருந்த கைதியின் மனதைப் போல மனமெல்லாம் வைராக்கியத்தோடும் விரக்தியாகவும் இருந்தது. அவளுக்கு இந்தக் கல்யாணம் கொஞ்சமும் பிடிக்க வில்லை. அன்றைக்கு விமலன் தன்னை அவமானப் படுத்திவிட்டான் என்ற காரணத்தினால் தாங்க முடியாத கோபத்தாலும் ஆவேசத்தாலும் கமலனுக்குச் சம்மதத் தைத் தெரிவித்து விட்டாள். அது தன் அவசரத்தனம் என்று மறுநாளே தெரிந்து போய் விட்டது. இந்த இரண்டு மூன்று நாட்களாய் கமலனின் பணத்திற்காக வாவது ஒப்புக்கொள் என்று அந்தராத்மா ஆசைக்

காட்டி பார்த்தது. ஆனாலும் லாபமில்லாமல் போய் விட்டது. கமலனை சிநேகிதனாய் தவிர வேறெந்த கண்ணோட்டத்துடனும் பார்ப்பதற்கு மனம், உடல் இரண்டுமே ஒத்துழைக்கவில்லை.

கமலனை திருமணம் பண்ணிக்கொண்டு விட்டால் மட்டும் அவளால் விமலனை எப்படி சாதித்துவிட முடியும்? மூன்று முடிச்சுக்கள் விழுந்த உடனேயே, இனி லாபமில்லை என்று தெரிந்துகொண்ட அவன் உங்களிஷ்டம், உங்கள் தலையெழுத்தை நீங்கள் அனுபவியுங்கள் என்று தன் வழியில் தான் போய் விட்டால் பிறகு அவள் யார் மீது பழிவாங்கிக்கொள்ள முடியும்? விமலனைப் பழிவாங்குவதற்காக கமலனைப் பண்ணிக்கொள்வது என்பது அர்த்தமற்ற விஷயம். விமலன் தன் வழியில் போய்விட்ட அடுத்த நிமிஷத்தி ருந்து அவளுக்கும் கமலனுக்கும் வாக்குவாதங்கள் தொடங்கிவிடும் அதனால் அபிப்பிராய பேதங்கள். பண விஷயமே இருவருக்குமிடையே பெரிய பிளவை உண்டாக்கிவிடும். வேண்டாம், வேண்டாம், அவள் வாழ்நாளெல்லாம் கன்னியாகவேகூட இருந்துவிடு வாளேயொழிய தன்னோடு கருத்தொருமித்து வாழ முடியாது என்ற நபரைக் கணவனாய் ஏற்றுக் கொள்ளவே மாட்டாள். அவள் இப்பொழுதே ஜாக்கிரதையாய் இருந்துவிட வேண்டும். கமலனிடம் நயமாய் எடுத்து சொல்ல வேண்டும். ஆனால் எப்படி? அவன் முகம் சிறுத்துப்போய் விட்டால்?

ரேகா எதற்கும் நல்லதென்று, தன் மனதில் திடீரென்று தோன்றிய பயத்தோடும் திகிலோடும், ஆதியிலிருந்தே இருந்து வந்த சந்தேகங்கள், தாம்பத்திய வாழ்க்கை மீது தனக்குள்ள அபிப்பிராய பேதங்கள் முதலியவைகளைத் தெளிவாய் எடுத்துசொல்லி மென்மையான வார்த்தைகளால் இத்திருமணத்திற்கு

மறுப்பு தெரிவித்து, இனிமையான வார்த்தைகளால் கமலனின் மனம் உருகிப் போகும்படியாய் கடிதம் ஒன்றை எழுதித் தன் கைப்பைக்குள் வைத்துக்கொண் டாள். கமலன் ஒருக்கால் ஆத்திரமடைந்து ரோஷத்தோடு அவள் வார்த்தைகளைக் கேட்கக்கூட விரும்பாமல் போனால் இந்தக் கடிதத்தை அவன் கையில் தந்துவிட்டு வந்து விடுவாள் அவள். ரேகா ரிஜிஸ்தரார் ஆபீசிற் கருகில் ஓடி வந்தாள். அங்கே கமலன் இல்லை. அவன் இன்னும் வரவில்லை. ரேகாவுக்கு மிகவும் விநோதமாய் இருந்தது. அவனும் கூட கடைசி சமயத்தில் முன் வைத்தக் காலை பின்னுக்கு இழுத்துக்கொண்டு விட்டானா?

கால் மணி, அரை மணி நேரம் கழிந்தது. கமலன் வராமல் போனது ஒரு விதத்தில் நிம்மதியாய் இருந்தாலும் ஏன் வரவில்லையோ, காரணம் என்னவா யிருக்கும் என்ற கலக்கம் ஏற்படத் தொடங்கிற்று. வாக்கு கொடுத்துவிட்டால் மீறமாட்டானே! அதுவும் இந்த மாதிரி நாளில்! ஏதோ நடந்திருக்கும். என்னவா யிருக்கும்? பயத்தாலும் கலக்கத்தாலும் அவள் யோசனைகள் பலவிதத்தில் போகத் தொடங்கின.

கார்களும் பஸ்ஸுகளும் விர்விர்ரென்று போய்க் கொண்டிருந்தன. டாக்ஸிகள் வேகமாய் வந்து அவளைத் தாண்டிப்போய்க்கொண்டிருந்தன. எந்த ஒன்றுமே ரிஜிஸ்தரார் ஆபீசிற்கு முன்னால் நிற்க வில்லை. கமலன் வரவேயில்லை. ரேகாவின் இதயம் கனக்கத்தொடங்கிற்று. நேற்றிரவு சாப்பிடவில்லை. தூங்கவும் இல்லை. இப்படி எதிர்பார்த்து எதிர்பார்த்தே சோர்வு வந்து சேர்ந்தது. நிற்கவும் சக்தி இல்லாதபடி பலவீனமாய் இருந்தது. ஒரு வினாடி யோசித்துவிட்டு, கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தவளாய் உள்ளே போய் அங்கிருந்து கிளார்க்கிடம் ஒருக்கால் கமலன் வந்தால்

தான் இவ்வாறு பார்த்துப் பார்த்துவிட்டு போய்விட்டதாய் சொல்ல சொன்னாள்.

அவர் 'சரி' என்று தலையாட்டினார்.

ரிஜிஸ்தரார் ஆபீசிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த ரேகா எதிரே யாரோ மளமளவென்று வந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு நிமிர்ந்து சரியாய் பார்க்காமலேயே ஒரு பக்கமாய் ஒதுங்கி வழிவிட்டாள். எதிரே வந்து கொண்டிருந்தவன் ரேகா எதிர்பார்த்தாற் போல அவளைத் தாண்டிப் போய்விடவில்லை. நின்று 'எக்ஸ்யூஸ்மீ'' என்றான்.

ஏதோ யோசனையுடன் இருந்த ரேகா அந்தக் குரலைக் கேட்டதுமே திடுக்கிட்டுப் போய் சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள். எதிரே விமலன் நின்று கொண்டிருந்தான். ரேகாவுக்கு உயிரே பறந்து போனாற் போலிருந்தது. ரேகாவைப் பார்த்ததுமே அவன் இரு கைகளையும் கூப்பி மிக மரியாதையாய் வணங்கினான். பதில் வணக்கம் செய்யவில்லை ரேகா.

''நீங்கள் கமலுக்காகக் காத்திருக்கீங்க போலிருக்கு.'' மிக வினயமாய் கேட்டான்.

ரேகா வாயடைத்துப் போனவளாய், கண்களை இமைக்கவும் மறந்தவளாய் அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். விமலன் இங்கே எப்படி வந்தான்? அவனுக்கு எப்படித் தெரிந்தது? கமலன் என்னவானான்? ரேகாவின் மூளை வேகமாய் யோசிக்கத் தொடங்கிற்று.

ரேகாவின் மனதிலிருந்த உத்தேசத்தை சரியாய் பிடித்தறிந்து கொண்டு விட்டவனைப் போல பதிலளித்தான் விமலன்.

"கமலனுக்கு உடம்பு சரியாய் இல்லை. தன்னால் முடியவில்லை என்றும் சொல்லச் சொன்னான் உங்களிடம்."

"பொய்."

"நிஜமாய்தான் சொல்றேன்."

"நான் நம்பவில்லை."

விமலனின் உதடுகள் ரேகாவின் கண்களில் தென்பட்ட அவநம்பிக்கையைக் கண்டதுமே குறும்புத் தனத்தை அடக்கிக்கொண்டே முறுவல் பூத்தன. அந்தச் சிரிப்பைப் பார்த்ததுமே கோபத்தால் கொதித் தெழுந்தாள் ரேகா.

"உங்களுக்கு அவ்வளவு தூரம் என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் என்னோடு வாங்க. உங்கள் கண்ணால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்."

"தேவையில்லை" — கச்சிதமாய் சொல்லிவிட்டுப் போக முயன்றாள் ரேகா.

மிக மரியாதைக்குரியவனைப்போல ஒதுங்கி நின்று வழிவிட்டான் விமலன். ரேகா வெளியே வந்து விட்டாள். அவனும் கூடவே வந்தான்.

"கமலன் உங்களுக்கு உயிர் சிநேகிதன். கணவனாகப் போகிறவன்கூட. அவனுக்கு உடம்பு சரியாயில்லைன்னு சொன்னால் குறைந்தபட்சம் பார்ப்ப தற்குக் கூடவா வரமாட்டீங்க நீங்க?"

ரேகா கீழுதட்டைக் கடித்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள். 'சனியன் பிடித்த ரிக்ஷாக்கள்! சமயத்திற்கு எதுவும் வராது!'

விமலன் ரேகாவிற்கு முன்னால் நடந்து சென்று, தன் காரின் கதவைத் திறந்து, தான் போக முற்பட்டவன், "வரப்போவதில்லையா நீங்கள்?" என்றான்.

விமலனின் குரலையும் அவன் அதைச் சொன்ன விதத்தையும் பார்த்தால் கமலனுக்கு நிஜமாகவே உடம்பிற்கு ஏதாவது பெரிதாய் வந்துவிட்டதோ என்று பயந்தாள் அவள். ஆனால் இவனை நம்புவது எப்படி? இவனோடு கிளம்பினால் நடுவழியில் ஏதாவது பைத்தியக்காரத்தனமாய் நடந்து கொண்டால்?

''என்ன உடம்புக்கு?'' என்று கேட்டாள், போவதா வேண்டாமா என்று தீர்மானித்துக் கொள்வதற்காக.

''கேஸ்ட்ரோ.''

ரேகா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

''சமயத்திற்கு நான் வீட்டில் இருந்ததால் முடிந்தது. இல்லாவிட்டால்—இன்றைக்கு—''

''எங்கே இருக்கிறார், சொல்லுங்கள். நான் போகிறேன்.''

''பிரைவேட் நர்சிங்ஹோமில் இருக்கிறான்.''

''எங்கே இருக்கு அது?''

''சொன்னாலும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது. கஷ்டம். அந்த சந்துகளையும் பொந்துகளையும் கண்டு பிடிக்க முடியாது. நன்றாய் தெரிந்தவங்களுக்கே திணறல் அடிக்கும். உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? நான் போய் அவனிடம் சொல்லிவிடுகிறேன். நீங்கள் இங்கே காத்திட்டிருப்பீங்க என்று சொல்லி உங்களை அழைச்சுட்டு வரச்சொல்லி என் உயிரை எடுத்ததால் உடம்பு சரியாய் இல்லாதவனின் வார்த்தைகளைத் தட்ட முடியாமல் வந்தேன். எனக்கு முன்பே தெரியும், நீங்கள் வரமாட்டீங்கன்னு'' குறும்பாய் சிரித்தான் அவன்.

ரேகாவுக்கு உடம்பெல்லாம் பற்றிக் கொண்டு வந்தது போலிருந்தது—விமலனின் தோரணையைப் பார்த்து. அவள் வராமல் போவதே அவனுக்கு லாபம்

என்றாற்போல பேசினான். ரேகா தடுமாற்றத்துடன் நின்றாள்.

போனால் என்னவாகும்? விமலன் தனியாய் இல்லை. கார் டிரைவர் கூட இருக்கிறான். என்ன பண்ணிவிடுவான் இவன்? ரேகா கூரிய, சாயம் தீட்டப் பட்ட தன் விரல் நகங்களையும், பிறகு நல்ல சந்தன நிறத்தில் இருந்ததால் சவரம் செய்து கொண்டதும் பச்சை சுவடுகளுடன் தென்பட்ட விமலனின் முகவாயை யும் மாறி மாறிப் பார்த்தாள் ஒரு வினாடி. "நான் போகட்டுமா?" விமலன் ஹேண்டிலைத் திருப்பிக் கொண்டே கேட்டான்.

ரேகாவின் இதயம் படபடத்தது. அவளுடைய அதிர்ஷ்டத்தால்தான் இன்றைக்கு கமலனுக்கு உடம்பிற்கு வந்திருக்கிறது. உடல்நலம் இல்லாமல் இருக்கும் கமலனைப் பார்க்க வேண்டும்போலதான் இருந்தது. பாவம்! கமலன்! விமலன் காரில் பின்சீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டான். ரேகா காரை நோக்கி இரண்டடிகள் எடுத்து வைத்தாள். நிமிர்ந்து பார்க்க வில்லையே தவிர, பார்த்திருந்தால் விமலனின் முகத்தில் பெருமையாய் மின்னிய மின்னலைப் பார்த்திருப்பாள். அதன் மூலம் சந்தேகம் ஏற்பட்டிருக்கும். ஆனால் விதி இன்னொரு விதமாய் இருந்தது. ரேகா பார்க்கவில்லை. ரேகா வந்து உட்கார்ந்ததுமே விமலன் கார் கதவைச் சாத்தினான். கார் புறப்பட்டது.

ரேகா சீட்டிற்கு இந்தக் கோடியில் ஒதுங்கி உட்கார்ந்து வெளியே பார்க்கத் தொடங்கினாள். விமலன் அந்தக் கோடியில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டான். இருவருக்குமிடையே இன்னும் இரண்டு பேர்கள் உட்கார்ந்து கொள்ளக்கூடிய அளவிற்கு காலியாய் இருந்தது இடம்.

கார் விர்ரென்று திரும்பி கடைவீதிகளைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. அடர்ந்து உயரமாய் வளர்ந் திருந்த மரங்களோடு போட்டிப் போட்டுக்கொண்டு உயரமாய் இருந்த காம்பவுண்டுச் சுவர்களோடு கூடிய பங்களா ஒன்றைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது கார். அந்தக் கட்டிடம் எந்த காலத்துக் கட்டிடமோ? மிகப் பழையதாய் பாழடைந்தாற்போல இருந்தது. அவ்வெல்லைகள் எப்படிப்பட்டவையோ தெரியாது, அரை கிலோ மீட்டருக்கு ஒரு வீடாய் இருந்தது. சாலை யில் ஜன சஞ்சாரம் இல்லை. அத்தி பூத்தாற்போல் அவ்வப்பொழுது ஒரு கார் வந்தும் போய்க் கொண்டும் இருந்தது.

திடீரென்று பேசினான் விமலன்—

''இதப் பாருங்கள்...''

ரேகா திரும்பிப் பார்த்தாள்.

''நீங்கள் ஏதோர்போல் இருக்கீங்க. கமலனோடு கல்யாணம் நடக்காமல் போய்விட்டதால் உங்கள் மானம் போய்விட்டாற்போல இருக்கீங்க'' அவன் கண்கள் குறும்புத்தனத்தால் பளபளத்தன. மிக வினயமாய் சொன்னான்.

''நானும் பிரம்மச்சாரிதான். எனக்கும் கல்யாணம் ஆகவில்லை. நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு உங்கள் கவலைகளைப் போக்கடிப்பேன்! என் சார்பில் உங்களோடு சண்டை போடுகிறவர்கள் யாரும் இல்லை. நான் தனிக்கட்டை. உங்களைப் போல் முழு சுதந்திர மனுஷன்.''

ரேகா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். கோபத் துடன் பார்த்தான்.

''ஆஃப்கோர்ஸ்! உங்கள் தேவை தீர்த்து விட்ட பிறகு நாம்ப டைவர்ஸ் பண்ணிக்கொள்ளலாம். எனக்கு

எந்த ஆட்சேபனையும் இல்லை. உங்களுக்கு உங்கள் தேவையும் தீரும். எனக்கு உங்கள் மீது ஏற்பட்ட விருப்பமும் நிறைவேறும்.''

படமொத்த பாம்பைப்போல சீற்றம் கொண்ட ரேகா இந்தக் கடைசி வார்த்தைகளால் இனி தாங்கமாட்டாதவளாய் அவன் கன்னத்தில் ஓங்கி அடிக்கப் போனாள்.

விமலன் மின்னலாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

ஒரு வினாடி இருவரும் ஒருவரையொருவர் விழுங்கி விடுவதுபோல தீவிரமாய் பார்த்துக் கொண்டார்கள். ரேகா பற்களைக் கடித்துக் கொண்டே தன் கோபத்தை அடக்கி கொண்டாள். அவன் கைகளில் சிக்குண்ட தன் கையை இழுத்துக் கொள்ள முயன்றாள். ஆனால் முடியவில்லை. ஒரு வினாடி அவனுடைய பலமான கைகளுக்கிடையே மென்மையான ரேகாவின் கை தயையின்றி நசுங்கிப் போயிற்று.

தாங்க முடியாத வலியால் அவள் கண்களிலிருந்து கிர்ரென்று கண்ணீர் சுரந்த போதிலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ரோஷத்துடன் அவனைப் பார்த்தாள் ரேகா. விமலன் அவள் கையை விடவில்லை. வேடன் வலையை வீசி காட்டு ஜந்துக்களின் கால்களை சிக்க வைத்து விட்டு, மெல்ல மெல்ல கிட்டே இழுத்துக் கொள்வது போல, ரேகாவை மிக மெதுவாய்கிட்டே இழுத்துக் கொள்ளத் தொடங்கினான். அவனை நெருங்கிக் கொண்டிருந்த ரேகா தன்னை விடுவித்துக் கொள்வதற்கும், தொலைவிற்கு நகர்ந்து கொள்வதற்கும் தன் சக்தியையெல்லாம் பயன்படுத்தி திமிறினாள், ஆனாலும் லாபமில்லாமல் போய்விட்டது. விமலன் இடது கையை நீட்டி ரேகாவின் தோள்களைச் சுற்றிலும் போட்டு கீட்டே இழுத்து அவள் தலையை

நகரவிடாமல் தன் மார்பில் அழுத்திக் கொண்டான். ரேகா அவனைக் கால்களால் தள்ள வேண்டும் என்றும் நகங்களால் காயப்படுத்த வேண்டும் என்றும் விஸ்வ பிரயத்தனம் செய்தும் பிரயோஜனம் இல்லாமல் போய் விட்டது.

''பயம் இல்லை டியர். நான் உன்னை ஒன்றும் விழுங்கி விடமாட்டேன். கொஞ்ச நேரம் நீ உன்னை மறந்து போய் விடும்படியாய் மட்டுமே பண்ணப் போகிறேன்'' விமலன் குழைவாய் சொல்லிக்கொண்டே வலது கையை நுழைத்து ஜேபிக்குள்ளிருந்து சீசா போன்ற ஒன்றை வெளியே எடுத்தான்.

அவன் கை கொஞ்சம் பிடிபட்டபொழுது ரேகா சட்டென்று வாயைத்திறந்து பற்களால் விமலனின் கையை அழுத்தமாய் கடித்துவிட்டாள்.

''ஐயோ!'' இம்முறை வலியால் வீலிடுவதும், கண்களில் கிர்ரென்று நீர் சுரந்ததும் அவன் பங்கா யிற்று. ஆனால் அது வினாடி நேரம்தான். தாடை எலும்புகள் முறுக்கேற ரேகாவை மேலும் கிட்டே இழுத்துகொண்டு நகர முடியாமல் சிறைப்படுத்தினான். அவன் கைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக வேடனின் அம்புபட்ட மானைப்போல துடிதுடித்துப் போனாள் ரேகா. ஆனால் இரும்புப் பிடியாய் இருந்த அவன் கை அவளை விடவில்லை. ரேகாவின் போராட்டம் மெல்ல மெல்ல குறைந்து போய்விட்டது. அடுத்த பத்து நிமிஷங்களில் நினைவில்லாத நிலையில் வாடிய தாமரைப்பூவைப் போல அவன் கைகளில் துவண்டு விழுந்தாள்.

''சீக்கிரமாய் ஓட்டு'' டிரைவரை எச்சரித்தான் விமலன்.

டிரைவர் ஆக்ஸிலேட்டரை அழுத்தினான். கார் வேகத்தை மேற்கொண்டு வில்லிலிருந்து விடுபட்ட அம்பாய் பறந்து போயிற்று.

# 25

சென்னைக்கு மேற்கு திசையில் பதினைந்து இருபது மைல்கள் தூரத்தில் ஒரு சின்ன கிராமம் உள்ளது. அந்த கிராமத்தில் ஒரு தேவதையின் கோவில் இருந்தது. அந்த தேவதையின் பெயர் சாலம்மன். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் இங்கே விமரிசையாய் உற்சவம் நடக்கும். சாலம்மன் மிகவும் சத்திய தேவதை என்று அச் சுற்றுவட்டாரத்தில் எல்லோரும் சொல்லிக் கொள்வார்கள். திருமணச் செலவுக்குப் பணம் இல்லாதவர்களும், காதலித்தவர்கள் பெரியவர்களுக்கு பயந்து கொண்டு, தாமே விவாகம் செய்துகொள்ள விரும்புகிறவர்களும் இங்கே வந்து விவாகம் செய்துகொண்டு போவது வழக்கமாய் இருந்தது. இவ்வூர் மிகச் சின்ன குக்கிராமமாய் இருந்ததால் இங்கே ஒன்றும் கிடைக்காது. திருமணத்திற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் நகரத்திலிருந்துதான் வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

விமலன் ரிஜிஸ்தரார் ஆபீசுக்குப் போவதற்கு முன்னால் லாயரையும் தன் டைபிஸ்ட் கோபாலனையும், மேலும் இரண்டு பெண்களையும், ஒரு புரோகிதரையும், அழைத்துக் கொண்டு வந்ததோடு, திருமணத்திற்கு முக்கியமான தேவையான சாமான்களையும் வாங்கிவந்து அவர்களை இங்கே இறக்கி விட்டுவிட்டுப் போனான். அவன் ரேகாவைத் திரும்பவும் அழைத்துக்கொண்டு போனபொழுது அவன் விரும்பினாற்போலவே அவர்கள் எல்லாம் தயார் பண்ணி வைத்திருந்து அவனுக்காகக்

காத்திருந்தார்கள். வந்தவர்கள் தங்குவதற்கு செளகரிய மாய் கோவிலையொட்டி இரண்டு மூன்று அறைகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு அறையில் சமையல் பண்ணுவதற்கு வசதியாய் அடுப்பும், இன்னொரு அறையில் உட்காருவதற்கு செளகரியமாய் ஒரு பெரிய மேஜையும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. நினைவில்லாத ரேகாவை விமலன் தன் கைகளால் தூக்கி அறைக்குள் அழைத்து வந்து மேஜை மேல் படுக்க வைத்தான். பக்கத்திலிருந்த பெண்களுக்குக் காட்டி— ''பத்து நிமிஷத்தில் ஆகணும்'' என்று சொல்லிவிட்டுத் தான் வெளியே போய்விட்டான்.

புரோகிதர் ஹோமம் பண்ணத் தொடங்கினார். டைபிஸ்ட் கோபாலன் முழங்காலிட்டு அமர்ந்துகொண்டு கேமிராவில் ஒரு கண்ணை வைத்துக் குறிபார்த்துக் கொண்டிருந்தான். விமலன் கேமிராவைத் தான் வாங்கிக் கொண்டு இரண்டு மூன்று கோணங்களைத் தீர்மானித்து கோபாலனிடம் கரட்டினான்.

''விமல்! இன்னொரு தடவை சொல்கிறேன். கடைசி தடவையாய் நன்றாய் யோசித்துக் கொள்.'' இதயம் படபடக்க உட்கார்ந்திருந்த லாயர் எச்சரித்தார்.

விமலன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். ''கோபாலன்! என் உடைகள் எங்கே?'' என்றான்.

டைபிஸ்ட் உடைகளைக் கொண்டு வந்து கொடுத்தான். விமலன் பஞ்சகச்சம் வைத்து வேட்டியை உடுத்திக் கொண்டான். மேலே உத்தரியத்தைப் போட்டுக் கொண்டான். பெண்களில் ஒருத்தி கன்னத்தில் மையால் பொட்டு வைத்துக் கொள்ளச் சொல்லி தந்தாள். விமலன் மை வேண்டாம் என்று மறுத்துவிட்டு சந்தனப் பொடியை எடுத்துக் குழைத்து நெற்றியில் புருவங்களுக்கிடையிலிருந்து மேல் வரைக்கும் நீண்ட பொட்டை வைத்துக் கொண்டான்.

ஹோமம் தயாராகி விட்டது. சீக்கிரமாய் வரச் சொல்லி கூப்பிட்டுக் , கொண்டிருந்தார் புரோகிதர். விமலன் ரேகா இருந்த அறைக்குள் வந்தபோது ரேகாவை அதற்குள் முற்றிலுமாய் மணமகளைப் போல அலங்கரித்திருந்தார்கள். நெற்றியில் கல்யாணப் பொட்டு. தலைநிறையப் பூ. கால்களில் செம்பஞ்சுக் குழம்பு தடவினார்கள்.

நினைவு தப்பிய ராஜகுமாரியைப் போலவும், தூங்கிக் கொண்டிருந்த தேவகன்னியைப் போலவும் இருந்த ரேகாவைப் பார்த்ததுமே விமலன் வினாடி நேரம் வாயடைத்துப் போய் அப்படியே நின்று விட்டான். ஒரே ஒரு வினாடி அவன் மார்பு வேகமாய் அடித்துக் கொண்டது. தான் பண்ணப் போகும் காரியம் இந்தப் பெண்ணிற்கு அபச்சாரம் இல்லையா? என்று தோன்றிற்று. ஆனால் அடுத்த நிமிஷமே, இந்த அழகை இரையாய் காட்டி கமலன் போன்றவர்களை தயையில்லாமல் வலையில் போட்டுக் கொண்டு விட்டாள் என்பது நினைவிற்கு வந்ததுமே அவனிடம் கடினம் வந்து சேர்ந்து கொண்டது.

லாயரும் விமலனும் ரேகாவைப் பிடித்து நடத்தி அழைத்துக் கொண்டு வந்தார்கள். புரோகிதர் மந்திரங் களை உச்சரிக்கத் தொடங்கினார்கள்.

''அப்பப்பா! இதெல்லாம் எதுக்குங்க? இது ஒன்றும் நிஜக் கல்யாணம் இல்லையே, ஏதாவது நாலு வார்த்தைகள் சொல்லுங்கள், போதும்'' விமலன் அலுத்துக் கொண்டான்.

புரோகிதர்கள் கூடியவரைக்கும் சீக்கிரமாய் சடங்கு களை நடத்தி முடித்தார்கள்.

டைபிஸ்ட் கோபாலன் விமலன் சொல்லியிருந்தபடி திருமணம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் விமலன்

ரேகாவின் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டிருந்த பொழுதும், தலையில் அரிசியைப் போடும்பொழுதும் பலவித கோணங்களில் போட்டோக்களை எடுத்தான். அவன் கமலனிடம் சொல்லியது போலவே ரேகாவின் திருமணம் சுருக்கமாய், ரகசியமாக நடந்தேறி விட்டது.

ரேகாவுக்கு மயக்கமாய் இருந்தது. கண்களைத் திறக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. தொலைவில் யாருடைய கல்யாணமோ நடந்து கொண்டிருக்கிறது. மந்திரங்கள் கேட்கின்றன. யாருடைய கல்யாணம்? கமலனுடையதா? அவள் போனாளா அந்தக் கல்யாணத் திற்கு? ஏதோ வாசனைகள் அலைஅலையாய் மிதந்து வந்து கொண்டிருந்தன. ரேகாவால் நிற்க முடியவில்லை. காற்றில் மிதந்து கொண்டிருந்தாற் போல, சூனியத்தில் தொங்கிக் கொண்டிருந்தாற்போல இருந்தது.

திருமணச் சடங்கு முடிவடைந்த பிறகு விமலன் ரேகாவை இரு கைகளாலும் தூக்கி வந்து மேஜை மேல் படுக்க வைத்தான்.

''மொத்தத்தில் சொன்னபடியே செய்துவிட்டாய். பலே சாமர்த்தியக்காரன்தான் அப்பா நீ''— என்றார் லாயர். விமலன் அவர் வார்த்தைகளுக்கு எந்த வியாக்கியானமும் பண்ணவில்லை. காதில் விழாதது போல இருந்தான். லாயர் அவசரமாய் ஒருவரைச் சந்திக்க வேண்டியிருந்ததால் சீக்கிரமாய் புறப்பட்டார். அவரோடு கூடவே கோபாலனையும் எஞ்சியவர்களை யும்கூட காரில் ஏற்றி விட்டான் விமலன். அவர்களை இறக்கி விட்டுவிட்டுத் திரும்பி வரும் கார். அதற்குள் ரேகாவுக்கு நினைவு திரும்பி விடும். தான் சொல்ல வேண்டிய நாலு வார்த்தைகளைச் சொல்லி விடலாம் என்றெண்ணினான் அவன்.

விமலனையும் ரேகாவையும் விட்டு விட்டுக் கார் எஞ்சியவர்களை ஏற்றிக் கொண்டு போய் விட்டது.

மூன்று மணியளவில் ரேகாவுக்கு விழிப்பு வந்தது. கண்களைத் திறந்தபொழுது கதவிற்கருகில் யாரோ அந்த பக்கமாய் திரும்பி நின்றுகொண்டு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நபர் யார் என்று சட்டென்று தெரியவில்லை. சுண்ணாம்பு வெளுத்துப் போய், எண்ணெய்ப் பிசுக்கு ஏறியிருந்த சுவர்களையுடைய இந்த அறையில், இந்த மேஜையின் மீது தான் எதற்காகப் படுத்துக் கொண்டிருக்கிறாள், இது கனவா நிஜமா, எதிரேயிருக்கும் இந்த நபர் யார் என்று புரியாமல் ரேகாவின் மனது பயத்தால் படபடத்தது. தொண்டை வறண்டுப் போய் விட்டிருந்ததால் சோர்வுடன் "தாகம்" என்றாள்.

விமலன் திரும்பிப் பார்த்தான். படித்துக் கொண்டிருந்த பேப்பரை நாற்காலியில் விட்டெறிந்து விட்டு, போய் மூலையில் இருந்த பானையிலிருந்து தண்ணீரை எடுத்து வந்து கொடுத்தான்.

ரேகா பயந்தவளாய், பைத்தியமே பிடித்து விட்டவளைப் போல, எழுந்திருக்கவும் சக்தி இல்லாதவளாய், அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். விமலனின் நெற்றியில் இருந்த நீண்ட குங்குமப் பொட்டு இன்னும் அப்படியே இருந்தது.

"குடி" என்றான் அவன்.

ரேகா திடுக்கிட்டுப் போனாள். இது கனவல்ல, நிஜமே. அவன் பேசுகிறான்.

"எனக்கு... எனக்கு என்னவாச்சு?" கனவிலிருந்து உண்மைக்கு வர முயன்றவளாய் கேட்டாள்.

"உனக்கா?"

ரேகாவை ஒரு வினாடி கூர்ந்து பார்த்த அவன் மென்மையாய் சொன்னான்—"ஒன்றும் ஆகலை. கல்யாணம் ஆச்சு. அவ்வளவுதான்."

அவன் வார்த்தைகளில் குழைவும் கண்களில் குறும்புத்தனமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

அவன் என்ன சொல்கிறான் என்று புரியாதவளாய் இன்னும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரேகா. என்னவாகி விட்டது அவளுக்கு? அவள் கமலனைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தாள். அதற்குள் ஏதோ ஆபத்து நிகழ்ந்து விட்டது. ரேகாவுக்கு இப்பொழுதுதான் மெல்ல மெல்ல நினைவு திரும்பிக் கொண்டிருந்தது.

"கமல் எங்கே?" பலவீனமாய் கேட்டாள்.

"இங்கே இல்லை."

"இல்லையா? பின்னே நான் இங்கே எப்படி வந்தேன்?"

"நான் அழைத்துக் கொண்டு வந்தேன்."

"நீங்களா?"

"ஆமாம்."

"எதுக்கு?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு."

ரேகா துப்பாக்கிச் சத்தம் கேட்டவளைப் போல எழுந்து உட்காரப் போனாள். ஆனால் உட்கார்ந்ததுமே தலை கிர்ரென்று சுற்றிற்று. இரண்டு கைகளாலும் கண்களை மூடிக்கொண்டு "அம்மா" என்றாள்.

விமலன் கிட்டே வந்து நின்றான்.

''மொதல்ல இந்த தண்ணீரைக் குடி. தலைச் சுற்றுவது நிற்கும்'' என்றான், தம்ளரை வாய்க்கருகில் வைத்தான்.

ரேகா மறு பேச்சுப் பேசாமல் அவன் தந்த நீரை கடகடவென்று குடித்துவிட்டாள். குளிர்ந்த நீர் தொண்டைக்குள் இறங்கியதும் கொஞ்சம் உயிர் வந்தாற் போலிருந்தது.

''நன்றாய் விழிப்பு வந்து விட்டதா?'' கேட்டான்.

வந்து விட்டது என்று தலையாட்டினாள்.

''கண்ணைத் திறந்து இங்கே பார்.''

ரேகா மெதுவாய் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''ஒரு முறை உன் கழுத்தில் பார்த்துக் கொள்.''

ரேகா பார்த்துக் கொண்டாள், உடனே அவள் முகம் நிறம் மாறிற்று, கழுத்தில் அவள் மார்பிற்கருகில் மஞ்சள் கயிற்றை ஆதாரமாக்கி கொண்டு பளபள வென்று மினுமினுத்துக் கொண்டிருந்தது திருமாங்கல்யம். சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள் ரேகா.

விமலனின் முகம் சீரியஸாய் இருந்தது. சுறுசுறுப்பாய் இருந்த அவன் கண்கள் ரேகாவின் முகத்தில் மளமள வென்று மாறிக் கொண்டிருந்த உணர்ச்சிகளை ஆர்வத் தோடு விநோதமாய் பரிசோதித்துக் கொண்டிருந்தன.

''இதென்ன? யாருடைய காரியம் இது?''

அவ்வளவு பலவீனத்திலும் கோபத்தால் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்த ரேகா கத்தினாள்.

''என் காரியந்தான்.''

''நீங்களா? நீங்...'' தடுமாற்றத்துடன் பார்த்தாள்.

''ஆமாம், நான்தான். உன்னை மோசம் பண்ணி பலவந்தமாய் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்.''

சாவதானமாய் அவளைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

சலனமொடுங்கிப் போனவளாய் அவனையே பார்க்கத்தொடங்கினாள் ரேகா.

விமலன் நிதானமாய், ஒவ்வொரு வார்த்தைகளையும் விவரித்துச் சொல்வதுபோல சொன்னான்—

''நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டேன். பயங்கரமான தீயக்கனவைப் போன்ற இந்தக் காரியத்தை நான் ஏன் செய்தேன் தெரியுமா? கமலனுக்காக கழுகுக் கைகளைப் போன்ற உன் கைகளிலிருந்து அப்பாவியான கமலனைக் காப்பாற்றுவதற்காக! கமலனைக் கையில் போட்டுக் கொள்ள வேண்டுமென்றும், அவன் சொத்தை விழுங்க வேண்டும் என்றும் தவித்த நீ, என் கையில் சிக்கிக் கொண்டாய். எந்த ஆதாரமும் இல்லாத எனக்கு எனக்கு மனைவியானாய். உன் மீது எனக்கு எவ்வளவு வெறுப்பு என்று உனக்குத் தெரியுமல்லவா?''

ரேகா கண்கள் அகல விரிய இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்,

விமலன் திரும்பவும் சொன்னான்—''இப்ப என் உள்ளங்கைக்குள் இருக்கிறாய். நம் இருவருக்கும் விவாகம் ஆகிவிட்டாற்போல என்னிடம் போட்டோக்கள் உருவில் ருசுக்கள் இருக்கின்றன. புரோகிதர் காட்சி சொல்லுவார். அதனால் உன்னால் எந்தவிதத்திலும் என்னிடமிருந்து தப்பித்துக் கொண்டு விடமுடியாது.''

ரேகா பதில் பேசவில்லை.

விமலன் திரும்பவும் சொன்னான்—''ஆனால் ஒரு நிபந்தனை. கமலனின் ஜோலிக்கு நீ வராமலிருக்கும் வரை உன் ஜோலிக்கு நானும் வரமாட்டேன். நீ வேறு நபருடன் விவாகத்தை நிச்சயம் பண்ணிக் கொள். இந்த

போட்டோக்களை உன்னிடம் தந்து விடுகிறேன். உன்னைக் கஷ்டப்படுத்தியதற்குப் பிரதி பலனாய் நீ கேட்ட பணத்தை தந்துவிடுகிறேன், நீ கமலனைப் பற்றிய பேச்சையே எடுக்கக்கூடாது. அவன் சிநேகத்தை முறித்துக்கொள்ள வேண்டும், இதைப் பண்ணினால் உன் கண்ணிலேயே படாமல் போய் விடுவேன்.''

ரேகா ஒரு வார்த்தைகூட பேசவில்லை. அவன் வார்த்தைகளைக் கண்டிக்கவும் இல்லை, வாதாடவும் இல்லை. பொம்மையாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

''நம்மிருவருக்கும் இங்கே கல்யாணமானாற்போல சாட்சிகளும், ருசுக்களும் என்னிடந்தான் இருக்கின்றனவே தவிர உன்னிடம் எதுவும் இல்லை. அதனால் நீ என்னை ஏதாவது பண்ண முயன்றாலும் உன்னால் முடியாது கமலனிடம் நீ இதையெல்லாம் சொல்வாயோ அல்லது மாட்டாயோ அதெல்லாம் உன் இஷ்டம். இது முற்றிலும் உன்னுடைய ரகசியம்.''

கார் திரும்பி வந்துவிட்டதால் விமலன் சம்பாஷணையை நிறுத்தி விட்டு வெளியே போனான். ரேகாவுக்கு இன்னும் தான் எங்கே இருந்தோம் என்று எவ்வளவு யோசித்து பார்த்தபொழுதிலும் புரியவில்லை.

இவ்வளவு தத்ரூபமாய் தென்படுகிற இக்காட்சி கனவு எவ்வாறு ஆகும்? இது நிஜமே! அப்படியானால் அவன் சொன்னதெல்லாம் நிஜந்தானா? இப்பொழுது தனக்கெதிரே இந்த விமலன் நிற்பது உண்மையானால் இத்திருமணம் நடந்த விஷயமும் உண்மைதானா? ரேகா பைத்தியமே பிடித்து விட்டவளைப் போல மார்பில் தொங்கிக் கொண்டிருந்த தாலியைப் பார்த்துக் கொண்டாள். பொய், பொய்! பச்சைப் பொய்! மோசம்! அநியாயம்! ரேகாவின் அந்தரங்கத்தில் யாரோ ஆயிரம் குரல்களெடுத்துக் கத்திக் கொண்டிருந்தார்கள்.

டிரைவர் விமலன் கேட்டுக்கொண்டபடி பிளாஸ்க்கில் காபியை வாங்கிகொண்டு வந்திருந்தான். விமலன் பிளாஸ்க்கை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

''காபி குடிக்கிறீங்களா?'' என்றான்.

ரேகா பதில் பேசவில்லை.

தம்ளரில் காபியை ஊற்றித் தந்தான். ரேகா மறுத்து விடுவாள் என்றும் காபியை வீசியெறிந்து விடுவாள் என்றும் நினைத்தான். ஆனால் ரேகா கையை நீட்டி வாங்கிக் கொண்டாள். அவன் நினைத்திருந்ததற்கு மாறாக மெல்ல மெல்ல அந்தச் சூடான காபியைக் குடிக்கத் தொடங்கினாள். காபி தம்ளரைப் பிடித்துக் கொண்டிருந்த ரேகாவின் கைகள் லேசாய் நடுங்கிக் கொண்டிருந்ததையும் உடம்பு பயத்தால் சிலிர்த்துக் கொண்டிருந்ததையும் கவனிக்கத் தவறவில்லை அவன். ரத்தம் இல்லாதது போல முகம் வெளுத்துப் போயிருந்த ரேகாவைப் பார்த்த அவனுக்கு திடீரென்று இரக்கம் பிறந்தது. தன் மீதே தனக்குக் கோபம்கூட வந்தது. வேறு வழியில்லாமல் இந்த நிலைமையில் இப்படித் தலையிட வேண்டியிருந்ததற்கு கோபமும் வந்தது.

பேண்ட் ஜேபிக்குள் கைகள் இரண்டையும் நுழைத்துக்கொண்டு ரேகாவிடம் நின்று அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவனுக்கு, ஒரு வினாடி சுற்றிலும் இருந்த ஏகாந்தமும், மிக நிசப்தமாய் இருந்த அச்சூழ்நிலையும் அவனை ரேகாவிற்கு அருகில் உட்காரும்படியும், அழகாய் கவர்ச்சியாய் இருந்த அவளைக் கிட்டே இழுத்து மார்போடணைத்துக் கொள்ளும்படியும், இப்படிப்பட்ட விஷயங்கள் அப்பெண்ணிற்குப் பழக்கப்பட்டதேயாதலால் இதில் தப்பில்லை என்றும் தூண்டிவிட்டன. ஆனால் விமலனின் மனதில் விவேகமும் அதிகாரமும் எப்பொழு

தும் இருந்துகொண்டேயிருக்கும். 'சீ, சீ! இதென்ன நான் இப்படி யோசிக்கிறேனே!' என்று விருப்பத்திற்கு அடிமையாகவிருந்த மனதிற்கு கடிவாளம் போட்டு பின்னுக்கு இழுத்துக்கொண்டுவந்துவிட்டான்.

ரேகா காபியைக் குடித்துவிட்டு தம்ளரை கீழே வைத்தாள்.

தொலைவில் கதவில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்த அவன் சிகரெட்டிற்காக ஜேபியைத் தடவிக் கொண்டே பிசிறில்லாமல் சொன்னான்—"நீ கொஞ்சம் எழுந்திருந்து அந்த வேஷம் முதலியவைகளைக் களைந்துவிட்டால், இனி நாம்ப வீட்டிற்கு போகலாம்."

"வேஷமா?" என்பது போல பார்த்தாள் ரேகா.

"அதான் அந்தக் கல்யாண திலகத்தையும் கன்னத்தில் பொட்டையும்—"

ரேகா திலகத்தை அழித்துவிட்டுச் சிறிய பொட்டாக்கிக் கொண்டாள். புடவைத் தலைப்பால் கன்னத்தில் அழுத்தமாய் துடைத்துக்கொண்டாள். கன்னத்தில் இருந்தது மை ஆதலால் எவ்வளவு துடைத்த போதிலும் போகவில்லை.

அடுத்த கால்மணி நேரத்தில் வந்து இருவரும் காரில் உட்கார்ந்துகொண்டார்கள். கார் நகரத்தை நோக்கி வேகமாய் பறந்தது.

காருக்குள் ஒரு மூலையில் ஒதுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்த ரேகா தலை குனிந்தபடி முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு ரிஜிஸ்தரார் ஆபீசுக் கருகில் விமலன் எதிர்ப்பட்டதையும், மிக மரியாதையாய் தன்னோடு பேசியதையும், கமலனுக்கு உடம்பு சரியாய் இல்லை என்று சொன்னதை நம்பி தான் புறப்பட்டதை யும், வழியில் அவன் ஏதோ அவமானப்படுத்திப்

பேசியதைக் கேட்டு கோபத்துடன் அடிக்கப்போனது எல்லாவற்றையும் வரிசையாய் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு முயன்றாள். ரேகாவுக்கு இன்னும் தூக்கக் கலக்கமாய், சொல்ல முடியாத அசதியாய் இருந்தது.

கார் நகரத்திற்குள் நுழைந்தது. ஊரெல்லைக்குள் நுழைந்துகொண்டிருந்த அவ்விடத்தில் அவ்வளவாய் ஜனசஞ்சாரம் இல்லை. மாலை மங்கி சந்தியா இருள் பரவத் தொடங்கியிருந்தது. பெட்டிக்கடை ஒன்றைத் தாண்டி சில அடிகள் போனதுமே விமலன் காரை நிறுத்தச் சொனான். பிற்பகலிலேயே அவன் பாக் கெட்டில் சிகரெட் தீர்ந்துவிட்டது. டிரைவர் காரை சாலையோரத்தில் இருந்த வாதநாராயண மரத்தடியில் நிறுத்தினான்.

''சிகரெட் பாக்கெட் ஒன்று வாங்கிக்கொண்டு வா'' ஜேபியிலிருந்து பணத்தை எடுத்து தந்தான். டிரைவர் பணத்தை வாங்கிக்கொண்டு இறங்கிப்போனான். விமலன் திரும்பி ரேகாவைப் பார்த்தான்.

மற்றொரு முறை ரேகாவுக்கும் அவனுக்குமிடையே இருந்த ஏகாந்தம் அவன் மனதைத் தூண்டிவிட்டது. ஆசைக்கு ஒரு வினாடி அடிமைப்பட்டுவிட்ட அவன் மனது விவேகத்தைப் பொருட்படுத்தவில்லை. டிரைவர் கண்மறைவானதுமே விமலன் இரு கைகளையும் நீட்டி ரேகாவின் தோள்களைப் பிடித்துக் கிட்டே இழுத்துக் கொண்டான். வேற்றுச் சிந்தனையுடன் பைத்தியம் பிடித்தவளைப் போல சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்த ரேகா திடுக்கிட்டுப் பார்ப்பதற்குள் விமலனின் முகம் அவளுக்கு எதிராய், மிக நெருக்கத்திற்கு வந்துவிட்டி ருந்தது. ரேகாவின் இடுப்பைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக்கொண்டு கிட்டே இழுத்து மார்போடமுத்திக் கொள்ளப்போன அவன் ஒரு நிமிஷம் அவள் முகத்தைப்

பார்த்தான். அக்கண்களில் அதுவரை அவனை அழவைத்து பைத்தியம் பிடிக்க வைத்துக் கொண்டிருந்த ரோஷத்தையோ கோபத்தையோ காணோம். ஆதரவில்லாமல் பார்த்துக்கொண்டிருந்த அக்கண்களைப் பார்த்ததுமே அவன் சாட்டையடி வாங்கியவனைப் போல நின்றுவிட்டான். எந்தவிதமான திமிறலோ, எதிர்ப்போ காட்டாமல், பயந்துபோன சிறு குழந்தையைப் போல, வாடிய முகத்துடன், கன்னத்தில் கலைந்த மைக்கீற்றுடன், விக்கித்துப்போய் பார்த்துக் கொண்டிருந்த ரேகாவைக் கண்டதுமே அவன் இதயத்தை யாரோ இரும்பு உலக்கையால் ஓங்கி அழுத்தினாற்போலிருந்தது. அவளை கிட்டே இழுத்துக் கொண்ட அவன், அதை மறந்துபோய், மயக்கம் இறங்கியவனாய் ரேகாவை மிக மென்மையாய் விட்டு விட்டான்.

விமலன் திடீரென்று தன்னை ஏன் கிட்டே இழுத்துக் கொண்டான் என்றும், அதற்குள்ளேயே அவன் பிடி ஏன் அவ்வாறு தளர்ந்து விட்டது என்றும் ரேகாவுக்குப் புரியவில்லை. யோசிக்கும் நிதானம் கூட இல்லை. திரும்பவும் தன் இடத்திற்கு மூலையில் போய் ஒதுங்கிக் கொள்ளும் சக்திகூட இல்லாதவளாய் அவனுக்குப் பக்கத்தில் அப்படியே ஊமையாய் உட்கார்ந்திருந்தாள்.

டிரைவர் திரும்பி வந்தான். கொஞ்ச நேரத்தில் கார் நகரத்திற்குள் நுழைந்தது. இருட்டி விட்டதால் தெரு விளக்குகள் எரியத் தொடங்கின. கடைவீதிகளில் மாலை நேரத்து சந்தடி கலகலப்பாய் இருந்தது. கார் மார்க்கெட் கடைவீதிக்கு வந்ததுமே ஜனசஞ்சாரமான இடத்தில் காரை நிறுத்தச் சொன்னான் விமலன். கார் நின்றது.

கதவைத் திறக்கப் போன அவன் ஒரு வினாடி நின்று ரேகாவைத் திரும்பிப் பார்த்தான். ‘‘நான் சொன்னது நினைவிருக்கா? நீ கமலனின் ஜோலிக்கு

வராத வரைக்கும் நான் உன் ஜோலிக்கு வரமாட்டேன். நீ இன்னொரு நபரை கல்யாணம் பண்ணிக் கொண்ட அடுத்த நிமிஷமே உனக்கும் தீய கனவாய் தோன்றுகிற இச் சம்பவத்தை நீயும் மறந்து போகும்படியாய்ச் செய்து விடுவேன்''— என்றான்.

இம்முறை அவன் குரலில் கடினம் இல்லை குழைவு இல்லை. ஏளனமோ அலட்சியமோகூட இல்லை. உத்தரவிடுவதுபோலகூட சொல்லவில்லை. சொல்ல வேண்டிய எதையோ தெளிவாய், சொல்லிவிட்டாற் போல இருந்தது. ரேகா பதில் பேசவில்லை. விமலன் பதிலை எதிர்பார்க்கவும் இல்லை. சட்டென்று கதவைத் திறந்து கொண்டு இறங்கிவிட்டான்.

டிரைவரிடம்— ''இந்தப் பெண்ணை அவங்க வீட்டிற்கருகில் இறக்கி விட்டுவிட்டு நீ வீட்டிற்குப் போ''— என்று சொல்லிவிட்டு மளமளவென்று ஜனக் கூட்டத்தில் கலந்து மறைந்து போனான். கார் புறப்பட்டது.

''எந்த பக்கம்?'' டிரைவர் கேட்ட கேள்விக்கு இந்த உலகத்திற்குத் திரும்பினாள் ரேகா.

அவனுக்கு வழி சொல்லிக் கொண்டிருக்கையில் தன்னையறியாமல் அவள் பார்வை தன் மார்பின் மீது நிலைத்தது. ரேகா வெறித்துப் பார்த்தாள். திருமாங் கல்யம்! ரேகா மெதுவாய் அவைகளைக் கையில் எடுத்துப் பார்த்தாள். இது கனவா? நினைவா? விமலன் அவைகளைத் தானே தன் கழுத்தில் கட்டியிருப்பது உண்மையே என்று எடுத்துச் சொல்லுவது போல வெளியே வீதியிலிருந்து விட்டு விட்டு வந்து பட்ட விளக்கு வெளிச்சத்தில் அவை பளபளவென்று மினுமினுத்துக்கொண்டிருந்தன. திருமாங்கல்யம் என்பது இரண்டு இதயங்கள் புனிதமான குடும்ப தர்மத்திற்குக் கட்டுப்பட்டு, ஒரே வாழ்க்கையாய், ஒரே பாதையில்

சேர்ந்து நடக்க வேண்டும் என்று எடுத்துக்காட்டும் சின்னம். மிகப் புனிதமான பந்தம் இது. விமலன் அவளை அவமானப்படுத்த வேண்டும் என்ற ஆவேசத்தில் நல்லது கெட்டதைக்கூட மறந்து போய்விட்டான் போலும்! எவ்வளவு கடினமானவன்!

திருமணம் அவள் வாழ்க்கையில் எஞ்சியிருக்கும் ஒரே ஒரு இனிமையான கனவு. எந்த இனிமையானக் கனவிற்காக கமலனையும் அவன் சொத்தையும்கூட அவள் பொருட்படுத்தவில்லையோ, எந்த இனிமையான கனவிற்காக கமலனின் நுட்பமான மனது வருந்துமே என்று அறிந்தும் அதற்காக அவன் சிநேகத்தைக்கூட விட்டுவிடுவதற்கு முடிவெடுத்துக் கொண்டிருந்தாளோ அந்தக் கனவை விமலன் இந்த விதமாய் பழி என்ற பெயரில் குரூரமாய் நாசம் பண்ணிவிட்டான். அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது!

அவளுக்குத் திருமணம் ஆனதாய் உலகத்திற்கு என்றுமே தெரியாது. யாருமே புரிந்துகொள்ள மாட்டார்கள். கடைசியில் இந்த தாலியைக் கட்டிய நபரேகூட ஒத்துக்கொள்ள மாட்டார். எவ்வளவு கடினமான சத்தியம்! ரேகாவின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

வாழ்க்கையில் ஒவ்வொரு அடியிலும் இதென்ன அஷ்டகோணல்?எல்லாப் பெண்களையும் போல தான் இல்லை என்றும், தன்னை யாருமே எந்த விதத்திலும் கெடுத்துவிட முடியாது என்றும் எவ்வளவு கர்வமாய் இருந்தாள்! ஆனால் இன்றைக்கு நடந்தது என்ன? என்னவாகி விட்டது இவளுக்கு? விமலன் என்ன செய்தான் அவளை? கற்பழிக்கவில்லை. உயிரை எடுத்துவிடவில்லை. ஆனால் வாழ்க்கை சந்தி சிரிக்கும்படியான சூழ்நிலையை உருவாக்கி விட்டான்.

அவள் எதிர்காலமே நிர்மலமாகி விடும்படியாய் செய்து விட்டான்.

ரேகா காரை விட்டிறங்கி வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தபொழுது நல்ல வேளை சுந்தரி வீட்டில் இல்லை. சங்கரன் கூட இல்லை. காலையில் போன ரேகா இருட்டும் வரை திரும்பி வராமல் போகவே, அந்த கமலன் என்ற பையனோடு எங்கெங்கெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கிறாளோ, என்ன பண்ணுகிறாளோ என்ற சந்தேகத்தோடும் பல விதமான யோசனை களோடும் பைத்தியம் பிடித்தவளைப்போல ஆகிவிட்ட காயத்ரிக்கு மார்வலி. அதைத் தொடர்ந்து ஃபிட்ஸ் வேறு வந்துவிட்டது.

வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததுமே நடைப் பிணமாய் கட்டிலில் விழுந்து கிடந்த தாயைத் தவிர அச்சுற்று வட்டாரத்தில் யாருமே இல்லை என்றறிந்து கொண்ட ரேகாவுக்கு வெகுநேரமாய் அடக்கி வைத்துக் கொண்டிருந்த துக்கம் கட்டுமீறிக் கொண்டு வெளி வரத் தொடங்கிவிட்டது. இரண்டு கைகளாலும் முகத் தைப் பொத்திக்கொண்டு இதயமே வெடித்துவிடும் போல மனமார அழுது தீர்த்தாள்.

# 23

இரவு பத்து மணியளவில் கமலனுக்கு நினைவு திரும்பிற்று. மெதுவாய் கண்களைத் திறந்தான். நன்றாய் விழித்துக் கொண்ட அவன் மெதுவாய் எழுந்து உட் கார்ந்துகொண்டான். முதலில்எல்லாம் ஒரே குழப்ப மாய் தோன்றிற்று. தான் போட்டுக் கொண்டிருந்த உடைகளைப் பார்த்ததும், ரேகாவுடன் இன்றைக்குத்

திருமணம் நடக்க வேண்டிய விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. நேரத்தைப் பார்த்தான். இரவு பத்து மணி அடிக்கவிருந்தது. பாத்ரூமிலிருந்து சப்தம் கேட்டது. ''விமல்'' என்று கூப்பிட்டான்.

விமலன் அப்பொழுதுதான் வீட்டிற்குத் திரும்பி வந்து குளித்துக் கொண்டிருந்தான். அவன் வலது கையில் ரேகா கடித்த இடத்தில் ஆழமாய் பற்கள் பதிந் திருந்தன.

கமலனின் அழைப்பைக் கேட்டதுமே வராந்தாவில் புடவைத் தலைப்பை விரித்துப் படுத்துக் கொண்டிருந்த கங்கம்மா,

''என்ன தம்பீ?'' என்று உள்ளே வந்தாள் சட்டென்று.

''கங்கம்மா! நான் எவ்வளவு நேரமாய் இப்படி இருந்தேன்?''

சின்னப் பையனைப் போல கேட்டான்.

''காலையிலிருந்து தம்பீ.''

''காலையிலிருந்தா?'' கமலனின் முகம் களை யிழந்தது. அவனுக்கு மூளையே குழம்பிவிட்டாற் போலிருந்தது.

குளித்து முடித்து விட்டு வெளியே வந்த விமலன் தம்பியைப் பார்த்ததுமே லேசாய் விசிலடித்தான்.

''விமல்! எனக்கு...எனக்கு என்னவாயிடுத்து?'' அழமாட்டாத குறையாய் கேட்டான்.

''நினைவு தப்பிவிட்டது. தூங்கிவிட்டாய்'' கண்ணாடிக்கருகில் போய் நின்று தலையை வாரிக் கொண்டே சொன்னான்.

''ஓ! மை காட்'' கமலன் இரு கைகளாலும் தலை யைப் பிடித்துக் கொண்டான்.

''ஏன்? என்னவாச்சு?''

''விமல்! ரேகாவிடம் இன்றைக்கு வருவதாய் வாக்குக் கொடுத்திருந்தேன். கடவுளே!''

விமலன் ஒரு வினாடி பதில் பேசவில்லை. நிலைமையை எளிதாய், வேடிக்கையாய் மாற்ற எண்ணி, ''பரவாயில்லை. திகிலடையாதே. உனக்கு உடம்பு சரியில்லாததால் உன்னால் வரமுடியவில்லை என்று நான் போய் சொல்லிவிட்டு வந்துட்டேன்.''

''நீயா?''

''ஆமாம்.''

கமலன் நிம்மதியடைந்தான். அதற்குள் சந்தேகம் வந்துவிட்டது.

நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு கேட்டான். ''ரேகாவை நீ எங்கே பார்த்தாய்?''

''வேறெங்கே? ரெஜிஸ்தரார் ஆபீசில்.''

''விமல்'' கமலன் வானமே இடிந்து விழுந்து விட்டாற்போல பார்த்தான். ''உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''எப்படி? எப்படித் தெரிந்தது?''

''தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினால் எதையும் தெரிந்து கொள்ள முடியும்.''

கமலனின் முகம் நிறம் மாறிற்று. மின்னலாய் ஏதோ சட்டென்று உணர்ந்து கொண்டு விட்டவனைப் போல எழுந்து நின்று ''அப்படிச் சொல்லு. உனக்கு முன்பே தெரியும்னு சொல்லு.'' என்றான்.

''தெரியும். நீயும் ரேகாவும் சேர்ந்து லாயரிடம் போன அன்றைக்கே ஊகித்துக் கொண்டு விட்டேன். நீ நேற்றைக்கு மார்வாடியிடமிருந்து ஐந்தாயிரம் ரூபாய்

வட்டிக்கு வாங்கிக்கொண்டதுமே அவர் எனக்கு போன் பண்ணினார். அப்கோர்ஸ்! என் டைப்பிஸ்ட் உன்னை நிழலாய் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தான்.''

கமலன் கண்கள் அகல விரிய அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளங்கை முறுக்கேறிக் கொண்டது. விமலனுக்கு முன்பே தெரியும் ரேகாவை அவன் இன்றைக்கு மணக்கவிருந்த விஷயம். விமலனுக்கு முன்பே தெரியும். அதனால்தான் ஒரு நாள்கூட தலைவலி என்று படுத்திராத அவனுக்கு திடீரென்று உடம்பிற்கு இப்படி வந்துவிட்டது. ஏறக்குறைய இன்று முழுவதுமே நினைவில்லாமல் படுத்திருக்கிறான் அவன். இது விமலன் தன் கையால் பண்ணிய சதி. இத்திருமணத்தைத் தடுப்பதற்காகச் செய்த உபாயம்.

கமலனுக்குக் கண் முன்னால் திரை ஏதோ அகன்று சத்தியம் கண்களுக்குத் தெரிந்தாற்போல ஆயிற்று. என்றுமில்லாதவாறு தாங்கமுடியாத கோபம் வந்து விட்டது. எதிரே விமலனுக்காக கங்கம்மா ஸ்டூல் மீது கொண்டு வந்து வைத்திருந்த காபியைக் காலால் தள்ளி விட்டான். பற்களைக் கடித்துக் கொண்டு விமலனைப் பார்த்தான்.

தலைவாரிக் கொண்டிருந்த விமலன் ஒரு நிமிஷம் திரும்பிப் பார்த்தான். கமலனின் முகத் தோற்றங்களை கவனித்தான். பொறுமை தளர்ந்து விட்டவனாய் கடுமையாய் சொன்னான். ''வரம்பு மீறி நடந்து கொண்டாயானால் ஜாக்கிரதை! மென்டல் ஆசுபத்திரிக்கு போன் பண்ணி ஆம்புலென்ஸை அனுப்பச் சொல்லிவிடுவேன்.''

''நீ...நீ ராட்சசன்! என்ன வேண்டுமானாலும் செய்வாய்.''

''ஆமாம், அந்தப் பெண்ணிற்கும் உனக்கும் கல்யாணம் ஆகாமல் தடுப்பதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வேன் நான்.''

கமலன் அவன் மீது பாயவந்தாற்போல சிவந்த முகத்துடன் சொன்னான். ''நிஜத்தைச் சொல்லு! ரேகாவிடம் என்ன சொன்னாய்? திரும்பவும் என்ன தொல்லை கொடுத்து விட்டு வந்தாய்? என்ன அவமானப்படுத்தினாய்?''

ஒரு வினாடி கமலனின் முகத்தைக் கூர்ந்து பார்த்த விமலன் தோளைக் குலுக்கிக் கொண்டே, ''நீ அந்தப் பெண்ணையே கேள்'' என்றான் அலட்சியமாய்.

''சரி! அந்தப் பெண்ணின் வாயிலிருந்து உன்னால் அவளுக்கு ஏதாவது அவமானம் நேர்ந்தாற்போல கேள்விப்பட்ட அடுத்த நிமிஷமே நான் உனக்குத் தம்பியே இல்லை. எனக்கு நீ அண்ணன் இல்லை. அந்த அவமானம் எவ்வளவு சின்னதாய் இருந்தாலும் சரி உனக்கும் எனக்கும் உறவு விட்டு விட்டது ''

கமலன் அறையை விட்டுப் போய்க் கொண்டிருந்த பொழுது—''கமல்'' என்று கூப்பிட்டான் விமலன்.

கமலன் திரும்பி அவனைப் பார்த்து சபதமிட்டாற் போல சொன்னான்—''நீ இன்றைக்குத் தடுத்து விட்டதால் இது நின்றுவிடாது. அவளை என் மனைவியாய் அழைத்துக் கொண்டு வரும்வரை இந்த வீட்டுப்படியேற மாட்டேன். பிடிவாதம் என்பது உனக்கு மட்டும் இல்லை எனக்கும் உண்டு,''

விமலன் வாயைத் திறந்து பதில் சொல்வதற்குள்ளாகவே கமலன் வேகமாய் வெளியே போய்விட்டான். விமலன் பெரிதாய் கத்தினான்.

''கமல்! என் பேச்சைக் கேள். எங்கேயும் போகாதே'' கமலன் விவரம் தெரிந்த பிறகு முதல்

முதலாக அண்ணனின் பேச்சைப் பொருட்படுத்த வில்லை, வீதியில் இறங்கி விட்டான்.

அறையின் ஒரு மூலையில் திறந்த வாயை மூடாமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கங்கம்மாவைப் பார்த்து விமலன்—"கங்கம்மா, சட்டென்று கீழே போ, சின்னய்யா எங்கே போகிறார்னு பார். நான் இதோ உடை மாற்றிக் கொண்டு வரேன்" என்றான்.

கங்கம்மா கீழே ஓடினாள். விமலன் உடையணிந்து கொண்டு மளமளவென்று கீழே இறங்கி வந்துகொண் டிருந்தபொழுது கங்கம்மா வாயெல்லாம் பல்லாய் சிரித்துக் கொண்டே வெளியேயிருந்து திரும்பி வந்தவள், "கவலைப்படாதே தொரை! விஸ்வநாதன் ஐயா வீட்டுக்குப் போனார்" என்றாள்.

விமலனின் மனம் இலேசாயிற்று. வெளியே போக முயன்றவன் திரும்பி வீட்டிற்குள் வந்து விட்டான்.

கால்மணி நேரங்கழித்து விமலன் சாப்பிட்டு விட்டுக் கையைக் கழுவிக் கொண்டிருந்தபோது ஆபீஸ் அறை யிலிருந்து போன் கணகணவென்று ஒலித்தது. விமலன் போய் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ."

மறுமுனையிலிருந்து விஸ்வநாதனின் குரல் தூக்கக் கலக்கத்துடன் கேட்டது—"விமல்" என்று.

"எஸ்."

"என்ன ரகளைப்பா? இப்படி திடீரென்று வந்துவிட்டானே, இதென்ன! உன்னோடு சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டதாகவும், இன்றிரவிற்கு புகலிடம் தாருங்கள் என்றும் ஏதேதோ சொல்கிறானே? என்ன தான் நடந்தது?"

"அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கு, இன்றைக்கு அங்கேயே இருக்கட்டும். நாளைக் காலையில் வந்து நான் உங்களோடு பேசுகிறேன்,"

"திரும்பவும் பணம் விஷயமாய் ரகளையா?"

"இல்லை."

"பெண்ணைப் பற்றியா?"

"ஆமாம்."

அவர் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தார். பிறகு கேட்டார்—"யார் அந்தப் பெண்?"

"உங்களுக்கு இப்பல்லாம் உடம்புச் சரியாய் இல்லாததால் உங்களிடம் இதையெல்லாம் சொல்லி தொந்தரவு பண்ணுவானேன் என்றெண்ணிக்கொண்டு இவ்வளவு நாளாய் சொல்லவில்லை."

விமலன் சுருக்கமாய் கமலனுக்குப் பிடித்திருந்த பைத்தியத்தைப் பற்றிச் சொன்னான்.

"அட! இவ்வளவு ரகளை நடந்திருக்கா? கல்யாணம் வரைக்கும் வந்திருக்கிறது என்றால் அந்தப் பெண் யாரோ ரொம்பவும் சாமர்த்தியசாலியாய்தான் இருக்கணும்" என்றார் அவர்.

"இன்றைக்கு இந்தக் கல்யாணத்தைத் தடுத்து விட்டேன்னு என் மேல் கோபித்துக் கொண்டிருக்கிறான் அதுதான் இப்பொழுது ரகளை."

"கமலன் ரொம்பவும் அப்பாவி விமல்! வெளுத்த தெல்லாம் பால் என்று நினைக்கிறவன். நீ அவனைக் கண்ணில் விளக்கெண்ணை விட்டுக் கொண்டு பார்த்து வரணும்."

"அதை ஒப்புக் கொள்ளமாட்டானே அவன்."

"சின்னவன்! இந்த வயதில்தான் அவங்களுக்குச் சரியான வழிகாட்டி வேண்டும். நாளைக் காலையில் காபிக்கு நீ இங்கே வந்துவிடு. கமலனை நான் சமாதானப் படுத்தி விடுகிறேன்."

"தாங்க்ஸ்! லலிதா விழித்துக் கொண்டு விட்டாளா?"

"ஆங்! ஏன்?"

"கமலன் சாப்பிடுவதாய் சொன்னால் சரி. இல்லாவிட்டால் லலிதாவிடம் சொல்லி ஒரு தம்ளர் சுடச்சுட பாலோ அல்லது ஹார்லிக்ஸோ தரச் சொல்லுங்கள். அவன் காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை."

"சரி" விஸ்வநாதன் போனை வைத்துவிட்டார்.

ரிசீவரை வைத்த விமலன் ஒரு வினாடி அப்படியே நின்றுவிட்டான். அவனுக்கு நாளைக்கு கோர்ட்டில் வாதாட வேண்டிய கேசு ஒன்று இருந்தது. அதற்கு வாதனைகளைத் தயாரித்துக்கொள்ளவில்லை. நாளை இரவு டில்லிக்குப் போக வேண்டும். போவதற்குள் பண்ணி முடிக்க வேண்டிய காரியங்கள் நாலைந்து இருந்தன. ட்ரை க்ளீனருக்குத் தந்த உடைகளை இன்னும் வாங்கிவரவில்லை. பெட்டியில் சாமான்களை அடுக்கிக்கொள்ள வேண்டும். நாளைக்கு எழுந்ததிலிருந்து ஒரு நிமிஷம் கூட மூச்சுவிட முடியாது. ஒரு வினாடி விமலனுக்குத் தாங்க முடியாத சோர்வாய் இருந்தது.

கட்டிலில் வந்து படுத்துக்கொண்ட அவனுக்கு தூக்கம் வரவில்லை. புத்தகம் ஒன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தானேயொழிய அவன் மனமெல்லாம் ரேகாவைப் பற்றியே யோசிக்கத் தொடங்கிற்று. என்ன

காரியம் பண்ணிவிட்டான் அவன்? ரேகாவைத் திருமணம் பண்ணிக்கொண்டு விட்டான்!

எல்லோரும் மிகப் புனிதமாகவும் உயிராகவும் பாவிக்கும் அக்காரியத்தை அவன் கமலனுக்காக அலட்சியமாய் பழிவாங்குவது போல பண்ணிவிட்டான். இது நல்ல காரியந்தானா? ரேகா என்ன பண்ணிக் கொண்டிருப்பாளோ? அசந்துபோய் தூங்கிக்கொண் டிருப்பாளோ? அல்லது அவனைத் திட்டி சபித்துக் கொண்டிருப்பாளோ? அல்லது இவ்வளவு அவமானப் படுத்தி விட்ட அவனை எப்படிப் பழிவாங்கலாம் என்று உபாயத்தை யோசித்துக் கொண்டிருப்பாளோ? விமலன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு விளக்கை அணைத் தான். லாபமில்லை. கமலனுக்குச் சீக்கிரமாய் மணம் செய்து வைத்துவிடவேண்டும். அப்பொழுதுதான் தனக் குக் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும். நிதானமாய் எதிர் காலத்தைப் பற்றி யோசித்துக் கொள்வதற்கு சமயம் கிடைக்கும். விமலன் திரும்பி படுத்துக் கொண்டான். அவன் கண்கள் மெல்ல மூடிக்கொள்ளவே உறக்கத்தில் ஆழ்ந்து போனான்.

# 24

காலை எட்டு மணி வேளை. விஸ்வநாதன் தோட் டத்துப் பக்கம் இருந்த வராந்தாவில் உட்கார்ந்து கொண்டிருந்தார். லலிதாவும் கமலனும்கூட அவ்விடத் திலேயே தான் இருந்தார்கள். வராந்தாவின் இறக்கத்தில் ரஞ்சிதா காலை எக்ஸர்சைசாய் ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருந்தார். ''வன்...டுத்ரீ...போர்...'' என்று விஸ்வநாதன் கணக்கிட்டுக் கொண்டே ஒரு கண்ணால் தொலைவில் தோட்டக்காரன் செடிகளுக்கு நன்றாய்

தண்ணீர் விடுகிறானா என்று கவனித்துக் கொண்டிருந் தார். வேலைக்காரன் ட்ரேயில் காபி, பிரெட், பிஸ்கெட்டு களைக் கொண்டு வந்து அவ்விடத்தில் வைத்துவிட்டுப் போய் விட்டான்.

அப்பொழுதுதான் குளித்துவிட்டு உடையணிந்து கொண்டு வந்திருந்த லலிதா இதழ் விரிந்த மல்லிகைப் பூவைப் போல இருந்தாள். சமீபத்தில் ஜானோடு பரிச்சியம் ஏற்பட்டிருந்த பிறகு லலிதாவிடம் ஒரு வித மான மாறுபாடு ஏற்பட்டிருந்தது. சில நாட்களுக்கு முன்னால் அக்கண்களில் தென்பட்ட எரிச்சலும் கோபமும் மாயமாகி விட்டன. லலிதா இப்பொழுது எல் லோரோடும் அன்பாகவும் ஆதரவாகவும் மரியாதை யாகவும் நடந்து கொண்டாள். வேலைக்காரன் கொண்டு வந்து வைத்த காபியை பாட்டிலிருந்து கோப் பைகளில் ஊற்றி தந்தைக்கும் கமலனுக்கும் தந்து கொண்டிருந்தபொழுது விமலன் வந்தான்.

''வாப்பா'' விஸ்வநாதன் அன்போடு வரவேற்றார். அண்ணனைப் பார்த்ததுமே கமலன் முகத்தைத் திருப் பிக்கொண்டான். விமலன் அங்கே வந்ததுமே ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டிருந்த ரஞ்சிதாவிடம் போனான். ரஞ்சிதா ஸ்கிப்பிங் ஆடுவதை விட்டு விட்டு விமலனிடம் ஓடி வந்தாள். விமலன் அவளைத் தூக்கிக் கொண்டு கன்னங் களில் முத்தமிட்டான்.

லலிதா கண்கொட்டாமல் திரும்பி அவ்விருவரை யுமே பார்த்துக் கொண்டிருந்தாள். நல்ல உடற்கட்டும், நிறமும், உயரத்திற்கேற்ற பருமனும், கொண்ட விமலனின் மீது லலிதாவுக்கு ஈடுபாடு இருந்து வந்தது, அவன் மன அந்தரங்கத்திற்குள் விமலன் தன் கண வனாக வேண்டும் என்ற நினைவும் அவ்வாறு ஆக முடியாமல் போன ஏமாற்றமும் விமலனைப் பார்த்த பொழுதெல்லாம் புஸ்ஸென்று தோன்றிப் பற்றிக்

கொள்ளும். ஆனால் தற்சமயம் ஜானுடைய பரிச்சியத்தால் லலிதாவுக்கு விமலனைப் பார்த்த பொழுது எந்த உணர்ச்சியும் தோன்றவில்லை. விமலன் ரஞ்சிதாவை இறக்கிவிட்டு விட்டு விஸ்வநாதனிடம் வந்தான்.

''என்ன ரகளை?'' விமலனை உட்காரச் சொல்லி விட்டுக் கேட்டார் அவர்.

''அவனையே கேளுங்கள்'' என்றான் விமலன்.

விஸ்வநாதன் கமலனைப் பார்த்தார்.

கமலன் சபதமிடுவது போல பதிலளித்தான். ''அவன் யாரை மட்டு மரியாதை இல்லாமல் அவமானப் படுத்தினானோ அந்தப் பெண்ணை என் மனைவியாக்கிக் கொண்டாலேயொழிய நான் திரும்பி அந்த வீட்டிற்குள் காலெடுத்து வைக்கமாட்டேன்.''

''நான் உயிரோடிருக்கும் வரை அந்தக் கல்யாணம் நடக்காது.'' கச்சிதமாய் சொல்லிவிட்டான் விமலன்.

''காரணம் என்னன்னு கேளுங்கள் நீங்கள்'' என்றான் கமலன். விஸ்வனாதன் விமலனைப் பார்த்தார்.

''அந்தப் பெண்ணின் நடத்தை எனக்குப் பிடிக்க வில்லை. பெண்ணுக்கு புத்திசாலித்தனம் இருக்கணுமே யொழிய துணிச்சல் இருக்கக் கூடாது. பணத்திற்காக அந்தப் பெண் என்ன வேண்டுமானாலும் செய்வாள். கமலனுக்கு வரவிருந்த மாமனாருக்கு அந்த விதமாய் கடிதம் எழுதியதே ஒரு சாட்சி. அவங்க குடும்பம் நல்ல தில்லை. அந்தப் பெண்ணின் தம்பி அரெஸ்டாகி ஜெயிலில் இருக்கிறான்'' என்றான் விமலன்.

''அந்தப் பெண் ரொம்ப நல்லவள்'' விமலன் ரேகாவை நிந்தித்த விஷயங்கள் உண்மையாய் தோன்றி

னாலும் அதை மறுக்கக் காரணத்தைச் சொல்ல முடிய வில்லை கமலனால்.

"இவனுக்கு யாரைப் பார்த்தாலுந்தான் நல்லவங் களாய் தோன்றுவாங்க" என்றான் விமலன். அவன் முகத்தில் கோபமும் எரிச்சலும் தென்பட்டன.

விஸ்வநாதன் இடைமறித்துச் சொன்னார். "நீங்களிருவரும் இப்படிச் சச்சரவை ஏற்படுத்திக் கொள்வதால் என்ன பிரயோஜனம்? யாராவது ஒருத்தர் விட்டுக் கொடுத்து ஒத்துப் போனால் நன்றாயிருக்கும்."

கமலன் ஆவேசத்துடன் எழுந்திருந்தவன், சொன் னான். "அம்மா போனதிலிருந்து அவள் பேச்சிற்கு மதிப்புக் கொடுத்து அவன் சொன்னபடியே கேட்டுக் கொண்டே வந்திருக்கிறேன். இந்த ஒரு விஷயத்தில் என் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து வாயைத் திறக் காமல் இருக்கச் சொல்லுங்கள்."

"நடக்காத காரியம். சித்தி என்னிடம் முக்கியமாய் சொல்லிவிட்டுப் போனது இதைத்தான். என் இந்தப் பேச்சைக் கேட்டுத் தீரவேண்டும் மீதி எந்த விஷயத் தைக் கேட்காமப் போனாலும் சரி, இதைக் கேட்டுத் தீரணும்."

கமலன் பொத்தென்று மனமொடிந்து போய் நாற்காலியில் சரிந்தான். லலிதாவுக்கு அந்தச் சமயத்தில் கமலனைப் பார்த்தபொழுது இரக்கம் ஏற்பட்டது. விமலனைக் கண்டிப்பது போல "என்ன விமல் இது? இவ்வளவு விடாப்பிடிவாதம் எதற்கு? கமலன் அந்தப் பெண்ணை உயிரினும் மேலாகக் காதலிக்கும் பொழுது..."

"உம், காதல்" விமலன் அருவறுப்போடு பார்த்தான் ஏளனமாய். "காதலாம்! இந்த சகாப்தத்தில் உங்களைப் போன்றவங்க எல்லோருமாய் சேர்ந்து

அவனை மிக அருவறுப்பாய் மாற்றி விட்டீங்க. இதற்கு முன்னால் நல்ல பண்புள்ளவங்களுக்கும், திறமை யானவங்களுக்குமிடையே மட்டுமே மிக அபூர்வமாய் இருந்து வந்த இந்த விஷயம் இந்த காலத்தை சேர்ந்தவர் களின் பலவீனத்திற்கும் ஆசைகளுக்கும் அது ஒரு சேற்றுக் குட்டையாகி விட்டது.''

லலிதாவுக்கு விமலன் சொன்ன வார்த்தைகள் மனதைச் சுருக்கென்று தைத்ததால், முகம் சிவக்க, தலைகுனிந்தபடி காபியைக் கலக்கத் தொடங்கினாள்.

விஸ்வநாதனின் தரகு வேலை வாழ்க்கையில் முதல் முதலாகத் தோற்றுவிட்டது. கமலன் தன் அபிப்பிரா யத்தை மாற்றிக் கொள்ளவும் இல்லை. விமலனும் ராஜிக்கு வரவில்லை. இருவரும் விரோதிகளைப் போலவே இருந்தார்கள். அண்ணன் தம்பிகளுக் கிடையே எற்பட்ட இந்த அபிப்பிராய பேதம் தீரும்வரை கமலன் தன் வீட்டிலேயே இருந்து வரும்படியாய் ஏற்பாடு செய்தார் விஸ்வனாதன்.

# 25

கமலன் ரேகாவைச் சந்திப்பதற்காக ஒரு வாரமாய் முயன்று கொண்டேயிருந்தான். ஆனால் ரேகா கண்ணில் படவே இல்லை. இரண்டு மூன்று தடவை ரேகாவின் வீட்டிற்கே போனபொழுது ரேகா வீட்டில் இல்லை என்று சொன்னார்கள்.

ரேகா அவன் மீது கோபித்துக்கொண்டு வீட்டில் இருந்துகொண்டே இல்லை என்று சொல்லிவிட்டிருப் பாள் என்பது அவன் சந்தேகம். அது நிஜம் கூட. கமலனோடு தொடர்பை முழுவதுமாய் கத்தரித்துக்

கொண்டுவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு விட்ட ரேகா, கமலன் வருவதை தொலைவிலிருந்தே பார்த்து விட்டு, நேராய் சமையலறைக்குள் நுழைந்து "மாமி! கமலன் வரான். நான் வீட்டில் இல்லை என்று சொல்லு." என்றாள்.

பூமியே தலைகீழாகி விட்டாற்போல பார்த்தாள் சுந்தரி.

"ஒன்றுமில்லை மாமி! கமலன் மேல் எனக்குக் கோபம். அன்றைக்கு எப்பொழுதே வீட்டில் கஷ்டமாய் இருந்தபோது நூறு ரூபாய் கேட்டபோது இல்லை என்று சொல்லி விட்டான்! கேவலம் நூறு ரூபாய்! அப்படிப் பணத்துக்காகப் பின்வாங்குகிற ஆளோடு நான் எதற்காக சிநேகம் பண்ணனும்?" என்று அவள் கேட்காமலேயே சால்ஜாப்புச் சொல்லி விட்டு அங்கிருந்து போய்விட்டாள். சுந்தரியும் அப்படியே சொன்னாள்.

இரண்டாவது தடவை சங்கரன் வீட்டில்தான் இருந்தார். அவரிடமும் அதையே சொல்லச்சொல்லி வேண்டிக்கொண்டாள் ரேகா. அவர் சந்தேகத்துடன் உள்ளே பார்த்துக் கொண்டே வேறு வழியில்லாமல் யாரோ சொல்லச் சொன்னதை சொல்ல வந்தாற்போல, "ரேகா வீட்டில் இல்லைப்பா" என்றார்.

அவர் சொன்ன விதத்தை கொண்டு புரிந்து கொண்டு விட்ட கமலன், "எனக்குத் தெரியும், வீட்டில் இருந்துகொண்டே இல்லை என்று சொல்லச் சொன்னாள்" என்றான்.

சங்கரன் அதிர்ந்து போனவராய் திரும்பிப் பார்த்தார். அவரிடம் போய் வருவதாய்கூட சொல்லாமல் விருட்டென்று திரும்பி வேகமாய் போய்விட்டான் கமலன். ரேகா வீட்டில் இருந்துகொண்டே இல்லை

என்று சொல்லச் சொன்னது கொஞ்சமும் பிடிக்கவில்லை சங்கரனுக்கு. அவர் மனது துணுக்குற்றது. அதனால் தான் ஒரே பாய்ச்சலாய் மளமளவென்று நடந்து போய் கமலனைச் சந்தித்து அவனோடுகூட வீதியில் நடந்து கொண்டே— "உங்க ரெண்டுபேருக்குமிடையே என்ன வாச்சோ எனக்குத் தெரியலை. நீ சொன்னது ரைட் தான். ரேகா வீட்டில்தான் இருக்கிறாள்" என்றார்.

"எனக்குத் தெரியும். ஆனால்... ஆனால் ஒரு தடவை ரேகா என் கண்ணில் பட்டு, நான் சொல்கிற வார்த்தைகளையெல்லாம் கேட்டால் வாழ்நாளெல்லாம் நன்றியோடு இருப்பேன்னு சொல்லுங்கள்" என்றான், கண்ணீர் மல்க.

அந்த நிமிஷமே சங்கரனுக்கு அவன் மீது அளவுக்கு மீறிய இரக்கமும், ரேகாவின் மீது கோபமும் ஏற்பட்டன. வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே ரேகாவைத் திட்டித் தீர்த்தார். ஆனால் என்ன காரணத்தினாலோ ரேகா அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தபடவில்லை. குறைந்தபட்சம் இன்ன காரணத்தினால் என்று பதில் கூட சொல்லவில்லை.

கமலன் பிடிவாதமாய் ரேகாவை நேருக்கு நேராய் சந்தித்துப் பேசுவதற்காகக் காத்திருந்தான். ரேகாவுக்கு ஏதோ வருத்தம் ஏற்பட்டிருக்கிறது அவனால். இல்லா விட்டால் இவ்வாறு செய்யமாட்டாள் என்றெண்ணி னான். தான் அவள் மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்றெண்ணி வெலவெலத்துப் போனான்.

ஒரு முறை காய்கறிக்கடைக்கருகில் தென்பட்டாள் ரேகா. அவன் பார்த்து விட்டு, "ரேகா" என்று கூப்பிட்டுக்கொண்டே கிட்டே வருவதற்குள் விர்ரென்று கூட்டத்தில் கலந்து மாயமாகிவிட்டாள். கடைசியில் ஒரு நாள் ரேஷன் கடைக்கு முன்னால் சர்க்கரைக்காக க்யூவில் நின்றுகொண்டிருக்கையில் பார்த்துவிட்டான்

கமலன். க்யூவில் அந்த பக்கமாய் நின்றுகொண்டிருந்த ரேகா கமலனை கவனிக்கவில்லை. கமலன் ரேஷன் கடைக்கு எதிரேயிருந்த துணிக்கடைக்குள் நுழைந்து க்யூவை ஒரு கண்ணால் கவனித்துக்கொண்டே தனக்கு தேவையில்லாத கைக்குட்டைகள், டைகள் முதலியவை களை வாங்கத் தொடங்கினான்.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து க்யூ கலைந்தது, ரேகா நின்று நின்று சோர்ந்து போனவளாய் சர்க்கரையை வாங்கிக்கொண்டு முகத்தில் படிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே வெளியே வந்தாள். யோசனையில் ஆழ்ந்தபடி நடந்துகொண்டி ருந்த ரேகா பின்னாலிருந்து மளமளவென்று வந்த கமலனை கவனிக்கவில்லை.

பின்னாலிருந்து திடும்மென்று "ரேகா" என்று கேட்டதுமே திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள். கமலன் சட்டென்று ரேகாவின் கையிலிருந்த சர்க்கரை பையைப் பிடுங்கிக்கொண்டான்.

"இதென்ன வேலை?" என்றாள் கோபமாய்.

"நீ என் பேச்சைக் கொஞ்சம் கேட்கணும் ரேகா" என்றான் கெஞ்சினாற்போல.

"இதுவரை கேட்டது போதும். இனி கேட்க என்னால் முடியாது" கோபமாய் இல்லாமல் செய்வதறி யாது சொன்னாள்.

"எந்தச் சூழ்நிலை எதிர்ப்பட்டாலும் நல்ல சிநேகிதர் களாகவே நாம்ப இருப்போம் என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறாய் நீ?"

"சொன்னேன், நிறைய தடவை சொல்லியிருக் கிறேன். ஆனால் உங்களோடு சிநேகம் செய்யக்கூடிய அளவுக்கு எனக்கு தகுதி இல்லை என்று தெரிந்து

கொண்டுவிட்டேன். தயவு செய்து நீங்கள் இங்கே நடுத்தெருவில் ரகளை பண்ணாதீங்க. அந்த சர்க்கரையை இப்படிக் கொடுங்க'' கையை நீட்டினாள் ரேகா.

கமலன் சர்க்கரை இருந்த பையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டான். ''நான் கொடுக்க முடியாது. கொடுக்க முடியாது. நீ என் பேச்சைக் கேட்டு தீரணும். ரொம்ப தூரம் கூட வேண்டாம். இங்கே பக்கத்திலேயேதான் என் நண்பனின் அறை இருக்கிறது. நான் தற்சமயம் சாப்பிட போகிற நேரத்தைத் தவிர மீதி நேரமெல்லாம் அங்கேயேதான் இருந்து கொண்டிருக்கிறேன். அந்த அறையின் சாவி கூட என்னிடந்தான் இருக்கிறது, வா, போகலாம்.''

ரேகா வரமுடியாது என்று தலையாட்டினாள்.

''நீ வந்து தீரணும் ரேகா. உன் பரிச்சியமான இந்த ஒன்றரை வருஷமாய் நான் என்றுமே எதற்குமே பிடிவாதமாய் இருந்ததில்லை. எப்பொழுதும் உன் வார்த்தைகளுக்கு மதிப்பளித்துக் கொண்டேயிருந்தேனே தவிர என் வார்த்தைகளைக் கேட்கச் சொல்லி வேண்டிக் கொண்டதில்லை. ரேகா, இது நடுரோடாய் இருக்கிறது, இல்லாவிட்டால் உன் காலைத் தொட்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டிருப்பேன்.''

''வேண்டாம், வேண்டாம். அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசாதீங்க.''

''இந்த ஒரு வாரமாய் என் மனது எவ்வளவு நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியாது.''

''என்னை மன்னித்து விடுங்கள் கமலன்'' தரையைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''உன்னிடம் மன்னிப்புக் கேட்பதற்காகவேதான் என் இந்த அவஸ்தை எல்லாம்.''

''உங்கள் மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை.''

''கோபம் இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியும். நீ கோபம் இல்லை என்றால் என் அபராதம் நான் ஊகித்திருந்ததைக் காட்டிலும் இருமடங்காய் இருக்கும் என்பது என் உத்தேசம்.''

''கமல்! எல்லோரும் பார்க்கிறாங்க. ப்ளீஸ் என்னைப் போக விடுங்கள்.''

''ஊஹும். என் வார்த்தைகளை நீ முழுவதுமாய் கேட்டாலேயொழிய நான் இந்தப் பையைத் தர மாட்டேன். சக்கரை இல்லாமல் உன்னால் வீட்டிற்குப் போக முடியாது. உங்க மாமியின் வாய் எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியும்'' என்றான்.

ரேகா கோபமாய் பார்த்தாள். அந்தக் கோபம் அதற்குள் ஆதரவில்லாத நிலைக்கு மாறிற்று. தாங்க முடியாதவளாய் ''நீயும் உங்கண்ணாவும் எதற்கும் துணிவீங்க, வாங்க'' என்றாள்.

''குட்! அப்படி வா வழிக்கு! விமலனைப் பற்றிய பேச்சை என்னிடம் எடுக்காதே'' என்றான். ஆனால் அவன் எதிர்பார்த்தாற் போல ரேகா ''ஏன், என்னவாச்சு?'' என்று கேட்கவில்லை.

கமலன் சொன்னது போல் அந்த அறை அதிக தூரத்தில் இல்லை. ஐந்து நிமிஷத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள். கமலன் சர்க்கரைப் பையை ஒரு கையில் பிடித்துக் கொண்டே பூட்டைத் திறந்தான். ரேகா உள்ளே வந்தாள். சிறிய அறை. பார்த்ததுமே பிரம்மச்சாரியின் அறை என்று தெரிந்தது. அறையெல்லாம் தாறுமாறாய் இருந்தது. கமலன் சர்க்கரைப் பையை எடுத்துக் கொண்டு போய் அலமாரியின் மேல்

தட்டில் வைத்துவிட்டு அலமாரிக்கருகில் நின்று கொண்டான்.

‘‘சீக்கிரமாய் சொல்லுங்கள்’’ என்றாள் ரேகா.

கமலன் இரு கைகளையும் கூப்பினான். ‘‘என்னை மனப்பூர்வமாய் மன்னித்துவிடு ரேகா’’ என்றான்.

‘‘இப்பத்தானே சொன்னேன், உன் மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை என்று.’’

‘‘இல்லை என்று சொன்னால் போதாது. நீ மனம் திறந்து சாதாரணமாய் பேசினால்தான் கோபம் இல்லை என்று புரிந்துகொள்ள முடியும்.’’

‘‘அது நடக்காத காரியம் கமல்! பேசினாலும் என்னால் பழைய ரேகாவாய் இருக்க முடியாது. நீங்கள் வருத்தப்பட்டாலும் சரி, என்னிடம் ஏதோ மாறுதல் வந்துவிட்டது. அதை மறைத்து வைத்து நடக்க என்னால் முடியாது. உனக்கு முன்னாலோ இன்னும் முடியாது.’’

‘‘அனுபவங்கள் ஒவ்வொரு மனிதனையும் கொஞ்சம் மாற்றிவிடுகிறது ரேகா.’’

‘‘எனக்கு வந்த அனுபவங்களைப் போல உலகத்தில் எந்தப் பெண்ணிற்குமே வந்திருக்காது.’’ கீழுதட்டைப் பற்களால் அழுத்திக்கொண்டே சொன்னாள்.

கமலன் பதில் பேசவில்லை. ரேகா தலையைத் திருப்பிக் கொண்டு வீதியைப் பார்த்தபடி நின்றாள். இரண்டு நிமிஷங்கள் ரேகாவையே கூர்ந்து பார்த்த கமலன் ‘‘ஆமாம் நிஜந்தான். உன்னிடம் குறும்புத்தனம் போய்விட்டது. நீ ரொம்ப இளைத்து விட்டாய்’’ என்றான்.

ரேகா பதில் பேசவில்லை ரேகாவைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே சொன்னான் கமலன் ‘‘ரேகா!

உன் மனதில் ஏதோ இருக்கிறது. அது உன்னைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. அந்த வருத்தத்திற்குக் காரணம் கல்யாணத்திற்கு இப்படித் தடை ஏற்பட்டு விட்டதே என்பது மட்டும் இல்லை. ஏன் என்றால் கல்யாணம் தடைப்பட்டு விட்டதே என்ற வருத்தமாயிருந்தால் இதற்குள் என் மீது கோபித்துக் கொண்டு ஜென்மத்திலும் என் முகத்தில் விழிக்கமாட்டேன் என்று சண்டைப் போட்டுவிட்டுப் போயிருப்பாய். உன் சுபாவம் எனக்கு நன்றாய் தெரியும். என்றுமில்லாதபடி உன் கண்களில் வேதனை தென்படுகிறது.''

ரேகா சரேலென்று இந்த பக்கமாய் திரும்பினாள். அக்கண்களில் கண்ணீரை அடக்கிக் கொண்டாற்போல இமைகள் படபடத்தன. ''கமல்! நான் போகிறேன்'' என்றாள். கமலன் இரண்டடிகள் முன் நோக்கி வைத்து கிட்டே வந்தான்.

''ரேகா, உன் மனதில் இருக்கிற துன்பம் என்ன? உண்மையைச் சொல்லு, பணம் ஏதாவது வேண்டுமா.''

ரேகா சட்டென்று கைகளைக் கூப்பி வணங்கினாள்.

''ஒரு பைசா கூட வேண்டாம். நான் ரொம்ப சுகமாய் சந்தோஷமாய் இருக்கிறேன். என் பேச்சை நம்புங்கள். சர்க்கரையை இப்படிக் கொடுங்கள்.''

''கொடுக்கிறேன். என் இந்த ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லு. விமலன் உன்னை ஏதாவது அவமானப் படுத்தினானா அன்றைக்கு?''

ரேகா சட்டென்று தலையைத் திருப்பிக்கொண்டு வீதியைப் பார்க்கத் தொடங்கினாள்.

''சொல்லு அன்றைக்கு என்ன சொன்னான் உன்னிடம்?''

"ஒன்றும் சொல்லவில்லை" குரல் நடுங்கச் சொன்னாள் ரேகா.

"பின்னே? வீட்டில் ஏதாவது கஷ்டமாய் இருக்கா? எனக்கு எது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ஒன்று மட்டும் நன்றாய் தெரியும். இந்த உலகத்தில் மனம் விட்டுச் சொல்லிக் கொள்வதற்கு உனக்கு என்னைத் தவிர யாரும் இல்லை. என் இந்த ஊகம் தப்பு என்கிறாயா?"

"இல்லை."

"பின்னே என்னவாயிடுத்து உனக்கு? உன் கஷ்டத்தில் பங்கெடுத்துக்கொள்ள முடியாத என் வாழ்க்கை வீண் என்று தோன்றுகிறது. இதுவே நானாயிருந்தால் கொஞ்சம் ஏதாவது கஷ்டம் என்றாலும் கூட உடனே உன்னிடந்தான் ஓடி வந்திருப்பேன்."

"கமல்! எப்படிச் சொல்லுவேன் உங்களிடம்?" ரேகா முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டாள்.

பொங்கி வந்த துக்கத்தை அடக்கிக்கொள்ள விஸ்வ பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள் என்பதை உணர்ந்த கமலன் "சொல்லு ரேகா! சொல்லிவிடு! துன்பத்தை எப்பொழுதுமே மென்று விழுங்கக் கூடாது. விழுங்கினால் அது மகா அக்னியாய் நம்மை ஒரேயடியாய் கபளீகரம் பண்ணிவிடும்."

"............"

"போகட்டும், இதையாவது சொல்லு. என்னால் உனக்கு என்ன உதவிப் பண்ண முடியும் என்று சொல்லு. நீ என்ன சொன்னாலும் செய்ய சித்தமாய் இருக்கிறேன்."

"என் கண்ணில் படாதீங்க, என்னைவிட்டு தொலைவிற்குப் போய்விடுங்கள்."

“ரேகா” விக்கித்துப் போய் விட்டான் அவன்.

“நீங்கள், நீங்கள் போவதற்கு முன்னால் என் வாழ்க்கையைவிட்டு தொலைவிற்குப் போவதற்கு முன்னால் எனக்கு ஏதாவது உத்யோகம் ஒன்றைப் பார்த்துக் கொடுங்கள் கமல்!”

“உத்யோகமா? உனக்கா?”

ரேகா கண்ணீரைத் துடைத்துக்கொண்டே நிமிர்ந்து சொன்னாள். “ஆமாம். எதாய் இருந்தாலும் சரி. என் காலின் கீழ் நான் நிற்கக் கூடிய வேலை. நானும் எங்கம்மாவும் சாப்பாட்டிற்காகவும் உடைக்காகவும் யாரையும் ஆதாரப்பட்டுக் கொண்டிருக்காமல் எங்கள் வாழ்க்கையை நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.”

“ஆனால்.”

“உங்கள் சந்தேகம் எனக்குத் தெரியும். எனக்குப் பட்டம் இல்லையே தவிர நான் சமையல் நன்றாய் செய்வேன். வீட்டை நீட்டாய் வைத்துக் கொள்வேன். குழந்தைகளைப் பார்த்துக் கொள்வேன். குழந்தைகளுக்குக் கொஞ்சம் படிப்புச் சொல்லித் தரமுடியும்.”

“வீட்டில் என்னவாச்சு ரேகா?”

“ஒன்றும் ஆகவில்லை. ஆனால் ஆவதற்கு அதிக நாள் இல்லை. பொருளாதார ரீதியாய் எங்களுக்கு சுயமான பலம் இருந்தால் மாமாவும் மாமியும் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் அவங்க வீட்டில் எங்களை வைத்துக் கொண்டிருப்பாங்க சேகர் அரெஸ்ட் ஆனதால் மாமி எந்தச் சமயத்திலும் வெடித்துவிடத் தயாராயிருக்கும் எரிமலையைப் போல இருக்காங்க. அப்படிப் பட்ட அவமானம் படாமல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்பது என் தவிப்பு.

''நான் கண்டிப்பாய் முயற்சிக்கிறேன் ரேகா. உன் கஷ்டம் எனக்குப் புரிகிறது. ஆனால் நான் அன்றைக்கு எந்தச் சூழ்நிலையில் ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு...'' ரேகா இரு கைகளையும் நீட்டித் தடுப்பதுபோல் மறுத்தாள்.

''தயவுசெய்து உங்களுக்கு என் மேல் கொஞ்சமாவது மதிப்பிருந்தால் அந்தப் பேச்சையே எடுக்க வேண்டாம்.''

''ரேகா.''

''நடந்ததென்னவோ நடந்து விட்டது. அதைப் பற்றி நாம்ப இப்பொழுது என்றில்லை, எப்பொழுதுமே வாதனைப் புரிந்து கொள்ள வேண்டாம்'' கமலன் சிவந்த முகத்தைத் தாழ்த்திக் கொண்டு தரையைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

''இனிநான் போய் வருகிறேன் கமல். நேரமாகி விட்டது. நான் சர்க்கரை வாங்கிக் கொண்டு போய் மாமி காபி குடிக்க வேண்டும். அவங்க காத்துட்டிருப் பாங்க.''

கமலன் மெதுவாய் போய் அலமாரியிலிருந்து சர்க் கரைப் பையைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு ''நாளைக்கு ஒரு தடவை என்னோடு வருகிறாயா ரேகா?'' என்றான்.

''எங்கே?''

''எங்கேயாயிருந்தாலும் சரி. எனக்கென்னவோ ரொம்பவும் திகிலாய் இருக்கு. உன்னோடு பேசினாலே யொழிய பிழைக்க முடியாது போலிருக்கு.''

''லாபமில்லை கமல், என்னால் வரமுடியாது.''

''ஏன் ரேகா?''

''இந்த உலகத்தில் பணம் சம்பாதிக்கிற வழிகள் கடினமாய்இருக்கலாம். நாம்ப முயன்றாலும் அதிர்ஷ்டம் கூடிவராவிட்டால் கைக்கூடாமல் போகலாம். ஆனால் கௌரவமரியாதைகள் என்பது இருக்கின்றன. அவை களை சம்பாதிப்பது கஷ்டமில்லை. நம்ப கையில்தான் இருக்கிறது எல்லாம். நான் இவ்வளவு நாளாய் முட்டாள் தனமாய் அவைகளைக் காலால் தள்ளிவிட்டேன். எந்த ஆதாரமும் இல்லாத பெண் கௌரவ மரியாதைகளை ஏற்படுத்திக் கொண்டால் இந்தச் சமூகம் இவ்வளவு கொடுமையாய் இருக்காது. இன்னும் சொல்லப்போனால் கொஞ்சமோ நஞ்சமோ துணையாய்கூட நிற்கும்!''

கமலன் புரியாமல் பார்த்தான். என்ன பேசுகிறாள் ரேகா! கௌரவ மரியாதைகளா? சமூகத்தைப் பற்றி பய பக்தியா? எப்பொழுதும் உலகத்தைப் பற்றி ஏளனமாய் பழித்து, கேலிபண்ணி அலட்சியமாய் பேசும் ரேகா தானா இவள்?

கமலனின் முகத் தோற்றத்தைப் பார்த்து அவன் உள்ளத்தைப் புரிந்துகொண்டுவிட்ட ரேகா சிரிப்பை வரவழைத்துக் கொண்டே சொன்னாள்—''நான்தான் சொன்னேனே, ரொம்ப மாறிவிட்டேன் என்று, இனி நான் போய் வரேன்.''

''அப்ப உத்யோகம் போன்றது ஏதாவது கிடைத் தால்?''

''நேராய் வீட்டிற்கு வந்து மாமாவிடம் சொல்லி விடுங்கள்.''

ரேகா போய் விட்டாள்.

கமலனின் மனம் ஆயிரம் சுக்கல்களாய் உடைந்து விட்டாற்போல ஆயிற்று.

ரேகாவின் மனது காயமடைந்துவிட்டது. மிகத் தீவிரமாய் காயமடைந்திருக்கிறது.

கஷ்டத்தில் இருக்கும்பொழுதுதான் எல்லோரும் அதிகமாய் வேதாந்தம் பேசுவார்கள், சீ, சீ! என்ன காரியம் பண்ணி விட்டான் அவன்? ரேகாவுக்கு என்னென்னவோ ஆசைகளை கற்பித்து விட்டு, வானத்திற்குக் கூட்டிக் கொண்டு போய் அங்கிருந்து ஒரேயடியாய் கீழே தள்ளிவிட்டான். அன்றைக்கு அவன் வாக்குறுதி தந்தபடி ரேகாவை மணந்துகொள்ளாமல் போனது துரதிர்ஷ்டம். ரேகா உத்யோகத்திற்காக முயல்கிறாள். உத்யோகம் கிடைத்து விட்டால் பிறகு அவன் முகத்தைக்கூட பார்க்க மாட்டாள். ரேகாவுக்கு அவன் மூலமாய் தான் வேலை கிடைக்க வேண்டும். அவளுடைய கவலையின்மைக்கு அவன் தான் மூலகாரணமாய் இருக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் அவ்வப்பொழுது கொஞ்சமாவது அவளோடு பேச முடியும் அவனுக்கு.

●

ரேகா வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்த பொழுது அவள் மனமெல்லாம் ஏதோ போல இருந்தது. கமலனுக்கு எவ்வளவு வருத்தம் ஏற்பட்டிருக்குமோ! ஆனாலும் சரி, இதைத் தவிர வேறு வழியில்லை. இந்த பரிச்சியங்கள்தான் எதற்கு? வேண்டாம், இந்தப் பரிச்சியங்களும் வேண்டாம், அதனால் நாலு பேர் சிரிப்பதும், இல்லாத . பொல்லாததைச் சொல்வதும் வேண்டாம். வேறு யாரோ துவேஷிப்பதும் வேண்டவே வேண்டாம். தான் தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும். தான் ஒரு வழியாய் நிலைத்துவிட்டால், சேகரை எப்படியாவது வழிக்குக் கொண்டு வந்துவிடலாம். அவனால் இழக்க நேர்ந்த கௌரவ மரியாதைகளைத திரும்பிப் பெற வேண்டும். என்றாவது 'இந்தப் பெண்ணின் தம்பி இவன்' என்றெண்ணி சமூகம் அவனை மன்னித்து விடக்கூடிய நிலையைத் தான் கொண்டு வர வேண்டும்.

சங்கரன் சமீபத்தில் ஒரு நாடகக் கம்பெனிக்கு வயலின் வாசிக்க ஒப்புக்கொண்டிருந்தார். அந்த நாடக கம்பெனி ஊர் ஊராய் சென்று நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது. சங்கீதப்பைத்தியம் பிடித்திருந்த அவரும் சகலத்தையும் மறந்து போய் அந்த நாடகக் கம்பெனி யோடு ஐக்கியமாகி விட்டிருந்தார். சங்கரன் அலட்சிய மாய் உதறி விட்டுப் போயிருந்த இந்தக் குடும்ப பாரத்தை அவள் ஏற்றுக் கொண்டு நடத்த வேண்டி யிருந்தது.

## 26

கமலன் பைத்தியம் பிடித்தவனைப்போல ஊரெல் லாம் சுற்றி அலைந்து விட்டு சோர்ந்து போய், கால்கள் வலியெடுக்கவே, இருட்டும் வேளையில் விஸ்வனாத னின் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இன்று பிற்பகல் சாப்பாட்டிற்கு அவன் வீட்டிற்கு வரவில்லை. அவனுக்காக விஸ்வனாதனும் லலிதாவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். சாப்பிட வர முடியவில்லை என்று குறைந்தபட்சம் அவன் போனா வது பண்ணியிருக்கலாம். தான் தற்சமயம் அவர்கள் வீட்டில் இருந்து வந்ததையும், அவர்களுக்கு விருந்தினன் என்றும் மறந்துபோய் தொல்லைகளை ஏற்படுத்தி விட்டதற்கு அவன் வெட்கப்பட்டான்.

போனதுமே அவரிடம் என்ன சாக்குச் சொன்னால் நன்றாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டே வீட்டிற் குள் அடியெடுத்து வைத்தான்.

உள்ளேயிருந்து பெரிதாய் பேச்சுக்குரல்கள் கேட்டன, அவன் தன்னையறியாமல் வெளியேயே நின்று விட்டான்.

உள்ளேயிருந்து விஸ்வனாதனின் குரல் கோபமாய் கடினமாய் கேட்டது.

“உனக்கு புத்தியில்லை. இனியும் வரும் என்ற நம்பிக்கைக்கூட இல்லை. நேற்றைக்கு வீணாய் அந்த சமையல்காரியோடு சண்டை போட்டு துரத்தி விட்டாய். இன்றைக்கு வேலைக்காரிகூட வரவில்லை என்ற கவலை உனக்குக் கொஞ்சமும் இல்லை. சின்னப் பெண் வாயில்லாதவள் 103 டிகிரி ஜுரத்தோடு படுத்துக் கொண்டிருக்கும்போது டிங் டாங் என்று அலங்கரித்துக் கொண்டு கிளப்பிற்குப் புறப்பட்டு விட்டாய். நீ ஒரு மனுஷிதானா?”

லலிதாவின் குரல் பதிலுக்கு எரிச்சலுடனும் அலட்சியமாகவும் கேட்டது.

“இந்த சின்ன விஷயத்துக்கு, ஏதோ கொஞ்சம் உடம்பு சுடுகிறது என்பதற்காக நீங்கள் இவ்வளவு ரகளை பண்ணனுமா? ஆனாலும் கண்ணுக்குள் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு பார்த்துக் கொள்வதற்கு உங்களைப் போன்ற தந்தை இருக்கும் போது நான் இருந்தால் என்ன, இல்லாமல் போனால் தான் என்ன? சீ, சீ! பாழும் ஜென்மம்! இந்த ஜென்மத்தில் பொழுதுபோக்கு என்று ஒன்றில்லை, நான் என்றைக்குக் கொஞ்சம் கவலையில்லாமல் நிம்மதியாய் இருக்கலாம் என்று பார்க்கிறேனோ அன்றைக்குப் பார்த்துதான் ஏதாவது ஒரு பீடை எனக்கு.”

“பீடையா?”

“இல்லையா பின்னே? நான் இந்த வீட்டு விஷயங்களையெல்லாம் பார்த்துக்கணும். இந்த பாரத்தையெல்லாம் சுமக்கணும். எனக்கு மட்டும் இந்த வீட்டில் சந்தோஷமாய் சுகமாய் தோன்றுகிற விஷயம் ஒன்றுகூட நடக்காது. ஏன் இந்த வீண் தலையெழுத்து எனக்கு?”

"இதென்ன பேச்சு? இந்த வீடு உன்னுடையது இல்லையா? உனக்கு சம்பந்தப்பட்டதில்லையா?"

"ஆங்!சம்பந்தப்படாமல் என்ன?பெயருக்கு மட்டுந் தான் என்னுடையது. ஆனால் அவசரத்துக்கு ஒரு நூறு ரூபாய் கொடுங்கப்பான்னு கேட்டுவிட்டால் போதும், நான் வேலைக்காரியையும் விட ஹீனமாகிப் போய் விடுகிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் சரி, நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அம்மா போன பிறகு என் சுகம், அமைதி, அத்தனையும் போய் விட்டது."

"சரி, சரி, உன்னை இருக்கச் சொன்னது என் தப்பாயிடுத்து. போ, போ. நான் என்பாட்டைப் பட்டுக்கொள்கிறேன். உன்னைத் தடுத்தது என் பிழை. இதெல்லாம் என் தலையெழுத்து."

வெளியேயிருந்து இந்த வாதனைகளைக் கேட்டுக் கொண்டிருந்த கமலன் தந்தையும் மகளும் சண்டை போட்டுகொண்டிருக்கும் சமயத்தில் தான் உள்ளே போவது நல்லதா நல்லதில்லையா என்று தெரியாமல் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தான். உள்ளே யிருந்து திரும்பவும் கேட்கத் தொடங்கின.

"நாலு நாளாய் நானும் உங்களைக் கேட்டு கொண்டேயிருக்கேன்... கிளப்பில் குஷ்டரோகிகளின் நிவாரணத்திற்கு கலெக்ட் பண்ணிக்கொண்டிருக்கும் நன்கொடைக்கு என் பெயரில் ரெண்டாயிரம் ரூபாய்க்கு சொல்லிவிட்டேன் என்று. நீங்கள் தரவேயில்லை. எனக்கு எவ்வளவு தலைகுனிவாய் இருக்கும்னு தெரியாதா உங்களுக்கு?"

"ரெண்டாயிரம்! இந்த மாதத்தில் உனக்கு கைச் செலவிற்காக கிட்டதட்ட நாலாயிரம் ரூபாய்கள் தந்து விட்டிருக்கேன்."

"அதையெல்லாம் நானா சாப்பிட்டேன்? புடவைக் காரனுக்கு ஆயிரத்தைநூறு ரூபாய்களைத் தந்து விட்டேன், மிஸஸ் ஜோகேஷிடமிருந்து எப்பொழுதோ வாங்கிகொண்டு மறந்துபோயிருந்த ஆயிரம் ரூபாய் களைத் திருப்பித் தந்தேன். நீங்கள் வேண்டுமென்றால் அவளுக்கு போன் பண்ணி கேட்டுகொள்ளுங்கள்."

"அது ஒன்றுதான் குறைச்சலாய் இருக்கு."

"என்னை இப்படி இம்சிப்பானேன்? நீங்கள் இப்படிக் கஷ்டப்படுவானேன்? எனக்கு வரவேண்டிய தைத் தந்துவிட்டு என்னை வெளியே அனுப்பிவிட்டால் போதாதா? ஒருத்தருக்கொருத்தர் ஒத்துக் கொள்ளாத போது ஒரேவீட்டில் இருந்துகொண்டு வெறுத்துக்கொண் டிருப்பதைவிட தனித்தனியாய் இருப்பது ரொம்பவும் நல்லது. உங்களை நூறு தடவை கேட்டுவிட்டேன். திரும்பவும் கேட்கிறேன். என்னை ஏதாவது ஹாஸ்டலில் போட்டுவிடுங்கள். தனியாய் இருந்துகொள்கிறேன். உங்களுக்கு நிம்மதியாய் இருக்கும்."

"இதப்பார், என் கோபத்தை தூண்டிவிடாதே. போ இப்பொழுதே, போ. இந்தா உன் ரெண்டாயிரம்."

"இதை மொதல்லேயே தந்திருந்தால் இவ்வளவு ரகளை இருக்காதே. ரெண்டுபேருக்குமே எவ்வளவு சிரமம் குறைந்திருக்கும்! நான் கிளப்பில் புரோகிராம் முடிகிற வரைக்கும் இருக்கமாட்டேன். நடுவிலேயே வந்துவிடுவேன். ரஞ்சிதா உங்களுக்கு சின்னப்பெண் மட்டுமில்லை, எனக்கு தங்கையும் கூடத்தான். என் பொறுப்பு எனக்கு தெரியும். யாரும் சொல்ல வேண்டிய தில்லை" என்று சொல்லிவிட்டு லலிதா விருட்டென்று வெளியே வந்துவிட்டாள்.

வாசலைத் தாண்டப்போனவள் அங்கே நின்று கொண்டிருந்த கமலனைப் பார்த்ததுமே திகைப்

படைந்து ஒரு வினாடி நின்றுவிட்டவள், உடனேயே சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "பார் கமல்! ரஞ்சிதா வுக்குக் கொஞ்சம் ஜுரம் வந்துவிட்டது என்பதற்காக டாடி வீட்டையே ரெண்டுபடுத்திக் கொண்டிருக்கிறார். இவருக்கு வயதாக ஆகப் பிடிவாதமும் அதிகமாகி விட்டது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

கமலன் மெதுவாய் உள்ளே வந்தான். "வாப்பா, மத்யானம் சாப்பிடக்கூட வரவில்லையே" என்றார் விஸ்வநாதன்.

ரஞ்சிதா அவர் மடியில் படுத்துக் கொண்டிருந்தாள். கமலன் கிட்டே போய் ரஞ்சிதாவின் நெற்றியில் தொட்டுப் பார்த்துவிட்டு— "ஜுரம் குறைய வில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை. நார்மலுக்கு வருவதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகும் என்றார் டாக்டர்."

ஜுர வேகத்தில் இருந்த ரஞ்சிதா தாகம் என்று சைகை காட்டினாள்.

"தண்ணீர் வேணுமா? இரும்மா கண்ணு. இங்கே கூஜாவில் தண்ணீர் தீர்ந்துவிட்டது போலிருக்கு. நீ சமர்த்தாய் தலையணையில் தலைவைத்துக் கொண்டு படுத்துக் கொண்டால் நான் போய் ஒரு நிமிஷத்தில் தண்ணீர் கொண்டு வருவேன்" என்றார் அவர் கெஞ்சுவது போல.

ரஞ்சிதா அவர் மடியை விட்டுத் தலையை எடுக்கச் சற்றும் ஒப்புக்கொள்ளவில்லை.

"பின்னே எப்படிம்மா கொண்டுவர முடியும்" கெஞ்சுவதுபோல முகம் சிறுக்கச் சொன்னார் அவர்.

"நீங்கள் உட்காருங்கள். நான் போய் கொண்டு வரேன்" அவரைத் தடுத்து விட்டு தம்ளரை வாங்கிக்

கொண்டு சமையலறைக்குப் போனான் கமலன். சமையலறைக்குள் அடியெடுத்து வைக்கப்போன கமலன் ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டான்.

அவன் கண்கள் அருவறுப்போடு பார்த்தன. புருவங்கள் முடிச்சேறிக் கொண்டன. சே! இது சமைய லறைதானா? சாமான்கள் எல்லாம் தாறுமாறாய் கிடந்தன. எச்சில் தட்டுகளும், டிபன் சாப்பிட்ட பிளேட் டுகளும் காபி தம்ளர்களும் சிங்க்கில் நிரம்பிக் கிடந்தன. நன்றாய் மூடாமல் அலட்சியமாய் திருப்பி விட்டுப் போயிருந்த குழாயிலிருந்து மெல்லியதாய் தண்ணீர் வழிந்து அவைகளின் மீது தெறித்துக் கொண்டிருந்தன. கியாஸ் ஸ்டவ்விற்குப் பக்கத்தில் கழுவாமல் காய்ந்து கிடந்த ஸ்பூன்கள், மூடி திறந்து கிடந்த சக்கரை டப்பா, சாதம், குழம்பு, எடுத்த கரண்டிகள் அந்த பாத்திரங்களிலேயே இருந்தன. லலிதா உண்மையி லேயே பெண் தானா? ஒரு வேளைக்கு சமையல் காரி வராவிட்டால் வீடெல்லாம் இவ்வளவு அசிங்கமாய் இருக்கவேண்டுமா? கங்கம்மா நாலைந்து நாட்கள் லீவு எடுத்துக்கொண்டு வராமல் போனாலும் கூட பிரம்மச் சாரிகளின் வீடாயிருந்தாலும் தம் வீடு எவ்வளவு நீட்டாய் இருக்கும்! வீட்டில் இவ்வளவு வேலைகள் இருக்கும்பொழுது எந்தப்பெண் அவ்வாறு சிங்காரித்துக் கொண்டு, கைப்பையை ஆட்டிக்கொண்டு கிளப்பிற்குப் புறப்படுவாள்?

கமலன் கியாஸ்ஸைப் பற்ற வைத்து, நீரைக் காய்ச்சி ஆற்றி எடுத்துக் கொண்டு வந்து விஸ்வனா தனிடம் தந்துவிட்டு ''இன்றைக்கு வேலைக்காரி கூட வரவில்லையா?'' என்று கேட்டான்.

''இல்லைப்பா, வரவில்லை. அவள் தங்கைக்குக் குழந்தை பிறந்திருக்கிறது, போய்ப் பார்த்துவிட்டு

வரேன்னுச் சொன்னதால் அனுப்பினேன். இன்று ஒரு நாள்தான், நாளைக்கு வந்துவிடுவாள்.''

''சமையல்காரி ஏன் வேலையிலிருந்து நீங்கி விட்டாள்?''

''லலிதாவின் கைப்பையிலிருந்த பணம் போய் விட்டதாம். அவள்தான் எடுத்திருப்பாள் என்றாள் லலிதா. எடுக்கவில்லை என்றாள் அவள். எது நிஜம் என்று அந்த ஆண்டவனுக்குதான், தெரியும் ''

அவர் ரஞ்சிதாவுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு, அவளை சரியாய் படுக்க வைத்தார். நெற்றிப் பொட்டை நீவிக்கொண்டே ''அப்பப்பா! தலை வலியால் தலையே வெடித்து விடும் போல இருக்கு'' என்றார்.

கமலன் நிசப்தமாய் எழுந்துபோய் தன் அறையில் இருந்த சாரிடானைக் கொண்டுவந்து, ஸ்டவ்வைப் பற்ற வைத்து காபியையும் போட்டுக்கொண்டு வந்து அவரிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னான்.

விஸ்வனாதனுக்குக் கண்கள் கசிந்து விட்டன. ''கமல், உனக்கு வீண் சிரமம்'' என்றார். அவர் குரல் உடைந்துவிட்டது.

''எந்த சிரமமும் இல்லை. சாப்பிடுங்கள்.''

அவர் காபியைக் குடித்துக் கொண்டிருக்கையில் கேட்டான் கமலன்,

''உங்களுக்கு இந்த வீட்டு பாரத்தையெல்லாம் தலையில் போட்டுக் கொண்டு ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு ஆள் ரொம்பவும் அவசியம். லலிதாவின் சங்கதியைப் பற்றி நமக்குத் தெரிந்தது தானே?'' என்றான்.

''அந்த ஆசையெல்லாம் தீர்ந்துப் போயிடுத்து கமல்! எத்தனையோ பேர் வந்தாச்சு, போயாச்சு,

ஒவ்வொருத்தரிடமும் ஒவ்வொரு அவஸ்தையைப் பட்டு விட்டேன் நான்.''

''உங்களைப் புரிந்துகொண்டு, உங்கள் வீட்டு நிலைமைகளை சரியாய் கவனித்து, லலிதாவின் உருட்டல் மிரட்டல்களை சமாளித்துக்கொள்ளக்கூடிய நபர் வேண்டும்.''

''யார் வருவாங்க? அப்படிப்பட்டவங்க கிடைப்பாங் கன்னு கனவிலும் எதிர்பார்க்க முடியாது.''

''கிடைப்பது கஷ்டந்தான். ஆனால் முயன்றால்?''

''எல்லா முயற்சிகளையும் பண்ணிப் பார்த்துவிட்டு அலுத்துப் போய்விட்டேன். என் வாழ்க்கை இப்படியே அமைதியில்லாமல் கரையேறி விடவேண்டியதுதான்'' ஆதரவில்லாமல் சொன்ன அவர் குரலுக்கு கமலனின் இதயம் இரக்கத்தால் நெகிழ்ந்து விட்டது.

பணம் இருந்தால் எல்லா சுகங்களும் கிடைத்து விடும் என்றெண்ணுபவர்களிடம் இவரைக் காட்ட வேண்டும். பணத்தால் விலை கொடுத்து வாங்க முடியாத விஸ்வநாதனின் வாழ்க்கையே நல்ல உதாரணம். சட்டென்று மின்னலாய் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. ''எனக்கு ஒரு வழி தென்படுகிறது'' என்றான் விஸ்வநாதனிடம் உற்சாகத்தோடு.

''வழியா? என்ன வழி?''

''எனக்குத் தெரிந்த குடும்பத்தில் ஒரு பெண் இருக்கிறாள். ரொம்ப நல்ல பெண். வீட்டு வேலைகளையெல்லாம் பார்த்துக் கொள்வாள். தேவையானால் சமையல் கூட செய்வாள். அந்தப் பெண் வந்துவிட்டால் உங்களுக்கு எதற்குமே கஷ்டம் இருக்காது. அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டால் நீங்களே எனக்கு நன்றி சொல்வீங்க.''

"அந்தப் பெண்ணிற்கு எவ்வளவு வயதிருக்கும்?"

"இருபத்திரெண்டு இருபத்திமூன்று இருக்கலாம்."

"என்னவோப்பா! வயதுவந்த பெண் என்கிறாய். அவங்க அப்பா அம்மா ஒப்புக் கொள்வாங்களா?"

"அவங்களை ஒப்புக்க வைக்கிற பொறுப்பு என்னோடது. நீங்கள் 'உம்' என்று சொல்ல வேண்டியது தான் பாக்கி."

"சரி. நான் இப்பொழுதே சொல்லிவிட்டேன். நீ அவங்களுக்கு எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். இந்த காலத்துப் பெண்களைப்பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை."

"எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் ரேகாவைப் பார்த்தால் கண்டிப்பாய் உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வீங்க." உறுதியாய் சொன்னான் கமலன். ரேகாவுக்கு விஸ்வநாதனிடமே வேலை வாங்கித்தந்தால் அவள் தன் கண்ணெதிரிலேயே இருப்பாள். அவ்வாறு நெருக்கத்தில் இருந்தால் ரேகாவை எப்படியாவது அவனால் தன் வழிக்குத் திருப்பிக் கொள்ள முடியும். அதோடு விஸ்வநாதன் வயதானவர்; நல்லவர், கௌரவமாய் நடத்துவார். இந்த வீட்டில் வேறு ஆண் ஜீவன்களும் இல்லை விஸ்வநாதனுக்கு ரேகாவைக் கண்டிப்பாய் பிடித்துவிடும். அவள் குணநலன்களை அவர் தெரிந்து கொண்டு வாதாடினால் விமலன் கண்டிப்பாய் தம் விவாகத்திற்கு ஒப்புக்கொண்டே தீருவான். இவ்வாறு எண்ணித்தான் இந்த முடிவிற்கு வந்தான் கலலன்.

●

மறு நாள்.

ரேகாவும் அவனும் பார்க்கில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு மணி நேரமாய் அவர்களுக்கிடையே

சர்ச்சை நிகழ்ந்து கொண்டிருந்தது. ரேகா ஆயிரம் கேள்விகளையும் சந்தேகங்களையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவைகளுக்கெல்லாம் பொறுமையாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தான் விமலன். அங்கே எந்த கஷ்டமும் இருக்காது என்றும், அவர்கள் மிகவும் நல்லர்கள்என்றும் சொன்னான். ஆனால் ரேகா தயங்கியதற்குக் காரணம்—விஸ்வநாதனுக்கு விமலன் மிகவும் நெருக்கமானவன் என்று கமலன் பலமுறை சொல்லிக் கேட்டிருக்கிறாள். விமலனைப் பற்றி நினைத்துக் கொண்டதும் அவள் மனம் தன்னையறியாமல் வேதனையாலும் துவேஷத்தாலும் நிரம்பிற்று.

"கமல்! அங்கே உங்கள் விமலன் இருப்பார்"—என்றாள் சந்தேகத்தோடு.

"நான்சென்ஸ்! விமலனுக்கு பதில் சொல்ல முடியாத பலவீனம் வாய்ந்தவளா நீ? என்னால் நம்ப முடியாது. விமலனுக்காக உனக்கு வந்த பொன்னான வாய்ப்பை நீயே இழந்துவிடக்கூடிய முட்டாளா நீ? உன் மனதில் இல்லாத கோழைத்தனத்தை இருப்பதுபோல நடிக்காதே ரேகா! விமலன் என்றில்லை, விமலனின் பாட்டனே வந்தாலும்கூட நீ பயப்பட மாட்டாய். அது எனக்கு நன்றாய் தெரியும்."

ரேகாவுக்கு ரோஷம் வந்தது. தைரியம் பிறந்தது. ஆம். உண்மையே. விமலனுக்காக அவள் ஏன் பயப்பட வேண்டும்? என்ன பண்ணிவிடுவான் அவளை? விஸ்வனாதனின் அரவணைப்பில் இருந்து கொண்டு, மெதுவாய் அவனை என்றைக்காவது பழிதீர்த்துக் கொள்ளக்கூடிய அவகாசம் ஏற்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

"அதோடுகூட விஸ்வனாதன் ரொம்ப நல்லவர் ரேகா! உனக்குத் தந்தையைப் போல இருப்பார். என்

உத்தேசம் என்னவென்றால், தந்தை அன்புக்காக ஏங்கும் நீ அவரை..."

"கமல்!" ரேகாவின் கண்கள் தீப்பிழம்பாகிவிட்டன. அப்பார்வையில் வருத்தமும் துவேஷமும் போட்டி யிட்டுக் கொண்டிருந்தன.

அவள் குரல் கத்திமுனையைப் போல கூர்மையாய் வெளிவந்தது. "கமல்! தயவு செய்து இனி ஒரு போதும் எனக்கு முன்னால் தந்தை என்ற அந்த பதத்தை எடுக்க வேண்டாம். இந்த உலகத்தில் நான் அதிகமாய் வெறுக்கும் சொல் ஏதாவது இருந்தால் அது தந்தை என்ற பதம்தான். எங்களைப் பெற்றுவிட்டு எங்கள் நல்லது கெட்டதைப் பொருட்படுத்தாமல், உதறி விட்டுப் போய்விட்ட அந்த ஆள் ஞாபகத்திற்கு வந்தாலே எனக்கு சொல்லமுடியாத வெருப்பு! என்னால் எதை வேண்டுமானாலும் தாங்கிக்கொள்ள முடியுமோ என்னவோ, ஆனால் பொறுப்பை உதறிவிட்டு போய் விட்டவங்களின் நிழலைக்கூட என்னால் சகித்துக் கொள்ள முடியாது. பெற்ற குழந்தைகளின் கடமை களைக்கூட உணராத தாய் தந்தையரைக் கனவிலும் மன்னிக்கவே முடியாது என்னால். இந்த உலகத்தில் பெற்றுப்போட்டு விட்டுத் தம் வழியைத் தாம் பார்த்துக் கொண்டு போய்விட்டவங்க மேல் கடுகளவும் மதிப்பு இல்லை. அவங்க இந்தச் சமுகத்திற்குக் கறையானைப் போன்றவங்க."

என்றுமில்லாதவாறு ரேகாவின் வார்த்தைகளில் அவ்வளவு வெறுப்பையும் ஆத்திரத்தையும் கண்ட கமலன் திகைத்துப் போய்விட்டான்.

"இந்த உலகத்தில் நான் நன்றாய் பாடம் கற்பிக்க வேண்டும் என்று விரும்புகிறவங்க ரெண்டே பேர்தான்."

"யார் அவங்க?"

"ஒன்று என்னைப் பெற்ற ஆள்! அவரோட பொறுப்பில்லாத தனத்தினால்தான் என்னுடைய வாழ்க்கையும், சேகருடைய வாழ்க்கையும் தயவில்லாமல் இப்படி பலி ஆகிவிட்டன."

"இன்னொருத்தர்?"

"விமலன்" ரேகாவின் நாக்கு நுனி வரை வந்துவிட்ட வார்த்தைகள் நின்றுவிட்டன.

"நான் இல்லையே?" பயந்தபடி பார்த்துகேட்டான்.

"இல்லை."

"அம்மாடா, பிழைத்தேன்."

"உங்களுக்கு அந்த பயம் வேண்டாம். அந்த ஆபத்தை உங்களுக்கு ஒரு நாளும் வர விடமாட்டேன்."

கமலனின் முகம் மலர்ந்தது. "எனக்குத் தெரியும் ரேகா."

ரேகா பரிவோடு அவனைப் பார்த்து சொன்னாள்— "கடவுள் ரொம்பவும் கருணைமயமானவர் கமல்! சேகர் பிரிந்து போய்விட்ட இந்தச் சூழ்நிலையில் எனக்கு சேகரிடம் கிடைக்கும் ஆதரவும், உரிமையும் உங்களிடமிருந்து கிடைக்கும்படியாய் அனுகிரகம் பண்ணி விட்டார். அதற்கு நான் நன்றியுடையவள்."

சிரித்துக்கொண்டிருந்த கமலனின் முகம் சிறுத்து விட்டது. "உனக்கு ஆயிரம் தடவை சொல்லிவிட்டேன் சேகரையும் என்னையும் ஒப்பிடவேண்டாம் என்று. என் இடம் வேறு. நான் உன்னைவிட நாலு வயது பெரியவன். அதை மறந்துவிடாதே."

"வயதில் இருக்கலாம். ஆனால் மனதைப் பார்த்தால் என்னைவிட ஏழெட்டு வயது சின்னவனாய் தோன்றுகிறீர்கள்."

"நாம்ப வந்த விஷயத்தை விட்டுவிட்டு எதையோ பிடித்துக்கொண்டு விட்டோம்" கமலன் நேரத்தை பார்த்துகொண்டான். "இங்கே வந்து உட்கார்ந்து கொண்டு ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. இவ்வளவு வாதனை நிகழ்ந்தது. ஆனால் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை."

"என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?"

தற்காலிகமாய் வந்த உற்சாகம் பறந்து போய் விடவே, பழையபடி ஆகிவிட்டவள் கம்பீரமாய் கேட்டாள்.

"நான் சொன்னதற்கு ஒப்புக்கொள்."

"நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் வீட்டாரிடம் சொல்லி அவங்க சம்மதித்தால்தான் என்னால் உறுதியாய் சொல்ல முடியும். அதென்னவோ! இப்பொழு தெல்லாம் என் யோசனைகளின் மீது எனக்கே நம்பிக்கை போய்க் கொண்டிருக்கிறது" என்றாள் ரேகா திகிலோடு.

# 27

அன்றைக்கு கமலன் சொன்ன விஷயங்களைத் தன் வீட்டில் சொன்னாள் ரேகா. காயத்ரி ஒப்புக்கொள்ள வில்லை. ரேகா அதைப் போன்ற உத்யோகம் செய்தால் தான் எதிலாவது விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாய் சொன்னாள்.

ஆயிரம் ரூபாய் சம்பளம் என்றதும் சுந்தரி மெய் மறந்து போனாள்.

''அம்மோவ்! மாதத்துக்கு அவ்வளவு பணமா ரேகா?'' என்றாள். அந்த நிமிஷத்தில் அவளுக்கு ரேகா தங்க முட்டையிடும் வாத்தாய் தென்பட்டாள். சங்கரர் உடனே சம்மதித்துவிட்டதோடுகூட தங்கையை யும் மிரட்டினார், ''நாம்ப கல்யாணம் பண்ண முடியாத நிலையில் இருக்கிறோம். வயது வந்த பெண். அவளுக்கு ஏதோ ஒரு வியாபகம் இருப்பது நல்லது. போகட்டும். நல்லது கெட்டதை உணரக்கூடிய ஞானம் இருக்கிறது அவளுக்கு. உன்னையும்விட ஜாக்கிரதையாகவே இருப்பாள். அவளை ஒன்றும் தடுக்காதே'' என்றார்.

அன்றிரவே சங்கரன் நாடகக் குழுவோடு போய் விட்டார். சுமார் ஒரு மாத காலம் வீட்டிற்குத் திரும்ப மாட்டார். ரேகாவுக்கு இந்த வேலை கிடைத்து விட்டால் வீட்டில் எந்த கஷ்டமும் இருக்காது என்பது அவர் உத்தேசம். அது மட்டுமில்லை, தான் இல்லாத பொழுது மனைவி அவர்களை ஆட்டி வைக்காமலிருப் பாள். ரேகா கொண்டு வரப்போகும் சம்பளம் சுந்தரியின் வாயைக் கட்டிப் போட்டுவிடும் என்றறிவார் அவர்.

இரவு தூக்கம் வராமல் தான் பண்ணப்போகும் உத்யோகத்தில் இருந்த சாதக பாதகங்களைப் பற்றி யோசித்துப் பார்க்கத் தொடங்கினாள் ரேகா.

விஸ்வநாதனை நினைத்துப் பார்த்தபொழுது அவளுக்கு மதிப்பான உணர்ச்சி தோன்றிற்று. வயோதிகர். அவர் நிழலில் தான் அமைதியாய் இருக் கலாம். ஒருக்கால் அங்கே நிலைமை பிடிக்காவிட்டால் ஓரிரண்டு மாதங்கள் பொறுத்துக் கொண்டிருந்துவிட்டு மெதுவாய் தையல் மிஷின் ஒன்றை வாங்கிக்கொண்டு அங்கிருந்து வெளியே வந்துவிடலாம்.

●

மறுநாள் டாக்ஸியில் அவர்கள் வீட்டை நெருங்கிக் கொண்டிருக்கையில் கமலன் அவளுக்கு தைரியம்

சொன்னான். கேட்டைத் தாண்டி உள்ளே அடியெடுத்து வைத்ததுமே ரேகா பெருமூச்சு விட்டுக் கொண்டாள். என்ன விநோதம்! அன்றைக்கு கமலன் வீட்டிற்கு வந்த பொழுது அவள் திரும்பவும் இந்த வீதியில் அடியெடுத்து வைப்பாள் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. வாழ்க்கையில் எங்கே என்ன திருப்பங்கள் ஏற்படும் என்று யாருக்குத் தெரியும்?

இருவரும் உள்ளே போனார்கள். முன் ஹாலில் சோபாவில் விஸ்வனாதனும் அவர் மடியில் ரஞ்சிதாவும் இன்னொரு சோபாவில் லலிதாவும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் இவர்களுக்காக காத்துக்கொண்டு. கமலன் ரேகாவை அவர்களுக்கு அறிமுகம் பண்ணி வைத்தான். ரேகா அவர்களுக்கு வணக்கம் செய்தாள். விஸ்வனாதன் பதில் வணக்கம் தெரிவித்துவிட்டு ரேகாவின் நடை உடை பாவனைகளை கவனிப்ப வரைப் போல கூர்ந்து பார்த்தார்.

லலிதா நிதானமாய் சிரித்துக் கொண்டே எழுந்து ரேகாவுக்கு எதிரேவந்து இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

‘‘கமலன் கூட்டிக் கொண்டு வந்த நபராதலால் நீங்களும்கூட கமலனைப் போலவே நல்லவராய்தான் இருப்பீங்கன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

ரேகா முறுவலுடன் பதிலளித்தாள்.

‘‘அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொண்டு மனிதர் களை மதிப்பதைவிட பார்த்த பிறகு அபிப்பிராயங்களை நிர்ணயம் செய்துகொள்வது நல்லது போலிருக்கு.''

லலிதா ஒரு வினாடி புரியாதவளாய் புருவங்களை நெறித்தாள்.

பிறகு தலையைப் பின்னுக்குச் சாய்த்துக் கொண்டு ஆண்களைப்போல— ''ஓஹோஹோ! மார்வலெஸ்!'' என்றாள்.

லலிதாவின் குரல் அமைதியாய் இருந்த அவ் வெல்லையில் எதிரொலித்தது.

ரேகா சட்டென்று விஸ்வனாதனைப் பார்த்தாள். அவர் மகளின் சிரிப்பைப் பொருட்படுத்தியதாய் தெரிய வில்லை. ரேகாவைத் திருப்தியோடு பார்த்துக் கொண்டி ருந்தார்.

லலிதா ரேகாவை உட்காரச் சொல்லி விட்டு வெளியே போனாள். வராந்தாவில் இருந்த வேலைக்கார னைக் கூப்பிட்டு தேநீர் போட்டுக் கொண்டு வரச் சொன்னது காதில் விழுந்தது.

ரேகா ரஞ்சிதாவை கிட்டே வரச்சொல்லிக் கூப்பிட் டாள். ரஞ்சிதா வெட்கப்பட்டவளாய், தந்தையின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, திருட்டுத்தன மாய் ரேகாவை ஆர்வத்துடன் பார்க்கத் தொடங்கினாள்.

''போம்மா! உன்னோடு விளையாடவும், பாடவும், சிநேகம் பண்ணிக் கொள்ளவும் உனக்காகவே வந்திருக் கிறாள்'' என்றார் அவர்.

''இதப் பார் ரஞ்சிதா! இந்த அக்காவுக்கு நல்ல நல்ல கதைகள் எல்லாம் தெரியும். விளையாடத் தெரியும். நீ கிட்டபோனால் அதையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொடுப்பாள்'' என்றான் கமலன்.

ரஞ்சிதா கொஞ்ச நேரங்கழித்து பயந்துகொண்டே மெதுவாய் ரேகாவிடம் வந்தாள். ரேகா ரஞ்சிதாவைக் கிட்டே இழுத்துக் கொண்டாள்.

''இந்த கௌன் எவ்வளவு நன்றாயிருக்கு. யாரும்மா வாங்கித் தந்தாங்க?'' ஆச்சரியப்படுபவளைப் போல நடித்துக் கொண்டே கேட்டாள் ரேகா.

ரஞ்சிதா வலதுக்கை விரலை வாயில் வைத்துக் கொண்டு இடதுக்கை ஆள்காட்டி விரலால் தந்தையைச் சுட்டிக் காட்டினாள்.

"அவளுக்குப் பேச வராது. எல்லாமே இப்படி சமிஞ்ஞை மூலமாய்தான் சொல்லுவாள்" என்றார் அவர்.

"தெரியும் கமல் சொன்னார்" என்றாள் ரேகா, ரஞ்சிதாவை இன்னும் கிட்டே இழுத்துக்கொண்டே.

இந்த உலகத்தில்தான் எத்தனை விதமான துரதிர்ஷ்டக்காரர்கள் இருக்கிறார்கள்? ஒரு வாயை ஆயிரம் வாய்களாய் மாற்றிக் கொண்டு ராட்சசிகளாய் சண்டைப் போட முடிந்தால்கூட இந்த உலகத்தில் பிழைக்க முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது தனக்கு ஏற்பட்ட அபிப்பிராயங்களைச் சொல்லக்கூடிய அவகாசமே இல்லாவிட்டால்? ரேகாவின் இதுயத்தில் முதல் முதலாக ரஞ்சிதாவின்பால் இரக்கமும் அன்பும் ஏற்படத் தொடற்கிற்று.

லலிதா, ரேகாவிற்கு வீட்டையெல்லாம் சுற்றிக் காட்டுவதாய் சொல்லி அழைத்துக் கொண்டு போனாள்.

அவர்கள் கண்மறைவானதும் விஸ்வனாதன் கமலனைக் கேட்டார், "அந்தப் பெண்ணின் பெயர் என்ன, ரேகாவா?"

"ஆமாம். நிஜப்பெயர் சுவர்ணரேகா. ஆனால் எல்லோரும் ரேகா என்றுதான் அழைப்பார்கள். நீங்களும்கூட அப்படியே அழைக்கலாம்."

பெயர் சுவர்ணரேகா! எல்லோரும் ரேகா என்று கூப்பிடுவார்கள்! அவர் அந்தரங்கத்தில் எங்கேயோ மிக நுட்பமான இடத்தில் கடந்தகால நினைவைப் போன்றது ஏதோ கூரிய முள்ளாய் குத்தியது. அக்கண்களில் வினாடி நேரம் பள்ளிச்சிட்டுவிட்டு மறைந்தது. பிறகு

கமலன் அங்கே இருந்ததைக்கூட மறந்து போனவராய் நன்றாய் பின்னுக்கு சாய்ந்துகொண்டு யோசனையில் மூழ்கிப் போய் விட்டார்.

உள்ளே லலிதா ரேகாவுக்கு வீட்டில் ஒவ்வொரு அறையையும் தனித்தனியாய் காட்டிக் கொண்டிருந் தாள். இடையிடையே தம் குடும்ப விவரங்களையும் சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

மாடியில் வலது பக்கமாய் இருந்த ஒரு அறையைத் திறந்து—''இது என் அறை, உள்ளே வாங்க'' என்றாள். அவ்வறைக்குள் நுழைந்த ரேகாவுக்கு அதில் ஏதோ தனிச் சிறப்பு இருந்ததாய் தோன்றிற்று. அவ்வறை பிற எல்லா அறைகளையும் விட மிக அழகாய் இருந்தது. அந்த வீட்டில்,செல்வச் செழுமைக்கு எடுத்துக்காட்டைப் போல விலை மதிப்பு வாய்ந்த சாமான்களுடன் மிக நேர்த்தியாய் கண்களை கவரும்படியாய் இருந்தது.

''இந்த அறை என்னைப் போலவே அழகானது. ஆனால் மனம் இல்லாதது. இந்த அறையில் படுத்துக் கொண்டு சில சமயம் நான் எவ்வளவு தனிமைத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பேன் என்று அந்த தெய்வத்திற்குத்தான் தெரியும்.''

திரைச்சீலையை ஒதுக்கிக்கொண்டே சொன் னாள் லலிதா. ரேகா ஜன்னலுக்கருகில் போய் எட்டிப் பார்த்தாள். அங்கிருந்து பார்த்தபொழுது கீழே புல்வெளிகளும் தோட்டங்களும் நன்றாய் தெரிந்தன. லலிதா ரேகாவிடம் வந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''உங்களுக்கு இந்த வீடு பிடிக்கவில்லை என்றும் இந்த வேலை வேண்டாம் என்றும் சொல்லிவிட மாட்டீங்களே?'' என்று கேட்டாள்.

ரேகா சட்டென்று லலிதாவைத் திரும்பிப் பார்த்தாள்.

''உங்களைப் பார்த்ததுமே எனக்காகவே வந்தாற் போல தோணுகிறது. இந்த வீட்டில் தனிமையால் தவித்துப்போய்க்கொண்டிருக்கிறேன் நான். ரஞ்சிதாவைவிட எனக்குத்தான் உங்கள் தேவை அவசியமாய் இருக்கிறதுன்னு சொன்னால் வேடிக்கையாய் எண்ணிக்கொள்ள மாட்டீர்களோனோ?'' லலிதாவின் குரல் பரபரப்புடன், பணிவோடு சிறு பெண்ணைப் போல இருந்ததைக் கேட்டு ரேகாவிற்கு ஏதோ போல ஆகிவிட்டது.

''உங்களுக்குச் சொந்தக்காரங்களோ, சிநேகிதர் களோ வேறு யாருமே இல்லையா?'' கேட்டாள் ரேகா.

''அதான் சொன்னேனே, யாரும் இல்லைன்னு. பெயருக்குத் தெரிந்தவங்க, சிநேகிதர்கள் என்று நிறைய பேர் இருக்காங்க. ஆனால் அவங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேரை எனக்குப் பிடிக்காது. மீதிப் பத்து பேருக்கு நான் தனியாள். ஏன், உங்களுக்கு நிறைய பேர் சொந்தக்காரங்களும் சிநேகிதர்களும் இருக்காங்களா?''

ரேகா சட்டென்று யாரும் இல்லை என்று தலையாட்டினாள்.

''குட்! அப்படீன்னால் நாமிருவரும் சிநேகம் பண்ணிக்க முடியும். என்ன சொல்றீங்க?'' லலிதா சிரித்துக் கொண்டே சொல்லிக்கொண்டிருக்கையில் வேலைக்காரன் மாடிக்கு வந்து ''அம்மா, உங்களுக்கு போன் வந்திருக்கு'' என்றான்.

''எனக்கா? போனா?'' லலிதாவின் நெற்றிச் சுருங்கிற்று. ஒரு வினாடி ஏதோ யோசித்து விட்டு, ''நான் வீட்டில் இல்லைன்னு சொல்லிவிடு'' என்றாள்.

''ஐயோ, எப்படிங்க? வீட்டில் இருக்கீங்களான்னு கேட்டபோது இருக்காங்கன்னு சொல்லிட்டேனே!'' லலிதா எரிந்து விழுந்தாள். ''ஏன் சொன்னாய்? யார் சொல்லச் சொன்னாங்க உன்னை?'' தாரஸ்தாயியில் எழும்பிய லலிதாவின் குரலைக் கேட்டுவிட்டு அவன் பயந்து விட்டான்.

''எனக்கென்னம்மா தெரியும்? அர்ஜென்ட்டாய் பேசணும்னு சொன்னதால்...'' மென்று விழுங்கினான்

''இனிமேல் அப்படிச் சொல்லாதே நீ புது ஆள், உனக்குத் தெரிந்திருக்காது. இப்ப விட்டுவிடுகிறேன் உன்னை. இனிமேல் யாராவது போன் செய்தால் எந்தச் சமயமாய் இருந்தாலும் சரி, ''எனக்குத் தெரியாது. இருக்காங்களோ இல்லையோ தெரியாது. பார்த்துட்டு வரேன். உங்கள் பெயர்?'' என்று கேட்டுவிட்டு முதலில் என்னிடம் சொல்ல வேண்டும். தெரிஞ்சுதா?''— லலிதாவின் குரல் பேசினாற் போல இல்லை. உத்தர விட்டாற்போல இருந்தது. அவன் 'தெரிந்தது' என்று தலையாட்டினான்.

''இப்ப பண்ணியது யார்? பெயரைத் தெரிந்து கொண்டாயா?'' அடிக்க வந்தாற் போல கேட்டாள்.

''யாரோ ஜான் என்று சொன்னாருங்க'' பயந்து கொண்டே சொன்னான் அவன்.

''ஜானா?'' லலிதா ஒரு வினாடி திகைப்படைந்த வளாய் பார்த்தாள். அவள் ஆவேசமெல்லாம் மந்திரம் போட்டாற்போல மாயமாகிவிட்டன. அம்முகம் ஆச்சரியத்தாலும் தாங்க முடியாத சந்தோஷத்தாலும் மலர்ந்தது. ''ஜானா? அதை மொதல்லேயே சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? இதோ நான் வரேன் போ, இதப்பார், இந்த ஒரு ஜான் என்பவர் போன் செய்தால் மட்டும் உடனே நேராய் வந்து என்னைக் கூப்பிடு.

நான் வீட்டில் இருந்தால் இருக்கிறேன் என்றும் இல்லை என்றால் இல்லை என்றும் உண்மையைச் சொல்லிவிடு. தெரிஞ்சுதா? மறந்துபோய்விட்டேன் என்று சொன்னால் சும்மாயிருக்க மாட்டேன்'' என்று சொல்லிவிட்டு ரேகாவைப் பார்த்து ''நீங்கள் இங்கேயே இருங்கள், நான் இதோ ஒரு நிமிஷத்தில் வரேன். இவன் எனக்கு நன்றாய் தெரிந்தவன். ரொம்ப அர்ஜென்ட் விஷயம் பேசணும்''— என்று சொல்லிக் கொண்டே பஞ்ச கல்யாணி குதிரையைப் போல கீழே ஓடினாள்.

லலிதாவின் கண்களில் மின்னிய மின்னலைக் கொண்டு அந்த ஜான் என்பவன் யாரோ லலிதாவுக்கு மிகவும் பிரியமான ஆளாய்தான் இருப்பான் என்பதை ஊகித்துக் கொண்டாள் ரேகா. லலிதா போன பிறகு ரேகா அறையை மற்றொரு தடவை கூர்ந்து பார்த்தாள்.

அவள் மனமெல்லாம் கசப்பை விழுங்கினாற்போல ஆயிற்று. அந்த ஒரு அறை மட்டுமேயில்லை, அந்த வீட்டில் எங்கே பார்த்தாலும் செல்வம் நடைபயின்று கொண்டிருந்தது. இந்த நாட்டில் பணம் இல்லை என்பவர்கள் எல்லோரும் முட்டாள்கள். பணம் இல்லாமல் என்ன? நிறையவே இருக்கிறது. ஆனால் புத்தியில்லாத அந்தப் பணம், இருக்கிறவர்களிடமே நூறுமடங்காய் எஞ்சி நிற்கிறது. இல்லாதவர்களிடம் மருந்திற்கும் கண்ணால் பார்ப்பதற்குக்கூட சல்லிக்காசு தென்படக் காணோம். இந்த நாடு வெளிநாடுகள் நினைத்துக் கொண்டிருப்பது போல வறுமை நாடு ஒன்றும் இல்லை. ஆனால் இருக்கும் செல்வத்தை எல்லோருக்கும் சமமாய் பங்கிட்டுத் தரமுடியாத அசட்டுத்தனமான வறுமை நாடு. இல்லாவிட்டால் சிகரெட் சாம்பலைப் போடுவதற்கு அவ்வளவு அழகான சாமானா? அதைப் பார்த்ததுமே மிக விலையுயர்ந்தது என்று அதன் வேலைப்பாடுகளே எடுத்துச்சொல்லிற்று.

அடிபாகமெல்லாம் கண்ணாடியால் செய்யப்பட்டிருந்தது. கொஞ்சம் அசிரத்தையாய் இருந்தாலும், கை நழுவி, உடைந்து தூள்தூளாகி நாசமாகி விடும். குப்பைக்கூளங்களைப் போட்டுவைக்கும் கூடைக்கு அவ்வளவு ஷோக்கா? டைனிங்ரூமில் கண்ணாடி பீரோவிற்குள் டின்னர் பிளேட்டுகள் அத்தனை ரகங்களா? ரேகா சட்டென்று தன் யோசனைகளுக்குத் தானே வெட்கமடைந்தாள். இதென்ன அவள் இப்படி யோசிக்கிறாளே! வறுமையில் ஜீரணமாகிவிட்டிருக்கும் அவள் இதயம் எங்கே கொஞ்சம் சுகம் தென்பட்டாலும் அடியுண்ட பாம்பாய் எம்பிச் சீறத் தொடங்கிவிடுகிறது இப்பொழுதெல்லாம். இது மானசீகமாய் நல்லதில்லை. அவர்களைச் சொல்லி என்ன லாபம்? அவரவர்களின் தலையெழுத்து அவரவர்களுடையது.

''ஓ, ஐயாம் சாரீ! ஏதோ பேசிக்கொண்டேயிருந்து விட்டேன். ஒன்றும் நினைத்துக் கொள்ளாதீர்கள்'' சிவந்த கன்னங்களோடு கண்கள் மின்ன சிரித்துக் கொண்டே வந்தாள் லலிதா.

''பரவாயில்லை'' என்றாள் ரேகா மரியாதையாய். அந்த ஜான் என்பவன் யாரோ, என்ன பேசினானோ தெரியாது, லலிதாவின் கண்கள் நட்சத்திரங்களாய் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

# 28

இரண்டு வாரங்கள் கழிந்தன. ரேகாவின் தினசரி நிகழ்ச்சியில் திடீரென்று எதிர்பாராத திருப்பங்கள் வந்து சேர்ந்தன.

ரேகாவுக்கு இப்பொழுது அர்த்தமில்லாத யோசனைகள் வருவதில்லை. எதிர்காலத்தைப் பற்றிய திகில்,

ஏக்கம் பற்றி யோசித்துப் பார்ப்பதற்குக் கூட நேர மில்லை. காலையில் அரக்கப்பரக்கப் புறப்பட்டு விஸ்வனாதனின் வீட்டிற்கு வந்துவிட்டுத் திரும்பவும் மாலையில் வீட்டிற்குப் போகும்வரை காலம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்து போய்க் கொண்டிருந்தது. லலிதா மிகவும் சிநேகமாய் நடந்துகொண்டு, ரேகாவுக்கு தெரியாத விஷயங்களையெல்லாம் சொல்லித் தந்து கொண்டிருந்தாள். ரேகா மிகச் சொற்ப நாட்களிலேயே அந்த வீட்டின் அங்கத்தினர்களுள் ஒருத்தியாய், அவர் களுக்குப் பிரியமான, முக்கியமான நபராய் மாறிவிட் டாள். சாப்பாடு ஆகும் வரை கொஞ்சம் மூச்சுவிடவும் முடியாதபடி வேலை இருக்கும். அதற்குப் பிறகு மாலை வரை ஓய்வுதான். பிற்பகலில் சாப்பிட்டதுமே விஸ்வனாதன் சிலமணி நேரங்கள் ஓய்வெடுத்துக் கொள் வார். அந்தச் சமயத்தில் வீட்டில் எங்கும் சப்தம் போடக் கூடாது. நிசப்தமாய் இருக்க வேண்டும். அந்தச் சமயத்தில் லலிதாவும் ரேகாவும் பேசத் தொடங்கி விடுவார்கள். லலிதா தன் சிறு வயது விஷயங்களையும், தாயைப் பற்றிய ஞாபகங்களையும் ரேகாவுக்குச் சொல்லிக்கொண்டிருப்பாள். ரேகா அறையை ஒழித் துக்கொண்டே ஆர்வத்துடன் அவைகளைக் கேட்டுக் கொண்டிருப்பாள்.

ரஞ்சிதாவுக்குப் பாடங்கள், விளையாட்டுக்கள் கற்றுக் கொடுப்பதில்தான் அவளுக்கு ஆர்வம் அதிக மாய் இருந்தது.

அன்று மாலையில் லலிதா கிளப்பிற்குப் போய் விட்டாள். விஸ்வநாதன் முன் எல்லையிலிருந்த புல் வெளியில் சாய்வு நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். ரஞ்சிதா அவருக் கெதிரே கீழே உட்கார்ந்து கொண்டு ரேகா கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த ஏ. பி. ஸி. டி. களை எழுதிக்

கொண்டிருந்தாள். சமையல்காரனுக்கு மாலையில் என்ன வேண்டும் என்று விவரமாய் சொல்லிவிட்டு, ரேகா ஆரஞ்சுபழச்சாற்றைப் பிழிந்துகொண்டு வந்து விஸ்வனாதனுக்குத் தந்தாள். ரஞ்சிதாவிற்கருகில் உட்கார்ந்து அவள் சரியாய் எழுதுகிறாளா என்று பார்க்கத் தொடங்கினாள்.

குளிர்ச்சியான மாலை நேரம். தோட்டக்காரன் அப்பொழுதுதான் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டுப் போயிருந்தான்.

ரேகா வந்து இவ்வளவு நாட்களாகியும் அவர் அவள் குடும்ப விஷயங்களைப்பற்றி எதுவும் விசாரித்ததில்லை. இப்பொழுது சாவதானமாய் இருந்ததால் ரேகாவின் தாய் தந்தையின் பெயர்களையும் மாமாவின் பெயர்களையும் கேட்டார்.

ரஞ்சிதாவின் கையைப் பிடித்துக் கொண்டே எழுதக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த ரேகா நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்க்காமலேயே அவர் முகத்தில் திடீரென்று தோன்றிக் கொண்டிருந்த உணர்ச்சிகளை கவனிக்காமலேயே விவரமாய் எல்லாவற்றிற்கும் பதிலளித்தாள். விஸ்வநாதனின் முகம் வெளுத்துவிட்டது. அவர் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டத் தொடங்கிற்று. நடுங்கத்தொடங்கினார். திடீரென்று மூச்சு விட முடியாதவராய் மேல்மூச்சு வாங்கியபடி ஆயாசமடைந்து கொண்டிருந்தார். "ரேகா..." அவர் மூச்சிரைக்க இரண்டு கைகளையும் நீட்டினார் மார்பைப் பிடித்துக் கொண்டே. அந்த அழைப்பைக் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்த ரேகா ஒரு வினாடி சகலத்தையும் மறந்து போனவளாய் சலனமில்லாமல் நின்றுவிட்டாள். மிக நுட்பமான இடத்தில் அடிபட்டுவிட்ட மனிதராய் வெலவெலத்துப் போய்க் கொண்டிருந்தார் அவர்.

ரேகா கலக்கத்துடன் எழுந்து அவரிடம் வந்தாள் ''என்னவாச்சு?'' என்று கேட்டாள் பதறிப்போய். அவர் நிமிர்ந்து ரேகாவைப் பார்த்தார். அந்தப் பார்வையில் சூறாவளியில் சிக்குண்டு அலைபாய்ந்துக் கொண்டிருக்கும் ஆள், ஆதாரத்தைப் பற்றிக்கொள்வதற்காக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாற்போல இருந்தது. அதிர்ஷ்டவசமாய் அந்தச் சமயத்தில் கமலன் அங்கே வந்ததால் சரியாயிற்று. விஸ்வநாதனை உள்ளே அழைத்துக்கொண்டு போய் படுக்க வைத்துவிட்டு டாக்டருக்கு போன் பண்ணி வரவழைத்தான் கமலன். டாக்டர் வந்து இஞ்ஜெக்ஷன் தந்தார். கொஞ்ச நேரத்தில் அவர் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று. மெதுவாய் கண்களைத் திறந்தார் அவர்.

எதிரே ரஞ்சிதாவைத் தூக்கிக் கொண்டு நின்றிருந்த ரேகாவின் மீதே அவர் பார்வை நிலைத்து நின்றது. கிட்டே வரச்சொல்லி சைகை காட்டினார். ரேகா கிட்டே வந்ததும் அவர் ரேகாவின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டே கண்களை மூடிக் கொண்டார். அவர் கண்களிலிருந்து உஷ்ணமான கண்ணீர் வழிந்தோடியதை எல்லோரும் கவனித்தார்கள். ரேகா பயந்து போய் கமலனையும் டாக்டரையும் பார்த்தாள். ஒன்றும் பயப்படத் தேவையில்லை என்றார் டாக்டர். கொஞ்ச நேரத்தில் அவர் உறக்கத்தில் ஆழ்ந்தார். எல்லோரும் வெளியே வந்து விட்டார்கள்.

டாக்டர் ரேகாவிடம் அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லச் சொன்னார்.

''ஒன்றுமில்லையே, சாதாரண நடைமுறை விஷயங்களைப் பற்றிதான் பேசிக் கொண்டிருந்தோம்'' என்றாள் ரேகா.

''அவருக்கு ஏதோ பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒருக்கால் அதுவாகவே வந்திருக்கலாமோ

என்னவோ? இன்றைக்குப் பெரிய கண்டம் தப்பியிருக்கிறது.'' என்றார் டாக்டர்.

லலிதா வீட்டில் இல்லை. ''எங்கே போயிருப்பாள்? கிளப்பிற்குப் போன் பண்ணினேன். லலிதா கிளப்பில் இல்லை என்றும் சாயந்திரம் அங்கே வரவேயில்லை என்றும் சொன்னாங்க'' என்றான் கமலன்.

''என்னிடம் கிளப்பிற்குப் போவதாய் சொன்னாளே?'' என்றாள் ரேகா.

''என்னவோ, யாருக்குத் தெரியும்? இப்பொழுதெல்லாம் லலிதா மிகவும் உள்ளொன்றும் புறமொன்றுமாய் நடந்து கொள்கிறாள்.'' என்றான் கமலன் யோசனையில் ஆழ்ந்தபடி. ரேகா பதில் பேசவில்லை.

''ரேகா, அவருக்கு இந்த வீட்டில் மன அமைதியே கிடையாது. உன்னால் முடிந்தவரை அவர் அமைதியாய் கழிக்கும்படி பார்த்துக்கொள்'' என்றான் கமலன்.

''கண்டிப்பாய் கமல்! அதை என் கடமையாய் பாவிக்கிறேன்'' என்றாள் ரேகா உறுதியாய்.

அன்றிரவு லலிதா வீடு திரும்பும் வரை காத்திருந்தாள் ரேகா. இரவு வெகுநேரங்கழித்து வந்தாள் லலிதா. வந்ததுமே கமலன் அவளிடம் நடந்ததையெல்லாம் சுருக்கமாய் சொன்னான். லலிதா தந்தையின் அறைக்குள் போய் தூங்கிக் கொண்டிருந்த அவரை ஒரு முறை பார்த்து விட்டு கதவைச் சாத்திவிட்டு, வெளியே வந்துவிட்டாள். தந்தைக்கு உடம்பு அவ்வளவு மோசமாய் இருக்கையில் அவர் உயிருக்கு ஊஞ்சலாடிக் கொண்டிருக்கையில் லலிதா காட்டவேண்டிய அளவிற்கு அக்கறை காட்டவில்லை என்றுதான் தோன்றிற்று ரேகாவுக்கு.

மறு நாள் காலையில் ரேகா போனபொழுது அவர் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அவளைப் பார்த்ததும், ''ரேகா! இப்படி வாம்மா! உன்னை சரியாய் பார்க்கணும்'' என்றார்.

ரேகா கிட்டே போய் நின்றாள். வெளுத்துப் போய் விட்டிருந்த அவர் முகத்தில் களை பிறந்தது. டாக்டர் வந்து இஞ்ஜெக்ஷன் குத்தினார். ''குத்துங்கள் டாக்டர்! வாழ்க்கை மீது விரக்தியாய் இருப்பதாய் இது வரை நான் சொல்லி வந்த வார்த்தைகளையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டேன். நான் வாழணும். நிறைய நாள், நிறைய வருஷங்கள் நான் உயிரோடிருக்கணும். நேற்று, என் உயிர் போகாமல் காப்பாற்றி விட்ட உங்களுக்கு நன்றி டாக்டர்'' மூடிக்கொண்ட அவர் இமைகளிலிருந்து கண்ணீர் வழிந்ததைப் பார்த்த ரேகாவும் கமலனும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அன்று முழுவதும் ரேகா அவர் கட்டிலுக்கு பக்கத்திலேயே இருந்து வந்தாள். ரேகாவின் கையை பிடித்துக்கொண்டே உள்ளங்கையைத் தன் விரல்களால் பரிவோடு தடவிக்கொண்டே— ''என்னைக் கடவுள் மன்னித்துவிட்டார். நீ எனக்கு கிடைத்தாய்'' என்று ஏதோ முணுமுணுத்தார். வெளியே வந்ததும் அவள் கமலனிடம் விநோதமாய் இருந்த அவர் நடவடிக்கை களைப் பற்றி சொன்னாள்.

''பெரியவர்! உடம்பு சரியாய் இல்லாதவர் வேறு. அன்புக்கும் பாசத்துக்கும் தவித்துப்போய்க்கொண்டிருக் கிறார். நீ கொஞ்சம் பாசத்தோடு கவனித்துக் கொள்வதைப் பார்த்து அப்படி ஆகியிருப்பார். ரேகா, குழந்தைகளும் கிழவர்களும் சமம் என்பதை மறந்து விட்டாயா? இவ்வளவு நல்ல மனிதரை நான் இதுவரை

பார்த்ததேயில்லை உனக்கு அவர் தந்தைக்கு சமம் என்று நினைத்துக் கொள்."

"தந்தையா?" ரேகா கசப்பை விழுங்கினாற் போல ஆனாள்.

"உன்னிஷ்டம் ரேகா! நீ எப்படி வேண்டுமானாலும் எண்ணிக்கொள். ஆனால் நான் கூட்டிக்கொண்டு வந்தவள் மூலமாய் அவருக்கு வீட்டில் அமைதி கிடைக்கணும், அதை அவர் உணர்ந்துகொண்டால் போதும். இதைத்தான் நான் உனக்கு விண்ணப் பித்தும் கொள்கிறேன்" என்றான் கமலன்.

"நான் மறுக்கவில்லையே?" என்றாள் ரேகா. அவளுக்கு ஏதோ போல் ஆகிவிட்டது.

# 29

நாலைந்து நாட்கள் கழிந்தன. விஸ்வநாதனுக்கு கொஞ்சம் உடம்பு தேறிற்று. டாக்டர் அவரை நன்றாய் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி யிருந்தார். ரேகா அவரை அல்லும் பகலுமாய் கவனித்து சேவை பண்ணிவந்தாள்.

ரேகாவுக்கு ஒரு தம்பி இருக்கிறான் என்றும், அவள் தாய் நோயாளி என்றும், என்றுமே அறையைத் தாண்டி வரமாட்டாள் என்றும், சங்கீதப் பைத்தியம் பிடித்த மாமா நாடகக் கம்பெனியில் சேர்ந்து ஊரில் இருப்பதில்லை என்றும், என்று கொஞ்சங் கொஞ்சமாய் விவரங்களைத் தெரிந்துகொண்டார். ரேகாவின் தம்பி யின்பால் அவர் அதிக ஆர்வங்காட்டினார். அவனுடைய தோற்றங்கள், சுபாவங்களைப் பற்றி அணுவணுவாய் விசாரித்து தெரிந்துகொண்டார். மறுநாளே அவனை அழைத்துகொண்டு வரும்படியாய் சொன்னார். ரேகா தர்ம சங்கடத்தில் ஆழ்ந்தாள். சேகர் ஊரில் இல்லை என்றும் ஏதோ வேலையாய் ஊருக்குப் போயிருக்கிறான் என்றும் சொன்னாள். சேகரின் போட்டோவைக்

கொண்டு வந்து காட்டும்படி கேட்டார். ரேகா சரி என்றாள். ஆனால் அந்த விஷயத்தை அத்துடன் மறந்துவிட்டாள் ரேகா. மறுநாள் அவள் வந்ததுமே சிறு பையனைப்போல போட்டோவிற்காகப் பரபரப்புடன் கேட்டார். அவள் கையை விரித்தபோது மனமொடிந்து போனார். சேகர் ஊரிலிருந்து திரும்பியதும் தன்னிடம் அழைத்து வருவதற்கு மறந்துபோய்விடாதே என்று நினைவுபடுத்திக்கொண்டேயிருந்தார்.

லலிதாவுக்கு ரேகா வந்த பிறகு நிறைய பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன. இதுவரை இருந்து வந்த வீட்டுப் பொறுப்பு குறைந்துவிட்டதால் இப்பொழுது ஓய்வு நிறைய கிடைத்தது. பொழுதை எப்படி போக்குவது என்ற பிரச்சனைகூட ஜானோடு பரிச்சியம் ஏற்பட்டதால் தீர்ந்துவிட்டது. பணத்திற்காகத் தந்தைக்கு முன்னால் போய் நிற்கும் தேவைகூட குறைந்துவிட்டது. தேவைப்பட்டபொழுது ரேகாவிடம் செய்தி சொல்லியனுப்புவாள். அவர் உடனே அவள் கேட்ட பணத்தையெல்லாம் கொடுத்தனுப்பி விடுவார். இத்தனைப் பிரச்சனைகளை தீர்த்துவைத்த ரேகாவைக் கண்டால் லலிதாவுக்கு அன்பு ஏற்படாமல் போகுமா?

அன்று பிற்பகல் மூன்று மணி வேளையில் விஸ்வனாதனுக்கு கழுத்து வலி இருந்ததால் ஒத்தடம் கொடுத்துகொள்வதற்காக ரேகாவை வெந்நீர் போட்டு எடுத்துக்கொண்டு வரச் சொன்னார். சமையல்காரன் சாப்பாடு ஆனதுமே வீட்டிற்குப் போய்விட்டு திரும்பவும் மாலையில்தான் வருவான். அதனால் ரேகா தானே சமையலறைக்குப்போய் கியாஸ் ஸ்டவ்வைப் பற்ற வைத்து தண்ணீரைக் காய வைத்து துணியால் பிடித்துக் கொண்டு வெளியே வந்துகொண்டிருக்கையில் விஸ்வனாதனின் அறையிலிருந்து பேச்சுக் குரல்

கேட்டது. விஸ்வனாதன் தனக்கு உடம்பிற்கு வந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

வந்தவன் இந்த பக்கமாய் முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் குரல் மென்மையாகவும் கம்பீரமாகவும் கேட்டது. ''வந்ததுமே கோபாலன் சொன்னான் உடைகூட மாற்றிக் கொள்ளாமல் நேராய் வந்துவிட்டேன்'' அக்குரலைக் கேட்ட ரேகா திடுக்கிட்டாள். ஒரு நிமிஷம் அவள் இதயம் நின்றுவிட்டாற்போலவே இருந்தது.

பின்னாலிருந்து பார்த்தபொழுது உட்கார்ந்து கொண்டிருந்த அந்த விதத்திலும் ஒரு மிடுக்கும், ஆண்மையைக் காட்டும் அத்தோள்களும், அந்த அழகான கிராப்பும் வேறு யாருடையது? அழகான தோற்றத்தோடுகூட அளவுக்கு மீறிய திமிரும், சாகஸமும் கொண்ட விமலன்தான்.

ரேகாவுக்கு கைகள் நடுங்கத் தொடங்கின. வெந்நீரை வைத்துவிட்டு வேகமாய் அங்கிருந்து திரும்பப் போன அவளை விஸ்வனாதனின் அழைப்பு தடுத்து நிறுத்திற்று.

''வாம்மா, வா. வெந்நீர் கொண்டு வந்தாயா?'' என்றார். ரேகா தலையாட்டினாள். விமலன் திரும்பிப் பார்த்தான். ரேகா அவனை நோக்கித் திரும்பவில்லை. பார்க்காவிட்டாலும் அவன் திடுக்கிட்டுப் போனதும், கண்கள் அகல விரிய நம்பமாட்டாதவனாய் பார்த்ததும் அவளுக்குத் தெரிந்துகொண்டுதான் இருந்தன.

''விமல்! இந்தப் பெண்ணின் பெயர் ரேகா. முழுப் பெயர் சுவர்ணரேகா. நம்ப கமலன் கூட்டிக்கொண்டு வந்தான்'' உற்சாகத்துடன் பரிச்சியம் செய்தார். விமலன் இன்னும் அப்படியே பார்த்துகொண்டிருந்தான். வாழ் நாளில் என்றுமே அவ்வளவு வியப்படைந்ததில்லை அவன்.

ரேகா உடம்பிலிருந்த சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு, மூச்சு விட்டாலும் எங்கே உயிர் பறந்துப் போய்விடுமோ என்று பயந்துகொண்டே மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டு, அவனை தாண்டிக் கொண்டே நடந்துபோய் வெந்நீர் பாத்திரத்தை விஸ்வனாதனுக்கு முன்னால் இருந்த மேஜை மீது வைத்தாள்.

விமலனின் வியப்பை விஸ்வனாதன் உணர்ந்து கொள்ளவில்லை. அவர் ரேகாவைப் பார்த்து— ''இவன் விமல், நம்ப கமலனுக்கு அண்ணன். எனக்கு மகன் போல'' ரேகா வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்டாள்.

''வெந்நீரை வைத்துவிட்டுப் போய் சட்டென்று காபி போட்டுக் கொண்டு வாம்மா. விமல் ஏர்போர்ட்டி லிருந்து நேராய் இங்கே வந்துவிட்டான். பார், காபி ஸ்ட்ராங்காய் இருக்கணும்.''

ரேகா தலையாட்டி விட்டு வெளியே வந்தாள். வெளியே வந்த அவளுக்கு அறைக்குள்ளிருந்து பேச்சுக்கள் காதில் விழுந்தன. விஸ்வனாதன் சொல்லிக் கொண்டிருந்தார். ''ரொம்ப நல்லப் பொண்ணு. இந்தக் கொஞ்ச நாட்களிலேயே எனக்கு உயிருக் குயிராய் ஆகிவிட்டாள். கமலன் எனக்கு இந்த வயோதிக காலத்தில் இவ்வளவு பெரிய நன்மையைச் செய்திருக்கிறான். அவனுக்கு நன்றியாய் எதைக் கொடுத்தாலும் தகும்.''

''ஐ ஸீ!'' விமலனின் குரல் தேய்ந்து ஒலித்தது.

அக்குரலைக்கொண்டு அவன் இன்னும் ஆச்சரியத் திலிருந்து மீளவில்லை என்று புரிந்தது.

ரேகா சமையலறைக்கு வந்து காபியைக் கலந்து கோப்பையில் ஊற்றிக் கொண்டிருந்தபொழுது சமையல்

காரன் வந்து விட்டான். அவனைப் பார்த்ததும் அவளுக்கு உயிர் வந்தாற்போல இருந்தது. ரேகா காபியை அவனிடம் தந்து அனுப்பினாள்.

சமையலறைக் கதவில் சாய்ந்து நின்றாள் ரேகா. அவள் இதயமெல்லாம் சொல்ல முடியாத உணர்ச்சித் தவிப்புக்கள்! அது கோழைத்தனமாகவும் இருக்கலாம். பேதைமையாகவும் இருக்கலாம். எதுவாயிருந்தால்தான் என்ன, அவளை நடுங்க வைத்து காற்றில் பறக்கும் காய்ந்த சருகைப் போல ஆக்கிக்கொண்டிருந்தது. என்றாவது ஒரு நாள் அவன் வருவான் என்றும் அவனை நேருக்கு நேராய் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவளுக்குத் தெரிந்ததுதான். ஆனால் இவ்வளவு எதிர்பாராமல் திடீரென்று இச்சந்திப்பு நிகழும் என்று அவள் கனவிலும் ஊகித்திருக்கவில்லை. அவன் எதிர் பட்டால் அலட்சியமாய் பார்க்கவேண்டும் என்றும், தைரியமாய் இருக்கவேண்டும் என்றும் தனக்குள் கற்றுக் கொண்டிருந்த பாடமெல்லாம் காற்றில் பறந்துபோய் விட்டது. தன் கையாலாகாதத் தனத்திற்கு துக்கமும் கோபமும் வந்தன அவளுக்கு.

சமையல்காரன் சிடுசிடுத்துக்கொண்டே வந்தான்.

''என்ன? என்னவாச்சு?'' என்றாள்.

''என்னம்மா, நீங்க சரியாய் பார்த்துத் தர வில்லையா? நானும் அவ்வளவாய் பார்க்கவில்லை. காபியில் ஏதோ பூச்சி இருந்ததாம். வந்தவரு கொட்டிட்டாரு, ஐயா என்னைத் திட்டினாருங்க.''

''காபியில் பூச்சி விழுந்திருந்ததா?'' ரேகா சிரிக்கத் தொடங்கினாள்.

சமையல்காரனுக்கு வெந்த புண்ணில் வேலை பாய்ச்சினாற் போலிருந்தது போலும்.

''நீங்க சிரிக்கிறீங்க இங்கே. அங்கே அவரு என்னை திட்டிய திட்டைக் கேட்டிருக்கணும். மறுபடியும் கலந்து கொண்டுவரச் சொன்னாரு.''

''பால் இல்லை. பால் வந்தால்தான் போடமுடியும்னு சொல்லு.''

ரேகா அங்கிருந்து அப்பால் வந்துவிட்டாள்.

விமலன் காபியை ஏன் கொட்டினான் என்று புரிந்து விட்டது ரேகாவுக்கு. அவள் போட்டு அனுப்பியதைக் குடிக்க வேண்டியிருக்கிறதே என்று! அரை மணி நேரத்திற்கு பிறகு ரேகா ரஞ்சிதாவிற்குத் தலைவாரிக் கொண்டிருந்தாள். வெளியே காலடிச் சப்தம் கேட்டது. ரேகா நிமிர்ந்து பார்ப்பதற்குள் ''ரஞ்சிதா'' என்று அழைப்பு கேட்டது.

ரஞ்சிதா தலையை இழுத்துக் கொண்டு ரேகாவின் கையை உதறி விட்டு வெளியே ஓடினாள்.

அதற்குள் அறை வாசலில் வந்து நின்றான் விமலன். ஓடிவந்த ரஞ்சிதாவைத் தூக்கிக் கொண்டான் அவன். ரஞ்சிதா பல மணி நேரங்களுக்கு பிறகு தென்பட்ட தாயை ஓடிப்போய் கட்டிக் கொண்ட சிறுகுழந்தையைப் போல அவனைக் கட்டிக் கொண்டுவிட்டாள்.

ரஞ்சிதாவின் தலையைக் கோதிக் கொண்டே சொன்னான் அவன்–''உனக்கு பேசும் பொம்மை வாங்கி வந்திருக்கிறேன். சாயந்திரமாய் கொண்டு வரேன். சாவி கொடுத்தால் பேசத் தொடங்கிவிடும். அந்த பொம்மைக்கு உன்னைப் போலவே வட்டமான கண்கள். ரெட்டைப் பின்னல்.''

அவன் குரல் மென்மையாய் பாசத்தோடு ஒலித்துக் கொண்டிருந்தது. கண்கள் மட்டும் துப்பாக்கி குண்டாய் மின்னியபடி ரேகாவையே பார்த்துக் கொண்டிருந்தன.

தடையின்றி தென்பட்ட அப்பார்வைக்கு ஆளாகிக் கொண்டே மெதுவாய் எழுந்து நின்றாள் ரேகா. அவன் முகத்தையும் அக்கண்களில் கடினத்தையும் பார்த்த பொழுது ரேகா இங்கே வந்து ஒரு இடத்தை ஏற்படுத் திக்கொண்டிருந்ததற்குத் துடுக்காய், கேலியாய் பேசி அவமானப்படுத்துவதற்காகத் தவித்துக் கொண்டிருந் தாற்போல இருந்தது.

அதற்குள் பின்னாலிருந்து வியப்போடு கேட்டது.

"ஹலோ விமல்! வாட் எ வண்டர்!"

விமலன் சரேலென்று திரும்பினான்.

லலிதா கிட்டே வந்துகொண்டே கேட்டாள்.

"எப்ப வந்தாய் ஊரிலிருந்து?"

"இப்பத்தான். வந்ததுமே அப்பாவுக்கு உடம்பு சரி யில்லாமலிருந்ததாய் கோபாலன் சொன்னதால் நேராய் இங்கே வந்தேன்."

"எவ்வளவு நல்லவன் நீ! இன்றைக்கு நீ வராமல் இருந்திருந்தால் நான் செத்தே போயிருப்பேன்."

"ஏன்? என்னவாச்சு?"

"என்னவாகிறதா? என் உயிரே போகும்படியாய் ஆயிடுத்து. பூனாவிலிருந்து எங்கள் பட்டாளம் வந்து இறங்கப் போகிறது இன்றிரவு."

"யார்? உங்கள் சாந்தி, அருணா, மிஸஸ் ஜோஷி அவங்கதானே?"

"ஆமாம். பின்னே யார்? அப்ப நீ ஊருக்குப் போவ தற்கு முன்னால் ஒரு தடவை சொன்னேனே, ஞாபக மிருக்கா? தென்னிந்தியச் சுற்றுபயணத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் என்னையும் கூட வரச் சொல்லி லெட்டர் போட்டிருக்காங்க என்றும்..."

விமலன் ஞாபகம் இருக்கிறது என்பதுபோல தலை யாட்டினான்.

"அவங்களுக்கு இப்பொழுது ஓய்வு கிடைத்திருக்கி றதாம். காரில் வராங்க. இங்கிருந்து தொடங்கப் போகி றார்களாம். இந்த ஊரில் இரண்டுநாள் இருப்பாங்களாம். நீ எல்லா இடங்களையும் எப்படிச் சுற்றிக் காட்டுவது என்று கொஞ்சம் புரோகிராம் போட்டுத் தா" என்றவள், அப்பொழுதுதான் ரேகாவைப் பார்த்தாள்.

"ஓ! நீயா? இங்கேயா இருக்கிறாய்? ரேகா, ராத்திரிக்கு எதாவது ஸ்பெஷல் அயிட்டம் பண்ணணும். என்னென்ன பண்ணணும்னு நான் சொல்றேன். நீ கிட்டேயிருந்து சமையல்காரனைப் பண்ண வைத்தால் போதும். பதினாறு பேர்கள்! இந்த ரெண்டு நாளும் நம்ம வீட்டில் திருநாள்தான்! ஆங், விமலன்! மறந்து போய்விட்டேனே! இந்தப் பெண் ரேகா, எங்கள் வீட்டில் எனக்கு உதவியாய் இருப்பதற்காக வந்திருக் கிறாள். ரேகா, இவர் விமல்! கமலின் அண்ணன்! வக்கீல் தொழில்! இவர் அதிர்ஷ்டத்தால் எனக்குக் கணவனாக வரவிருந்து தப்பித்துக் கொண்டவர். இவருக்கு என்னைப் பிடிக்கவில்லையாம். என்னைவிட அழகியாய் ஒருத்தி, ரம்பையோ ஊர்வசியோ இறங்கி வந்து இந்த உலகத்தில் இவரைத் தேடப் போகிறாள் என்பது இவர் நம்பிக்கை."

"லலிதா" மிரட்டினான் விமலன். ஆனால் லலிதா பொருட்படுத்தவில்லை.

"என்ன விசேஷம்? உனக்கு இப்பொழுதெல்லாம் வாய் நீளமாகிவிட்டதே" என்றான்.

"நாம்ப சந்தோஷமாய் நிம்மதியாய் இருக்கிறான். அதனால்தான்!" என்றாள் ஈட்டிக்காரன் மொழியில் வேடிக்கையாய்.

"அப்படியா? ஏனோ? எங்கே, இங்கே வா, அந்த ரகசியம் என்னவென்று என்னிடம் சொல்லு, கேட்கிறேன்."

விமலன் அறையை விட்டுப் போக, அவனைத் தொடர்ந்து போய்விட்டாள் லலிதாவும்.

அறைக்குள் தனியாய் எஞ்சி நின்றாள் ரேகா வரப் போகிறது என்றெண்ணிக் கொண்டிருந்த பூகம்பம் வரவில்லை.

விமலனின் பார்வையில் என்ன சக்தி இருந்ததோ தெரியாது, ஒரே பார்வையிலேயே ரேகாவின் பலமெல்லாம் தளர்ந்து போய்விட்டாற்போல இருந்தது.

லலிதாவுடன் வெளியே வந்த விமலன் ரேகாவின் அறையை விட்டு வெகு தூரத்திற்கு வந்துவிட்டோம் என்று தெரிந்ததும் லலிதாவிடம் கேட்டான்—"இப்பச் சொல்லு. கமலன் எப்பொழுது அழைத்துக்கொண்டு வந்தான் இந்தப் பெண்ணை? அவங்க ரெண்டு பேருக்கும் எப்படிப் பரிச்சியம் என்று சொன்னான்?"

"நீ போன நாலைந்து நாட்களுக்குப் பிறகு கூட்டி வந்தான். அவனுக்குத் தெரிந்த குடும்பத்தைச் சேர்ந்தவளாம். ரொம்ப வறுமையாம். ரொம்ப நல்ல பெண்ணாம் அது நிஜம்கூட."

"அவ்வளவுதானா? இதைத் தவிர அவங்களுக்கிடையே வேறொன்றும் இல்லையே?"

லலிதா முறைத்துப் பார்த்தாள்.

"உன் புத்தியைக் காட்டிக்கொண்டுவிட்டாய். வந்ததிலிருந்தே இருவரையும் பார்த்துக் கொண்டேதானே இருக்கேன்? எதுவும் இல்லை. அந்தப் பெண் ரொம்ப நல்லவள்" பரிந்து கொண்டு வருவதுபோல பதிலளித்தாள்.

விமலனின் மூளை வேகமாய் இயங்கிற்று. அவன் வந்த இக்கொஞ்ச நேரத்திற்குள்ளேயே ரேகா இந்த வீட்டில் எவ்வளவு அன்பை சம்பாதித்துக் கொண்டிருக் கிறாள் என்று தெரிந்துவிட்டது. என்ன விநோதம் என்றால் சாதாரணமாய் விஸ்வனாதனுக்குப் பிடித்தவர் களை லலிதாவுக்குப் பிடிக்காது. லலிதாவுக்குப் பிடித்த வர்களை விஸ்வனாதனுக்கு பிடிக்காது. இந்த ரேகா தன் சாதுரியத்தால் இருவரிடமிருந்தும் நல்ல பெயரை பெற்றுக் கொண்டு விட்டாள். இந்த விதமாய் இங்கே வரவேண்டிய காரணம் என்ன? கடைசியில் தன் மானத்தைக்கூட விட்டுவிட்டு, வேலைக்காரியாய் இருப்பதற்குக்கூட துணிந்து வந்திருக்கிறாள் என்றால் ஏதோ பெரிய காரணம் இருக்கத்தான் வேண்டும்! இப்படி வந்திருப்பதன் நோக்கம் என்ன? விஸ்வனாத னிடம் நல்லப் பெயரை சம்பாதித்துக் கொண்டு, அவர் மூலமாய் கமலனை அடைய வேண்டும் என்றா? எவ்வளவு சாகஸம் இந்தப் பெண்ணிற்கு. உபாயத்திற்கு எதிர் உபாயம் தீட்டுவதில் இவ்வளவு சாமார்த்தியக் காரியா? ஏதாவது அரசியலில் நுழைந்திருந்தாளானால் நாட்டையே ஆண்டிருப்பாள்.

அவன் இப்பொழுது நடந்ததையெல்லாம் விஸ்வ நாதனிடம் சொல்லுவதா வேண்டாமா? சொல்லி விட்டு, அந்தப் பெண்ணை உடனே அனுப்பி வைத்து விடுவது நல்லதா? அல்லது என்னதான் செய்கிறாள் என்று பொறுத்திருந்து பார்ப்பது நல்லதா? விமலன் தீர்க்கா லோசனையில் மூழ்கிப் போனான்.

## 30

லலிதாவின் சிநேகிதிகள் சூறாவளியாய் வந்து சேர்ந்தார்கள். வீட்டில் சந்தடி அதிகமாகிவிட்டதால்

இதற்கிடையே விமலனுக்கு கமலனோடு பேசும் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. லலிதாவின் சிநேகிதிகள் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கு விமலனோ அல்லது கமலனோதான் காரை சாரத்தியம் பண்ண வேண்டியிருந்தது. அந்த இரண்டு நாட்களும் பேச்சுக்களாலும் சிரிப்புக்களாலும் அரட்டைகளாலும் வீடு ஒரே சந்தைக் கடையாகிவிட்டிருந்தது.

விஸ்வநாதன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு காதில் பஞ்சை அடைத்துக்கொண்டு உள்ளே உட்கார்ந்திருந்தார். அவர்கள் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்குப் போன பிறகு மட்டும் கதவைத் திறப்பார். திரும்பவும் கார் ஹாரன் சப்தம் கேட்டதுமே ரேகாவை கதவைச் சாத்திவிடச் சொல்லி விடுவார்.

தென்னிந்திய சுற்றுப் பயணத்திற்கு அவர்கள் தம்மோடுகூட விமலனையும் வரச்சொல்லி வற்புறுத்தினார்கள்

''மன்னிக்க வேண்டும். எனக்கு அர்ஜெண்ட் வேலை ஒன்று வந்துவிட்டது. என்னால் வரமுடியாது. என் சார்பில் எங்கள் கமலனை அனுப்புகிறேன்'' என்று சொல்லிவிட்டான் அவன்.

அவன் குறிப்பிட்ட அன்றைக்கு லலிதாவும் கமலனும் அவர்களோடு தென்னிந்தியச் சுற்றுப்பயணத்திற்குப் புறப்பட்டார்கள்.

கமலனும் லலிதாவும் இல்லாததால் ரேகாவுக்கு ஏதோ போல் இருந்தது. கூடுமானவரையிலும் ரஞ்சிதாவுக்குப் பாடம் சொல்லித் தருவதிலும் விளையாடக் கற்றுக்கொடுப்பதிலும் கழித்து வந்தாள். விஸ்வநாதன் ரேகாவை எப்பொழுதும் தன் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கும்படிச் சொல்லுவார். அவர் ரேகாவின்பால் வினோதமாய் நடந்துகொண்ட விதம்

மட்டும் மாறவேயில்லை, ரேகாவின் குடும்ப விஷயங்களை எவ்வளவோ தடவை திருப்பித் திருப்பிக் கேட்டாலும் அலுக்காது அவருக்கு. சேகரைப் பார்க்க அவர் தவித்தார். ஆனால் அவன் இன்னும் ஊரிலிருந்து வரவில்லை என்று ரேகா சொன்னதால் ''இன்னுமா வரவில்லை? இவ்வளவு நாட்களாய் அங்கே என்ன பண்ணுகிறான்? ஒரு தடவை வந்துவிட்டு போகச் சொல்லி கடிதம் போடு. அப்படியே போகணும் என்றால் திரும்பியும் போய் கொள்ளட்டும்'' என்றார்.

பேச்சு வாக்கில் அவள் தந்தையின் விஷயம் வந்த பொழுது அவள் தந்தையின்பால் தன்க்குள்ள வெறுப்பையும் துவேஷத்தையும் சொல்லிவிட்டாள்.

''ஏன் ரேகா அவர் மீது உனக்கு இவ்வளவு துவேஷம்? என்னவிருந்தாலும் அவர் உன்னைப் பெற்ற தந்தையில்லையா?'' என்றார் அவர் தொய்ந்த முகத்துடன்.

''அதனால்தான் வெறுப்பு. எங்கள் வாழ்கைக்கே நடுநாயகமான அவர் தன் பொறுப்புக்களை உதறிவிட்டு போய்விட்டது மன்னிக்க முடியாத குற்றம். அம்மாவை இரண்டு குழந்தைகளோடு உதறிவிட்டுப் போன அவரை என்னால் வெறுக்காமலிருக்க முடியாது. வாழ்க்கையில் நாங்கள் பட்ட அவமானங்களை வேறு யாருமே பட்டிருக்க முடியாது.''

''ஆமாம் ரேகா! ஆமாம்! என்னால் உன்னைப் புரிந்துகொள்ள முடிகிறது.'' முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு ஹீனஸ்வரத்தில் சொன்னார் அவர்.

ரேகா தினமும் வருவதற்கும் போவதற்கும் தன் காரைப் பயன்படுத்திக் கொள்ளும்படிச் சொன்னார் அவர். ஆனால் ரேகா அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

தனக்கு பஸ்ஸில் வருவதே சௌகரியமாய் இருக்கிறது என்று சொல்லி மறுத்துவிட்டாள்.

ரேகாவின் தாய்க்கு உடம்பு சரியாயிருப்பதில்லை என்றும் ஹிஸ்டீரியா மனுஷி என்றும் பேச்சு வாக்கில் தெரிந்து கொண்ட விஸ்வனாதன் உடனே தன் குடும்ப டாக்டரைக் கூப்பிட்டு ரேகாவுடன் போய் அவளைப் பரிசோதித்து விட்டு என்ன உடம்பு என்று சொல்லும்படிச் சொன்னார். ரேகா அதற்குக்கூட சம் மதிக்கவில்லை. ஆனால் அவர் கட்டளையிடுவது போல சொன்னார். "நீ இந்த விஷயத்தில் மட்டும் மறுக்கக் கூடாது. இந்த நிலைமையில் நீ என்று இல்லை, யார் இருந்தாலும் சரி, நான் இப்படித்தான் உதவி பண்ணிக் கொண்டிருப்பது வழக்கம். என் மனது எவ்வளவு இரக்க சுபாவம் கொண்டது என்றும் நான் செய்த தயா தர்மங்கள் எப்படிப் பட்டவை என்றும் உனக்குச் சந்தேகம் இருந்தால் விமலனையாவது கமலனையாவது கேட்டுப்பார், சொல்லுவார்கள். ரேகா, என்னிடம் வேண்டிய பணம் இருக்கிறது. சாகத் தயாராயிருக்கிற நான் அதையெல்லாம் என்ன பண்ணு வேன்?

"லலிதாவின் உல்லாசக் கேளிக்கைகளுக்கு ஆகும் மலையத்தனைச் செலவில் ஒரு கடுகளவு உங்கம் மாவுக்காகச் செலவழிப்பேனோ என்னவோ? இந்த ஒரு விஷயத்தில் நீ நான் சொன்னபடி கேட்டு எனக்கு மன நிம்மதி கிடைக்கும்படியாய் செய்" திடீரென்று அவர் இரு கைகளையும் நீட்டினார். அக்குறிப்பை உணர்ந்து கொண்ட அவள் சட்டென்று அவர் கைகளைப் பிடித்துக் கொண்டாள். உணர்ச்சி வசத்தால் அவர் நெற்றியில் வியர்த்துக் கொட்டிற்று. அவ்விடத்திலேயே இருந்த டாக்டர் உடனே சொன்னார், "நீங்கள் கவலை யில்லாமல் இருங்கள். என்னிடம் அவங்களைப் போய்ப்

பார்த்துவிட்டு வரச்சொல்லிட்டீங்க. நான் பார்க்கிறேன். என்னை இந்தப் பெண் மட்டுமேயில்லை, பிரம்ம தேவனே வந்தாலும்கூட தடுத்து நிறுத்திவிட முடியாது.''

அதன் விளைவாய் ரேகா டாக்டரை அழைத்துக் கொண்டு அவள் வீட்டிற்குப் போய்த்தீர வேண்டியிருந்தது. விஸ்வநாதனின் விலையுயர்ந்த கார் ரேகாவின் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றதை அக்கம் பக்கத்தார் வினோதமாய் எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள். சிறுவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''காயத்ரிக்கு என்ன வந்ததும்மா? அதிர்ஷ்டக்காரி! மகள் பெரியவளாகிவிட்டாள். கெட்டிக்காரியாகி விட்டாள். எவ்வளவு பெரிய காரில் வந்திருக்கிறார் பார் டாக்டர்! அவர் பீசு எவ்வளவு கேட்பாரோ? கேட்டால் மட்டும் என்ன கணக்கு? யாரையோ பெரிய கொம்பைதான் பிடித்திருக்கிறாள்!'' டாக்டர் பார்த்துவிட்டுப் போன பிறகு அக்கம்பக்கத்தார் அதைப் பற்றி விமரிசனம் பண்ணிக்கொண்டார்கள்.

டாக்டர் மறுநாள் விஸ்வநாதனிடம் ரேகாவின் தாய் பலவீனமாய் இருக்கிறாள் என்றும், மானசீகமாய் சிதறிப் போய் விட்டாள் என்றும் அவளுக்கு அமைதியின்மை, திகிலைத் தவிர வேறு வியாதி இல்லை என்றும் சொன்னார். டாக்டர் போனதும் அதுவரை பலவந்தமாய் அடக்கி வைத்துக் கொண்டிருந்த விஸ்வநாதன் தலையணையில் முகத்தைப் பொத்திக் கொண்டார். அவர் இதயம் வெடிக்கத் தயாராயிருந்தது.

'காயத்ரீ! காயத்ரீ!'' அவர் மனம் குமுறத் தொடங்கிற்று.

காயத்ரி தேறிக்கொள்வதற்குத் தேவையான மருந்து களையும் டானிக்குகளையும் எழுதித் தந்தார் டாக்டர். விஸ்வநாதன் அந்த மருந்துகளையெல்லாம் வாங்கி வரச் செய்து ரேகாவிடம் தந்துவிட்டு ''உங்கம்மாவை இந்த மருந்துகளை வேளை தவறாமல் சாப்பிடச் செய்யும் பொறுப்பு உன்னுடையது. அடுத்த தடவை டாக்டர் உங்கம்மாவைப் பரிசோதித்து விட்டு, கொஞ்சம் தேவலை என்று சொல்லாமல் போனால் அந்த அபராதம் உன்னுடையது என்று அர்த்தம். தண்ட னையை நீ அனுபவிக்க வேண்டியிருக்கும்'' என்றார்.

''அதென்ன தண்டனை? நான் இப்பொழுதே தெரிந்து கொள்ளலாமா?'' சிரித்துக் கொண்டே கேட்டாள் ரேகா.

விஸ்வநாதன் ஒரு வினாடி ரேகாவைக் கூர்ந்து பார்த்தார்.

''ரொம்ப பயங்கரமானதுதான். நீ இவ்வளவு துவேஷித்துக்கொண்டிருக்கிற உன் தந்தையைத் தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து உனக்கு முன்னால் நிறுத்தி விடுவேன். நீ அவர் மகள் என்று சொல்லி உன்னை அவரிடம் ஒப்படைத்து விடுவேன்.'' அவர் எதிர்பார்த்தாற் போலவே ரேகாவின் முகம் கசப்பை விழுங்கினாற்போல ஆயிற்று. வினாடி நேரம் சட்டென்று அவர் கையிலிருந்த மருந்துகளைப் பிடுங்கிக் கொண்டு, ''அப்படீன்னால் ஜாக்கிரதையாய் இருக்கேன். எங்கம்மா ஒருக்கால் எந்த காரணத்தினாலாவது இந்த மருந்துகளை விழுங்கமாட்டேன் என்று சொன்னால் அவங்க வாயை பலவந்தமாய் திறந்தாவது இந்த மருந்து களைப் போட்டுவிடுகிறேன்'' என்றாள்.

''குட்! உங்கப்பாவின் மேல் உனக்கு அவ்வளவு வெறுப்பா ரேகா?'' தாளமாட்டாதவராய் கேட்டார்.

''வெறுப்பு மட்டுந்தானா? ஆத்திரம் கூட.''

''ரேகா!''

''அவருடைய பொறுப்பில்லாத தனத்தால் நாங்கள் எவ்வளவு பலியானோம் என்று உங்களுக்குத் தெரியாது. என் விஷயத்தை விடுங்கள். எங்கம்மாவின் விஷயம் கூட வேண்டாம். ஆனால் சேகரைப் பற்றிய ஞாபகம் வந்து விடடால் மட்டும்...'' ஆவேசத்தோடு சொன்ன ரேகா சட்டென்று தான் என்ன பேசுகிறோம் என்று நினைவிற்கு வந்துவிடவே டக்கென்று நிறுத்தி கொண்டாள்.

''சேகரின் வாழ்க்கையா? சேகருக்கு என்ன வாயிற்று? நன்றாய்தானே இருக்கிறான்?'' ஏதோ புதிய விஷயத்தைக் கேட்க நேர்ந்தாற்போல அவர் சரே லென்று நிமிர்ந்து கேட்டார், ரேகா பதில் பேச முடியாத வளாய் கீழுதட்டைக் கடித்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள்.

''சொல்லு ரேகா, சேகருக்கு என்னவாச்சு? உங் கப்பாவின் பொறுப்பில்லாத தனத்தால் அவனுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டு விட்டது?'' அவர் உலுக்கி எடுப்பது போல கேட்டார். வேறு வழியில்லாதவளாய் அவள் உடனே பதில் சொல்லியிருப்பாள். ஆனால் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ தெரியாது அதே சமயத் தில் விமலன் ரஞ்சிதாவின் கையைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான்.

ரேகாவின் பதிலுக்காகத் துடிப்புடன் கண் கொட்டாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்த விஸ்வநாதன் காலடிச் சப்தம் கேட்டு கதவுப் பக்கமாய் திரும்பிப் பார்த்தவர் விமலனைக் கண்டதுமே ''விமல்! நீயா! வா வா!'' என்று வரவேற்றார்.

ரேகாவின் கையிலிருந்த பெரிய பாக்கெட்டைப் பார்த்ததுமே விமலனின் புருவங்கள் முடிச்சேறின. சந்தேகத்துடன் அது என்னவாயிருக்கும் என்று பார்த்தான். சுறுசுறுப்பான அவன் மூளை அவ்விருவரின் சம்பாஷணைக்கு தன் வரவினால் இடையூறு ஏற்பட்டு விட்டதை உணர்ந்து கொண்டுவிட்டது. அவர்கள் அவ்வளவு தீவிரமாய் ஆழ்ந்து பேசிக்கொள்ளக்கூடிய விஷயம் என்னவாயிருக்கும்?

# 31

மறுநாள் ரேகா எப்பொழுதும் போல எழுந்திருந்தாள். குளிக்கப் போவதற்கு முன்னால் நேற்றிரவு தான் கொண்டு வந்த மருந்து பாக்கெட்டைத் தாய்க்கு முன்னால் பிரித்து வைத்துவிட்டு— "அம்மா! இதோ மருந்துகளும் டானிக்குகளும். நேற்று உன்னைப் பார்த்து விட்டு டாக்டர் எழுதித் தந்த மருந்துகள். இவைகளை ஒழுங்காய் சாப்பிட்டு வந்தால் உன் உடம்பு கொஞ்சமாவது குணமாகும்" என்றாள்.

காயத்ரி மருந்துகளையும் மகளையும் மாறி மாறிப் பார்த்தாள். முகம் கடுகடுப்பாய் மாற கடுமையாய் கேட்டாள். "இதெல்லாம் ஏது உனக்கு?"

"ஏதாவது? நான் உத்யோகம் பண்ணுகிறேன் என்ற விஷயத்தை மறந்து போய்விட்டாயா நீ?" ரேகா வியப்போடு கேட்டாள்.

"உத்யோகமா? நீ பார்க்கிறது உத்யோகமாங்கிறேன்? இந்த உலகத்தில் படித்துவிட்டு பட்டம் வாங்கினவங்கள்ளாம் கூட உத்யோகம் இல்லாமல்

அழுதுட்டிருக்காங்க. சோற்றுக்குக்கூட கதியில்லாமல் தவித்துச் செத்துப்போயிட்டிருக்காங்க. படிப்பு வழக்கு இல்லாத உனக்கு உத்யோகம், ஆயிரம் ரூபாய் சம்பளம்! அதோடு இப்படிப்பட்டவைகள் எல்லாம் இலவசமாய் கிடைக்கின்றன. பேஷ்! இப்படிப்பட்ட காரியங்களுக் கெல்லாம் உத்யோகம் என்று பெயர் வைத்துக்கொண்டு விட்டால், இந்த உலகத்தில் இனி அநீதி என்ற பேச்சிற்கே இடமிருக்காது.''

''அம்மா.''

''ஆஹா! என் அதிர்ஷ்டந்தான் என்ன! என் மகள் வயது வித்தியாசத்தைக் கூட பார்க்காமல் ஒரு வயதானவரோடு...''

''அம்மா'' ரேகா சட்டென்று கிட்டே வந்து, கையை நீட்டி அவள் வாயைப் பொத்தினாள் மேற்கொண்டு பேச முடியாமல். முகமெல்லாம் வெளுத்துப்போய்விட, நடுங்கும் குரலில் சொன்னாள்— ''அம்மா! உனக்கு கோடிக் கும்பிடுகள்! இந்த உலகத்தில் உனக்காகவே தான் நான் இல்லாத பலத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு பலவந்தமாய் உயிரோடு வாழ்ந்துகொண் டிருக்கிறேன். சேகர் மேல் ஆணையிட்டு சொல் கிறேன். நீ இந்த மாதிரி வார்த்தைகளைச் சொல்லி என் மனதை விஷமயம் ஆக்கிவிடாதே. இப்பொழுதே என் மனது அநேக காரணங்களினால் தூள் தூளாகி விட்டது. கடைசியில் உன்னையும் வெறுக்கக்கூடிய ஆபத்தை வரவழைத்து விடாதே எனக்கு. என்னைப் பற்றி வேறு எதுவேண்டுமானாலும் சொல்லு. வேறு யாரோடு வேண்டுமானாலும் சந்தேகப்பட்டுக்கொள். ஆனால் தெய்வம் போன்ற அவரை மட்டும்...''ரேகாவின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது. துக்கத்தால்

தொண்டை தழுதழுத்தது. அதற்கு மேல் வார்த்தைகள் பெயரவில்லை.

காயத்ரி மகளின் கையை விடுவித்துக்கொண்டு, அவளை பலமாய் பிடித்துத் தள்ளினாள் தொலைவிற்கு. ரேகாவின் கண்ணீர் அவளைக் கொஞ்சமும் இளக்கி விடவில்லை. ''நான் சொல்றது என்ன? உலகமெல்லாம் சொல்கிறது. ஏன்? அந்த கமலன் என்ற பையன் இப்பொழுதெல்லாம் நம்ப வீட்டிற்கு வருவதை ஏன் விட்டுவிட்டான்? நீ ஏன் வேண்டாம் என்றாய்? அதை சொல்லு?''

''என்னம்மா சொல்கிறாய் நீ? அந்த கமலன்தானே எனக்கு இந்த உத்யோகத்தையே வாங்கித் தந்தது?''

''வாங்கித் தந்தான். எதுக்காக? ஏதோ நம்ப பொருளாதார நிலைமை கொஞ்சமாவது நன்றாயிருக்கு மேன்னு! ஏணியைத் தாண்டிய பிறகு கீழே தள்ளிவிட்ட மனுஷி நீ. வளர்த்த கடா மார்பில் பாய்ந்தாற் போல. இந்தப் பணக்கார ஆள் கிடைத்துவிட்ட பிறகு உனக்கு கமலன் உபயோகமில்லாத ஆளாகி விட்டான். அதானே, ரேகா, உன்னை... உன்னை என்ன பண்ணினாலும் பாவமில்லை.''

ரேகா சிலையாய் நின்று கொண்டிருந்தாள். அம்மாவுக்கு புத்தி சுவாதீனத்தில் இருக்கிறதா? தான் என்ன பேசுகிறோம் என்று தெரிந்துதான் பேசுகிறாளா? காயத்ரி ஆயாசத்துடன் சொன்னாள்— ''என் வாயைக் கட்டி விடுவாய். ஆனால் உலகத்தின் வாயை மூடிவிட முடியுமா உன்னால்? நீ போய் சமையலறையில் இருக்கிற உங்க மாமியை நேற்று மீனாட்சி முதலிய வர்கள் வந்து என்ன சொல்லிவிட்டுப் போனாங்கன்னு கேட்டுவிட்டு வா. நான் வெட்கங்கெட்டவளாய் இருக் கிறதால் அதைக் கேட்டும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு

சாகாமல் இருக்கிறேன். அதுவே வேறு யாராவதாயிருந் தால் எதிலாவது தலையைக் கொடுத்து செத்துப் போயிருப்பார்கள் ''

ரேகா தூக்கத்தில் நடப்பவளைப் போல சமைய லறைக்கு வந்தாள். ஆதாரத்திற்காக சமையலறைக் கதவைப் பிடித்துக்கொண்டே கேட்டாள்.

''மாமி! என்னது? என்ன சொன்னாங்க அவங்க?'' அங்கேயே உட்கார்ந்து காய்களை நறுக்கிகொண்டிருந்த சுந்தரி இதையெல்லாம் கேட்டுக்கொண்டேதான் இருந் தாள். அவள் அலட்சியமாய் ஒதுக்கித் தள்ளுவதுபோல சொன்னாள்— ''என்னவோம்மா! உலகத்தார் காக்கை களைப் போன்றவங்க என்று யார் சொன்னாங்களோ தெரியாது, அது நூற்றுக்கு நூறு நிஜம். நம்ப நிலைமை நன்றாய் இல்லாதபோது ஒருத்தர் சொல்லிவிட்டதற்காக கோபப்படுவது வீண். நாம்ப அவங்க வார்த்தைகளை ஏன் பொருட்படுத்தணும்? நம்ப மனசுக்குத் தூய்மை யாய் இருக்கிறோம்னுத் தெரிஞ்சால் போதாதா?''

''என்ன சொன்னாங்க மாமி அவங்க?''

''என்னவோம்மா! என்ன சொன்னால்தான் உனக்கு எதற்கு? சொன்னவங்கள்ளாம் நமக்குச் சோறு போட்டுடுவாங்களா?''

''சொல்லு மாமி.''

''என் கண்ணில்லையா? உங்கம்மாவுக்குதான் மூளை இல்லை என்றால் உனக்குமா இல்லாமல் போயிடுத்து? இப்ப நீ ஒரு வாய் சோற்றைக்கூடச் சாப்பிட முடியாமல் பண்ணுவதற்காகவேதான் அவள் இந்தப் புராணத்தையெல்லாம் அவிழ்த்து விட்டிருக் கிறாள். நீ குளிக்கப் போ. நேரமாயிடும் உனக்கு.''

அறைக்குள்ளிருந்து காயத்ரி எழுந்து வந்தாள், அவள் உடம்பில் நிற்கக்கூட சக்தி இல்லாததுபோல் கால்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன.

''ஏன் அண்ணி மறைக்கிறாய்? ஆமாம், ஏன் சொல்லப் போகிறாய் நீ? சொன்னால் அவள் மூலம் அந்த வேலைக்குப் பணம்வராது''என்றவள் ரேகாவைப் பார்த்து, ''பணம் எவ்வளவு நன்றாய் வாயை மூடி விடுகிறது பார்த்தாயா? எவ்வளவு மாறிப் போய் விட்டாள் பார்! சொன்னாலும் பரவாயில்லை என்று மனதை சமாதானப்படுத்திக் கொள்கிற நிலைமைக்கு வந்துவிட்டது'' என்றாள்.

சுந்தரி முகம் சிவக்க, காய்களை மளமளவென்று நறுக்கத் தொடங்கினாள்.

''சரி போகட்டும், நீயே சொல்லிவிடு அவங்க என்ன சொன்னாங்கன்னு'' அதற்குள் சோர்ந்து போய் விரக்தியடைந்து விட்ட ரேகா பொறுமை தளர்ந்து கேட்டாள்.

''என் வாயால் அதையெல்லாம் சொல்ல முடியாது என்னால். நீ அந்தப் பாழும் உத்யோகத்தை விட்டுத் தொலை.''

ரேகா நிமிர்ந்து நின்றாள்.

காயத்ரி திடீரென்று அழுதுகொண்டே கைகளைக் கூப்பி, ''ரேகா! என்னால் இந்த அபவாதங்களையும் கேலியையும் தாங்கிக் கொள்ள முடியவில்லையே! உனக்குக் கும்பிடு போடுகிறேன். உன்னைப் பெற்ற பாவத்துக்காக என்னை இம்சிக்காதே. என் பேச்சைக் கேளு. நீ இந்த பாழாய்ப்போன வேலையை விட்டு விடு.''

"எதுக்கும்மா விடணும்? வீண் சந்தேகத்தோடு உன்னை நீ இம்சித்துக் கொண்டால் நான் என்ன பண்ணுவேன்? யாரோ என்னவோ சொன்னதற்காக நான் எதுக்கும்மா விடணும்? கேவலம் நம்ப வயிற்றுப் பிழைப்புக்காகத்தானேம்மா நான் அவர் நிழலை நாடினேன்?" ரேகா அங்கிருந்து போக முயன்றாள். காயத்ரி சிங்கமாய் அவள் மீது பாய்ந்தாள்.

"என்ன சொல்கிறாய் நீ? என் பேச்சைக் கேட்கப் போறதில்லையா?"

"கேட்கமாட்டேன்." ரேகா உறுதியாய் பதிலளித்தாள்.

"கேட்கமாட்டாயா? என்ன தைரியம் உனக்கு? எவ்வளவு திமிராய் பதில் சொல்லுகிறாய்! எப்படிக் கேட்க மாட்டாயோ பார்த்து விடுகிறேன். உன் காலை உடைத்தெறிகிறேன். தேவையானால் உன் கழுத்தை நெறித்து கொன்று போட்டுவிட்டு நானும் சாகிறேன்."

ரேகா விரக்தியோடு சொன்னாள். "நீ அந்தக் காரியத்தை இருபது வருடங்களுக்கு முன்னாடியே செய்திருந்தால், உனக்கும் எனக்கும் நிறைய கஷ்டங்களும் சிரமங்களும் குறைந்திருக்கும். இப்பொழுது நடக்காத காரியம்..."

"என்ன சொன்னாய்? நீ...நீ...நேற்று முளைத்தவள் என்னைக் கையாலாகாதக் கோழை என்கிறாயா? உனக்கென்ன தெரியும் என் வருத்தம்? கட்டிய கணவன் மோசம் பண்ணி வாழ்க்கையை குலைத்து விட்ட போது, சோற்றுக்குக்கூட கதியில்லாமல் போய் நாலு பேர் சிரிக்கும் போது சாகக்கூட சுதந்திரம் இல்லாமல் நீங்களிருவரும் எனக்குக் கால் கட்டாய் இருந்தீங்க... நீ...நீயா என்னைப் பழிக்கிறாய்?" காயத்ரி ரேகாவின்

கூந்தலைப் பற்றிக் கிட்டே இழுத்து ஆவேசத்தோடு கன்னங்களில் மாறி மாறி அறைந்தாள்.

"ஐயோ! ஐயோ! உன் கை உடைய! என்ன வந்து விட்டதும்மா இன்றைக்கு உனக்கு?" சுந்தரி கைக் காரியத்தைப் போட்டுவிட்டுச் சட்டென்று ஓடி வந்தாள். ஆனால் காயத்ரி கேட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை

ரேகாவின் கழுத்தைப் பிடித்து அழுத்திக் கொண்டே "அன்றைக்கு ஏன் கொல்லவில்லை என்றுதானே கேட்டாய்? ஆமாம், அன்றைக்குப் பண்ண முடியாமல் போய்விட்ட காரியத்தை இன்றைக்குப் பண்றேன். உன்னைக் கொன்றாலேயொழிய எனக்கு மன நிம்மதியில்லை. அப்பத்தான் எனக்கும் சாகத் துணிச்சல் வரும். பாவி! என் வயிற்றில் வந்து பிறந்தாயே! நாலுபேர் வந்து உன் முகத்தில் காரித் துப்பும் பொழுது பார்த்து அழுதுகொண்டிருக்க சக்தி இல்லை என்னிடம்."

"ஐயோ! அவளைக் கொன்று போட்டுவிடப் போகிறாயா என்ன?" சுந்தரி காயத்ரியின் மீது பாய்ந்து பலவந்தமாய் அவள் கைகளைப் பிரித்து அப்பால் தள்ளி விட்டு, ரேகாவை மார்போடு அணைத்துக்கொண்டாள்.

சுந்தரி தள்ளிய தள்ளலுக்கு சுவற்றில் போய் மோதிக் கொள்ளப் போன காயத்ரி, சுதாரித்துக்கொண்டு நின்றாள்.

அவள் கண்கள் பெண் புலியின் கண்களைப் போல மின்னிக்கொண்டிருந்தன. "என் மகள், என்னிஷ்டம். நான் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்வேன். நீ யார் கேட்பதற்கு நடுவில்? மரியாதையாய் அப்பால் போய்விடு" என்றாள்.

என்றுமில்லாதவாறு துச்சமாய் எடுத்தெறிந்து பேசிய நாத்தியை ஒரு வினாடி திகைத்துபோய் பார்த்தாள் சுந்தரி. சட்டென்று கோபத்தால் கொதித்

தெழுந்தபடி— ''ஆஹா! உன் மகளா? அப்படிச் சொல்ல உனக்கு வாய் எப்படி வந்ததும்மா? வெட்க மில்லை? எந்த முகத்தை வைத்துக்கொண்டு சொல் கிறாய் இந்த வார்த்தைகளை? உன் மகளா? என்றைக் காவது ஒரு வாய் சோறு சமைத்துப் போட்டிருக்கிறாயா நீ? ஒரு நாளாவது தலைவாரிப் பின்னியிருக்கிறாயா? உடம்பில் ஒரு சொம்பு தண்ணீர் ஊற்றிக் குளிப்பாட்டி யிருக்கிறாயா? அப்பொழுதெல்லாம் இல்லாத அதிகாரம் இப்பொழுது வந்து விட்டதா உனக்கு? நீ என்றைக்கு இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாயோ அன்றைக்கே அவள் உன் மகளாய் இல்லாமல் என் மகளாய்தான் வளர்ந்தாள். அவளை நான்தான் வளர்த்தேன். ஆளாக்கினேன். அவள் மீது ஏதாவது உரிமை இருந்தால் அது எனக்குதான் உண்டே தவிர, உனக்கு இல்லை. எனக்குப் பிடித்து நான் பண்ணு என்று சொன்னால் உத்யோகம் பண்ணுவாள். இல்லா விட்டால் விட்டுவிடுவாள். அது மட்டுமில்லை, இனி என்றைக்காவது அவளை அடித்தாயானால் ஜாக்கிரதை, மரியாதையாய் இருக்காது. ஏன்? உன் செல்லப் பிள்ளையை விடவா பண்ணக்கூடாத காரியத்தைப் பண்ணிவிட்டாள்? அவன் பண்ணிய காரியத்திற்கு உனக்கு ஏன் ஆத்திரம் வரவில்லை? இந்த ஒரு விஷயத் தில் மட்டுந்தானா மீனாட்சியின் வார்த்தைகள் உன் காதில் ஏறிற்று? அவ்வளவு தூரம் கடுஞ்சொற்களைத் தாங்க முடியாதவளாய் இருந்தால், நீ எப்பொழுதோ இந்த வீட்டை விட்டுப் போயிருக்கணும். உன் நிஜ அழுகை எனக்குத் தெரியுமே! அவள் நாலு காசு சம்பாதித்துக் கொண்டுவந்து தருகிறாள். அதை நான் விழுங்கி விடப்போகிறேன். அதானே உன் வருத்தம்?''

காயத்ரி, அண்ணியின் இந்தக் கடைசி வார்த்தை களைத் தாங்க முடியாதவளாய், வெறித்துப் பார்த்து

விட்டு, பதில் சொல்ல முடியாதவளாய் அங்கிருந்து போய்விட்டாள்.

''விவரம் தெரிந்த பெண்ணைப் பிடித்துக்கொண்டு இப்படியா அடிப்பாங்க? கையை உடைத்துப் போடணும்! அவளுக்குக் கல்யாணம் கார்த்திகைப் பண்ணாமல் போனாலும் இதென்ன சாதிப்பு? ஆம்பிள்ளை மாதிரி வீட்டு பாரத்தையெல்லாம் தலைமேல் போட்டுக்கொண்டு திரிந்துகொண்டிருக்கிறாள் பாவம்! யாரோ ஏதோ சொல்லிட்டாங்கன்னு எள்ளுங் கொள்ளும் வெடிக்க, அவள் மனசைப் பிளக்கிறாயா?'' சுந்தரி முணுமுணுத்துக் கொண்டேயிருந்தாள்.

சுந்தரிக்கு காயத்ரியின் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. சுந்தரியின் மனதின் அடிவாரத்தில் எப்பொழுதுமே ரேகாவின்பால் கொஞ்சம் அன்பு இருந்து கொண்டுதான் இருந்தது. வீட்டின் வறுமை நிலையாலும் இல்லாமையாலும் எரிச்சலடைந்து அவள் அடிக்கடி ரேகாவின் மீது பாய்வது வழக்கந்தான். ரேகா உத்யோகத்தை சம்பாதித்துக் கொண்டு விட்ட பிறகு, இனி தன் பேச்சைப் பொருட்படுத்த மாட்டாள் என்றும், பழைய ஞாபகங்களை மனதில் வைத்துக்கொண்டு ஏளனம் பண்ணுவாள் என்றும் எதிர் பார்த்த சுந்தரிக்கு, ரேகா சம்பளம் வந்ததுமே கொண்டு வந்து அவள் கையில் தந்துவிட்டு, ''மாமி! என் முதல் சம்பாத்தியம் இது! இதில் இருநூறு ரூபாய்க்கு உனக்கு ஒரு புடவைக்கும் மீதி வீட்டுச் செலவுக்கும்'' என்று சந்தோஷமாய் சிறு பெண்ணைப் போலச் சொன்னதைப் பார்த்ததுமே சுந்தரியின் மனது உருகிப் போய் விட்டது. ரேகாவின் பால் தான் செய்த அநியாயத்திற்கும், அக்கம் பக்கத்தாரோடு சேர்ந்து தான் சொன்ன குத்தல் மொழிகளுக்கும் வெட்கமடைந்தாள். அவள் மனதின் அடிவாரத்தில் தேங்கியிருந்த அன்பு பொங்கிக் கொண்டு வெளி வரத்

தொடங்கிவிட்டது. ரேகா எல்லோரையும் போன்ற சாதாரண பெண் இல்லை என்று உறுதியாய் தோன்றி விட்டது அவளுக்கு. அக்கம் பக்கத்தாரோடு சேர்ந்து வீட்டு விஷயங்களைப் பேசுவதை நிறுத்திக் கொண் டாள்.

ரேகா குளித்து முடித்து விட்டு வெளியே வந்த பொழுது, அறையில் காயத்ரி சற்று முன்னால் மகள் வைத்து விட்டுப்போன மருந்து பாட்டில்களை ஒவ்வொன்றாய் எடுத்து எதிரேயிருந்த சுவரை நோக்கி வேகமாய் வீசியெறிந்து, அவைகள் தூள் தூளாய் உடைந்து போவதைப் பார்த்துத் திருப்தியோடு ஆத்திரம் தீர பார்த்துக் கொண்டிருந்தாள். நடுநடுவே பைத்தியம் பிடித்தவளைப் போல சிரித்துக் கொண்டும் அழுது கொண்டும் ஏதோ முணுமுணுக்கத் தொடங் கினாள்.

''அம்மா'' ரேகா சட்டென்று கிட்டே வரப் போனாள். ஆனால் சுந்தரி அவள் கையைப் பிடித்து தடுத்து விட்டாள். ரேகா குழப்பத்துடன் மாமியைப் பார்த்தாள்.

''அவளுக்கு மூளை இல்லை. நீ இப்போது கிட்டே போகாதே. இன்னும் துளிர்த்துப் போய் விடுவாள்.'' என்றாள். ரேகா சிலையாய் அவ்விடத்திலேயே நின்று விட்டாள். பைத்தியம் பிடித்தவளைப் போல நடந்து கொண்ட தாயைப் பார்த்ததுமே அவள் மனம் ஏதோ போல ஆகிவிட்டது. ஒரே பாய்ச்சலாய் ஓடிப் போய் தாயைக் கட்டியணைத்துக் கொண்டு ஏதேதோ சொல்ல வேண்டும் போல இருந்தது. ஆனால் தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டாள். மாமி சொன்னது உண்மையே. தான் போனால் அவளை இன்னும் தூண்டிவிட்டது போல ஆகிவிடும்.

அரை மணி நேரங்கழித்து ரேகா இரண்டு வாய் சாப்பிட்டு விட்டு உடை மாற்றிக் கொண்டு புறப் பட்டாள்.

காயத்ரிக்கு ஃபிட் வந்துவிட்டது. இப்பொழுதெல் லாம் அவளுக்கு ஃபிட் வந்து விட்டால் குறட்டையைப் போல வரத் தொடங்கிவிடும். அந்த குறட்டைக் கிடையே முனகல் சப்தம் கேட்கும். இளைத்துத் துரும் பாகி நரைத்த தலையோடு, சுருக்கங்கள் விழுந்த முகத் தோடு பைத்தியக்காரியைப் போல தென்பட்ட தாயைப் பார்த்துவிட்டால் போதும் ரேகாவுக்கு துக்கத்தால் இதயம் கனத்து விடும்.

தாய்க்காகப் பண்ணக்கூடியதையெல்லாம் பண்ண வேண்டும் என்று தவித்தாள். உத்யோகம் கிடைத்து விட்டால், பணத்தொல்லை நீங்கி, தாயின் உடம்பு தேறிவிடும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவள் செய்த இந்த உத்தியோகத்தின்பால் தாய் காட்டிய அதிருப்தி ரேகாவுக்கு ஏமாற்றத்தைத் தந்ததோடுகூட, புதிய பிரச்னையை வேறு கொண்டு வந்து சேர்த்து விட்டாற்போலிருந்தது.

# 32

இரண்டு மூன்று வாரங்கள் கழிந்தன. காயத்ரி மகளோடு பேசுவதை முற்றிலும் விட்டு விட்டாள். ஓரிரண்டு முறை ரேகா தானே பேச முற்பட்டபொழுது "போ! நான் யார் உனக்கு? என்னோடு எதுக்குப் பேசணும் நீ? நிஜமாய் என் மகளாய் இருந்தால் அந்தப் பாழும் உத்யோகத்தை அப்பொழுதே விட்டுவிட்டிருப் பாய். ஆமாம், என் வார்த்தையை ஏன் கேட்கப்

போகிறாய் நீ? உங்க மாமிதான் சொல்லிவிட்டாளே! நிஜந்தான்! நான் உன்னை வளர்த்தேனா, ஆளாக்கினேனா? என்ன பண்ணினேன்னு என் வார்த்தைகளை நீ கேட்பாய்?'' என்றாள்.

''அம்மா'' என்றாள் ரேகா திகிலோடு.

''அம்மா! ஹூம்! உங்கம்மா என்றைக்கோ செத்துப் போய்விட்டாள்! உயிரோடிருக்கிற இவள் வெறும் உடம்புதான்! சாக முடியாத வெட்கங்கெட்ட மனுஷி'' காயத்ரி சுவர் பக்கமாய் திரும்பிப் படுத்துக்கொண்டு விட்டாள்.

தாயின் மனது எவ்வளவு வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது புரிந்தது ரேகாவுக்கு. உண்மையில் தாய்க்கு மன அமைதி ஏற்பட வேண்டுமென்றால் அவள் இந்த உத்யோகத்தை விட்டுவிட வேண்டும்.

ரேகா வேறு எதற்குமே தயாராய் இருந்தாளே தவிர, அவளுக்கு மிகவும் திருப்தியாய், கவலையில்லாமல் சந்தோஷமாய் இருந்த விஸ்வநாதனின் நிழலை மட்டும் விட்டுவிடத் தயாராய் இல்லை. செல்வாக்கும், பணமும் புகழும் இருந்த அவர் மூலமாய் என்றைக்காவது சேகரின் வாழ்க்கையைத் திருப்பி நல்வழிக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்ற நம்பிக்கை அவள் மனதில் பலமாய் வேரூன்றியிருந்தது. ஆனால் இந்த நிலைமையில் அவளால் என்ன செய்வது என்றுதான் புரியவில்லை.

தாயை புத்தி இல்லாதவளாய் நினைத்து அலட்சியமாய் ஒதுக்கித் தள்ளிவிடுவதா அல்லது நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வரும் அவள் உடல் நிலையைப் பார்த்து இந்த உத்யோகத்தை விட்டு விட்டு மன அமைதி அடையும்படிச் செய்வதா என்று புரியவில்லை அவளுக்கு. ரேகாவுக்குத் தாயின் உடல் நிலை,

விஸ்வநாதனின் நிழல் இரண்டுமே முக்கியமானதாய் தென்பட்டன.

அன்றைக்கு விஸ்வநாதன் ஒரு மருந்தை ரேகா விடம் தந்து— "பாரும்மா, இது அன்றைக்கு ஷாப்பில் கிடைக்கவில்லை. இன்றைக்குத்தான் ஸ்டாக் வந்ததாம். நரம்பு பலவீனத்திற்கு இது மிக நன்றாய் வேலைப் பண்ணுமாம், டாக்டர்கள் சொன்னார்கள். காலை யிலும், ராத்திரி படுக்கப்போவதற்கு முன்பும் இரண்டு முறை கொடு. உங்கம்மாவுக்கு எப்படி இருக்கு? உங்கம்மா மருந்துகளை வேளை தவறாமல் சாப்பிடு கிறாங்களா?" என்று கேட்டார்.

ரேகா சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். கண்களில் பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக்கொள்ள முடியவில்லை.

"ரேகா! என்னவாச்சு? இப்படித் திரும்பு" அவர் உடனே கவலையோடு கேட்டார்.

மூன்று நாட்கள் மனதிற்குள் சுமக்க முடியாத பாரத்தை சுமந்து கொண்டிருந்த ரேகா, சொல்ல முடியாமல் சொல்லிவிட்டாள். வாயடைத்துப் போன வராய் கண்கொட்டாமல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார் அவர். அவர் முகம் ரத்தமெல்லாம் வற்றிவிட்டாற் போல வெளுத்துவிட்டது. அவர் நிலைமையைப் பார்த்துவிட்டு, தப்புப் பண்ணிவிட்ட வளைப் போல மெதுவாய் சொன்னாள் அவள்— "அனாவசியமான விஷயங்களையெல்லாம் சொல்லி உங்களைத் தொந்தரவிற்குள்ளாக்கிவிட்டேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்."

விஸ்வநாதன் அதைப் பொருட்படுத்தவில்லை.

''ரேகா, இப்படி வா! கிட்டே வா'' கூப்பிட்டார். அவ்வழைப்பில் குழப்பம், அன்பு, பரபரப்பு எல்லாம் இருந்தன. ரேகா கிட்டே வந்தாள்.

அவர் ரேகாவின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டு, ''இந்த உலகத்தில் உனக்கு உயிருக்கு சமமானவங்க யார், சொல்லு?''

''வேறு யார் இருக்காங்க? எங்கம்மாவும் சேகருந் தான்.''

''அவங்க மேல் ஆணையிட்டு, நீ எனக்கு ஒரு வாக்குறுதி தரணும்.''

''சொல்லுங்கள், என்ன?''

''எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் என்னை விட்டு தொலைவிற்குப் போய்விட மாட்டேன்னு சத்தியம் போட்டுச் சொல்லு'' கையை நீட்டினார் அவர்.

ரேகா அவரை வினோதமாய் பார்த்தாள். சுழற் காற்றில் சிக்கிக் கொண்டு இழுத்துச் செல்லப்படும் மனிதன் கடைசியாய் பார்க்கும் தீனமான பார்வை! ரேகா அவர் உணர்ச்சிகளைப் படித்தறிய முயன்று கொண்டே, ''நீங்கள் இப்படி ஏன் கேட்கிறீங் கன்னு புரியவில்லை. எனக்கு இந்த உத்தியோகம் ரொம்பவும் இன்றியமையாதது. உங்கள் நிழலில் நான் எவ்வளவு நிம்மதியாய் இருக்கிறேன் என்பதை உங்களால் ஊகித்துப் பார்த்திருக்க முடியாது. ஒரு விதத்தில் பார்த்தால் நீங்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலேயொழிய உங்களை விட்டுப் போவது என்பது நடக்காத காரியம் என்றுதான் தோன்று கிறது.''

''ரேகா! ரேகா!'' அவர் சட்டென்று ரேகாவின் கையைத் தன் இரு கைகளாலும் இழுத்துக் கொண்டு அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டார். ரேகாவின்

மென்மையான உள்ளங்கையில் அவருடைய சூடான கண்ணீரின் ஈரம் பட்டது. கொஞ்ச நேரம் என்ன பேசுவது என்று தெரியாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள் ரேகா. அவர் ரேகாவின் கையை விட்டு விட்டு, ''போ! சட்டென்று ஒரு கப் ஹார்லிக்ஸ் கொண்டுவா'' என்றார். ரேகா மெதுவாய் வெளியே வந்துவிட்டாள். வழக்கம் போலவே அவர் திடீரென்று உணர்ச்சிவசப்பட்டதை உணர்ந்தாள் ரேகா. திடீரென்று அவர் ஏன் அவ்வாறு ஆகிவிடுகிறார் என்று எவ்வளவு யோசித்துப் பார்த்தும் புரியவில்லை ரேகாவுக்கு. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அவர் ஏற்கனவே பலவீனமான இதயம் கொண்ட மனிதர். எந்த சின்ன விஷயத்தைச் சொன்னாலும் உணர்ச்சி வசத்தால் அவர் முகம் சிவந்துவிடுகிறது. இப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்லி அவள் அவரைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடக்கூடாது என்றெண்ணிக் கொண்டாள் ரேகா.

மறுநாள் லலிதா ஊரிலிருந்து திரும்பி வந்து விட்டதால் வீட்டில் மறுபடியும் சந்தடி தொடங்கிவிட்டது. தான் இல்லாத இந்தக் கொஞ்ச நாட்களுக்குள் ரேகாவும் தன் தந்தையும் மிகவும் நெருங்கியவர்களாகி விட்டதையும் முன்பின் தெரியாத ரேகாவிடம் அவர் இவ்வளவு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருந்ததையும், அவர் யாருக்கும் என்றுமே தராத உரிமைகளை ரேகாவுக்குத் தந்துகொண்டிருந்ததையும், வேலைக்காரர்கள், தோட்டக்காரன், டிரைவர் எல்லோரும் தமக்கு வேண்டியதை முதலில் ரேகாவிடமே வந்து சொல்வதையும், அவர்களும் ரேகாவின்பால் ஒரு விதமான சிரத்தையை ஏற்படுத்திக் கொண்டிருந்ததையும் கண்டாள். பெற்ற மகளாய் இருந்தும்கூட விஸ்வநாதனிடமிருந்து தான் பெற முடியாத ஆதரவையும் அன்பையும், வயிற்றுப் பிழைப்பிற்காக வேலைக்கு வந்த இந்தப் பெண் பெற்று

விட்டதைக் கண்ட லலிதாவுக்குப் பொறாமை ஏற்படத் தொடங்கி விட்டது.

இதுவரை என்றுமே வீட்டுவேலைகளையும் பொறுப்புக்களையும் ஒரு சுமையாய் பாவித்துவந்த லலிதா, ரேகாவின் வரவால் அதெல்லாம் தீர்ந்து விட்டது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தவள், இப்பொழுது அந்த வீட்டில் தன் ஸ்தானம் ஏதோ குறைந்து போய் விட்டதாய், தன்னை வேண்டாத மனுஷியாய் அவர்கள் செய்து விட்டதாய் பாவித்து வருத்தப்படத் தொடங்கினாள். ஒவ்வொரு விஷயத்திலும் தந்தையின் மீதே குற்றம் சாட்டும் லலிதா, இந்த விஷயத்தில்கூட அவர் தனக்கு அநியாயம் செய்துவிட்டதாய் நினைத்து கடுகளவை மலையத்தனையாய் ஊகித்துக் கொண்டு தந்தையை இன்னும் அதிகமாய் வெறுக்கத் தொடங்கினாள். லலிதாவின் மனது இன்னொன்றைக்கூட தெரிந்துகொண்டது. இதுவரை வேலைக்காரர்கள் அவள் நல்ல அபிப்பிராயத்தைப் பெற வேண்டும் என்று தவித்துக் கொண்டிருப்பார்கள். அவள் கண்ணசைப்பில் நடந்துகொள்ள வேண்டும் என்று முயன்று கொண்டிருப்பார்கள். இப்பொழுது அவ்வாறு இல்லை.

அவளுக்குத் தான் அவசரப்பட்டு ரேகாவுக்கு உரிமைகளைத் தந்து விட்டதாகத் தோன்றிற்று. முதலிலிருந்தே அவளை ஒரு கட்டுப்பாட்டில் வைக்காமல் தனக்குச் சமமாய் எல்லை மீறி நடந்துகொள்ள இடம் தந்துவிட்டாள். தான் ஏதாவது சொன்னால் தந்தையிடம் போய்ச் சொல்லி விடுவாளோ என்ற சந்தேகத்தால் லலிதாவுக்கு ரேகாவுடன் சிநேகமாய் இருப்பது போல நடிப்பதுகூட கஷ்டமாகவே இருந்தது. எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஏதாவது சாக்குச் சொல்லி ரேகாவை இந்த வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும் என்று தோன்றத்

தொடங்கிவிட்டது இப்பொழுதெல்லாம். ரேகா அந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்த அன்றைக்கு எல்லோரைக்காட்டிலும் அதிகமாய் சந்தோஷப் பட்டவள் லலிதாதான். ஆனால் அந்தச் சந்தோஷம் இந்த விதமாய் ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்பது போல ஆகிவிட்டது.

# 33

ரேகா அன்றைக்கு விஸ்வநாதனின் வீட்டிற்குப் போவதற்காக பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றாள். சைக்கிளில் விர்ரென்று வேகமாய் வந்த ஒரு பையன் அவளுக்கு முன்னால் டக்கென்று நின்று— "உங்கள் பெயர் ரேகாதானே?" என்றான். ரேகா 'ஆம்' என்று தலையாட்டினாள். அவன் உடனே உள்ளங்கைக்குள் வைத்துக்கொண்டிருந்த ஒரு காகிதத்தை ரேகாவின் கையில் வைத்துவிட்டு— "சேகர் தரச்சொன்னான்" என்று சொல்லிவிட்டு வந்த வேகத்திலேயே மாயமாய் மறைந்து விட்டான்.

சேகர்! கசங்கிப் போயிருந்த அக்காகிதத்தை சரி பண்ணி படித்தாள்.

"ரேகா! ராத்திரி ஊருக்குப் போகிறேன். இனி இப்போதைக்கு உன் கண்ணில் படமுடியாது என்று நினைக்கிறேன். நீ இதைப் பார்த்ததுமே ஸ்டேஷனுக்கு வா. நான் அங்கே எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன், சேகர்."

ரேகாவின் இதயம் படபடத்தது. உடனே தான் நின்றுகொண்டிருந்த பஸ் ஸ்டாண்டை விட்டு எதிரே

இருந்த பஸ் ஸ்டாண்டில் நின்று ஸ்டேஷனுக்குப் போகும் பஸ் வந்ததுமே அதில் ஏறிக்கொண்டாள். ராத்திரியில் ஊருக்குப் போகிறவனுக்கு இப்பொழுதி லிருந்தே ஸ்டேஷனில் என்ன வேலை என்றுதான் புரிய வில்லை அவளுக்கு. என்னவாயிருந்தாலும் சரி, ஒரு முறை சேகரை விஸ்வநாதனைச் சந்திப்பதற்கு ஒப்புக் கொள்ளும்படி சொல்ல வேண்டும். அந்தக் காரியத்தைக் கூடிய சீக்கிரத்தில் செய்ய வேண்டும். ரேகாவுக்கு ஏனோ விஸ்வநாதன் சேகர் விஷயத்தில் தனக்கு கண்டிப்பாய் உதவி பண்ணுவார் என்று உறுதியாய் தோன்றிற்று. சேகர் அவரை சந்திக்கும்படி செய்து விட்டால் அவர் மூலமாய் அவனுக்கு நயமாய் எடுத்துச் சொல்லலாம். பெரியவரும் அனுபவசாலியுமான அவருக்கு இப்படி வழி தவறிவிட்டவர்களை வழிக்கு எப்படி கொண்டுவர வேண்டும் என்று தெரிந்திருக்கும்.

ரேகா ஸ்டேஷனுக்கருகில் பஸ்ஸை விட்டிறங் கியதுமே சேகர் தென்பட்டான். அதே கூலிங்கிளாஸ். கேசங்கள் லேசாய் கலைந்து நெற்றியில் அழகாய் வந்து புரளும்படியாய் வாரிக்கொண்டிருந்தான். வெள்ளை உடை. டை கட்டிக்கொண்டு டக் பண்ணிக்கொண் டிருந்தான். ஆள் கொஞ்சம் பருத்து நல்ல ஆரோக்கிய மாய் தென்பட்டான். சட்டென்று பார்க்கும்பொழுது பெரிய பணக்காரர் வீட்டு பையன் என்று தோன்றும் படியாய் இருந்தான்.

ரேகாவைப் பார்த்துவிட்டு முறுவலுடன் கிட்டே வந்தான். சேகரைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் அவன் ஒவ்வொரு விதமாய் இருந்தான். அவனிடம் ஏதோ மாறுபாடு தென்பட்டது.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" முறுவலுடன் கேட்டான்.

''உன்னைத்தான். ரொம்ப மாறிப் போய்விட்டாய் நீ'' என்றாள் ரேகா. இப்பொழுது இருவரையும் பார்த்தால் ரேகாதான் பெரியவள் என்று யாருமே நம்ப மாட்டார்கள்.

''நீ என்ன இப்படி இளைத்துவிட்டாய்?'' கேட்டான்.

''நான் ஒன்றும் இளைக்கவில்லை, நன்றாய்தான் இருக்கிறேன்'' இருவருமாய் சேர்ந்து ஸ்டேஷனை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

''எத்தனை மணிக்கு உன் ரயில்?'' ரேகா கேட்டாள்.

''சாயந்திரம் நாலு மணிக்கு.''

''எந்த ஊருக்குப் போகிறாய்?''

''பம்பாய்.''

''எப்பொழுது திரும்பி வருவாய்?''

''சொல்ல முடியாது.''

ரேகா நொடிந்து போய்விட்டாள்.

சேகர் போய் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கி வந்தான்.

''பன்னிரெண்டு மணிக்கு இங்கே லோகல் ரயில் ஒன்று வரும். அதில் ஒரு ஆள் வருவான். அவனை சந்தித்துவிட்டு நாம்ப எங்கேயாவது போகலாம். அது வரை இங்கே சுற்றிக் கொண்டிருக்கலாம். கொஞ்ச நேரம்'' இருவரும் உள்ளே வந்து நடக்க தொடங்கினார்கள்.

ரேகா திடீரென்று கேட்டாள்— ''சேகர்! நீ போவதற்கு முன்னால் என் ஆசை ஒன்று இருக்கு. அதைத் தீர்த்து வைப்பாயா?''

''சொல்லு, அதென்ன?''

''உன்னை ஒருவரிடம் அழைத்துக்கொண்டு போகிறேன். அவர் உன்னைப் பார்க்கணும் என்று தவித்துக் கொண்டிருக்கிறார்.''

''யார் அந்தப் பெரிய மனிதர்?''

ரேகா உற்சாகத்துடன் நடந்ததையெல்லாம் சொன்னாள். நடந்துகொண்டிருந்த சேகர் டக்கென்று நின்று ரேகாவை நோக்கித் திரும்பினான். ''என்னது? நீ யார் வீட்டிலோ வேலை பண்ணிக்கொண்டிருக்கிறாயா?''

''வேலை என்றால் உண்மையில் நான் பண்ணும் காரியம் எதுவும் இல்லை. வெறுமே மேற்பார்வைதான். எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை.''

சேகர் சந்தேகத்துடன் பார்த்தான். ''ரேகா! வேலை எதுவுமே இல்லை என்கிறாய். அவங்க உன்னை அன்பாய் பார்த்துக்கொள்கிறாங்க என்கிறாய். மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் தருகிறார்கள் என்கிறாய் இது ஒன்றும் சரியாய் இல்லை. எனக்கு என்னவோ போல் இருக்கிறது.''

''அதனால்தான் உன்னை அவரைச் சந்தித்துப் பேசு என்கிறேன். அவரை உனக்குப் பிடிக்கவில்லை என்றால் அப்படியே விட்டுவிடுகிறேன்'' பொறுமையின்றிச் சொன்னாள் ரேகா.

சேகர் ரேகாவின் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு சொன்னான்— ''ரேகா! உனக்கு ஒருத்தர் சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை. நீ ஜாக்கிரதையாய் இருப்பாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் சில சூழ்நிலைகளில் நம்மோட சாமர்த்தியம் கூட பயன்படாமல் போய்விடும்.''

''எனக்கு தெரியும், சேகர்! நான் உன்னை வேறு எதுவும் கேட்கவில்லை. நீ ஊரிலிருந்து திரும்பி

வந்ததுமே அவரை வந்து ஒரு முறை சந்திக்க வேண்டும்.''

சேகர் தடுமாற்றமடைந்தவனாய் கேட்டான். ''என்னை பற்றி அவருக்கு...'' சந்தேகத்துடன் நிறுத்திக் கொண்டான்.

ரேகா மறுத்து தலையசைத்தாள்— ''ஊஹூம், தெரியாது. நீ வேறு ஊரில் உத்யோகம் பண்ணிக் கொண்டிருப்பதாய் சொன்னேன். அவருக்கு இதெல்லாம் தெரியாது.''

நிம்மதியாய் மூச்சு விட்டான் சேகர். ''சரி, நான் திரும்பி வந்ததும் உனக்குச் சொல்கிறேன். அவரை எப்பொழுது எங்கே சந்திக்க வேண்டும் என்று நீ சொல்லு.''

''எங்கேயோ எதுக்கு? நேராய் அவர் வீட்டுக்கே போகலாம். நீ எப்பொழுது திரும்பி வருவாய்?''

''சொல்ல முடியாது.''

''அப்படீன்னால்?''

''ஒன்றுமில்லை, நான் இன்றைக்கு ஊருக்குப் போகிற காரியம் எப்பொழுது முடியுமோ அப்பொழுது! ஆதோ ரயில் வந்துவிட்டது. ரேகா நீ இங்கே நிற்க வேண்டாம். தொலைவிற்குப் போய் அதோ அந்த புக் ஸ்டாலுக்கருகில் போய் ஏதாவது புத்தகம் வாங்கிக் கொள். நான் இந்த ரயிலிருந்து இறங்கப் போகிற ஒரு ஆளை சந்திக்கணும். நீ என் பக்கமாய்கூட திரும்பிப் பார்க்க வேண்டாம். நான் அவனோடு காரியம் முடிந்த பிறகு உன்னிடம் வரேன் போ.''

சேகரின் கண்களில் திடீரென்று ஒருவித பரபரப்பு வந்தது. குரலில் அதுவரை இருந்து வந்த மென்மை மாயமாகி விட்டது.

ரேகாவின் பதிலுக்காகக் காத்திருக்காமல் தொலை விற்குப் போய், வந்து கொண்டிருந்த ரயிலைப் பார்த்த படி நின்று கொண்டான்.

ரேகா புக் ஸ்டாலுக்குப் போய் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரயில் வந்து நின்றது, உள்ளூர் ரயிலாதலால் கூட்டம் அதிகமாய் இல்லை. பத்திரிக்கை ஒன்றைக் கையிலெடுத்துப் பார்த்துக் கொண்டே எதேச்சையாய் பார்ப்பதுபோல சேகரைப் பார்க்கத் தொடங்கினாள் ரயிலிலிருந்து கட்டம் போட்ட லுங்கியோடும், மாசடைந்த தாடியோடும், கட்டை மீசை யோடும் பயங்கரமான தோற்றத்துடன் ஒருத்தன் இறங்கி னான். அவன் சேகரைப் பார்த்ததுமே வந்து பாதங்களில் விழுந்து வணங்கப் போனான். சேகர் அவன் தோளைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான். அவன் ஏதோ சொன் னான். சேகர் ஏதோ பதிலளித்தான். இருவரும் சிரித்துக் கொண்டார்கள். பிறகு இருவரும் சேர்ந்து கொண் டார்கள். பிறகு இருவரும் சேர்ந்து பேசிக் கொண்டே முன்நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். சேகர் மறந்தும்கூட திரும்பிப் பார்க்கவில்லை.

சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தான் சேகர்.

"யார் அது?" ரேகா கேட்டாள்.

"இனி போகலாமா?" என்றான் அவன்.

"யார் அது என்று கேட்கிறேன்."

"உஷ். மெதுவாய் இதென்ன கத்தல்? எனக்குத் தெரிந்தவன்." எரிந்து விழுந்தாற்போல சொன்னான் சேகர்.

ரேகா பதில் பேசவில்லை. இவ்வளவு நேரமாய் சேகரைப் பார்த்த சந்தோஷம் பறந்து போய் விட்டது. சந்தேகமும் பயமும் தோன்றின.

''எனக்குப் பசிக்கிறது. நீ சாப்பிட்டாயா?'' என்றான் சேகர்

'சாப்பிட்டேன்' என்று தலையாட்டினாள் ரேகா.

''இருவருமாய் சேர்ந்து சாப்பிடலாம். எவ்வளவு நாளாயிடுத்து ரேகா நாம்ப சேர்ந்து சாப்பிட்டு!'' சிரித்துக் கொண்டே சொன்னான். அந்தச் சிரிப்பிற்குப் பின்னால் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த வேதனையை ரேகாவால் உணர முடிந்தது.

இருவரும் வெளியே வந்தார்கள்.

சேகர் டாக்ஸியைக் கூப்பிட்டான்.

இவ்வளவு நேரமாய் அவனோடு சேர்ந்து இருந்த ரேகா ஒன்றை மட்டும் நன்றாய் கவனித்தாள். சேகர் ஆர்வத்துடன் சாதாரணமாய் எல்லோரையும்போல இருந்தாலும் அவன் கண்கள் போலீசாரை எங்கே யாவது பார்த்ததுமே ஜாக்கிரதையாய் சந்தேகத்துடன் சுறுசுறுப்பாய் பரிசோதிக்கின்றன. சுற்றுப்புறத்திலிருந்த ஜனங்களிடையேகூட எதையோ தேடிக் கொண்டிருந் தாற்போலவே இருந்தன.

அவர்கள் ஏறிய டாக்ஸி சந்து பொந்துகளில் திரும்பி ஒரு பழைய உடுப்பி ஓட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. இருவரும் உள்ளே வந்தார்கள். சரியாக வியாபாரம் நடக்காத ஓட்டலைப் போல இருந்தது அது. ஃபர்னிச்சர்கள் எல்லாம்கூட சரியாய் இல்லை. கூட்டமோ இல்லவே இல்லை. ஓட்டல் முதலாளியிலி ருந்து பையன் வரை அத்தனை பேரும் சேகரைப் பார்த்ததுமே நன்றாய் பரிச்சியம் இருந்தாற்போல வணங்கினார்கள்.

சேகர் குடும்ப அறைக்குள் ரேகாவை அழைத்துச் சென்றான். அவ்வறைக்குள் அடியெடுத்து வைத்த ரேகா வினாடி நேரம் திகைத்துப் போய்விட்டாள்.

அந்த ஒரு அறையில் மட்டும் நாற்காலிகள் எல்லாம் நீட்டாய் போடப்பட்டிருந்தன. மிக சுத்தமாய் இருந்தது.

''நான் சாதாரணமாய் வேலை எதுவும் இல்லாத போதுஅதிகமாய் இங்கேதான் கழிப்பேன்'' என்றான்.

''அந்த முதலாளிக்கு நீ யார் என்று தெரியுமா?''

சேகர் தலையாட்டினான்.

''அவனும் எங்களுள் ஒருத்தன்தான், எங்களுள் நிறைய பேர் இந்த மாதிரி ஏதாவது ஒரு தொழில் பண்ற வங்கதான்'' என்றான் சிரித்துக் கொண்டே.

ரேகாவுக்கு முள்ளின் மீது உட்கார்ந்திருந்தாற் போல இருந்தது. சர்வர் சாப்பாட்டைக் கொண்டு வந்து பரிமாறினான்.

''எனக்குப் பசிக்கலை. என்னால் சாப்பிட முடியாது'' பிடிவாதமாய் மறுத்தாள் ரேகா.

சேகர் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் திகிலோடு சொன்னாள் ரேகா—''சேகர்! எந்த ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ? இன்றைக்கு இவ்வாறு ஒருத்தருக் கொருத்தர் ஆகாமல் போய்க் கொண்டிருக்கிறோம். குறைந்தபட்சம் இதை ஞாபகத்தில் வைத்துக் கொண் டாவது இந்த ஜென்மத்தில் யாருக்கும் எந்த அநியாய மும் பண்ணாமலிருக்கலாம் நாம்ப.''

சேகர் கைகளை நீட்டித் தடுத்தாற்போல—''ரேகா! இந்த ஒரு நிமிஷமாவது உன்னோடு சந்தோஷமாய் இருக்கேனே, என்னை உன் வார்த்தைகளால் கொல் லாதே, ப்ளீஸ்'' என்றான்.

''உன்னைப் போன்ற முட்டாள் இந்த உலகத் திலேயே கிடையாது. அழுத்திச் சொல்றவங்க இல்லா

ததால் தான் நீ இப்படி ஆகிவிட்டாய். நீ இன்றைக்கு ஊருக்குப் போகாமலிருந்தால் என்னவாகிவிடும்?''

சேகர் கழுத்தை வெட்டுவது போல காட்டினான்.

ரேகா சிவந்த முகத்துடன் குழப்பத்தோடு தம்பியைப் பார்க்கத் தொடங்கினாள்.

''நிஜமாகவா?''

''நிஜந்தான். அவங்க எங்களுக்கு உத்தரவிட்ட காரியங்களை நாங்கள் பண்ண முயன்று, பண்ணாமல் போய்விட்டாலோ, அல்லது சோம்பேறித்தனத்தால் அலட்சியமாய் பண்ணாமல் போய் விட்டாலோ, அவருக்குத் தெரிந்துவிடும். அதைப் பொறுத்து இருக்கும் எங்களுக்கு தண்டனை.''

''தண்டனை என்றால்?''

''விடுன்னு சொல்லவில்லையா இந்தச் சம்பாஷணையை? அம்மாவைப் பற்றிச் சொல்லு. என்னைப் பற்றி எப்பவாவது ஞாபகம் வருகிறதா?''

''நீ சாதாரணமாய் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தால் அம்மாவின் உடம்பு நன்றாய் ஆகி விடும். அம்மாவின் உயிரெல்லாம் உன் மேலேயே தான் இருக்கு.''

''நீங்கள் அந்த வீட்டை மாற்றிவிட்டால் என்னால் எப்பொழுதாவது வீட்டிற்கு வர முடியும். நம்ப தெரு முனையில் இருக்கிற டி. எஸ். பி. எனக்கு ஒரு கண்டம். தப்பித்தவறியும் அவர் கண்ணில் பட்டு விட்டேன் என்றால் அதோகதிதான்.''

''இப்படி ஒவ்வொரு பக்கத்திலும் ஆபத்து சூழ்ந்து கொண்டிருக்கையில் எவ்வளவு நாளைக்கு தான் ஓட்ட முடியும்?''

''ஓட்ட முடிந்த வரைக்குந்தான்! சுகமாய் அமைதியாய் வாழுறவங்களுக்கு மட்டும் இந்த வாழ்க்கை நிரந்தரமானதா? அவங்களுக்கு மட்டும் மரணம் வராதுங்கிறாயா?''

''என்னால் உனக்கு பதில் சொல்ல முடியாது சேகர்! நீ ஊரிலிருந்து வந்ததுமே நான் சொன்ன அவரைச் சந்திக்கணும்.''

''சந்திக்கிறேன், எனக்காக இல்லை. உனக்காக, நீ சொல்வது போல அவ்வளவு நல்ல குணம் அவரிடம் இருக்கா இல்லையான்னு பார்ப்பதற்காகவாவது வரேன்.''

''நிஜமாகவா? பிராமிஸ்?'' கையை நீட்டிச் சந்தோஷமாய் கேட்டாள்.

''பிராமிஸ்'' சேகர் சத்தியம் போட்டான்.

''ரேகா! நீ சுகமாய் கவலையில்லாமல் எல்லா பெண்களையும் போல வாழ்க்கையை நடத்தணும். அது தான் என் ஆசை. என் வாழ்க்கைப் பாதையைப் போல உன்னோடதும் குண்டுங்குழியுமாய் இருக்கக் கூடாது. இல்லாமல் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு என் மீது உள்ளது. நீ சொன்னவரைப் பார்த்து நான் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால் நீ வேலையை விட்டுவிட வேண்டும். அந்த நிபந்தனையின் பேரில்தான் நான் வருவேன்.''

''சரி'' ரேகா ஒப்புக் கொண்டாள்.

●

ரேகா வீட்டிற்கு வந்தபொழுது வீட்டிற்கு முன்னால் விஸ்வநாதனின் கார் நின்று கொண்டிருந்தது. உள்ளே ரஞ்சிதா உட்கார்ந்திருந்தாள்.

''நீங்கள் வரவில்லைன்னு ஐயா கவலைப்படு கிறார். ஏன் வரவில்லைன்னு தெரிந்து கொண்டு வரச் சொல்லி அனுப்பினார்.'' என்றான் டிரைவர்.

''கொஞ்சம் வேலையாய் போயிருந்தேன். இதோ வந்துட்டேன், இரு'' என்று உள்ளே போனாள் ரேகா

''எங்கே போனாய் ரேகா? இவங்க வந்து ஒரு மணிக்கு மேல் ஆகிறது'' என்றாள் சுந்தரி.

''பாங்கிற்குப் போனேன் மாமி. வா ரஞ்சிதா, போகலாம்'' என்றாள் ரேகா.

''பொண்ணு தங்கமாய் இருக்கிறாள். பாவம் பேச முடியாதவளாய் அநியாயம் பண்ணிவிட்டார் சுவாமி.'' என்றாள் சுந்தரி இரக்கத்தோடு.

ரேகா வந்தபொழுது விஸ்வநாதன் வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். ''ஏம்மா தாமதம் பண்ணி விட்டாய்? என்னவாச்சு?'' என்றார்.

''கொஞ்சம் வேலை இருந்ததால் தாமதமாயிடுத்து.''

''இனி ஒருபோதும் இப்படிப் பண்ணாதே. என் னென்னவோ ஊகித்துக் கொண்டு பயந்து போய்க் கொண்டிருந்தேன். அம்மாவுக்கு எப்படி இருக்கு?''

''சௌக்கியந்தான்.''

அவர் ஆழ்ந்து பெருமூச்சு விட்டார்.

''இனி எப்பவாவது உனக்கு வேலை இருந்தால் மொதல்லேயே சொல்லிவிடு ரேகா என்னிடம்'' என்று நாற்காலியில் சரிந்தார். 'சரி' என்று தலையாட்டினாள். அதற்குள் அவர் முகம் வியர்த்திருந்தது.

மறுநாள் பிற்பகல் விஸ்வநாதன் சாப்பாடானதும் கொஞ்ச நேரம் படுத்துக் கொண்டிருந்து விட்டு அப் பொழுதுதான் எழுந்திருந்தார். ரேகா அவருக்கு

ஹார்லிக்ஸ் கலந்துகொண்டுபோய் கொடுத்தாள். மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பேப்பரைப் படித்துக்கொண்டிருந்த அவர், ரேகாவைப் பார்த்ததுமே— "ரேகா! பார்த்தாயா இதை? நேற்றிரவு பம்பாய்க்குப் போன ரயிலில் முதல் வகுப்பு கம்பார்ட்மென்டில் கணவன் மனைவியை காயப்படுத்திவிட்டு, நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்து விட்டாங்களாம். யார் பண்ணினாங்க, எப்படிப் பண்ணினாங்க என்று கண்டுபிடிக்க முடியவில்லையாம். போலீசார் துப்புத் துலக்கிக்கொண்டிருக்காங்களாம்" என்றார்.

ரேகாவுக்கு பகீரென்றது. ராத்திரி ரயிலிலா? பம்பாய்க்குப் போன ரயிலிலா? சேகர் போனது அந்த ரயில்தானே? ஆ! அப்படி இருக்குமா? அவளுக்கு அப்போழுதே சந்தேகம் வந்தது. ஆனால்... இப்படிப் பட்டச் செய்தியைக் கேட்க நேரும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. கடவுளே! எப்படி அவனை இந்தப் பாவக் குழியிலிருந்து வெளியே இழுப்பது? அவளுக்குக் கொஞ்சம் அவன் மீது சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் அந்த ரயிலில் அவனைப் போக விட்டிருக்கமாட்டாள். எந்த விதத்திலாவது தடுத்து நிறுத்தியிருப்பாள். அவனை எப்படியாவது நல்ல வழியில் திருப்ப வேண்டும். அதுவும் எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில். இல்லாவிட்டால் அவள் வாழ்க்கையும், அவள் சாமர்த்தியமும் அத்தனையும் வீண் ரேகாவுக்கு சேகரின் நலனைப் பற்றிய பயமும் திகிலும் ஏற்படத் தொடங்கின.

# 34

ரிசல்டுகள் வெளிவந்துவிட்டன. கமலன் பாசாகி விட்டான். பல நாட்களாய் அவன் பி. ஏ. படித்து

முடித்த பிறகு சாந்திநிகேதனில் இருந்துவிட்டு வர வேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருந்தான். எல்லோரிடமும் இந்த விஷயத்தைச் சொல்லியிருந்தான் கூட. ஆனால் பரீட்சையில் பாசான பிறகு விமலன் சாந்திநிகேதனில் அவனை சேர்ப்பதற்காக சீட்டிற்கு அப்ளை செய்த பொழுது அவன் அவ்வளவாய் உற்சாகம் காட்டவில்லை. இதற்கு முன்னால் இருந்து வந்த கற்பனைகள் வேறு. இப்பொழுது ரேகாவை விட்டுவிட்டு எங்கேயும் போகப் பிடிக்கவில்லை. அவன் நோக்கம், உத்தேசம் அவ்வளவும் ரேகாவின் மீதே இருந்து வந்தது. அண்ணன் தம்பிகளுக்கிடையே திரும்பவும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. விஸ்வ நாதன் மறுபடியும் தரகராய் வேலை பண்ண வேண்டிய நிலைமை வந்தது. சாந்திநிகேதனுக்கு போக மறுப்ப தற்குக் காரணம் என்ன என்று சொல்லச் சொன்னான் விமலன்.

''காரணம் என்று எதுவும் இல்லை. பிடிக்கவில்லை. அவ்வளவுதான்'' பிடிவாதமாய் பதிலளித்தான் கமலன்.

ஆனால் கமலனுக்கு ஏன் பிடிக்கவில்லை என்று எல்லோருக்குமே மறைமுகமாய் தெரியும். லலிதா கேலியாய் ரேகாவிற்கு முன்னால் நின்றுகொண்டே சொல்லிவிட்டாள். ''கமலனுக்கு எல்லா நிகேதன்களும் இங்கேயே இருக்கும்போது வேறெங்கேயாவது போவது எதற்காக?'' என்றாள். ரேகாவின் முகம் சிவந்து விட்டது. இப்பொழுதெல்லாம் லலிதாவின் வாயிலிருந்து இப்படிப்பட்ட எடுத்தெறிந்து பேசும் வார்த்தைகளை நிறைய கேட்க வேண்டியிருந்தது. ரேகா கமலனிடம் கேட்டாள்— ''எதற்காகப் போக மறுக்கிறீர்கள்?'' என்று.

''உனக்குத் தெரியாதா ரேகா, உனக்காகத்தான்.''

''எனக்காகவா?''

"ஆமாம். இதைப் பைத்தியக்காரத்தனம் என்று வேணுமானாலும் நினைத்துக்கொள். ஆனால் உண்மை இதுதான்."

"கமல்! என்னைப் பற்றி எந்த விதமான யோசனையும் வைத்துக்கொள்ள வேண்டாம். உங்கள் எதிர்கால நலனுக்கு நான் குறுக்காய் இருக்கிறேன் என்ற யோசனையை யார் மனதிலும் வரவிட்டுவிடாதீர்கள். அது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. எனக்கு இப்பொழுது சங்கோஜங்கள், பயங்கள் எதுவும் இல்லை. எனக்கு நீங்கள் செய்த உதவியை ஜென்மத்திலும் மறக்க மாட்டேன். எனக்கு எப்பொழுது எது தேவைப் பட்டாலும் உங்களுக்குக் கடிதம் போடுகிறேன்" என்றாள் சிரித்துக்கொண்டே.

கமலன் ஒப்புக்கொண்டான். "ரேகா! நாமிருவரும் கணவன் மனைவி ஆவதற்கு நான் இன்னும் எவ்வளவு நாட்கள் தபஸ் பண்ணணும்?" என்று கேட்டான்.

கமலனின் வாயிலிருந்து திருமணப் பேச்சு வெளி வந்ததுமே, ரேகாவின் முகத்திலிருந்த முறுவலும் ஒளியும் திடீரென்று மாயமாகிவிட்டன. பயங்கரமான ஞாபகம் ஏதோ இதயத்தில் படபடத்தாற்போல முகத்தில் பயம், வேதனை படிந்தன.

"ரேகா" என்றான் கலக்கத்துடன்.

"நீங்க மொதல்லே போயிட்டு வாங்க கமல்! அப்புற மாய் பார்த்துக்கொள்ளலாம் அதையெல்லாம்" என்றாள்.

கமலன் திருப்தியடைந்தான். ரேகா தன்பால் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்வதற்கு இன்னும் டயம் வேண்டும் என்று கேட்டுகொண்டாற் போலவே எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் காத்திருக்க அவன் தயாராகவே இருந்தான். ரேகாவை அவன் என்றுமே பலவந்தப்படுத்த மாட்டான். இந்த

விஷயத்தில் திருமணத்திற்கு முன்பே ரேகாவுக்கு நம்பிக்கையை ஊட்டவேண்டும்.

கமலன் திடீரென்று சாந்திநிகேதனுக்குப் போவதற்கு ஒப்புக்கொண்டதைப் பார்த்து எல்லோருக்கும் ஆச்சரியம் ஏற்பட்டது.

போகும் முன்னால் கமலன் ரேகாவிடமிருந்து வாக்குறுதி வாங்கிக்கொண்டான்— ஒரு நாள் விட்டு ஒரு நாள் அவள் தனக்குக் கண்டிப்பாய் கடிதம் எழுத வேண்டும் என்று.

''உனக்கு என்ன தொந்தரவு ஏற்பட்டாலும் எழுதுவாயோனோ?''

''எழுதுவேன்.''

''உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் முதலில் எனக்குத் தெரியாமல் விஸ்வநாதனிடம் வேலையை விடக்கூடாது. விடமாட்டாயோனோ?''

''விடமாட்டேன்'' சிரித்துக்கொண்டே சொன்னாள் ரேகா.

கமலன் விஸ்வநாதனிடமும் ஒருக்கால் அவருக்கு ரேகா தேவையில்லை என்று தோன்றினால் அவளை உடனே வேலையிலிருந்து அனுப்பிவிட வேண்டாம் என்றும், தனக்குக் கடிதம் எழுதச் சொல்லியும் கேட்டுக் கொண்டான். ''அந்தப் பெண்ணின் நிலைமை ரொம்பவும் சிக்கலாய் இருக்கு, திடீரென்று பண உதவி நின்று போய்விட்டால் ரொம்பவும் கஷ்டப்படுவாள்'' என்றான்.

''உனக்கு அந்த பயம் தேவையில்லை. அவள் போவதாய் சொன்னாலும் போகவிட மாட்டேன். போதுமா?'' விஸ்வநாதன் வாக்களிப்பது போல

கம்பீரமாய் சொன்னார். கமலனுக்கு அவர் வார்த்தைகள் திருப்தியை அளித்தன.

# 35

கமலன் ஊருக்குப் புறப்படுவது அன்றைக்குதான். பல நாட்களாய் அவன் மாமா ஒரு முறை தன் ஊருக்கு வந்து இரண்டு நாட்கள் இருந்துவிட்டு போகச் சொல்லி கடிதம் போட்டுக்கொண்டேயிருக்கிறார். விமலன் கமலனைப் போகச் சொல்லி பலமுறை பலவந்தப் படுத்தியும்கூட அவன் தட்டிக் கழித்துக்கொண்டே வந்தானே தவிர போகவேயில்லை. அதனால் இப்பொழுது கமலன் ஐதராபாத்திற்குப் போய் இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டு, அங்கிருந்து நேராய் சாந்திநிகேதனுக்குப் போவது போல ஏற்பாடு செய்திருந் தான் விமலன்.

கமலனை வழியனுப்புவதற்காக விமலன் விஸ்வ நாதனின் காரில் தானும் விமான நிலையத்திற்குப் போனான்.

பிளேன் புறப்படப்போவதாகவும் பயணிகளை வந்து உட்காரச் சொல்லியும் மைக்கில் அறிவிப்பு கேட்டது.

கமலன் சட்டென்று சொன்னான்— ''விமல், நான் போகும் முன்னால் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லணும்.''

''முக்கியமான விஷயமா? அடடா! நீ சீரியஸாய் பேசத் தொடங்கிவிட்டாயானால் என் தலையில் ஏதோ கல்லைப் போடப்போகிறாய் என்றுதான் அர்த்தம். என்ன விஷயம்?''

கமலன் சட்டென்று விஷயத்தைச் சொல்லாமல் அண்ணனின் முகத்தையே கூர்ந்து பார்க்கத் தொடங்கினான்.

''சொல்லு, சொல்லு, நேரமாகிக் கொண்டிருக்கிறது. பாதி சொல்லி விட்டு நீ விமானத்தில் ஏறிவிட்டாயானால், சஸ்பென்ஸ் தாங்க முடியாமல் நானும் ஐதராபாத்துக்கு ஓடி வந்து விடவேண்டியதுதான்'' என்றான் விமலன் சிரித்துக் கொண்டே.

கமலன் தைரியத்தைக் கூட்டிக் கொண்டே ''விமல்'' என்றான்.

''சொல்லு. என்ன விஷயமாயிருந்தாலும் உன்னை ஒன்றும் சொல்லமாட்டேன்னு வாக்குறுதி தரேன், போதுமா?''

''அது ரேகாவைப் பற்றியது.''

''ரேகாவைப் பற்றியதா?''

அந்தப் பெயரைக் கேட்டதுமே விமலனின் முகத்திலிருந்த சிரிப்பு பறந்து விட்டது.

''ஆமாம், ரேகாவைப் பற்றியதுதான். பல நாட்களாய் இதை உன்னிடம் சொல்லணும் என்று தவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கிடைத்தபோது தைரியம் போதவில்லை. அப்புறமாய் சொல்லிக்கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். விமல்! நீ என்னை மன்னிக்கணும். நான் ரொம்ப மோசம் பண்ணிட்டேன். ரேகாவிடம் நான் எழுதிய காதல் கடிதங்கள் என்று எதுவுமே இல்லை. புண்டரீகனின் சம்பந்தத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வேறு வழி எதுவும் தோன்றாததால் நான் அப்படிப் பண்ணி விட்டேன். ரேகா அவருக்கு எழுதிய இரண்டு கடிதங்களும் நான் எழுதி

யவைகள்தான். எனக்கு அந்தக் கல்யாணம் பிடிக்க வில்லை என்று சொன்னதால், என் பலவந்தத்தின் பேரில் ரேகா வேறு வழியில்லாமல் எழுதினாள். எனக்கு பிடிக்காத கல்யாணத்திலிருந்து நான் தப்பித்துக் கொள் வதற்காக – எனக்காகவே அப்படிப் பண்ணினாள். இதைத் தவிர வேறு உத்தேசம் ரேகாவுக்கு இல்லவே யில்லை.''

விமலன் இடிவிழுந்தாற்போல பார்க்கத் தொடங் கினான்.

''விமல்! இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நீ என்னை மன்னித்து விட்டாயானால் இனி ஒரு நாளும் எந்த விஷயத்திலும் உன்னிடம் பொய் பேசமாட்டேன் என்று அம்மாவின் மீது ஆணையிட்டு சொல்கிறேன். இன்னொரு விஷயம்கூட. நான் தொலைவிற்குப் போய் விடுகிறேன். ரேகா உன் கண்ணெதிரேயே இருப்பாள். நீ அந்தப் பெண்ணை பரிசோதனை பண்ணுவதற்கு இன்னும் ஒரு வருஷம் கெடு இருக்கிறது. அதற்குள் உனக்கு ரேகாவின் குணங்கள் எல்லாம் திருப்தியாய் இருப்பதாய் தோன்றினால், உன் ஆசிகளுடனேயே நாங்களிருவரும் கணவன் மனைவி ஆகிறோம்.''

''கமல்!'' விமலனின் வாயிலிருந்து வந்த அந்த வார்த்தைகள் வெளியே வரவில்லை.

திடீரென்று முதுகில் ஓங்கி அறைந்து விட்டாற்போல் உணர்ந்தான்.

கமலன் விலனின் முகத்தில் தோன்றிய மாறுபாடு களைக் கவனிக்காதவனாய் சொன்னான்—

''ரேகாவுக்குப் பணத்தின் மேல் ஆர்வம் இருந்திருந் தால் என்றைக்கோ கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்

போம் நாங்கள். விமல்! ரேகா பணத்திற்கு முக்கியத் துவம் தரக்கூடியவள் இல்லை.''

விமலனுக்கு இதொன்றும் காதில் விழுவில்லை. விழுந்தாலும் மூளையில் ஏறும் நிலையில் இல்லை.

தம்பியை உலுக்கி எடுப்பது போல கேட்டான்.

''என்ன சொன்னாய் நீ? நீ எழுதிய கடிதம் எதுவுமே அந்தப் பெண்ணிடம் இல்லையா?''

''இல்லை, ரேகாவுக்கு நான் என்றுமே கடிதம் எழுதியதில்லை. எங்களுக்குள் அந்தப் பழக்கமே இல்லை.''

விமலனுக்கு தம்பியின் கன்னத்தில் ஓங்கி ஒன்று கொடுக்க வேண்டும் போல ஆவேசம் வந்தது.

மைக்கில் கடைசி முறையாய் பயணிகளைக் கூப்பிட்டு அறிவிப்பு தந்தது காதில் விழுந்தது.

''வரேன் விமல்.''

கமலன் அங்கே அதிக நேரம் நிற்கப் பிடிக்காதவ னாய் மளமளவென்று போய் விட்டான்.

விமலன் சிலையாய் நின்று விட்டான்.

கமலன் எழுதிய காதல் கடிதங்கள் எதுவுமே ரேகாவிடம் இல்லை. எல்லாம் நாடகம்! வெறும் பூடகம்! புண்டரீகனின் சம்பந்தத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகச் செய்த உபாயம். விமல னுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது. பிளேன் புறப்பட்டது. விமானம் சிறகுகளை விரித்துக் கொண்டு மளமளவென்று புறப்பட்டு வானத்தில் ஏறி, விமலன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே புள்ளியாய் கண் மறைவாகிவிட்டது. கமலன் போய் விட்டான்.

பயங்கரமான ஊழித்தீயைப் போன்ற உண்மையை கக்கிவிட்டுப் போய்விட்டான் அவன்.

ரேகாவும் கமலனுமாய் சேர்ந்து அவனை முட்டாளடித்து விட்டார்கள் என்ற உண்மையை அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. ரேகாகூட அப்படிப்பட்டவை எதுவும் இல்லை என்று தன்னிடம் ஏன் சொல்லவில்லை? நிஜம் போலவே நடந்துகொண்டாளே, ஏன்? கடைசியில்... கடைசியில் அவ்வளவு அவமானம் நேர்ந்த பிறகுகூட எப்படி சகித்துக் கொண்டிருந்தாள்? அந்தப் பொறுமை எல்லாம் கமலனுக்காகவா?

கமலன் மீது ரேகாவுக்கு உண்மையாகவே அன்பு இருக்கிறதா? ஒருத்தரைக் கண்டால் இன்னொருத்தருக்கு எவ்வளவு அன்பு! இருவரும் ஒருவருக்காக இன்னொருவர் எதையும் செய்யத் துணிகிறார்கள்.

விமலனுக்கு திடீரென்று தாங்க முடியாத சோர்வு வந்து சேர்ந்து கொண்டது.

இந்த உலகத்தில் அவனுக்காக அப்படி யோசிக்கும் நபர் ஒருவராவது இருக்கிறார்களா? இல்லை. அவன் எப்படிப் போனாலும் யாருக்கும் அக்கறையில்லை. எவ்வளவு துரதிர்ஷ்டம்! எவ்வளவு தனிமை! விமலனுக்கு ரேகா–கமலனின் அன்பைப் பார்த்து பொறாமை ஏற்பட்டதுகூட.

அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை.

என்ன காரியம் பண்ணி விட்டான் அவன்!

சிறு வயதிலிருந்தே எங்கே கொஞ்சம் அக்கிரமும் அநியாயமும் நிகழ்ந்தாலும் சரி, உடனே அவன் ரத்தம் கொதிக்கத் தொடங்கிவிடும். சத்தியத்தையே உயிருக்கும் மேலாய் நம்பி, நடைமுறையில் அதைப் பின்பற்றிக்கொண்டிருந்த அவன் என்ன பண்ணி

விட்டான்? அநியாயமாய் தவறாய் புரிந்து கொண்டு ஒருத்தியை இம்சைப் பண்ணிவிட்டான்! அவமானப் படுத்தி விட்டான்!

ரேகா எல்லாப் பெண்களையும் போல அப்பாவி யாக இல்லாமலிருக்கலாம். ஆனாலும் சரி, அவளை அவமானப்படுத்தும் உரிமை அவனுக்கு இல்லை. அவனால் மிகப் பெரிய பிழை நேர்ந்து விட்டது, விமல னுக்கு அந்தச் சமயத்தில் ரேகாவுக்கு முன்னால் போய் நின்று, கைகளைக் கூப்பி, மனப்பூர்வமாய் தன் அபரா தத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருந்தது.

மறுநாள் காலையில் எழுந்ததுமே விஸ்வநாதனின் வீட்டிற்குப் போக வேண்டும் என்றெண்ணிக் கொண் டான். ஆனால் மறுநாள் காலை வந்ததும் அவனால் போகமுடியவில்லை. மாலையில் போய்க் கொள்ளலாம் என்று ஒத்திப் போட்டுக் கொண்டான். மாலை யிலும் போக முடியவில்லை. ஐந்தாறு நாட்கள் கழிந்து போய்விட்டன. விமலன் போகவேயில்லை.

அன்று மாலையில் விஸ்வநாதன் போன் செய்தார். அவர் குரல் பழிப்பது போல இருந்தது "விமல்! இதென்ன! ஒரேயடியாய் கண்ணில் படாமலேயே போய் விட்டாய்?''

''லாயர் யஷ்வந்தன் ஊருக்குப் போய் விட்டார். அவர் ஃபைலைக்கூட நானே பார்க்க வேண்டியிருக் கிறது. ஒரு நிமிஷம் ஓய்வு கிடைக்கவில்லை.'' என்றான் மன்னிப்பு கேட்டுக் கொள்வதுபோல.

''நானும் அப்படித்தான் இருக்கும் என்று நினைத் தேன். ஆனாலும் இப்படி ஓய்வில்லாமல் வேலை செய் தால் எப்படி? மாலையில் சாப்பிட வீட்டிற்கு வா.''

''சரி.''

ஆனால் மாலையில் விமலன் போகவில்லை. அவனுக்கு ஏதோ போலிருந்தது. தனக்கு ஏதோ அவசர வேலை இருப்பதால் வர முடியவில்லை என்றும் ஒன்றும் நினைத்துக்கொள்ள வேண்டாம் என்றும் துண்டுக் காகிதம் ஒன்றில் எழுதி அனுப்பிவிட்டான். எந்த உணர்ச்சியும் இல்லாமல் ரேகாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமானால் அவனுக்கு இன்னும் கொஞ்சம் டயம் வேண்டும் என்று தோன்றிற்று.

●

அன்றைக்கு வேலையெல்லாம் முடிவடைந்ததுமே ரேகா வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் கடைவீதியிலிருந்து திரும்பி வந்த லலிதா கைப்பையி லிருந்து வெள்ளை சில்க் துணி ஒன்றை வெளியே எடுத்து ரேகாவிடம் தந்துவிட்டு, ''உனக்கு எம்பிராய்டரி வருமா?'' என்றாள்.

ரேகா 'வரும்' என்று தலையாட்டினாள்.

''இந்தா, இதை எனக்குத் தைத்துக் கொடு. ரொம்ப அர்ஜென்ட். ஜாக்கிரதையாய் எம்பிராய்டரி போடணும், ஒரு ஃபிரெண்டிற்கு பிரசென்ட் பண்ணணும்'' என்றாள்.

''யார் அந்த ஃபிரெண்ட்? நான் தெரிந்துகொள்ள லாமா?'' ரேகா முறுவலுடன் கேட்டாள்.

''ஒவ்வொன்றிற்கும் காரணம் கேட்பதை விட்டு விட்டு சொன்னதை வாயை மூடிக்கொண்டு பண்ணக் கற்றுக்கொள். நான் எவ்வளவு சுதந்திரம் தந்தாலும் உன் எல்லைக்குள் நீ இருப்பதுதான் நம்மிருவருக்குமே நல்லது. இந்த விஷயத்தை நான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும்படி வைத்துக்காதே'' என்று கடுமை யாய் சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

சிலையாய் நின்று விட்டாள் ரேகா. லலிதா ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாள்? திடீரென்று இந்த மாறுபாடு ஏன் வந்தது? எவ்வளவு யோசித்துப் பார்த்தும் ரேகாவுக்குப் புரியவில்லை. அவள் மனம் வருந்திற்று. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது அவளுக்கு. லலிதா வோடு அபிப்பிராய பேதம் வைத்துக் கொண்டால் அந்த வீட்டில் அவளால் அதற்கு பிறகு ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. ரேகா கூடுமான வரையிலும் லலிதாவின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் சிநேகமாய், அன்பாய் இருக்கவே தீர்மானித்துக் கொண்டாள்.

கைக்குட்டையின் நடுவில் இரண்டு சிவப்பு ரோஜாக்கள் இருந்தன. அவற்றின் கீழே சங்கிலித் தையலில் "வித் லவ்" என்று இருந்தது. ரேகா கூடிய வரையிலும் அழகாய் தைத்து லலிதாவின் பாராட்டைப் பெற வேண்டும் என்ற உத்தேசத்தில் அதைப் போட்டுக் கொண்டிருந்தாள்.

மறுநாள் மாலையில் ரஞ்சிதா லலிதாவின் அறையில் விளையாடிக் கொண்டிருந்தாள். ரேகாவும் அவ்விடத் திலேயே உட்கார்ந்து கைக்குட்டைக்கும் பூவேலை பண்ணிக் கொண்டிருந்தாள். லலிதா கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு அப்பொழுதான் தபாலில் வந்த மிஸ் ஜோஷியின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். சமையல்காரன் வந்து விஸ்வநாதனுடன் பேசுவதற்கு யாரோ நாலைந்து பேர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு என்ன டிபன் பண்ணுவது என்று வந்து சொல்லச் சொன்னான்.

ரேகா தைத்துக்கொண்டிருந்த எம்பிராய்டரியை மேஜை மேல் வைத்து விட்டு எழுந்து உள்ளே போனாள். ரஞ்சிதாவும் தன் பொம்மைகளை எடுத்துக் கொண்டு ரேகாவிற்குப் பின்னால் ஓடினாள்.

விஸ்வநாதனுடன் பேச வந்தவர்கள் கம்பெனி விவகாரங்களில் சம்பந்தப்பட்டவர்கள். விமலனும் கூட அவர்களோடு இருந்தான். முன் ஹாலில் பேசிக் கொண்டிருக்கையில் விமலன் நடுவில் எழுந்து வீட்டிற்குள் வந்தான். என்றுமில்லாதவாறு இன்றைக்கு அவன் உள்ளே வந்து கொண்டிருந்தது அவனுக்கே சங்கோஜமாய் இருந்தது.

ரேகாவைப் பார்ப்பதற்கு அவன் மனது ஒரு சமயம் பரபரத்துக் கொண்டிருந்தது. இன்னொரு சமயம் மறும்புத் தெரிவித்துக் கொண்டிருந்தது. இந்த விதமான இருவேறு உணர்ச்சி இதற்கு முன்னால் என்றுமே ஏற்பட்டதில்லை.

''ரஞ்சிதா எங்கே?'' என்றான் உள்ளே வந்ததுமே. கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த லலிதா விமலனைப் பார்த்ததுமே எழுந்து உட்கார்ந்தாள். ரஞ்சிதாவிற்காக சுற்றுமுற்றும் பார்த்த விமலனின் கண்கள் மேஜை மேல் இருந்த எம்பிராய்டரியின் மீது நிலைத்தது. கிட்டே போய் அதைக் கையிலெடுத்துப் பார்த்தான். ''நிறம் மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. யாருடைய செலக்ஷன் இது?'' என்றான்.

''ரேகாவுடையது. யாரோ பிரெண்டிற்கு பிரசென்ட் பண்ணணுமாம். பாவம், கொஞ்சம் டயம் கிடைத்தாலும் போதும். இதை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறாள்'' என்றாள்.

விமலனின் கண்கள் ''வித் லவ்'' என்ற இடத்தில் நின்றுவிட்டன. அவன் புருவங்கள் முடிச்சேறின. அவனைக் கூர்ந்து பார்த்த லலிதா குறும்பாய் கேட்டாள்.

''ஏன்? உனக்கும் வேணுமா இதே போல? நான் தைத்துத் தரேன்.''

"தாங்ஸ். வேண்டாம்" சீரியஸாய் சொன்ன விமலன் அதை மேஜை மேல் போட்டுவிட்டு அறையை விட்டு போய்விட்டான்.

"ஒரு விஷயம்! மிஸ் ஜோஷி கடிதம் எழுதியிருக்கிறாள். இங்கே வந்து நாலு நாள் இருக்கப் போகிறாளாம். வரச்சொல்லி எழுதட்டுமா?" இரைந்து கேட்டாள் லலிதா.

போக முயன்ற அவன் நின்று, திரும்பி வந்தான். "அதை என்னிடம் ஏன் கேட்கிறாய்?" என்றான் கோபமாய் பார்த்து.

"உன்னைக் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பேன்? அவள் வருவது உனக்காகவேதான். இந்த கடிதத்தைப் பார். எழுதியது பெயருக்கு எனக்கே தவிர, அதில் இருப்பதெல்லாம் உன்னைப் பற்றியேதான்" லலிதா உல்லாசமாய் கையை நீட்டிக் கடிதத்தை அவனிடம் தந்தாள்.

ஒரு வினாடி கடிதத்தையும் லலிதாவையும் மாறி மாறிப் பார்த்த விமலன் பதில் சொல்லத் தேவையில்லை என்பது போல விருட்டென்று திரும்பிப் போய்விட்டான்.

# 36

லாயர் யஷ்வந்தன் அன்று ஊரிலிருந்து திரும்பி வந்துவிட்டார். தான் ஊரில் இல்லாதபொழுது தன் கேசுகளையெல்லாம் கூட கவனித்துக்கொண்ட விமலனுக்கு அவர் நன்றியைத் தெரிவிப்பதற்காக வந்தார். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு புறப்படப் போன அவர் சட்டென்று ஞாபகத்திற்கு வந்தவராய் திரும்பவும்

உட்கார்ந்துகொண்டு கையிலிருந்த தோல் பையைத் திறந்துகொண்டே— "விமல்! சொல்ல மறந்து விட்டேனே, அன்றைக்கு காரில் இந்தக் கைப்பை இருந்ததாய் டிரைவர் கொண்டுவந்து கொடுத்தான் என்னிடம். அன்றைக்கே இதை உன்னிடம் கொடுக் கலாம் என்று முயன்றேன். உன்னைப் பிறகு பார்க்க முடியவில்லை. அதற்கு மறுநாளே நான் ஊருக்குப் போய் விட்டதால் இது என்னிடமே தங்கிவிட்டது" என்று கருப்பு நிறத்தில் மடித்த புத்தகத்தைப் போல இருந்த ஒரு கைப்பையை எடுத்து விமலனுக்கு முன்னால் வைத்தார்.

அந்தப் பையைப் பார்த்ததுமே விமலுக்குச் சுருக் கென்றது. அவன் முகம் சுருங்கிவிட்டது. அந்தப் பை சம்பந்தப்பட்ட ஞாபகம் மூளையில் தோன்றத் தொடங்கியதால்தானோ என்னவோ யஷ்வந்தனின் முகம்கூட தீவிரமாய் மாறிவிட்டது. விமலனின் இதயத்தை ஏதோ பாரம் அழுத்தியபோதிலும் மேலுக்கு மட்டும் அலட்சியமாய் எந்த உணர்ச்சியும் இல்லாத வனைப் போல இருந்துகொண்டான்.

"நான் வரேன் விமல்" அவர் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்.

லாயர் போன பிறகு, கட்டில் மீது கிடந்த அந்த கருப்பு பர்ஸை கூர்ந்து பார்த்தான் அவன்.

அன்றைக்கு ரேகா இதைக் காரில் மறந்துபோய் விட்டுவிட்டாள் போலும்! இதை ரேகாவிடம் திருப்பித் தருவது எப்படி? அவனாகவே தந்துவிடுவதா? அல்லது யார் மூலமாவது அனுப்பிவிடலாமா? என்னதான் மறக்க முயன்றாலும் அன்றைய சம்பவங்கள் எல்லாம் திரும்பத் திரும்ப அவன் கண் முன்னால் வந்து நிற்க தொடங்கிற்று. தன் ராட்சசத் தனத்திற்குத் தனக்கே வெட்கம் ஏற்பட்டது.

விமலன் பையைப் பார்த்தான். மிகச் சாதாரண கைப் பை!

ரேகா திரும்பவும் இப்பையைத் தேடவேயில்லையா? தேடிப்பார்க்கக்கூடிய அளவிற்கு இதில் அவ்வளவு முக்கியமானவை எதுவும் இல்லையோ என்னவோ? விமலன் ஜிப்பை இழுத்துப் பையைத் திறந்து பார்த்தான்.

உள்ளே பத்து ரூபாய் நோட்டுகள் இரண்டும், ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றும், இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றும், சில சில்லறைகளும் இருந்தன. ஒரு கவரும் இருந்தது. விமலன் கவரைத் திறந்து பார்த்தான். ரேகா கமலனுக்கு எழுதியிருந்த கடிதம் அது.

பாதி ஆர்வத்துடனும். பாதி தயக்கத்துடனும் படிக்கத் தொடங்கிய விமலன் நாலைந்து வரிகள் படித்ததுமே சகலத்தையும் மறந்துபோய் அதில் ஆழ்ந்து போய்விட்டான். ரேகா கமலனுக்கு எழுதி இருந்த கடிதத்தில் இவ்வாறு இருந்தது:

''கமல்!

நீங்கள் என்னை நன்றாய் புரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் கடைசி சமயத்தில் இக்கடிதத்தை எழுதத் துணிந்தேன். இந்தக் கல்யாணத் திற்கு ஒப்புக் கொள்வதில் நான் மிகவும் அவசரப்பட்டு விட்டேன்.

அன்றைக்கு உங்கள் வீட்டில் விமலன் என்னை அவமானப்படுத்தியபொழுது அந்தக் கோபத்தில் ஒரு நிமிஷம் எனக்கு யோசிக்கும் திறன் போய்விட்டது. என்னை நான் மறந்துவிட்டேன்.

கமல்! நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அது கேவலம். உங்களுக்காகவே பண்ணிய

தாய் இருக்க வேண்டும். உங்களை விரும்பி நான் கணவராய் ஏற்றுக்கொண்டதாய் இருக்க வேண்டும். அதானே தவிர, யாரையோ பழிவாங்குவதற்காக உங்களுக்கு மனைவியாக முடியாது என்னால். அப்படி செய்தால் அது நம்மிருவருக்குமிடையே உள்ள சிநேகத்திற்கு களங்கம் கற்பித்ததாய்தான் ஆகும். வீட்டிற்கு வந்து நன்றாய் யோசித்துப் பார்த்தேன். நான் எவ்வளவு யோசித்த போதிலும் உங்களுக்கு நல்ல சிநேகிதியாய் தான் என்னால் ஊகித்துப் பார்க்க முடிகிறதேயன்றி மனைவியாய் ஒருநாளும் கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியவில்லை.

கமல், அது மட்டுமில்லை, இத்திருமணத்தை மறுப்பதில் உங்கள் நலன் மட்டுமேயில்லை, என் சுயநலமும் அடங்கியிருக்கிறது. ஏன் தெரியுமா? இன்றைக்கு என் மனதிலுள்ள ஆசைகளை மனம் திறந்து சொல்கிறேன், கேளுங்கள்.

---

திருமணம் என்பது என் வாழ்க்கைக்கு ஒரு அழகான, அற்புதமான கனவு. அக்கனவு என்றுமே நினைவு ஆகாது என்றும், அது ஒரு கானல் நீர் என்றும் எனக்குத் தெரியும்.

எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்தே என்னைச் சுற்றிலுமுள்ள குடும்பங்களை கவனித்துக்கொண்டே தான் வருகிறேன். இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் பேர் திருமணம் என்றால் வழி வழியாய் வந்து கொண்டிருக்கும் ஒரு பழக்கம் என்றுதான் உணருவார்களே தவிர, வேறு அர்த்தமே தெரியாது. இவர்களுக்குள் சந்தோஷமே இருக்காது. ஜீவனும் இருக்காது. கண்ணைக் கட்டிக்கொண்டு கோவேறு கழுதையைப் போல வாழ்க்கையைச் சுமந்துகொண்டிருப்பார்கள். வாழ்க்கையை தமக்காக இல்லாமல் வேறு எவருக்காகவோ வேறுவழியில்லாமல் சுமந்துகொண்டிருக்கும்

ஒரு பாரமாய் கருதுவார்கள். இவர்கள் கண்ணோட்டத்தில் விவாகம் என்பது பெண்ணிற்கு ஒரு புகலிடம்! ஆணிற்கு ஒரு தேவை! அவ்வளவுதான். மனைவிக்கு கணவன் என்பவன் சம்பாதித்துப் போடும் ஒரு இயந்திரம்! கணவனுக்கு மனைவி என்பவள் வீட்டைப் பாதுகாத்துக்கொண்டு தனக்காக அல்லும் பகலும் காத்திருப்பவள்! அவ்வளவுதான். இவர்கள் வாழ்க்கை ஒன்று சேர்ந்து நூறாண்டுகள் கழிந்து போய்விடும். ஆனால் ஒருவரைப் பற்றி இன்னொருவருக்கு அவர்களின் சுபாவங்கள், விருப்பு வெறுப்புகள், எண்ணங்கள் எதுவுமே தெரியாது. இவர்களைப் பார்க்கும் பொழுது எனக்கு எப்படியோ இருக்கும்.

எனக்கு திருமணம் ஆகாமல் போனாலும் பரவாயில்லை, ஆனால் இப்படிப்பட்ட திருமணம் வேண்டவே வேண்டாம் என்று தோன்றுகிறது.

எனக்கு விவாகம் என்றால் ஒரு அழகான கனவு. அதுவே ஒரு உலகம். என் கணவராய் வரவேண்டிய நபரிடம் நான் என்ன தகுதிகளை எதிர்பார்க்கிறேன் தெரியுமா?

அவர் ஏழையாய் இருந்தாலும் பரவாயில்லை. கெட்டிக்காரராய் இருக்க வேண்டும். என்னை உயிரினும் மேலாய் கருத வேண்டும். அவர் சந்தோஷம், துக்கம், அமைதி அவ்வளவும் என்னுள் நிறைந்திருப்பதாய் உணரவேண்டும். இவ்வுலகத்தில் எந்தச் செல்வத்தாலும் தரமுடியாத சுகத்தை அவரிடமிருந்து நான் பெறவேண்டும். எங்களிருவருக்குமிடையே அன்பிற்குதான் முதலிடம் இருக்கவேண்டும்— கணவன்பால் எனக்குள்ள பொறுப்புக்களை நான் அறிவேன். அதே போல மனைவியின்பால் தன் பொறுப்புக்களை அறிந்தவராய் அவர் இருக்க வேண்டும். இதுதான் என் கனவு.

என்றுமே நினைவாக முடியாத இந்தக் கானல் நீரைப் பார்த்து பிரம்மை அடைவது எனக்கு ஒரு சந்தோஷம்.

நான் விரும்பும் நபர் எனக்கு எப்படியும் கிடைக்க மாட்டார். நான் வாழ்நாளெல்லாம் கன்னியாகவே இருந்துவிடப்போவதுதான் நிஜம். நான் முன்பே சொல்லிவிட்டேன், ஏதோ ஒரு கல்யாணம் என்ற எண்ணத்தில் நான் செய்துகொள்ளமாட்டேன் என்று! அதனால் கமல்! எனக்கு மிக விருப்பமான இக்கனவை உங்கள் விமலனுக்காக பழிவாங்கும் நோக்கத்துடன் நாசம் பண்ணிக்கொள்ள மாட்டேன். அதனால் என்னை மன்னித்து விடுங்கள். என்னைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன் —

ரேகா.''

ரேகா கமலனுக்கு எழுதிய இக்கடிதத்தை விமலன் ஒன்றிற்குப் பத்து முறை படித்தான். ஆனாலும், அவனுக்குத் திருப்தியாக இல்லை. இன்னும் படித்துக் கொண்டேயிருந்தான்.

கமலனை மணம் செய்துகொள்வதற்கு ரேகா சுமுகமாய் இல்லை. இது உண்மை. ஆனால் அவன் கண்கள் அந்த விஷயத்தைக்காட்டிலும் ரேகா எழுதிய அழகானக் கனவின் மீதுதான் நிலைத்து நின்றன. அவன் இதயம் வேகமாய் படபடத்தது. முகம் சிவந்தது. இதெப்படி சாத்தியம்? விவாகத்தைப் பற்றி ரேகா கனவு கண்டு கொண்டிருக்கும் இந்த சொப்பனம் அவனுடையது! அவன் மனதிலிருக்கும் யோசனை களையே ரேகா வார்த்தைகளில் எடுத்து சொன்னாற் போல இருந்தது. இதெப்படி சாத்தியம்? ஒரே உணர்ச்சி, ஒரே ஆசை, இரு நபர்களில் ஒரே விதமாய் உருவெடுக்க முடியுமா? என்ன விநோதம்! இவ்வளவு நாட்களாய் தன்னைப் போல யாருமே யோசிக்க மாட்டார்கள் என்றெண்ணிக் கொண்டிருந்தான்.

அதுவும் பெண்களால் அப்படி நினைக்கவே முடியாது என்றெண்ணிக்கொண்டிருந்தான்! அவனுக்கு திடீரென்று அவ்வறையில் காற்றே இல்லாதது போல, மூச்சுத் திணறினாற்போல இருந்தது. உடனே உடைமாற்றிக் கொண்டு வெளியே வந்தான்.

பார்க்கில் வந்து உட்கார்ந்துகொண்ட அவன் ஒரு முறை ஜேபியிலிருந்து கடிதத்தை எடுத்து ஆர்வத்துடன் படித்தான். ரேகா எழுதியிருந்த வார்த்தைகளைப் படித்தால் அவனுக்கு இதயமெல்லாம் நிறைந்தாற்போல இருந்தது. அவன் கற்பனைகளும், அவன் இதயத்திற்குள் புதைந்து கிடந்த யோசனைகளும் ரேகாவின் பேனாவிலிருந்து உயிர்பெற்று உருவானாற்போலிருந்தது. அவனுக்கு ஒரு பக்கம் சந்தோஷமாகவும் இன்னொரு பக்கம் வேதனையாகவும் இருந்தது. அவன் கீழே பசும் புல்லில் ஒரு கையை மடித்துத் தலைக்கடியில் வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்துக்கொண்டான்.

அவனுக்கு ஏனோ தன் அபராதம் இருமடங்காகி விட்டாற் போலிருந்தது. அன்றைக்கு இக்கடிதத்தை எடுத்துக்கொண்டு, கமலனை மணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்வதற்காக வந்தாள் போலும்! ஆனால் அவனுக்கு என்ன தெரியும்? ஆனாலும் இதென்ன வேடிக்கை? என்றுமே எறும்பிற்குக்கூட தீங்கிழைத்திராத அவன், இந்தப் பெண்ணை இவ்வளவு கொடுமையாய் இம்சித்துவிட்டான்! அது அந்தப் பெண் தானாகவே ஏற்படுத்திக் கொண்ட விளைவுதான். கமலன் ரேகா இருவருமே சேர்ந்து அவனை முட்டாளடித்து விட்டார்கள் என்ற விஷயம் நினைவிற்கு வந்ததுமே அவன் மனம் ரோஷத்தால் சுருக்கென்றது.

நெருப்போடு விளையாடினாற்போல ஏன் அவ்வாறு நாடகமாட வேண்டும்? அவனுக்குத்தான் புத்தியில்லை, ஆனால் பெண்ணான ரேகா முன்யோசனையுடன்

இருக்க வேண்டாமா? தெரிந்தோ தெரியாமலோ தன் மூலமாய் ஒரு தப்பு நிகழ்ந்து விட்டது. அவள் அப்பாவியாய் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அவன் மூலமாய் நேர்ந்து விட்ட இந்த அநியாயம் அநியாயந் தான். அப்படியென்றால் இதற்குப் பிராயச்சித்தம் என்ன?

யோசனையில் மூழ்கிப் போயிருந்த விமலன் "விமல்! நீயா?" என்ற அழைப்புக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரே விஸ்வநாதன் வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் ரஞ்சிதாவும், அவள் கையைப் பிடித்துக் கொண்டு ரேகாவும் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு நிமிஷம் விமலன் வானத்திலிருந்து கீழே விழுந்துவிட்டாற் போல ஆனான்.

விஸ்வநாதன் விமலனுக்கருகில் வந்து பசும்புல்லில் உட்கார்ந்துகொண்டே, "இதென்ன, இப்பல்லாம் ஒரேயடியாய் கண்ணில் படுவதேயில்லையே? நீ வீட்டிற்கு வந்து எவ்வளவு நாட்கள் ஆகிவிட்டதோ தெரியுமா?" என்றார் பழிப்பது போல. விமலன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவன் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் குப்பென்று பொங்கினாற் போல இருந்தது. தன்னையறியாமல் கையிலிருந்த காகிதத்தை உள்ளங்கைக்குள் மூடிக் கொண்டு சரேலென்று பேன்ட் ஜேபிக்குள் தள்ளிக் கொண்டான்.

ரேகா விமலன் பக்கமாய் திரும்பவில்லை. விஸ்வநாதனுடன் புல்லில் வந்து உட்காரவில்லை. ரஞ்சிதாவின் கையைப் பிடித்துக் கொண்டு, தொலைவில் இருந்த ஃபௌண்டனிடம் போய் அதைக் காட்டி ஏதோ சொல்லத் தொடங்கினாள். இந்த பக்கமாய் முதுகைக் காட்டிக் கொண்டிருந்த ரேகாவை விமலன் முதல் முதலாக துவேஷமோ, கோபமோ இல்லாமல் பார்க்கத் தொடங்கினான்.

''விமல்! உனக்கு வேலை தொந்தரவு எதுவும் இல்லையென்றால் ஒரு அரைமணி நேரம் நாம்ப ஏகாந்த மாய் நிம்மதியாய் உட்கார்ந்திருப்போம். உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்'' என்றார் விஸ்வநாதன். விமலன் 'சரி'என்று தலையாட்டினான். ஆனால் அவன் மனது அவர் என்ன சொல்கிறார் என்பதை கவனிக்கவேயில்லை.

இன்றைக்கு ரேகாவைப் பார்த்தபொழுது அவனுக்கு ஏதோ போல் இருந்தது. ரேகா கமலனுக்கு எழுதிய கடிதத்தைத் தான் படித்துவிட்டதாய் அவளிடம் சொன்னால்? தன் கனவுகூட அதுதான் என்று சொன்னால்? விமலனுக்கு திடீரென்று விஸ்வநாதன் ஒரு நிமிஷம் தன்னையும் ரேகாவையும் தனியாய் விட்டுவிட்டு அங்கிருந்து போய் விட்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றத் தொடங்கிற்று. விமலனின் இதயத்தில் சுழன்று கொண்டிருந்த இந்தக் குழப்பத்தைச் சற்றும் உணராத ரேகா, அங்கிருந்து எப்பொழுது போகலாம் என்பதுபோல நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். இன்றைக்கு இந்த பார்க்கிற்கு விஸ்வநாதனை ஒரு விதத்தில் அவள்தான் பலவந்த மாய் அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். அந்த திறந்த வெளியில், காற்றோட்டமாய் குளிர்ச்சியாய் இருந்த அச்சூழ்நிலையில், அவரிடம் மெதுவாய் சேகரின் விஷயத்தைச் சொல்லி விடவேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்தாள்.

ஆனால் பார்க்கிற்குள் நுழைந்ததுமே,விமலன் தென் படவே, விஸ்வநாதன் அவனோடு பேச உட்கார்ந்து விட்டதைப் பார்த்ததும் இனி இன்றைக்கு இந்தக் காரியம் நடக்காது என்று தெரிந்துவிட்டது அவளுக்கு. மனமெல்லாம் கசப்பை விழுங்கினாற்போல ஆகி விட்டது. அதனால் ரஞ்சிதாவை அழைத்துக் கொண்டு தொலைவிற்கு வந்துவிட்டாள்.

# 37

அன்றைக்கு ரேகா வந்தபொழுது ரஞ்சிதா வீதி வாசலிலேயே எதிர்பட்டாள். ''என்னம்மா? என்ன வாச்சு?'' திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்த ரஞ்சிதாவைப் பார்த்து கலக்கத்துடன் கேட்டாள் ரேகா

ரஞ்சிதா கைகளை ஆட்டி சமிஞ்ஞையுடன், லலிதா அழுது கொண்டிருக்கிறாள் என்றும் அப்பா கோபமாய் இருக்கிறார் என்றும் சொன்னாள்.

ரேகா ரஞ்சிதாவைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தாள். வீடு முழுவதும் மயான அமைதி சூழ்ந்து கொண்டிருந்தது. சாதாரணமாய் தந்தைக்கும் மகளுக்கு மிடையே அபிப்பிராய பேதம் அடிக்கடி வந்து கொண்டேதான் இருக்கும். என்னதான் வேண்டாம் என்று எண்ணினாலும், அதில் தலையிட்டுத் தீரவேண் டியிருந்தது ரேகாவுக்கு.

ரஞ்சிதாவைத் தூக்கிக்கொண்டு நேராய் சமையலறைக்குப் போனாள். சமையலறையில் சமையல்காரன் சினிமா பத்திரிக்கையைப் புரட்டிக்கொண்டு. சிகரெட் புகைத்துக் கொண்டு சாவதானமாய் உட்கார்ந்திருந்தான் ரேகாவைப் பார்த்ததுமே சட்டென்று எழுந்திருந்து, சிகரெட்டை விட்டெறிந்து விட்டு, அவள் கேட்காமலேயே சொல்லிவிட்டான்.

தந்தைக்கும் மகளுக்குமிடையே ஏதோ நகை விஷயமாய்ச் சண்டையாம். இருவரும் எப்படி வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டார்கள் என்று அக்குவேறு ஆணிவேறாகச் சொன்னான். இருவரும் டிபன் சாப்பிடவில்லை, காபி குடிக்கவில்லை. அவர்கள் தோரணையைப் பார்த்தால் மத்யானம் கூட சாப்பிடுவார்களா என்று தோன்றுகிறது. இனி வீட்டில் வேலையில்லை. அதனால் வீட்டிற்குப் போகிறேன். விடை கொடுங்கள் என்று கேட்டான்.

ரேகா காபி டிபனை எடுத்துக்கொண்டு லலிதாவின் அறைக்கு வந்தாள். அறைக்குள் நுழைந்த ரேகா எதிரே கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த லலிதாவைப் பார்த்ததுமே மனம் கரைந்துப்போனவளாய் அப்படியே நின்று விட்டாள்.

அறைக்குள் யாரோ வந்த சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த லலிதா ரேகாவைப் பார்த்து விட்டுச் சட்டென்று முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

"காபி கொண்டு வந்திருக்கிறேன்."

லலிதா பதில் பேசவில்லை.

ரேகா காபியை மேஜை மேல் வைத்துவிட்டு, லலிதா விடம் போய் அவள் தோளில் சிநேகபூர்வமாய் கை வைத்தாள்.

லலிதாவின் துக்கம் மேலும் அதிகமாகி கட்டுமீறிக் கொண்டு வெளிவரத் தொடங்கிற்று.

"இதென்ன பைத்தியம் மாதிரி?" என்றாள் ரேகா.

"ஆமாம், பைத்தியந்தான். நான் யாருக்குமே தேவையில்லை. நான் எப்பொழுது செத்து ஒழிவானோ என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்துட்டிருக்காங்க."

"இதென்ன பேச்சு?"

லலிதா பதில் பேசவில்லை.

ரேகாவுக்குப் புரிந்தது.

லலிதாவிடம் நாளுக்கு நாள் பெருகிப் போய்க் கொண்டேயிருந்த இந்த அதிருப்திக்குக் காரணம் பயங்கரமான தனிமை! அதை சாமர்த்தியமாய் துடைத்தெறிந்துக் கொள்வதை விட்டுவிட்டு, துடுக்குத்தனமான நடத்தைகளால் இன்னும் கொஞ்சம் அதிகமாக்கிக் கொள்கிறாள்.

"காபி ஆறிப் போகிறது" கெஞ்சுவது போல சொன்னாள் ரேகா. லலிதா சுருக்கென்று எழுந்தாள்.

''இதை யார் கொண்டு வரச்சொன்னாங்க உன்னை?''

''ஒருத்தர் சொல்லணுமா? எனக்கு நீங்கள் சம்பளம் தரது எதுக்காக? நீங்கள் காபி குடிக்க மறந்து போய் விட்டால் அதை ஞாபகப்படுத்த வேண்டிய பொறுப்பு என்னோடது இல்லையா?'' சிரித்துக்கொண்டே சொன் னாள் ரேகா.

''அந்தக் காபியில் இத்தனை விஷத்தைக் கலந்து கொடுத்து விடு.''

''விஷத்தைக் கலக்க எனக்குத் தெரியாது. அமிர்தத் தைக் கலந்து தரக்கூடிய நபர் யாராவது இருக்காங் களான்னு பார்க்கிறேன்.''

''அப்படீன்னால் உன் உத்தேசம்?''

''இந்தக் கவலைகளையெல்லாம் மந்திரம் போட் டாற்போல போக்கடிக்கக்கூடிய சிநேகிதர்கள் யாராவது இருந்தால் உங்களுக்குத் தேடிப் பிடிக்கணும்னு'' ரேகா யாரை உத்தேசித்து அதைச் சொல்கிறாள் என்று உணர்ந்து கொண்டுவிட்ட லலிதாவின் கன்னங்கள் சிவந்துவிட்டன.

''நிஜமாய் நான் சொல்றேன் ரேகா எனக்கு உயி ரோடிருக்கவே பிடிக்கவில்லை. என்றைக்காவது ஒரு நாள் நீ வரும்போது தூக்கமாத்திரைகளை விழுங்கி விட்டு நிரந்தரமாய் தூங்கியிருப்பேன்.''

''சீ! சீ! இதென்ன பேச்சு?''

''இருக்கிறதைச் சொன்னேன். நான் யாருக்காக வாழணும்?'' கோழையாய் பார்த்த அவளுக்கு மறுபடியும் துக்கம் பொங்கிக் கொண்டு வந்து விட்டது.

ரேகாவுக்கு ஏனோ அந்தக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு லலிதாவை மடியில் சாய்த்துக் கொண்டு தேற்ற வேண்டும் போலிருந்தது.

லலிதா சட்டென்று ரேகாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''ரேகா! நிஜத்தை சொல்றேன். என்னைப் போன்ற துரதிர்ஷ்டம் பகைவருக்கும் வேண்டாம். பணம் இருந்தும் அனுபவிக்க முடியாமல் போனால் அதைவிட வேதனை வேறு உண்டா?''

ரேகாவுக்கு உண்மையாகவே புரியவில்லை. லலிதாவுக்கு என்ன குறைந்து விட்டது? இன்னும் என்னதான் வேண்டும்? லலிதாவின் கண்ணோட்டத்தில் அனுபவிப்பது என்றால் அர்த்தம் என்னவோ?

கொஞ்ச நேரங்கழித்து லலிதாவை ஒருவாறு காபியைக் குடிக்க வைத்து விட்டு வெளியே வந்தாள் ரேகா.

ரேகா விஸ்வநாதனிடம் வந்தபொழுது, ''வாம்மா, ஏன் இன்றைக்கு இவ்வளவு தாமதமாயிடுத்து?'' என்று கேட்டார் பரிவோடு.

''நான் வந்து ரொம்ப நேரமாயிடுத்து. லலிதாவிடம் இருந்தேன்,''

லலிதாவின் பெயரைக் கேட்டதுமே அவர் முகம் கடினமர்கிவிட்டது. மௌனமாய் காபியைக் குடிக்கத் தொடங்கினார்.

''லலிதா அழுது கொண்டிருக்கிறாள்'' என்றாள் ரேகா மெதுவாய்.

''அழட்டும். சிலபேர் சில குணங்களைத் தம்மோடு கூட்டிக் கொண்டு பிறந்து விடுவாங்க. அதில் அழுகையும் ஒன்று.''

''நீங்கள் அவளை இப்படி வருத்தப்படுத்துவது நன்றாயில்லை.''

''நானா? என்னையேதான் தப்புச் சொல்கிறாயா அம்மா?''

''இது தப்புச் சொல்றதில்லை. இன்றைக்கு நடந்த சண்டைக்குக் காரணம் எவ்வளவு சின்ன விஷயம் பாருங்கள். லலிதா கேட்ட அந்த நெக்லெஸ்ஸைத் தந்து விட்டால்தான் என்ன?''

"அது ரஞ்சிதாவோடதம்மா. இதுவரையிலும் இப்படி ரஞ்சிதாவுக்காக வாங்கியதையெல்லாம் கொடுத்திருக்கிறேன். அதில்லை உண்மை சங்கதி. எப்பொழுது எது இல்லை என்கிறேனோ அதேதான் வேண்டும். எந்த விதத்திலாவது என்னை வருத்திக் கொண்டிருக்க வேண்டும் அவளுக்கு."

"இத்தனைக்கும் காரணம் லலிதாவின் மனதில் உள்ள அதிருப்திதான். அது கொஞ்சம் காரணம் கிடைத்து விட்டாலும் போதும் எரிமலையாய் பொங்கி விடுகிறது."

"நிஜந்தான். என்னை என்ன பண்ணச் சொல்கிறாய் சொல்லு? கேட்ட பணத்தைத் தந்து விடுகிறேன். எப்படி நடந்து கொண்டாலும் கேட்கிறதைக்கூட விட்டு விட்டேன்."

"லலிதாவுக்கு யாராவது நல்ல பையனாய் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைத்துவிடுங்கள்."

"நான் தயாராய்தான் இருக்கிறேன். ஆனால் இந்த காலத்தில் நல்ல பையன்கள் கிடைப்பது என்பது எவ்வளவு கஷ்டம்! அவள் மனதில் யாராவது இருக்காங்களான்னு சொல்லச் சொல்லு. எனக்கு ஆட்சேபணை இல்லை. உண்மையைச் சொல்கிறேன் ரேகா. அவள் வாழ்க்கையைப் பற்றிதான் எனக்கு ரொம்ப திகில். நான் கண்ணை மூடிவிட்டால் அவள் வாழ்க்கை எவ்வளவு அத்வானமாய் மாறிவிடும்னு நினைத்துப் பார்த்தாலே பயமாயிருக்கிறது. சில சமயம் யோசித்துப் பார்த்தால் என்னைப் போன்ற கையாலாகாத தந்தையாயிருப்பதைவிட பெரிய குற்றம் வேறு இல்லைன்னு தோன்றுகிறது."

ரேகாவுக்கு அவர் வருத்தம் புரிந்தது.

லலிதாவை அவரால் அடக்க முடியாது. பார்த்துக் கொண்டு சும்மாயிருக்கவும் முடியாது.

"அந்த நெக்லஸைத் தாங்க, லலிதாவிடம் கொண்டு போய் கொடுக்கிறேன்."

அவர் என்ன எண்ணினாரோ தெரியாது. உடனே எழுந்து பீரோவைத் திறந்து நகையை எடுத்து ரேகாவிடம் தந்தார். ரேகா நெக்லெஸை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

●

ரேகா நெக்லெஸை எடுத்துக் கொண்டு வந்த பொழுது லலிதா ஹாலில் யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

"நிஜமாய்தான் சொல்றேன். எனக்குச் செத்துப் போய்விட வேண்டும் போல விரக்தியாய் இருக்கு, இன்றைக்கு உங்களைப் பார்க்காமல் போனால் நிஜமாகவே செத்துவிடுவேன். பிராமிஸ்! அப்பப்பா! சாயந்திரம் ஆறு மணிக்கா? அதுவரை நான் என்ன பண்ணுவேன்? ஓ. கே. பை." என்று போனை வைத்து விட்டாள்.

லலிதாவின் முகத்தில் சற்று முன்னால் தென்பட்ட துக்கமும் அதிருப்தியும் கடுகளவும் இல்லை இப்பொழுது.

லலிதா போனில் பேசியது யாருடன் என்று ரேகாவால் எளிதாகவே ஊகித்துக் கொள்ள முடிந்தது.

லலிதா போனை வைத்து விட்டுத் திரும்பியவள் ரேகா தென்படவே, "நான் ஜானுக்கு போன் பண்ணினேன். சாயந்திரம் போய் விட்டு ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் வீட்டுக்குத் திரும்பி வரமாட்டேன்னு சொல்லி விடு" என்றாள் எரிச்சலோடு பார்த்து.

ரேகா அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலேயே, "ஜானைக் காட்டுகிறேன் காட்டுகிறேன்னு சொல்லி விட்டுக் காட்டவே மாட்டேங்கிறாய், இல்லையா?" என்றாள் பழிப்பதுபோல.

"எங்கே முடிகிறது? வீட்டுக்கு வரச்சொல்லிக் கூப்பிட்டால் வரேன் என்பானே தவிர வரவேமாட்டான். இந்த தடவை தீபாவளிக்குச் சும்மாயிருக்கப் போறதில்லை, சாப்பிடக் கூப்பிடுகிறேன். என்ன மனிதனோ? எதிரே இருக்கும்போது உயிரையே தருவது போல பேசுவான். கொஞ்சம் கண்மறைவாகி விட்டால் ஞாபகமே இல்லாதது போல நடந்துப்பான்."

"ஆண்கள் அப்படித்தான் அதான் நம்பவே கூடாது" என்று நாக்கு நுனிவரையிலும் வந்துவிட்ட வார்த்தைகளை ஒருவாறு அடக்கிக் கொண்ட ரேகா—"நான் தைத்துத்தந்த கைக்குட்டையைத் தந்துவிட்டீங்களா?" என்று கேட்டாள்.

"ஊஹூம். இன்றைக்குத் தரேன்."

"அவரை நான் பார்த்தால் ஒன்று சொல்லணும்."

"என்ன?"

"எங்க லலிதாவின் யோசனையெல்லாம் நீங்கதான்னு..." லலிதா சிரித்தாள்.

ரேகா நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டாள்.

ரேகா லலிதாவிற்குப் பின்பக்கமாய் வந்து அவள் கழுத்தில் அந்த நெக்லெஸைப் போட்டாள்.

லலிதா சட்டென்று திரும்பி—"இதை எதுக்குக் கொண்டு வந்தாய்? யார் கொண்டு வரச்சொன்னாங்க உன்னை" என்று உடனே அவிழ்த்துவிடப் போனாள்.

ரேகா "வேண்டாம், ரொம்ப அழகாயிருக்கு" என்று கெஞ்சினாற் போல தடுத்தாள்.

லலிதா சிவந்த முகத்துடன்—"நான் இதற்காக அழுததாய் நீ நினைத்துக் கொண்டிருந்தால் அது தப்பு. நான் வருத்தப்பட்டது அப்பாவின் சுடு சொற்களுக்காகத்தான். எனக்குப் பொறுப்புக் கிடையாதாம். வீட்டு விஷயங்களைப் பார்த்துக் கொள்வதில்லையாம். காற்றாடி போல ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறேனாம். பொறுப்பு. யாருடைய பொறுப்பை எடுத்துப்பேன் நான்?

அவருக்கோ என் நிழலைக்கூட பிடிக்காது. ரஞ்சிதாவோ முன்பின் தெரியாதவங்களிடம் காட்டுகிற பாசத்தில் கடுகளவுகூட என் மேல் காட்டுவதில்லை, அதோடு இந்தச் சுடுச் சொற்கள் வேறு. நகைகள் இருக்கும்போது அணிந்து கொள்வதும், புடவைகள் இருக்கும்போது போட்டுக் கொள்வதும் தப்பா? பார்க்கிறவங்க ஏதாவது நினைச்சுப்பாங்கன்னு, அவங்க இரக்கத்துக்காக நான் இல்லாத வருத்தங்களை இருப்பதாய் நடிக்கணும் போலிருக்கு? ஆமாம், நான் எப்படிப் போனால்தான் இவங்களுக்கென்ன வந்தது? அவங்க விஷயத்தை நான் பொருட்படுத்துகிறேனா? அவங்க மட்டும் என் விஷயத்தை ஏன் பொருட்படுத்தணும்?போகட்டும் எல்லோருடைய விஷயத்தையும் விட்டுவிடு. அவங்களுக்கு வேலைவெட்டி இல்லை. ஆனால் என் சொந்த தந்தையே என்னைப் புரிந்துக்காமல் போனால் எப்படி?'' ஆவேசமாய் சொன்னாள்.

அதற்குள் சமையல்காரன் கூப்பிட்டதால் உள்ளே போகப்போன ரேகா நின்று,''லலிதா! நீங்கள் எப்பொழுதும் சுகமாய், சந்தோஷமாய் இருக்கணும். இந்த உலகத்தில் நிறையபேர் இல்லாத கவலைகளைஎல்லாம் ஊகித்து கொண்டு இருக்கிற சுகத்தைக் கெடுத்துக்கொள்கிறாங்க. அப்படிப்பட்ட புத்தியில்லாத மனுஷியாய் இருக்கக் கூடாது நீங்கள்'' என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.

லலிதா புதிய விஷயத்தைக் கேட்டாற்போல நின்று விட்டாள்.

தந்தைக்கு ரேகாவின் வார்த்தைகளின் மீது எவ்வளவு மதிப்பு! அதுவே அவளாக கேட்டபொழுது துரப் பிடிக்காதவர் ரேகாவின் வார்த்தைகளைத் தட்ட முடியாதவராய் தந்திருப்பார். ரேகா என்ன மந்திரம் போட்டிருப்பாள்? விஷம் போன்ற அவருக்கு இப்படிப் பட்ட இளகிய மனம் தோன்றுவதற்குக் காரணம்

என்ன? ஆமாம், ரேகாவுக்குத் தன்மேல் ஏன் இந்த அக்கறை? இப்பொழுதெல்லாம் அடிக்கடி தன்னைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தவிக்கிறாளே, ஏன்? இந்த நெக்லஸ் விஷயமே அதற்கு உதாரணம்.

எந்த கெட்ட எண்ணத்தோடு ரேகா இந்த வீட்டிற்குள் நுழைந்தாளோ, யாருக்குத் தெரியும்? ஊஹூம், வந்த புதிதில் இப்படி இல்லை. இப்படிப்பட்டச் சூழ்நிலைகளையும், இந்த அபிப்பிராய பேதங்களையும் பார்த்த பிறகு இந்த புத்தி பிறந்திருக்கும்! ரஞ்சிதா எப்படியும் வாயில்லாதவள். அவரோ அவ்வளவு நல்லவர்! இனி தான் ஒருத்திதானே? மெதுவாய் தன்னை வசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டிருப்பாள் போலும்!

தந்தை ரேகாவின்பால் இவ்வளவு சிரத்தை காட்டுவதுகூட விநோதமாகவே இருக்கிறது! யாருக்குத் தெரியும்? எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? தான் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். சிநேகமாய் இருப்பது போல நடித்துக்கொண்டே மெதுவாய் ரேகாவை இங்கிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும். அதுகூட கூடிய சீக்கிரத்தில் நடந்துவிட வேண்டும்.

## 38

ஓட்டல் எல்லைக்குள் இருந்த அழகான கார்டனில் சேகர் சிகரெட் பிடித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான். லலிதாவுக்காக காத்திருந்தான் அவன். சமீப காலமாய் சேகர் லலிதாவோடு சிநேகத்தைத் தவிர்த்துக் கொண்டு விடவேண்டும் ' என்றெண்ணி ஏறக்குறைய சந்திப்பதையே விட்டு விட்டிருந்தான். ஆனால் ஒரு வாரத்திற்கு முன்னால் மேலிடத்திலிருந்து லலிதா என்ற

இந்தப் பெண் லட்சக்கணக்கானச் சொத்திற்கு அதிபதியானவள் என்றும், அந்த வீட்டில் நகை உருவில் நிறைய தங்கம் இருக்கிறது என்றும், கூடியவரை அதிகமாய் அந்தப் பெண்ணோடு கழித்து, எப்படியாவது அவள் வீட்டிற்குள் நுழையச் சொல்லி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது.

சேகருக்கு முதல் முதலாய் மேலிடத்தாரின் உத்தரவின்படி நடக்கப் பிடிக்காமல் போய்விட்டது. அவர்கள் அவனிடமிருந்து எதிர்பார்த்தது என்னவென்று நன்றாகவே புரிந்துவிட்டது. லலிதாவை சிநேகம் பண்ணிக்கொண்டு, கவர்ந்திழுத்துக்கொண்டு, சமயம் பார்த்து பின்னாலிருந்து கத்தியால் முதுகில் குத்தினாற் போல அவளைக் காலை வாரிவிட்டு அவைகளை அபகரித்துக்கொண்டு வரவேண்டும் என்பது! ஆனால் அவனால் அது முடியாது, அவன் எதை வேண்டுமானாலும் செய்வானே தவிர, கள்ளமில்லாமல், அவனைப் பார்த்ததுமே சந்தோஷத்தால் மலரும் அக்கண்களில் பயத்தையும் சந்தேகத்தையும் ஊட்ட முடியாது அவனால். அதனால் இந்த லலிதாவின் விஷயத்தில் சேகரின் இதயத்தில் விநோதமான யுத்தம் தொடங்கிவிட்டது. லலிதாவின் சிநேகம் ஏற்பட்டு அவள் சுபாவம் தெரிந்ததிலிருந்தே அவனுக்குத் தன்னால் அந்த அப்பாவி பெண்ணிற்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்று உறுதியான அபிப்பிராயம் ஏற்படத் தொடங்கிற்று.

அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தபொழுதே "ஹலோ" என்று லலிதா அவனுக்கெதிரே வந்து நின்றாள்.

சேகர் ஒரு வினாடி திகைப்படைந்து போய் அப்படியே நின்றுவிட்டான். லலிதா ஒய்யாரமாய் நடந்து வந்து சேகருக்கெதிராய் உட்கார்ந்து கொண்டு மார்பில் கை வைத்துக்கொண்டே— "அம்மாடா!

உங்களைப் பார்க்கிற வரைக்கும் நம்பிக்கையே இல்லை, வரமாட்டீங்கன்னு நினைத்தேன்'' என்றாள்.

''வரவேண்டாம் என்றுதான் நினைச்சுட்டிருந்தேன். ஆனால்...'' சேகரின் பார்வை திடீரென்று லலிதாவின் கழுத்தின் மீது நிலைத்தது. மங்கலான அந்த வெளிச்சத்தில் லலிதாவின் கழுத்தில் நெக்லஸ் பளபளவென்று மினுமினுத்துக் கொண்டிருந்தது.

இதே போன்ற நகையை அவன் எங்கேயோ பார்த்திருக்கிறான். எங்கே? எப்பொழுது? எந்த சந்தர்ப்பத்தில்? அவன் நினைவுத் திரையில் ஞாபகங்களை மளமளவென்று அலசிப் பார்த்துக்கொண்டான்.

''என்ன அப்படி பார்க்கிறீங்க? நெக்லெஸ் புதிதாய் இருக்கிறதேன்னா? என்னுடையதில்லை. என் தங்கையோடது'' ஆர்வம் ததும்ப அவனைப் பார்த்துக் கொண்டே குழைவோடு சொன்னாள் லலிதா.

''ரொம்ப நன்றாயிருக்கு'' தான் கூர்ந்து பார்த்ததற்கு சால்ஜாப்பு சொன்னான்.

''இதற்காக இன்றைக்கு வீட்டில் பெரிய ரகளை நடந்தது.''

''ஏன்?''

''உன்னிடம் இருக்கிறது போதாதான்னு சொன்னார் எங்கப்பா. எப்பொழுதும் நம்முடையது என்ற சாமானைவிட நம்முடையதல்லாத சாமான் மீதுதான் மோகம் ஏற்படும் இல்லையா?''

லலிதா கழுத்திலிருந்து நெக்லெஸைக் கழற்றி அவன் கையில் தந்து, ''இதற்கு ஒரு கதை கூட இருக்கு'' என்றாள்.

''என்ன கதை?''

லலிதா சுருக்கமாய் சென்ட்ரல் ஸ்டேஷனில் ஒருத்தன் திருட முயன்றது, பிடிபட்டது எல்லாவற்றை

யும் சொன்னாள். சேகரின் செவிகளில் பேரிரைச்சல் கேட்கத் தொடங்கிற்று. நெக்லெஸைப்பார்க்கும் சாக்கில் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. அவன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தாற் போல இருந்தது.

''என்னிடம் பெட்டியில் எப்பொழுதோ அந்த பேப்பரில் வந்த போட்டோ கட்டிங் இருக்கிறது. அடுத்த தடவை கொண்டு வந்து காட்டுகிறேன்.'' உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டிருந்த லலிதா, பையன் வந்து தொலைவில் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருத்தி கூப்பிடுவதாய் தெரிவிக்கவே திரும்பிப் பார்த்தாள். அவள் லலிதாவைப் பார்த்ததுமே சிரித்துவிட்டுக் கிட்டே வரச்சொல்லி சைகை பண்ணினாள்.

''ஐயோ, செத்தேன்; மிஸஸ் ஜோகீந்தர், இப்பல்லாம் கிளப்புக்குப் போவதை விட்டுவிட்டேன். சால் ஜாப்புச் சொல்லிக் கொள்ளணும். இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிட்டேன்'' என்று எழுந்து போனாள்.

சேகர் கையிலிருந்த நெக்லெஸ்ஸைக் கண்கொட்டாமல் பார்க்கத் தொடங்கினான். அவன் நெற்றியில் வியர்க்கத் தொடங்கிற்று. அவன் மனமெல்லாம் விஷமாய் மாறிவிட்டது. ஒரு நிமிஷத்திற்கு முன்னால் லலிதாவின்பால் அவனுக்கு ஏற்பட்ட நல்ல உத்தேசம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

●

விமலன் இப்பொழுதெல்லாம் விஸ்வநாதனின் வீட்டிற்கு அதிகமாய் போய்த்தீர வேண்டியிருந்தது. வியாபார ரீதியாய் அவர் பண்ணிக் கொண்டிருந்த மாறுதல்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் அவனுடைய தேவை வேண்டியிருந்தது அவருக்கு.

சாதாரணமாய் அவன் போகும்பொழுது அவரோடு ரேகாவும் ரஞ்சிதாவும் சேர்ந்து தென்படுவார்கள். ரேகா விமலனைக் கண்டதுமே அங்கிருந்து எழுந்து போய் விடுவாள். இரண்டு மூன்று முறை இதை நன்றாய் கவனித்து விட்ட விஸ்வநாதன் விமலனுக்கு எதிராகவே ரேகாவைக் கண்டித்தார். ''ரேகா! விமலனுக்கு முன்னால் நீ இப்படிப் பண்ணுவது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் நமக்கு வேற்றுமனிதன் இல்லை என்று உனக்குப் பலமுறை சொல்லியிருக்கிறேன். என்னிடம் உனக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் அவனிடமும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் எனக்குப் பிடிக்கும்.''

ரேகாவின் கண்கள் வினாடிநேரம் விமலனின் கண்களோடு கலந்துவிட்டு மின்னலாய் விடுபட்டுப் போயின. விமலன் அவள் என்ன பதில் சொல்லப் போகிறாளோ என்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''வேறு யாரை வேண்டுமானாலும் உங்களுக்குச் சமம் என்று சொல்லுங்கள். ஆனால் தயவுசெய்து அவரை மட்டும் வேண்டாம்'' ரேகா இவ்வாறு சொல்வதற்காக வாயைத் திறந்தவள் ஏனோ நிறுத்திக் கொண்டாள்.

விமலன் அவருக்கு மிகவும் பிரியத்திற்குரியவன். அவனை ஏதாவது சொன்னால் ஏன்எதற்கு என்று காரணங்கள் கேட்பார். காதில் விழாததுபோல இருந்து விட்டால் எந்தத் தொல்லையும் இல்லை. அவளுக்கும் விமலனுக்குமிடையே இருந்து வந்த அந்த பயங்கரமான கடந்த காலம் அவள் இதயத்திற்குள்ளேயே புதைந்து போய் விடட்டும். மூன்றாவது நபருக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

விஸ்வநாதனின் எச்சரிக்கையினால் அப்பொழுதிலிருந்து அவரை வருத்தப்படுத்த விரும்பாதவளாய்

அவள் அவ்விடத்தை விட்டு நகராமல் நின்று கொண்டிருக்க வேண்டியிருந்தது. அது முள்ளின் மீது நிற்பது போல இருக்கும். அல்லது ஏதோ வேலையைக் கற்பித்துக் கொண்டு அவருக்குச் சந்தேகம் வராதபடி அங்கிருந்துப் போக வேண்டியிருந்தது.

அன்றைக்குச் சாப்பாட்டு வேளையில் விமலன் கூட அங்கேயே தங்கிவிட்டான். விஸ்வநாதன், ரஞ்சிதா, விமலன் உட்கார்ந்ததும் ரேகா பரிமாறத் தொடங்கினாள். விஸ்வநாதனும் விமலனும் வியாபார சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் மூழ்கிப் போய் விட்டார்கள். சாப்பாடு முடியும் தறுவாயில் ரேகா மோர் ஊற்றப்போனபொழுது மிகக் கொஞ்சமாய் ஊற்றிக் கொண்ட விமலன்'போதும்' என்று கையை நீட்டினான்.

' ஊற்றும்மா, ஊற்று, அவன் எப்பொழுதுமே இப்படித்தான். ஒன்றுமே வேண்டாம் என்பான்.'' என்றார் விஸ்வநாதன்.

ரேகா மோரை ஊற்றப் போனாள்.

''வேண்டாம், வேண்டாம், வேண்டாம் என்றால்'' விமலன் மோரை அதிகமாய் ஊற்றப் போன ரேகாவின் கையை அழுத்தமாய் பிடித்து ஊற்றிவிடாமல் தடுத்தான். ரேகா அதிர்ந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை.

ரேகா சாப்பாடு அறையிலிருந்து அப்பால் வந்து விட்டாள். கையில் மணிக்கட்டிற்கருகில் விமலனின் ஸ்பரிசம் இன்னும் மின் அதிர்ச்சியைத் தந்து கொண்டிருந்தது. ஏன் அவ்வாறு செய்தான்? அது தன்னையறியாமல் நிகழ்ந்த செயலா? அல்லது அவருக்கெதிராய் சகஜமாய் இருக்க வேண்டும் என்று செய்த முயற்சியா? ரேகாவுக்கு எதுவும் புரியவில்லை.

ரேகாவுக்கு இப்பொழுதெல்லாம் மிக வருத்தமாய் இருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் விமலனின் கண்ணிற்கு

முன்னால் ஒன்றுமே நடக்காதது போல இருக்க வேண்டியிருந்தது மிக நரகமாய் தோன்றிற்று. அவன் மனதில் எந்த உணர்ச்சியும் இல்லை என்பது அவன் தோற்றமே சொல்லிற்று. ஆனால், அவள்? அவள் இந்தச் சூழ்நிலையை விட்டு தொலைவிற்கு ஓடிப்போய் விட வேண்டும் என்று தவித்தபோதிலும் பலவந்தமாய் கட்டிப்போட்டாற் போல இருந்து கொண்டிருக்க வேண்டியிருந்தது. விமலன் விஸ்வநாதனுக்கு மிகப் பிரியமானவனாயிருந்ததால் ரேகா விமலன் மீது இருந்து வந்த துவேஷத்தை வேறுவழியில்லாமல் தனக்குள் விழுங்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

அடிக்கடி விஸ்வநாதனுக்காக அவர் வீட்டிற்கு வர வேண்டியிருந்த விமலன் மெல்ல மெல்ல அந்த வீட்டிற்குள் நுழைந்ததுமே, தன்னையறியாமல் ரேகாவைக் கண்களால் தேடத் தொடங்குவது பழக்கப்பட்டுப் போய் விட்டது.

பின்னாலிருந்து ரேகாவின் நடையையும், அழகான அக்கூந்தலையும், பக்கவாட்டிலிருந்து பார்த்தால் அழகாய் தென்படும் கன்னங்களையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பான்.

விமலன் வரும்பொழுது எந்தக் காரணத்தினாலாவது ரேகா கண்ணில் படாமல் போனால் அவனுக்கு ஏதோ வெறிச்சென்றிருக்கும். அதிருப்தியைத் தரும். தன் இதயத்தில் மெல்லமெல்ல உயிர்பெற்று கொண்டிருந்த இந்தச் சலனத்தைப் பார்த்து அவனால் வியப்படையாமலிருக்க முடியவில்லை. தன்னுள் ஏற்பட்டிருக்கும் இந்த மாறுபாடு நல்லதில்லை என்றும், அதன் விளைவு விபரீதமாய் இருக்கும் என்றும், தனக்கு அனுகூலமாய் இருக்காது என்றும் அவனுக்குத் தெரியும். தன் மனது எந்தப் பக்கமாய் போய்க் கொண்டிருக்கிறது என்றும் புரிந்து கொள்ள முடியாத முட்டாள் இல்லை அவன்.

இதை மொக்கிலே கிள்ளியெறிந்துவிட வேண்டும் என்று அவன்மனம் எச்சரித்தது. ஆனால் அவனால் அது முடிய வில்லை. வாழ்க்கையில் முதல் முதலாகத் தான் சங்கடத் தில் ஆழ்ந்து விட்டோம் என்று தெரிந்தபோதிலும் அவனால் ஜாக்கிரதைகளை மேற்கொள்ள முடிய வில்லை.

விமலனிடம் தோன்றத் தொடங்கிய இந்த உணர்ச்சி களைப் பெண்களுக்கே உரிய சாதுரியத்தின் மூலமாய் லலிதா கண்டுபிடித்து விட்டாள்.

விமலனின் கண்கள் சதா ரேகாவிற்காகச் சுற்று முற்றும் தேடத் தொடங்குவதையும், ரேகாவைப் பார்த்த துமே அவன் முகத்தில் விநோதமான உணர்ச்சி தோன்றத் தொடங்கியதையும், அக்கண்களில் ஒளி ஏற்படுவதையும் உணர்ந்துகொள்ள அதிக நாள் பிடிக்கவில்லை அவளுக்கு.

ஏற்கனவே தந்தை விஷயத்தில் ரேகாவின்பால் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்த லலிதாவின் இதயம் விமலனும்கூட ரேகாவின்பால் கவரப்பட்டிருந்ததைப் பார்த்துப் பொறாமையால் வெடிக்கத் தொடங்கினாள். ஆனால் அந்தப் பொறாமையை அப்பாவியாய், பிறப்பெண்களைப்போல வெளியே கக்கிவிட விரும்ப வில்லை அவள்.

ரேகாவை வீட்டை விட்டு வெளியே துரத்தி விடுவ தற்காகவும், விமலனுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவும் தகுந்த சமயத்திற்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

●●●


கூண்டுக்குள் குருவி
எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா